# தேடாதே தொலைந்து போவாய்



இந்திரா சௌந்தர்ராஜன்

www.pustaka.co.in

http://www.pustaka.co.in

# தேடாதே தொலைந்து போவாய்

# Thedathey Tholainthu Povai

Author:

இந்திரா சௌந்தர்ராஜன்

**Indira Soundarajan**

For more books

http://www.pustaka.co.in/home/author/indira-soundarajan-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**
**All other copyright © by Author.**
All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

அத்தியாயம் 22

அத்தியாயம் 23

அத்தியாயம் 24

அத்தியாயம் 25

அத்தியாயம் 26

அத்தியாயம் 27

இந்திரா சௌந்தர்ராஜன்

# என்னுரை

குமுதத்தில் நான் எழுதிய தொடர் இது! ஒரு மர்மக்கதை எழுத்தாளன் எனும் முத்திரை என் மேல் பதிய வரும்போதெல்லாம் நழுவிச் சென்று சமூகம், சரித்திரம் என்று எழுதி அதிலிருந்து தப்பித்துவிடுவது

என் வழக்கம். அந்த வகையில்தான் இந்தத் தொடரையும் எழுதினேன்

ஒரு விறுவிறுப்பான சமூகக்கதை எழுத வேண்டும் என்னும் என் பிரதிக்ஞைக்கு குமுதம் ஆசிரியர் மாலன் மூலமாக வந்த ஒரு நல்ல வாய்ப்பாக இது அமைந்தது.

குமுதம் லட்சங்களில் விற்கும் பத்திரிகை. எனவே பரிட்சார்த்த முயற்சிகளுக்கு அங்கு இடமில்லை. விறுவிறுப்பும் பரபரப்பும் கைகோர்த்து வரவேண்டும். அதையே குமுதம் வாசகர்களும் விரும்புகின்றார்கள்.

அதே சமயம் சமூகத் தொடரில் ஒரு எழுத்தாளன் புதிதாக எதாவது ஒரு சேதியாவது கூறியிருக்க வேண்டும். அவன் தம் ஆத்ம திருப்திக்கென சில விஷயங்களையாவது திறம்பட கையாண்டிருக்க வேண்டும்.

எனவே இருவித விருப்பத்துக்கும் இடம் கொடுக்கின்ற மாதிரி இந்தத் தொடரை எழுதினேன். என் ஆத்மதிருப்திக்கென இதில் நான் வடிவமைத்த பாத்திரம் ஊமைப் பெண் சியாமளாவினுடையது. அப்படியே புதிய சேதி சொல்ல நான் தேர்ந்தெடுத்த களம் நான் பணியாற்றும் சுந்தரம் பாசனர்ஸ் நிறுவனம் சார்ந்தது.

தொழில் நுட்பமான எந்த ஒரு விஷயத்தையும் இந்தியாவுக்கு முதல் நபராக இருந்துகொண்டு வந்து அதில் நடு உச்சத்தையும் பார்த்து விடுபவர் எங்கள் நிறுவாக இயக்குனர் திரு. சுரேஷ் கிருஷ்ணா அவர்கள். அவர் எங்கள் நிறுவனத்திற்கென கொண்டு வந்திருக்கும் மிக நுட்பமான ஒரு விஷயம்தான் TPM. ‘Total Productivity Maintanance’ எனும் இந்த மூன்றெழுத்துச் சொல் வெகு விரைவில் இந்தியா முழுக்க பிரபலமாகப் போகிறது. அரசியல்வாதிகள் ‘கடமை கண்ணியம் கட்டுப்பாடு’ என்கின்ற மூன்றெழுத்தை தத்து எடுத்துக் கொண்டது போல தொழிலதிபர்கள் தத்து எடுத்துக்கொள்ளப் போகும் விஷயமாக இது இருக்கப் போகிறது.

ஏனென்றால் இது ஒரு நிறுவனத்தில் நுழைந்து விட்டால் 'அழுக்கு, சோம்பேறித்தனம், மந்தபுத்தி, வீண்விரயம், குண்டுசட்டித்தனம்’ என்று ஏகப்பட்ட விஷயங்கள் வெளியேறியாக வேண்டும்.

அதன்பின் அங்கு ‘வெற்றி, விவேகம், சிக்கனம், சுறுசுறுப்பு, அழகு, புதிய கண்டுபிப்புகள்’ என்று லட்சணமான விஷயங்கள் வீறு நடை போட தொடங்கிவிடுகின்றன.

என்னதான் வள்ளுவர் முதல் ஆடம்ஸ்மித் வரை இங்கே பொருளாதாரம் பற்றியும் தொழில் முனைப்பு பற்றியும் சொல்லியிருந்தாலும் அணுவால் நசிந்தும் அறிவால் நசியாத ஜப்பானியர்கள் வாயிலாக சில விஷயங்கள் வெளிப்படும்போது அதில் உள்ள ஒரு நறுக்கு தெறித்த தன்மை மற்றையோரிடம் இல்லை.

இந்த ‘TPM’ம் ஒரு ஜப்பானிய சிந்தனையே.

இந்தச் சிந்தனையை இந்த நாவலில் தொட்டுக் கொண்டேன். மற்றபடி இத்தொடர் நான் முன்பே எழுதியது போல விறுவிறுப்பு பரபரப்புக்கு முக்கியத்துவம் அளித்ததால் சில பல இடங்களில் சில எதார்த்தங்களை நான் இழக்க நேரிட்டது.

ஆயினும் எனக்கு இது நல்ல மனநிறைவைத் தந்த படைப்பு.

இதற்கு அணிந்துரை நல்கிய திரு.எஸ். இராம சுப்ரமணியன் (பொது மேலாளர், சுந்தரம் பாசனர்ஸ் லிமிட், மதுரை) அவர்களுக்கு, இந்த நூலை சமர்ப்பணம் செய்வதில் எனக்குப் பெருமையும் மகிழ்வும் மிகுதி.

ஆயிரம் நபரிடம் பழகுகிறோம். ஆனால் சிலர்தான் ஆசான் ஆகிறார்கள். வியக்க வைக்கிறார்கள். சிந்திக்க வைக்கிறார்கள். அந்த வகையைச் சேர்ந்தவர் திரு. 'SRS’.

வள்ளுவர் சொன்னது போல் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதுபவர். பகைவனுக்கும் அருளும் நல்ல நெஞ்சை உடையவர். பேப்பர் ஒர்க் எனும் ஒரு நிர்வாகத்தின் முக்கியத் தேவையை ஜெட் வேகத்தில் செய்து முடிப்பவர்.

இவரிடம் நான் கற்றுக்கொண்டது நிறை. அப்படிப் பட்டவர்க்கான இந்த சமர்ப்பணம் ஒரு அர்த்தமுள்ள சமர்ப்பணம்.

எங்கள் பிரசிடென்ட் திரு. சம்பத்குமார மூர்த்தி அவர்களும் என் நன்றிக்கும் போற்றுதலுக்கும் உரியவர். TPM concenptஐ நாவலில் புகுத்தி அதை பரவலாக்கும் ஆசையைச் சொன்னவர். ஒரு எழுத்தாளனின் கற்பனையில் நற்செய்திகள் இடம்பெற்று அவை வாசிப்பவர்களுக்கு தூண்டுகோலாய்த் திகழ வேண்டு என்று பேசும் போதெல்லாம் கூறுவார்.

அவரது ஆசையை ஒரு பிரபல வார இதழின் தொடர் கதையில் சாதிக்க எல்லாம் வல்ல எங்கள் சுந்தரபரிபூரண வரசித்தி விநாயகர் அருள் புரிந்தார். ஆசை ஈடேறியது, அது ஒரு முறை என்றில்லாதபடி பலமுறை

ஈடேற அவனே அருளட்டும்.

பணிவன்புடன்,

இந்திரா சௌந்தர்ராஜன்

6.8.98

# 1

மணி அடித்துக் கொண்டிருந்தது!

வரசித்தி விநாயகர் கோவில் மணி சத்தம் சற்று சுநாதமானதுதான்.

குப்புறப்படுத்தபடி ஒரு மரவட்டையாய் சுருண்டு கிடக்கும் தியாகுவின் காதுக்குள் பாய்ந்து அவனது ஆகாசக் கனவுகளில் ஒன்றை தினமும் கலைப்பது அதன் வாடிக்கை.

இன்றும்...

ஆனால் நாராயணன் அப்படி இல்லை. துண்டால் மார்புப் பூணுலை மறைத்துக் கொண்டு சப்பணமிட்டுக் கொண்டு காயத்ரி ஜெபித்தபடி இருந்தான். மணி சப்தம் கேட்டு மகிழ்ந்தான்.

அந்த சின்ன அறையின் ஒரு மூலையில் இவன் இப்படி என்றால் மறுமூலையில் தியாகு அப்படி..!

தூக்கம் கலைந்து அரைக் கொட்டாவி பிரிய எழுந்திருந்தவன் கைவிரல்கள் உடனேயே சிகரெட் பாக்கெட்டைத்தான் தேடி எடுத்தன.

‘இரவு படுக்கப்போகும் போது ஒரு ஊது ஊதுவிட்டு தலை மாட்டில் தீப்பெட்டியோடு வைத்திருந்தேனே...?’

"டேய் சாமியார்... தெரியும்டா... உன் வேலதான்னு தெரியும்... எங்கேடா சிகரெட்?"

தியாகுவின் அனத்தல் பலன் தரவில்லை. நாராயணன் கண்ணையே திறக்கவில்லை.

எழுந்து காலண்டரில் தினப்பலன் பார்த்தான். விருச்சிக ராசிக்கு நேராக ‘கோடீஸ்வரர் சகாயம்’ என்று இருந்தது. உடனேயே மூட் மாறியது.

உதட்டில் விசில் வந்து சேர்ந்தது.

திறந்திருக்கும் ஜன்னல் வழியாக கலைந்த அவன் சுருண்ட தலைமுடி நோக்கி காற்றும்...

நெருங்கி நின்று வெளியே நோட்டம் விடவும் மயிலாப்பூரின் மத்ய பாகம் தெரிந்தது. கற்பகாம்பாள் கோயில் கோபுரம், புதிய பறக்கும் ரயிலின் இருப்புப் பாதை காக்கை அமர்ந்திருக்கும் துருவேறிய டிவி

ஆண்டனாக்கள் என்று வழக்கமாய் தெரியும் காட்சிகள் தான்.

நடுவில் குறிவைத்து ஒரு காரை பெயர்ந்த மொட்டை மாடியை டெலஸ்கோபிக் பார்வை பார்த்தான்.

அந்த மாடியின் ஈரம் கசியும் தண்ணீர் தொட்டிக்கு அருகில் ஒரு சின்னப்பெண் அமர்ந்து எதையோ படித்துக் கொண்டிருந்தாள்.

எதையோ என்ன...?

அவளது ப்ளஸ் ஒன் சப்ஜெக்டில்தான் அவள் குறியாய் இருக்கவேண்டும்.

'படிக்க ஆரம்பிச்சுட்டியா மாலுக்குட்டி பலே.... அப்ப எப்படியும் உன் அக்கா வருவா, வரட்டும்... வரட்டும்...' முணுமுணுத்துக் கொண்டான்.

திருவாரூரில் கால் காணி காவேரி சாகுபடி நிலம் சொந்தமாக இருக்கிறது. இருந்தாலும் ஜெய்கிஸானாக இருக்க ஏனோ தியாகுவுக்கு உடன்பாடில்லை.

பார்வை ஜன்னலில் இருந்து திரும்பியது. அறை சுவரில் யார் அது... அட ஹர்ஷத் மேத்தா!

மேத்தாவின் மேல் ஒரு ஆழப்பார்வை பதித்துவிட்டு சற்று பெருமூச்சோடு இரு கைகளையும் உயரத் தூக்கி மார்பை முன் தள்ளி சடசடவென சோம்பல் முறிக்கும் போது பார்வையில் தட்டுப் பாட்டுவிட்டது அது.

ஓட்டுக்கூரை சரிவில் ஒரு ரீப்பர் இடுக்கில்...

உறசாகமாக எகிறி அதை வெளியே எடுத்து உதட்டில் செருகி புகையை விட்ட பிறகுதான் நிம்மதியானது. புகை நாராணனை கலைத்தது. வேகவேகமாக சந்தியா வந்தனத்தை முடிக்கத் தொடங்கினான் அவன்.

முடிந்த ஜோரில் "உன்னை திருத்தவே முடியாதுடா... சீரழியப்பேறே நீ?"

"போடா முண்டம் இன்னிக்கு ஐயாவுக்கு கோடீஸ்வரர் சகாயம்டா..."

"ராசிபலனா... உனக்குத்தான் சாமி கிடையாதே இதை மட்டும் எப்படி நம்பறே..."

ஒற்றை வரியில் பதில் வரத் தொடங்கியது தியாகுவிடம்

"நடக்கறதால!"

ராயர் கிளப்பில் நல்ல கூட்டம். என். எஸ். கிருஷ்ணனின் சினிமாவில் எல்லாம் நடித்திருக்கிறது இந்த ஹோட்டல். அன்றைக்கும் இன்றைக்கும் துளி மாற்றமின்றியும் இருக்கிறது. கோலி பல்புகளை மட்டும் மாற்றி ட்யூப்லைட்டாக்கியிருந்தார் ராயர்.

அந்த பழமைக்குள் நுழைந்து கொண்டிருந்தனர் தியாகுவும் நாராயணனும்.

இங்குதான் அவர்களுக்கு கட்டுப்படியாகிறது.

கணக்கு வைத்துக்கொள்ளவும் முடிகிறது.

ஒரு ஓசி சிகரெட் கொடுத்து சர்வர் வையாபுரியை உள்ளங்கைக்குள் வைத்துக்கொள்ளவும் முடிந்திருக்கிறது.

"வாங்க பிரதர்ஸ்... இட்லி வடை பூரிதானே?"

"வடையை எதுக்கு உள்ள நுழைக்கிறே... இன்னிக்கு இட்லி இட்லி இட்லி மட்டும்தான்..."

"பூரி சாப்டு தியாகு... அசல் ஊட்டி உருளையில செஞ்ச மசால் தூள் கிளப்புதுப்பா..."

"போட்டுக் கொண்டா அக்கவுண்ட தானே வெளுத்துடுவோம்."

கை சொடக்கிக்கொண்டு தொடையை ஆட்டியபடி தியாகு ஆர்டர் பண்ண நாராயணன் ஒரு ஆழப்பார்வை பார்த்தான்.

"தெரியும்டா... தெரியும். ஓராயிரம் பார்வையிலே உந்தன் பார்வையை நானறிவேன். இன்னிக்கு சாப்பிட்றதுக்கு காசு கொடுக்க வக்கில்ல, உனக்கு இது தேவையான்னு கேக்கறே... பெட்டிக்கடை பாய்க்குக் கூட சிகரெட்டுக்கு காசு தரணும். எல்லாம் தெரியும். இன்னிக்கு கடன்காரனா இருக்கிறதால நம்ம பிச்சைக்கார நிலையை ஒத்துக்கிட்டு உம்-அவ்வளவுதான் நாமன்னு நினைக்க என்னால முடியாது" தியாகு சொல்லிக் கொண்டு இருக்கும்போதே...

கிரீச்சிட்டு நிற்கும் காரில் இருந்து இறங்கினார் அந்தப் பெரிய மனிதர்.

அவரைப் பார்க்கும் ராயர் தன் பேரபோலா தொந்தியினை தூக்க மாட்டாது தூக்கியபடி கல்லாவில் எழுந்தார்.

வெற்றிலைக் குதப்பல் வாயில், "வரணும், வரணும், பெரியவா வரணும்" என்று முகமன் படித்தார்.

"என்ன ராயரே சௌக்யமா?"

"அமோகம்... உள்ள வாங்கோ இதோ இப்படி உக்காருங்கோ வையாபுரி வா இப்படி..."

வையாபுரி விழுந்தடித்து வந்தான். கார் வந்த வினாடியே பார்த்து மின்னல் வேகத்தில் நெய் தோசை போட்டு எடுத்து வந்திருந்தான். அந்த குறிப்பறிந்த வேகம் பார்த்து ராயரே லேசாய் சிலிர்க்கிறார்.

"ஏய் வை... வாய்யா இங்க." மசாலாவை வழித்து நக்கிய ஆட்காட்டி விரலால் வையாபுரியை அழைத்தான் தியாகு.

"தெரியும்... யாரு அந்த பெரிய மனுஷன்னு கேக்கப் போறீங்க... நமக்கு பெரும்படி விபரமெல்லாம் தெரியாது. ஒண்ணு மட்டும் தெரியும் அவர் கோடீஸ்வரரு பெரிய முதலாளி. அப்பப்ப வந்து போவாரு..."

"பேர்...?"

"லயன் ராமநாதன்!"

அடுத்த விநாடி தியாகு சிலிர்த்து நிமிர்ந்து "ஏய் நம்ம லைலா டிரக் ஃபார்மா எம்.டிப்பா... இன்னிக்கு இவங்க ஷேர்தான் டாப்ல இருக்கற ஒண்ணு. பத்து ரூபா ஷேர் முன்னூத்தி அறுவது ரூபாவுக்கு போகுது..." படபடவென தனக்கு தெரிஞ்சதை கொட்டினான்.

"இப்ப நான் ஆபீஸ் போகணும் டயமாச்சு... கிளம்பு" நாராயணன் சட்டையே செய்யாமல் எழுந்து கை கழுவ ஆயத்தமானான். கைகழுவி வரவும் காபி வந்தது.

"டேய் காபிய குடிடா, அவர எதுக்கு பாக்கறே. அதுக்கெல்லாம் ஒரு யோக்யதை வேணும்." நாராயணன் ஒரு இடி இடித்தான். அவர் ஒரு நெய் தோசையோடு போதும் என்கிற மாதிரி கிளம்பிக் கொண்டிருந்தார்.

கார் கிளம்பிய ஜோரில் ஒரு விமானம் டேக் ஆஃப் ஆனதுபோல் இருந்தது.

ஹூம்! தியாகுவின் மார்பில் பெருமூச்சு. "என்னடா அமைதியாயிட்டே... நாம எப்ப இந்த மாதிரி கார்ல போகப்போறோம்கற கனவா?"

"கார்ல மட்டுமில்ல நாணி, ஏரோப்ளைன் ராக்கெட் ஒண்ணு

விடக்கூடாது..."

"டேய்... உன் கனவுக்கு ஒரு அளவு கிடையாதா?"

"எதுடா கனவு? முன்னுக்கு வரணும். பெரிய ஆளாகணும்னு நினைக்கிறதா?"

"அது கனவல்ல லட்சியம். ஆனா பணக்காரனானா தான் பெரிய ஆளாகமுடியும்னு நினைக்கிறது முட்டாள் தனம்."

"போடா ஃபூல்... பணக்காரன்தாண்டா இன்னிக்கு பெரிய ஆள்."

என்று தியாகு சொன்ன அதே நொடியில் வீதியும் வளைந்தது. திரும்பினால் அந்த பணக்காரரின் கார் முரண்டு பிடித்துக் கொண்டிருந்தது. அவர் காருக்கு வெளியே நின்று கொண்டு இருந்தார். பானட்டுக்குள் தலையை விட்டு அல்லாடிக்கொண்டிருந்தான் டிரைவர்.

"டிரைவர் என்ன பிராப்ளம்...?"

"ஃபேன் பெல்ட் புட்டுகிச்சு..." டிரைவர் சோர்வாக நிமிர்ந்தான்.

"எதையும் பாக்காம வண்டிய எடு. இப்படி நடுத்தெருல என்னை இன்னும் எத்தனை தடவை நிறுத்துவேன்னு பாக்கறேன்."

அவர் சீறிப்பாய ஆறுதல் படுத்தினான் தியாகு.

"கவலைப்படாதீங்க சார்... நீங்க ஒரு ஆட்டோல கிளம்புங்க. அவர் பெல்ட்டை மாத்தி எடுத்துக்கிட்டு வரட்டும். ஆட்டோ!" நின்ற இடத்திலிருந்தபடியே ஒரு குரல். திரௌபதைக்காக வந்த கண்ணனைவிட அதிக வேகத்தில் வந்து நின்றது அந்த ஆட்டோ.

அவர் தயங்கி தயங்கி ஏறினார்.

"தேங்க்ஸ்... தேங்க்யூ வெரிமச்."

"அதெல்லாம் எதுக்கு சார்..." தியாகு வழிய ஆட்டோ கிளம்பியது.

"சரி நீயும் கிளம்பு" நாராயணன் இடித்தான்.

தியாகு சோர்வாக காரைப் பார்த்துக்கொண்டே நடக்க நாராயணனின் முகத்தில் சத்தமாய் சிரிப்பு.

"எதுக்கு சிரிக்கறே?"

"இல்ல... தமிழ் சினிமா பாத்து பாத்து ரொம்ப கெட்டுப்போய்ட்டே நீ. சினிமாலதான் தியாகு இப்படி கார் நிக்கும். ஹீரோ போவான் ஹெல்ப் பண்ணுவான். உடனே அந்தப் பணக்காரரும் மார்பெலும்பு நொறுங்கற மாதிரி கட்டிப்பிடிச்சு பாரட்டுவாரு. கார்லையும் அவர் பொண்ணு இருப்பா. ஹீரோ அவளப் பாப்பான். முதல் பார்வையிலேயே காதல் தீ பிடிச்சிடும். அப்புறம் என்ன... சுலபமா ஹீரோ கோடீஸ்வரனாயிடுவான். நீயும் அப்படி ஏதாவது நடக்காதான்னு ரொம்பதான் நப்பாசைப் பட்டுட்டேன்னு நினைக்கறேன்."

தியாகுவுக்கு நாராயணனின் மடக்கல் சற்று கோபம் தந்தது.

நாராயணனுக்கு 12 பி வரும், ஏறி கோடம்பாக்கம் பிரிட்ஜ் அருகே இறங்கி மகாலிங்கபுரம் நோக்கி நடந்து அங்குள்ள ஆபீசில் பத்து மணிக்குள் சீட்டில் இருக்க வேண்டும்.

அப்படி நிர்பந்தங்கள் எதுவும் இல்லை தியாகுவுக்கு.

ஆழ்வார்பேட்டையில் உள்ள ஒரு ஷேர்புரோக்கர் ஆபீஸில் வந்து போகும் பார்ட்டிகளிடம் வாயளக்க வேண்டும். அப்படி அளந்ததில் எந்த ஷேர் போகிறதோ அதில் இரண்டு பர்சன்ட் கமிஷன் வரும்.

சமயத்தில் இருபது ரூபாய் வரும், இரண்டாயிரமும் வரும்.

ஒரு நிலை கிடையாது.

இன்று எவ்வளவு வரும்? தெரியாது... ஏனோ அந்த ஆபீஸை இன்று நினைத்துப் பார்க்கவே பிடிக்காமல் போனது. பீச் பக்கமாக போய் காலாற கடல் மண்ணில் அலைவருட நிற்கவேண்டும் போல் தோன்ற கிளம்பினான்.

"சோசியம் பாக்கலையோ சோசியம்... கைரேகை சோசியம் பார்க்கலையோ சோசியம்... மூணு காலமும் சொல்லுற சோசியம்."

குச்சி ஜோசியக்காரி ஒருத்தி கரைமேல் அலைவருட நிற்கும் தியாகுவை தாண்டியபடி அவனை தன் குரலால் இழுத்தாள்.

திரும்பிப் பார்த்தான். பின் சிரித்தான்.

"ஏன் ராசா சிரிக்கறே... ரெண்டு ரூவாதான். கைய காட்டு நீ தனவானா, பலவானா, குணவானா, கோமானா, குபேரனா கொள்ளிக்கட்டையான்னு புட்டு வெச்சுப்புடறேன்..."

அவளது ஸ்லாங் அவனுக்கு பிடித்தது. ஆனாலும் கைநீட்ட மனமின்றி சொன்னான்.

"சும்மா கேள் இருண்டு ரூவா... தரேன், பொய்க்கெல்லாம் நான் காசு தரமாட்டேன்."

"சக்கம்மா வாக்கா தம்பி பொய்யி...நீயும் நானும்தான் பொய்யி... அவ மெய்யான தெய்வம்..."

"இப்படி பீடிகை எல்லாம் போட்டா நான் மசிய மாட்டேன். நீ கிளம்பு. உழைச்சுப் பிழைக்கப்பாரு..."

அவள் அவனை வெறித்தாள்.

"என்ன பாக்கறே கிளம்பு..." அலை இருவரையும் இடுப்புவரை நனைத்தும் இருவரிடமும் விலகாத ஒரு நிலை.

"ஒண்ணுமில்ல... காசில்லசும்மா பாருன்னாகூட நான் கோவிக்கேன். இப்படி பொய்யி... உழைச்சு பொழைன்னு சொல்லுதியே உனக்கெல்லாம் சக்கம்மா சோசியம் பத்தி என்ன தெரியும் ராசா...?"

"பாத்தியா... கிளம்புன்னுட்டேன்ல..." தியாகு சொல்லி விட்டு அவன் நடக்க ஆரம்பித்தான்.

"ஒரு நொடி தம்பி" அவள் நிறுத்தினாள். அவன் நின்று பார்த்தான்.

"வேதமா ஒரு சொல் சொல்றேன். நான் சொல்றது நடந்துட்டா எனக்கு நீ என்ன தருவே?"

"என்ன சொல்லப்போறே?"

"கை நீட்டு சொல்றேன்."

"வேணாம், எதையாவது சொல்லிட்டு கடைசில காசு கேப்பே..."

"சக்கம்மா சத்யம் காலணா தராதே நீ... மூணே மூணு வாக்குதான் சொல்வேன். மூணும் முன்னூறு நாள்ள நடக்கும் கைய நீட்டு..."

அவள் விடாப்பிடியில் மடங்கி தயங்கித் தயங்கி கையை நீட்டினான் தியாகு. அவளது குச்சிமுனை நீட்டிய அவன் உள்ளங்கையில் அமுங்கியது.

அடுத்த நொடியே அவள் முகத்தில் பலமான அதிர்ச்சி ரேகைகள்!

# 2

அவளது அதிர்ச்சியும் பதட்டமும் தியாகுவை என்னவோ செய்ய ஆரம்பிக்கிறது.

"என்னம்மா... ஏன் அப்படி பாக்கறே என் கை என்ன சொல்லுது?"

அவள் குச்சியை அவன் கையிலிருந்து எடுக்கிறாள்.

"ஒண்ணுமில்ல ராசா... எந்த காரணம் கொண்டும் இந்த கைய நீ யாருகிட்டேயும் காட்டக் கூடாது." என்று சொல்லி விட்டு வந்த வழியே நடக்கத் தொடங்குகிறாள். அலை பாட்டும் ஆர்ப்பரிக்கிறது.

"ஏய்... என்னது இது ஏதோ மூணு விஷயம் சொல்றேன். முன்னூறு நாள்ள நடந்துடும்னுல்லாம் சொன்னே?"

"வேணாம் ராசா எதையும் கேக்காதே."

"நானா கேட்டேன். நீதானே சொல்றேன்னு சொன்னே?"

"இப்ப நான்தான் சொல்றேன் எதையும் கேக்காதேன்னு. வாரேன்."

அவள் சொல்லி முடிக்கும்போது இனி கேட்டால் தெரியும் சேதி என்கிற மாதிரி கண்டிப்பும் தெரிகிறது அவள் பேச்சில்.

அவனுக்கு குழப்பமாகிறது.

இன்றைய தினமே சரியில்லையோ?

கை நிறைய ஜாதகப் பேப்பர்களுடன் உட்கார்ந்து கொண்டிருக்கிறார் சாரங்கபாணி. கவனமெல்லாம் கூட அதன் மேல்தான். குறிப்பாக சுதர்ஸனின் ஜாதகத்தாளை தூசு தட்டியபடியே - இந்த வரன் ஒரு சூப்பர் வரன் ராமநாதா... இதை விட்டுடாதே..." என்கிறார் பால்ய நண்பர்! லயன் ராமநாதனுக்கே வலது கரம் போன்றவர். சுரத்தேயில்லாமல் எதிரே அமர்ந்திருக்கும் ராமநாதனும் தலையை ஆட்டுகிறார்.

"என்னடா நீ ... நான் எவ்வளவு கஷ்டப்பட்டு எல்லாத்தையும் முடிச்சிருக்கேன். கொஞ்சம் கூட உற்சாகமே இல்லாம ரீஆக்ட் பண்றே நீ?"

"என்னத்தடா பண்ண... எனக்கென்னவோ மைதிலிக்கு கல்யாணம் ஆகும்கற நம்பிக்கையே இல்லை..."

"போடா ஃபூல்... இன்னொரு தடவை அப்படி சொல்லாதே. பையனை பாத்துட்டு சொல்."

"நான் பாக்கறதா முக்கியம். மைதிலி பாக்க வேண்டாமா? அவ சரின்னு சொல்ல வேண்டாமா?"

ராமநாதனின் கேள்வியில் கவலை ததும்பி வழிகிறது.

"நிச்சயம் சொல்வா... இந்தப் பையனை அவளுக்கும் நிச்சயம் பிடிக்கும்..." சாரங்கபாணி பதிலிலும் உறுதி நிமிர்ந்து நிற்கிறது.

"அது சரி... நம்ம விஷயம் பூரா பையன் வீட்டுக்கும் தெரியும் தானே?"

"எதையும் மறைக்கல... ராமநாதா. இப்ப மறைச்சிட்டு பின்னால அவஸ்தைப் படவும் தயாரில்லங்கறது எனக்கு தெரியாதா?"

"காசு பணத்தை கோடி கோடியா கொடுத்த ஆண்டவன் அந்த அளவு மத்த விஷயங்களை எனக்கு தரலைடா. ஓட்டை இதயம் நின்னுடாம பாத்துக்கோ... அவ்வளவுதான் சொல்வேன்."

"வாயக்கழுவு முதல்ல... போய் மைதிலியை தயார் பண்ணு. இன்னிக்கு சாயந்தரமே பிள்ளை வீட்டுக்காரங்களை அழைச்சிட்டு வரேன்."

"இன்னிக்கேவா?"

"என்ன இன்னிக்கேவா. பையன் அடுத்த மாசம் இந்த தேதி அமெரிக்காவுல இருந்தாகணுமாம். அங்கே இருந்து வந்துருக்கறதே கல்யாணம் பண்ணிக்கத்தான். எழுதிக்கோ... வர்ற முகூர்த்தத்துல மைதிலிக்கு கல்யாணம் முடிஞ்சுடும்."

"நெஜமா?"

"சத்யமா...!"

இதமான ஏ.சி. காற்றுக்குள் மிதமான மருக்கொழுந்து வாசம் ஸ்ப்ரே செய்யப்பட்டிருக்கிறது. சுகமாக அனுபவித்தபடி ஒரு நாவலில் லயித்திருக்கிறாள் மைதிலி.

கதவை தட்டிவிட்டு இங்கிதத்தோடு உள் நுழைகிறார் ராமநாதன். கூடவே சாரங்கபாணியும்.

"எப்படிம்மா இருக்கே?"

"நல்லாருக்கேன் அங்கிள்... என்ன இது இரண்டு பேரும் சேர்ந்து வந்துருக்கீங்க. ஒருத்தர் வந்தாலே ஏதோ விஷயம் இருக்கும். இரண்டு பேர்னா...?"

"அந்த எதோ விஷயத்தை ரொம்ப நல்ல விஷயம்னு வெச்சுக்கோயேன்..."

"என்ன டாடி... ஏதாவது புதுசா கம்பெனி விலைக்கு வருதா. வாங்கிப்போடப் போறீங்களா?"

"சொல்லேண்டா..."

"நீயே சொல்லுடா..."

"இரண்டு போல யாராவது ஒருத்தர் விஷயத்தை சொல்லுங்க. எதுக்கு இத்தனை தயக்கம்?"

"ஒண்ணுமில்லம்மா... உனக்கு ஒரு நல்ல வரன் வந்துருக்கு..." தயங்கித் தயங்கித்தான் ராமநாதன் பேச்செடுத்தார். இருந்தாலும் மைதிலி முகம் க்ஷணத்தில் மாறிவிட்டது.

"திரும்பவும் ஆரம்பச்சுட்டீங்களா?" படபடப்பாக சாரங்கபாணியை ஏறிடுகிறாள்.

"டென்ஸ் ஆகாதே மைதிலி. சில கடமைகளை கால காலத்துல செய்துதானே தீரணும்."

"எது கடமை... ஒரு உளுத்துப்போன மரத்தை உத்தரமா நினைச்சு கட்டிட வேலை செய்ய ஆசைப் படறதா...?"

"அம்மாடி.... உனக்கேன் இவ்வளவு தாழ்வு மனப்பான்மை. உனக்குதான் என்ன குறை? உன் வியாதி ஒரு வியாதி இல்லம்மா. அந்த ஜப்பான் டாக்டர் நூறு சதவீதம் குணப்படுத்தறேன்னு சொன்னதுல உனக்கு நம்பிக்கையில்லையா..."

"அப்படி குணப்படுத்தட்டும்... பிறகு பேசிக்கலாம்."

"நம்பிக்கைதாம்மா வாழ்க்கை. நீ என்னம்மா புரியாம பேசறே. இந்த வரன் எப்பேர்ப்பட்ட வரன் தெரியுமா?"

"தோ பாருங்க... கீறல் விழுந்த ரெக்கார்ட் மாதிரி திரும்பத் திரும்ப பேசினதையே பேசாதீங்க. இந்த ஜென்மத்துல எனக்கு கல்யாணம் கிடையாது"

மைதிலியின் படபடப்பான பதில் ராமநாதனை நொறுக்கித் தள்ளிவிட்டது போல் ஆக்குகிறது.

சாரங்கபாணி விடுவதாக இல்லை.

"மைதிலி... எனக்காக இந்த ஒரு தடவை சம்மதிம்மா... சொன்னா கேளும்மா..." என்று கெஞ்சுகிறார்.

"வேண்டாம் அங்கிள்... ப்ளீஸ்! ஜாதகத்துல தோஷம் உடம்புல வியாதி - உருவத்துலையும் கொஞ்சம் கருப்பு அப்பாவோட சொத்து ஒண்ணுதான் பலம்.

நிச்சயம் எனக்கு வரப்போறவன் என்னை விரும்பி கல்யாணம் செய்துக்கறவனா இருக்கமாட்டான். பணத்துக்காகத்தான் தாலி கட்டுவான். என்னால புருஷன்கற ஒரு வியாபாரியோட நிம்மதியா வாழ முடியாது."

"அவன் வியாபாரியா இருந்தா வாழ முடியாதம்மா... மனஷனா இருந்தா ஏத்துக்கையேன்..."

"அப்படியும் மனுஷங்க இந்த உலகத்துல இருக்காங்களா அங்கிள்?"

"இல்லாமலாம்மா மழை பெய்யிது பயிர் விளையுது?"

சாரங்கபாணி சரியாக மடக்கிவிட்டாரோ? மைதிலி ஒரு விநாடி யோசிக்க ஆரம்பிக்கிறாள். விடக்கூடாது... இந்த யோசனையை அப்படியே தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளவேண்டும்.

"அம்மாடி... பையன் வருவார் பார்த்துட்டு மனசு விட்டுப்பேசு அப்பதான் உனக்குப் புரியும். ரொம்ப நல்ல பையன்மா..."

"அங்கிள், ஒருவேளை அந்த மாப்ளை பேக்கோ?"

"ஐய்யோ என்னம்மா இப்படி எல்லாம் சொல்றே?"

"பின்ன என்ன அங்கிள்... ஆவரேஜா ஒரு நாளைக்கு இரண்டு தடவையாவது ஃபிட்ஸ் வர்ற ஒரு பொண்ணை எந்த ஆம்பள தெரிஞ்சு கல்யாணம் பண்ணிப்பான்...?"

"இவன் பண்ணிப்பான்மா..."

"ஒரு வேளை உங்க மாப்ளைக்கும் ஃபிட்ஸோ... அந்த மைனஸ் இண்டு மைனஸ் தியரிப்படி கனெக்ட் பண்றீங்களோ?"

"இல்லம்மா... ஏன் இப்படி எல்லாம் பேசறே... உன் மாமா மாதிரிம்மா நான். உனக்கு தப்பு பண்ணுவேனா?"

"அது என்ன மாதிரி. நீங்க எனக்கு மாமாவேதான். நீங்க தப்பு பண்ணுவீங்கன்னு நினைச்சு பேசல அங்கிள். என்னால் நம்ப முடியல. அதனால இப்படி எல்லாம் கேக்கறேன் பேசறேன்."

"நம்பும்மா... வைக்கப்போர்ல குண்டூசிய தேடி கண்டு பிடிச்ச மாதிரி இந்த பையனை கண்டுபிடிச்சிருக்கேன். அற்புதமான கேரக்டர்மா. காசு பணத்துக்கும் குறைவில்லை. எம். பி. ஏ. முடிச்சுட்டு நியூயார்க்ல இருக்கான்மா. அவனுக்கு தேவை ஒரு நல்ல குணவதி அவ்வளவுதான்."

"நான் குணமாகாத வதியாச்சே...?"

"இனி உன்கிட்டே பேசக்கூடாது. பையனோடதான். எனிவே... அட்வான்ஸ் கங்கிராஜிலேஷன்..."

சாரங்கபாணி இழுத்துக் கூட்டிவிட்டு அறையை விட்டு வெளியே வருகிறார். ராமநாதனை வெற்றிப் பார்வை பார்க்கிறார்.

ஐந்தாம் வகுப்பில் ராமநாதனை விட கூடுதல் மார்க் வாங்கும் போதும் சரி இப்படித்தான் பார்த்தவர் எஸ். எஸ். எல். சிக்கு பிறகு ஒரு டயர் கம்பெனியில் குமாஸ்தாவாகி விட்டனர்.

ராமநாதன் பூர்வீக சொத்துடையவராதலால் பறந்து பறந்து படித்து பட்டம் வாங்க முடிந்தது. சாரங்கபாணிக்கும் எவ்வளவோ உதவப் பார்த்தும் அன்றிலிருந்து இன்று வரை அதை சாரங்கபாணி ஏற்றுக் கொண்டதேயில்லை.

அதனாலேயே இருவர் நட்பிலும் காவிய வாடை வீசுகிறதோ என்னவோ?

பணக்காரன் ஏழைக்கு உதவும் யதார்த்த நிலையில் ஒரு ஏழையே மனது மட்டுமிருந்தால் போதும் பணக்காரனுக்கு நிறைய உதவ முடியும் என்பதை கேரக்டர் பூர்வமாக நிரூபித்துக் கொண்டிருப்பவர்.

அதிகபட்சம் மைதிலி நிவாஸில் காப்பி மட்டுமே குடிப்பார். ஆனால் தீபாவளி, பொங்கல் என்று வந்து விட்டால் தன் சொந்த செலவில் துணிமணி என்று மைதிலிக்கு வாங்கிக் கொடுத்து தடபுடல் செய்துவிடுவார்.

பதிலுக்கு மைதிலியோ ராமநாதனோ ஏதாவது செய்யப் பார்த்தால்

ராமநாதனை பல மாதங்களுக்கு அந்த வீட்டுப் பக்கம் பார்க்க முடியாது.

"ஏண்டா உதவிங்கறது ஒன்வே டிராஃபிக்கா இருக்கணும்கிறியா நீ? யாருக்கு யாருடா கொடுக்கறது...?"

# 3

"ராமநாதா... எனக்குத் தேவைப்படும் போது நானும் உன்கிட்ட உதவி கேப்பேன். ஏன் இப்படி கவலைப்படறே. இதெல்லாம் விஷயமேயில்லை" என்று பூசி சாரங்கபாணி மெழுகி விடுவார்.

இத்தனைக்கும் அவர் பையன் ஒரு வேலையில்லாத பட்டதாரி. மைலா ஃபர்மாவில் இல்லாத வேலையா என்ன? ஆனாலும் கேட்டதில்லை. ராமநாதன் கொடுத்தாலும் வாங்கிக் கொள்ளத் தயாரில்லை.

"வேண்டாம் ராமநாதன் அவன் கேரக்டர் சரியில்லை. என் பேர் கெட்டுப் போயிடும்..." என்று தடுத்து நிறுத்தி விட்டவர்.

மனிதனின் பெரிய பொக்கிஷமே அவரது கேரக்டர் தான் என்பதற்கு ஒரு நடமாடும் சான்று சாரங்கபாணி.

இதோ... ராமநாதனின் கரங்கள் சாரங்கபாணியின் கைகளைப் பிடித்து கண்களில் எல்லாம் ஒற்றிக் கொள்கிறது.

"சாரா... ரொம்ப தேங்க்ஸ்டா... எனக்கும் இந்த கல்யாணம் நடந்துடும்கற நம்பிக்கை பொறந்தாச்சுடா."

"போறும்... அது போறும் எனக்கு. நீ வேணா பார் மைதிலி அமோகமா இருக்கப்போறா, டேய் அவ ஒரு தேவதைடா..."

"தேங்க்ஸ்டா... அவ செஞ்ச புண்ணியம் நீ எனக்கு நண்பனா கிடைச்சிருக்கே..."

"ஆரம்பிச்சுடாதே... பிள்ளையார் சுழிதான் போட்டிருக்கோம். நிறைய தூரம் போகவேண்டியிருக்கு. சாயங்காலம் அஞ்சு மணிக்கெல்லாம் பிள்ளை வீட்டோட வந்திடுவேன். உனக்கு பிடிச்சிருக்கு பிடிக்கலை உன் உறவுக்காரப் பட்டாளமும் வரட்டும். எல்லார்க்கும் சொல்லி விடு, என்ன?"

கிளம்புகிறார் சாரங்கபாணி.

நெகிழ்தலோடு சோபாவில் விழுகிறது ராமநாதனின் சரீரம்!

மதியச் சாப்பாடுகளை கட்டும் நேரம். கைவசம் டோக்கனோடு சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு பின்னால் அடுத்துச் சாப்பிட விரும்புகின்றவர்கள் நின்று கொண்டிருக்க சாப்பிட்டுக்

கொண்டிருப்பவர்கள். சங்கடமாக அள்ளி விழுங்க தினப்படி இப்படி நடந்தாலும் கூட்டம் மட்டும் ராயர் கிளப்பிற்கு குறைவதேயில்லை. எல்லாம் ருசி படுத்தும் பாடு.

நளனையே பிடித்து சமையல் கட்டில் போட்டு விட்டது போல ஒரு செருக்கு ராயருக்கும்... அந்த செருக்கு குறையாதபடி டோக்கன் போட்டுக் கொண்டிருப்பவர், எதிரில் அசடு வழிய நிற்கிறான் தியாகு.

"வாய்யா... காலைலயே பாக்கணும்னு இருந்தேன். நைஸா நழுவிட்டே... இப்ப விட்ற மாதிரி இல்ல..." ராயர் பேசும் தினுசே தியாகுவை என்னவோ செய்கிறது.

"ராயரே... உடைஞ்ச.கிளாசுக்கு என்ன விலையோ கணக்குல எழுதிக்குங்க... எதுக்கு இந்த பீடிகை இப்ப ஒரு ஸ்பெஷல் மீல்ஸ்..."

"மீல்ஸ் தரேன். அதுக்கு முந்தி ஒரு விஷயம. உன்னால ஒரு உதவி ஆகணுமே..." ராயரின் பீடிகை தியாகுவை சற்று சமன்படுத்த "என்ன உதவி?"

ராயர் அடுத்த நொடி எல்லா ஃபேனையும் அணைக்கறார். தேங்காய் துருவிக் கொண்டிருந்த அந்த இரும்புச் சிறகுகள் ஓட்டம் இழக்கின்றன.

"கிட்டவா சொல்றேன்..."

அவனும் கிட்டே சென்று "சொல்லுங்க..."

"நமக்கு வேண்டப்பட்ட பார்ட்டி ஒருத்தர் தன் கடன் பாக்கிக்காக ஒருத்தர்கிட்ட இருந்து ஷேர் டாக்குமெண்ட்ஸ்களை வாங்கிட்டு வந்துட்டார். கிட்டத்தட்ட லட்ச ரூபா ஷேர். கேஷ் பண்ணித் தரணும் தர்றியா...?"

தொழிலே அதுதானே?

"தெரியும்... நீ இருக்கறது தெரிஞ்சு நானும் முடிச்சு தரேன்னு சொல்லிட்டேன். நீ ஒரு இரண்டு பர்சன்ட் எடுத்துக்கோ..."

"ஆஹா என்ன தாராளம்... என்ன தாராளம்..."

"சரி மூணு பர்சன்ட்!"

"ராயரே... நல்லபடி வில்லங்கமில்லாம விக்கணுனா அஞ்சு பர்சன்ட் இல்லேன்னா ஆளை விடுங்க..."

"சரி எடுத்துத் தொலைச்சுக்கோ... ஆனா காரியம் பிசிறில்லாம முடியணும். செக் பேமெண்ட் கூடாது. கேஷ் தான்... அல்வா பூந்தியெல்லாம் கொடுத்துடாம அழகா பண்ணி என் பேரைக் காப்பாத்து..."

"ஆமாம யார் அந்த பார்ட்டி?"

ராயர் தயங்கித் தயங்கி பெயரைச் சொன்ன போது தியாகுவுக்கு தூக்கிவாரிப் போட்டது.

"பெட்டிக்கடை பாய்!"

"ராயரே... பாயா? பாய்க்கா இவ்வளவும் நம்ப முடியல..."

"மெள்ளப்பேசு..." நடுவில் ஒரு வாடிக்கை கை நீட்டி காசு கொடுத்து டோக்கன் கேட்க ராயர் வாடிக்கையை அனுப்பி விட்டு பேச்சைப் பிடிக்கிறார்.

"எல்லாம் கஞ்சா காசு. புரியலியா? பாய் பேருக்கு பெட்டிக்கடை வெச்சிருக்கான். உள்சரக்கு கஞ்சா அபின்...!"

"நிஜமாவா?"

"வெளிய மூச்சு விடாதே... பெட்டிக்கடை வெச்சு என்னிக்கு முன்னுக்கு வரது. அறுபது வருஷமா கிளப் நடத்தறேன். நானே வரலை... முன்னுக்கு வரணும்னா இன்னிக்கு இப்படி ஏதாவது பண்ணனும்."

தியாகு திக்குமுக்காட ஆரம்பிக்கிறான். இந்த மாதிரி நிறைய கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால் படிக்கும் போது உருவாகும் மன அலைக்கும் அதையே நேரில் பார்க்கும் போது உருவாகும் மன அலைக்கும் நிறைய பேதமிருப்பதை இன்று உணருகிறான்.

துண்டுபீடி பிடித்துக் கொண்டு மேல்சட்டை கூட இல்லாமல் இருக்கும் பாயிடம் இன்று இத்தனை பைசாவா?

"என்ன வாய் பொளந்திட்டே... இங்க காலைல எட்டு மணியானா வருவாரே நீலங்கரை சம்பந்தம்..."

"ஆமாம் கறுப்பு அம்பாசடர்!"

"அந்த ஆளு அஞ்சு வருஷத்துக்கு முந்தி வரை யாராம்?"

"யாராம்?"

"வெளில சொல்லாதே... இந்த க்ளப்புக்கு வாழை இலை சப்ளை பண்ணின இலை வியாபாரிய்யா..."

தியாகுவுக்குள் பசியற்று போகிறது. ராயரும் மனதில் எதை எதையோ ஊற்றி பற்ற வைக்கத் தொடங்குகிறார்.

"சரி எப்படி இப்படி காரு பங்களான்னு...?"

"பணக்கார பொண்ணா பார்த்து லவ் பண்ணினான். இழுத்துக்கிட்டு போய் தாலி கட்டினான். ஒதுக்கி வெச்ச மாமனார் மாமியார் மேல மண்ணெண்ணையை ஊற்றி கொளுத்தினான். ஊரை ஆக்சிடெண்டுன்னு சொல்லி நம்ப வெச்சான். அப்புறம் என்ன... மாமனார் சொத்து ஒரே மகளுக்குத்தானே வரும். வந்தது..."

ராயர் பேச்சோடு வியாபாரத்திலும் கவனமாக இருக்கிறார்.

"அவ்வளவு ஏன்... நம்ம கவுன்சிலர் குருமூர்த்தி யாரு...? பிச்சை எடுத்துக்கிட்டு திரிஞ்ச பயதானே... ஒவர் த நைட்ல பெட்டி மாத்தினான். இப்ப பத்து வீடு, பங்களா, கவுன்சிலர் போஸ்ட், ஏழைப்பங்காளன் பட்டம்...!"

ராயர் கொளுத்திக் கொண்டே போகிறார். தலைக்கு மேலேயே ‘உழைப்பு உயர்வு தரும்’ என்கிற ஸ்டிக்கர் பிளேட்டோடு...

தியாகுவுக்குள் குருமூர்த்திகளும், சம்பந்தங்களும், பாய்களும் தட்டாமாலை சுற்ற ஆரம்பிக்கிறார்கள்...

மன முகடுகளில் ஏறி நின்று கொண்டு சிரிக்கிறார்கள். தியாகுவின் முன்னே ராயரும் ஒரு ராஜகுரு போலத்தான் இப்பொழுது தோற்றம் தருகிறார்.

"சரி சரி... போய் சாப்ட்டுட்டு வா... இன்னிக்கு இருபது படிதான் போட்ருக்கான் வையாபுரி. மிச்சத்த பிறகு பேசிக்கலாம்..."

அரைமனதாக தலையாட்டியபடி உள் நோக்கி நடக்கிறான். ஹோட்டல் சாப்பாட்டுக்கேயுரிய கதம்ப வாடை மூக்கைச் சடைக்கிறது.

உட்கார்ந்து சாப்பிட ஆரப்பிக்கும் போதும் அவனுக்குள் பெட்டிக்கடை பாயும், குருமூர்த்திகளும் தான் குறுக்கும் நெடுக்கும் நடக்கிறார்கள்.

"என்ன தியாகு... என்ன ராயரை நான் என்னவோ நினைச்சேன். பெரிய ஆள்தான்!"

"அத தெரிஞ்சுக்க உனக்கு இத்தனை வருஷம் ஆச்சாக்கும். ஆமா என்ன சொன்னாரு?"

"சுருக்கமா சொல்றேனே... பிழைக்கத் தெரியாத முட்டாப் பயடா நீன்னு சொல்லிட்டார்."

"உன்னையா சொன்னார். நம்ப முடியலையப்பா..."

"நீ நம்பு நம்பாம போ... நான் முட்டாப் பயதான் வைய்யா..."

"ஆனா இன்னிக்கு கண்ணு திறந்துரிச்சி..."

"பாத்துப்பா... நெத்திக் கண்ணா அது இருந்துடப்போவுது" வையாபுரி அப்படியே அடுத்த மேஜை பக்கம் திரும்புகிறான். தியாகு சோற்றோடு அவன் சொல்வதையும் சேர்த்து மெல்லுகிறான். 'திறந்துக்கிட்டது நெற்றிக்கண் தாண்டா. கண்ணு நெற்றிக்கண்தான்!'

ஈரப்பதமே இல்லாத காற்று வீசிக் கொண்டிருக்கிறது. மேனி மேல் பட்டும் உறைக்கவேயில்லை. உடம்பெல்லாம் வெப்பம் காரணமாக உப்பு பூத்து உலட்டித் தள்ளி இருக்கிறது. அதிலும் பீக் டைமில் 12 பி, ஐ பிடித்து ஸ்க்ரூ டிரைவரால் கூட்டம் திருகி லஸ்ஸில் இறங்கி ஜாகையை அடைவதென்பது நிச்சயம் ஒரு பெரும் தண்டனைக்குரிய செயல்தான். காற்றையே கற்பழித்து விடச் சென்னையில் வாழ்வதில் ஆயிரம் சிக்கல். அதில் ஒரு கிளைச் சிக்கல். மனதில் பொறுமியபடி மாடிப்படி ஏறி அறைக்குள் நுழைந்து அப்பாடா என்றபடி சட்டையை கழற்றுகிறான் நாராயணன்.

உள்ளே அறை முழுக்க புகைக் கொட்டாரம். உபயம் தியாகு... மூலப் பொருள் வில்ஸ் ஃபில்டர்!

"நாத்தம் பிடிச்ச பயடா... மொட்ட மாடில போய் பிடிக்கலாம்ல? ஆமா என்ன இன்னிக்கு எனக்கு முந்தி ரூம்ல இருக்கே, மார்க்கட் டல்லா...?"

"மார்க்கட் மட்டுமா மனசும்தாண்டா..."

"அதுக்குத்தான் இருக்குன்னுவியே... ஃபுல்லு, போடலையா?"

"டப்பு நஹி மேரா தோஸ்த்."

"போடா... வேற யார் கிட்டையாவது போய் சொல்லு. எவனாவது சிக்கினா அவன் கிட்ட கறக்க உனக்கு சொல்லித் தரணுமாக்கும்."

"இந்த லைஃப் ஒரே போர் நாணி."

"அதனால?"

"உனக்கு அலுக்கலையா... 12 B கோடம்பாக்கம் பிரிட்ஜ். ஆபீஸ் மேஜை அந்த மூக்குப் பொடி மேனேஜர், வறுத்தெடுக்கற வெய்யில், வெறுப்பா இல்லியாடா?"

"என்னடா சொல்றே?"

"நான் நல்லபடியா பொழைக்கறதுன்னு முடிவு பண்ணிட்டேன் நாணி. பொய்யையும் மெய்யையும் கலந்து தாளிக்கற இந்த புரோக்கர் பிசினசுக்கும் ஒரு டாட்டா காட்டப் போறேன்."

"டேய்... ஏதாவது கடத்தல் கிடத்தல் பண்ணப் போறியா?"

"இல்லடா... வாழ்க்கைங்கற சதுரங்கத்துல ஒரு சாமர்த்தியமான விளையாட்டு விளையாடப்போறேன். சில தொழிலதிபர்களும், அரசியல்வாதிகளும் மட்டுமே விளையாடற விளையாட்டு..."

"ராகவேந்திரா... என்னென்னவோ சொல்றியேடா?"

"கடைசி கடைசியா உன்கிட்ட பேசறதா வெச்சுக் கோயேன். இனி எல்லாம் வெறும் செயல்தான். இன்வெஸ்ட்மெண்ட் ரொம்ப சிம்பிள். என்னோட மூளை!"

"வெற்றி மேல் வெற்றி" என்கிற கணிப்பு சிரிப்பை உதட்டில் பரப்ப ஆரம்பிக்கிறது.

மைதிலி நிவாஸ் போர்டிகோவில் சீற்றம் தணிந்தபடி நிற்கிறது அந்த ரத்தச் சிவப்பு சியலோ...

ஓடி வருகிறார் ராம்நாத்! கூடவே சாரங்கபாணியும்.

காருக்குள் இருந்து வாட்டசாட்டமாக இறங்குகிறார் ஒருவர். கூடவே எம்.என். ராஜம் சாயலில் ஒரு பெண்மணி. மொத்தக் கழுத்தையும் தங்கச் சங்கிலியால் மூடிவேய்ந்திருக்கிறாள்.

கூடவே யார் அது அரவிந்தசாமி சாயலில்...?

"வாங்கோ... வாங்கோ..." வாய் நிறைய வரவேற்கும் சாரங்கபாணி "ராமநாதா சம்பந்திய கூப்டுக்கிட்டு போ... வாங்க மாப்ளை சார்..." என்று அந்த அரவிந்தசாமி பக்கமும் சாய்கிறார். ராம்நாத் மாப்பிள்ளையைதான் அழுத்தமாகப்பார்க்கிறார். உள் மனது நூறு மதிப்பெண் போடுகிறது. அதற்கு இசைவாக அவனும் பணிவாக ஒரு

கும்பிடு போடுகிறான்.

"உள்ள வாங்க... உள்ள வாங்க..." நடக்கின்றனர்.

நடப்பவர்கள் பார்வை வீட்டை நன்றாகவே அளக்கிறது. குறிப்பாக அந்தப் அந்தப் பெண்மணி விழியால் மில்லிமீட்டர் சுத்தமாக அளக்கிறாள்.

ஐநூறு சதுர அடி பரப்பளவில் ரெட்கார்ப்பெட் விரிக்கப்பட்ட வட்ட வடிவ ஹால்.

இதாலியன் மாடலில் சோபாக்கள். அமருகிறார்கள். தசாங்க வாசம் இழைய ஆரம்பிக்கிறது.

"வீடு நல்லா இருக்கு..." என்கிறார் அந்த பெரிய மனிதர்.

"ஆங் அறிமுகப்படுத்த மறந்துட்டேனே... ராமநாதா இவர்தான் ராஜரத்தினம். லீடிங் ஆடிட்டர். இவங்க அவர் வைஃப் மகாலட்சுமி."

"மாப்ள தம்பி பேர் சுதர்சனம்..." ராமநாதன் படபடப்போடு மாறிமாறி வணங்குகிறார்.

"உக்காருங்க அங்கிள்... ரொம்ப டெம்ப்டா இருக்கீங்க போல... கவலப்படாம இருங்க. எல்லாம் நல்லபடி நடக்கும்..."

சுதர்சன் பேச்சின் துவக்கத்திலேயே ஆறுதலை அள்ளி வழங்குகிறான். அதில் நம்பிக்கையும் கலந்துகிடக்கிறது.

"அதானே... எதுக்கு பதட்டப்படறீங்க ராமநாதன்? எல்லாம் நல்லபடி நடக்கும். அப்புறம் ஒரு விஷயம். இப்ப நடக்கப்போற எந்த விஷயத்துலயும் ஃபார்மாலிடிஸ் இருக்கக் கூடாது. இந்த பொண்ணு வர்றது, பார்க்கறது பாட்றது ஆட்றது... நத்திங்"

இது ஒரு கேஷுவல் மீட் உங்க பொண் பத்தி சாரங்கபாணி எதையும் மறைக்கலை. என் பிள்ளைக்கும் இதுல பரிபூரண சம்மதம். ஆகையால டென்ஷன் இல்லாம கேஷுவலா இருங்க..."

ராஜரத்னமும் மயில் தோகை வருடலாக பேசுகிறார்.

ராமநாதன் கண்கள் குளமாக அனைவரையும் ஏறிடுகிறார்.

"எனக்கு எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை. நம்பவும் முடியல. மைதிலி ஜாதகப்படி..."

அவர் முடிக்குமுன் ராஜரத்தினம் பாய்கிறார். "வேண்டாம்... ஜாதகம் ஜோசியம்னு எதையும் பேசாதீங்க. நான் அவைகளை நம்பறது மட்டுமில்ல, வெறுக்கவும் செய்யறேன்.

என் வாழ்க்கைல அதை நம்பி ரொம்ப மோசம் போய்ட்டேன். எல்லாம் ஹம்பக்!"

ராஜரத்னம் பேச்சு ராமநாதனை திக்கு முக்காட செய்கிறது.

மாடியில் ஒரு உருண்ட தூண் பின்னால் நின்று அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கும் மைதிலியும் நின்ற இடத்தில் இதன் காரணமாக திக்கு முக்காடிப் போகிறாள்.

அவள் பார்வை நம்பிக்கையே இல்லாமல் சுதர்சன் மேல் தாவும் போது காபி நுழைகிறது.

"சாரி அங்கிள்... காபி டீ எதுவும் சாப்பிடறதில்ல. நான் யோகா டெடிகேஷன்ல ரொம்ப பற்றுதல் உள்ள கேரக்டர். காபி டீ அதோட பலன்களை எல்லாம் விழுங்கற எமன் ஆச்சே?"

சுதர்சன் மைதிலியை மேலும் திக்குமுக்காடச் செய்கிறான்.

மகாலட்சுமி மட்டும் ஏனோ உம்மென்று இருக்கிறாள்.

"ஏன் மேடம் சரியா பேசாம இருக்காங்க... ஏதாவது உடம்புக்கு...?" ராமநாதன் புரிந்துகொண்டு கேட்கிறார்.

"ஒண்ணுமில்ல... ஒண்ணுமில்ல. அவளுக்கு இந்த கல்யாணத்துக்கு ஜாதகம் பார்த்தா தேவலைங்கறது அபிப்ராயம். அதான்..."

"ஏன் அவங்க அபிப்ராயத்தை தடுக்கணும்..."

"நோ ராம்நாத். நாங்க ஒரு நல்ல நோக்கத்தோட இந்த கல்யாணத்துக்கு சம்மதிச்சிருக்கோம். அதை அது கெடுக்கலாம். கெடுக்காமலும் விடலாம். எதுக்கு ஒரு முட்டாள்தனமான முயற்சி..."

"மகா கொஞ்சம் புரிஞ்சுக்கோ. நல்ல எண்ணங்கள் உள்ளவங்களுக்கு நல்லதுதான் நடக்கும். போ. போய் மருமகளைப் பார்தது கூப்பிட்டுக்கிட்டு வா..."

ராஜரத்னம் ராம்நாத்துக்கான பதிலை மகாவுக்காகவும் ஆக்கி அவளை தூண்டிவிட அவளும் எழுந்திருக்க,

"ஒன் மினிட்..." என்று எழுந்திருக்கிறான் சுதர்சன்.

"எக்ஸ்க்யூஸ் மீ அங்கிள். நான் கொஞ்சம் மைதிலி கூட பேசிட்றேனே... உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே..."

"இதுல என்ன இருக்கு... தாராளமா... தாராளமா..." ராம்நாத் அனுமதி வழங்க சுதர்சன் அவள் எங்கிருக்கிறாள் என்பதுபோல் பார்க்க சாரங்கபாணி அழைத்துச்செல்ல ஆயத்தமாகிறார்.

சுதர்சன் வருவது தெரிந்து தன் அறைக்குள் ஓடிச்சென்று ஜன்னலோரமாக நின்று கொள்கிறாள் மைதிலி.

அதிக படபடப்பு. அதன் காரணமாக வியர்வை.

சுதர்சன் உள்ளே நுழைகிறான்.

"ஹலோ..." கனிவாக அழைக்க அவள் திரும்புகிறாள். "ஹலோ..." ஈனசுரத்தில் அவனை எதிர்கொள்கிறாள்.

"ஹவ் ஆர் யூ?"

"ஃபைன்..." அவள் அவனை ஏறிடாமல் தரையை பார்த்தபடி சொல்ல அவன் அதை ரசித்தபடி பேச்சைத் தொடர்கிறான்.

"ஐ ஆம் சுதர்சன்!"

"தெ. தெ. தெரியும்..."

"உங்களை பெண் பார்க்க வந்திருக்கேன்."

"..........."

"நீங்க் என்னை பார்க்க வேண்டாமா? ஜஸ்ட் நாம கொஞ்சமாவது பேசி ஒருத்தரை ஒருத்தர் புரஞ்சுக்க வேண்டாமா? அதான்... அதுக்குதான் வந்திருக்கேன்..."

"........."

"இப்படி பேசாம இருந்தா எப்படி? கமான் பேசுங்க உங்களுக்கு இந்த கல்யாணத்துல இஷ்டமா? என்னை பிடிச்சிருக்கா...? என் கூட ஸ்டேட்ஸ் வர சம்மதமா?"

"நிறைய கேள்விகள் இருக்கு. நீங்க பதில் சொல்லணும்."

அவன் சரளமாக தயக்கமே இல்லாமல் பேசுகிறான். மைதிலி சற்று வெட்கத்தை ஒத்தி வைத்தவளாக நிமிர்ந்தாள். ஏதோ பளிச்சென்று கேட்கப் போகும் கூர்மையான பார்வை.

"கமான் பேசுங்க... என்னை எப்படி உங்களால ஒத்துக்க முடிஞ்சுது?"

அவளின் அந்த கேள்வி அவனை திடுக்கிடவைக்கிறது. இருந்தாலும் சுதாரிக்கிறான்.

"ஏன் உங்களுக்கு என்ன?"

"எனக்கு என்னவா? நான் ஒரு ஃபிட்ஸ் கேஸ் மிஸ்டர்... மிஸ்டர்..."

"சதர்சன்!"

"ஆங்... நான் ஒரு நாளைக்கு ஆவரேஜா இரண்டு தடவையாவது ஃபிட்ஸை மீட் பண்ற ஒரு பேத்தடிக்கேஸ்..."

"அதனால என்ன?" அவன் பட்டென்று திருப்புகிறான். அவளுக்கு அது அதிர்ச்சியாகிறது. சில வினாடி மௌனமாகக் கழிகிறது. அவள் பின் சிரிக்கிறாள்.

"எதுக்கு சிரிக்கிறீங்க?"

"சிரிக்காம... அதனால என்னன்னு கேட்ட உடனேயே புரிஞ்சு போச்சு மிஸ்டர் சுதர்சன். உங்களுக்கு என் ஃபிட்ஸ் பெரிசா இல்ல... ஏன்னா?"

அவள் முடிக்கும் முன் அவன் கையை உயர்த்தி தடுக்கிறான்.

"ஸ்டாப் மைதிலி... நான் பேசி முடிச்சிடறேன். பிறகு உங்க அபிப்ராயத்த சொல்லலாம்."

"ஸ்டேட்ஸ்ல நான் லீடிங் ஆடிட்டர். பர்சனலா கம்யூட்டர்ஸ் சேல்ஸ் சென்டரும் வெச்சிருக்கேன். புரோக்ராமிங்கும் பண்ணுவேன். காசு பணத்துக்கும் சொத்துக்கும் ஆசைப்பட்டு உங்களை கல்யாணம் பண்ண நான் முன்வந்ததா நீங்க நினைச்சா தயவுசெய்து மாத்திக்குங்க.

எனக்கு கொலராடோ ஸ்டேட்ல பிவர் க்ரீக்குங்கற இடத்துல ஒரு கால்ஃப் மைதானமே இருக்கு... இன்னிக்கு அது பல கோடி போகும்." சுதர்சன் தன் பேச்சில் இடைவெளி விட்டு மைதிலியை பார்க்கிறான். அவள் கூர்மையாக கவனித்தபடி...

"அப்படி இருக்க ஒரு ஃபிட்ஸ் கேஸை கட்டிக்க ஏன் சம்மதிச்சேன்னு

உனக்கு ஆச்சரியமா இருக்கும். எனக்கு ஒரு சிஸ்டர் இருந்தா. பேர் நிர்மலா. அக்கா நல்ல அழகு. ஆனா பாவம் உங்களைப் போலதான். அவளுக்கும் ஃபிட்ஸ் வரும்."

மைதிலி திடுக்கிட்டு நிமிர்கிறாள்.

"உங்களுக்காவது இரண்டு தடவைதான்னு சொன்னீங்க. அக்காவுக்கு அஞ்சாறு தடவை வரும். எவ்வளவு வைத்யம் பார்த்தும் பலனில்லை. மூளைல ஏதோ ஒரு நரம்பு சுத்தமா செயல்படாம போனதால வரும் ஆபத்து அதுன்னு டாக்டர்ஸ் சொன்னாங்க.

அக்கா உடம்பு பூரா காயமாத்தான் இருக்கும். எங்க கீழே விழுவா எப்படி விழுவான்னே தெரியாது. பொறுத்துப் பார்த்த அப்பா அவளை பர்மனன்டா சங்கிலியை கடுங்காவல் தண்டனை கைதியைப் போல கட்டி போட்டுட்டார்னா பாத்துக்குங்களேன்..."

மைதிலிக்கு நெஞ்சைக் குத்துகிறது அவன் பேச்சு. அவனும் அவள் நினைப்பால் கலங்கி விட்டிருக்கிறான்.

"இதனால அக்காவோட கல்யாணம் ஒரு பெரிய கேள்விக்குறியாயிடிச்சு. அக்காவும் ஒரு நாள் மனசு உடைஞ்சு எப்படியோ விஷத்தை குடிச்சிட்டா...! பதறிப் போய் ஹாஸ்பிடல்ல சேர்த்தோம். என்னக்கா இப்படி பண்ணிட்டேன்னும் கேட்டேன்.

என்ன சுதா... எனக்கு விடுதலையே கிடைக்க கூடாதான்னு திருப்பி கேட்டா...! அப்படியே போதும்டா இந்த கொடிய நோயோட நான் பட்ற பாடு... உன் எதுக்க யாரையும் படவிடாதேன்னு சொன்னா. அதுதான் அவ கடைசியா சொன்னது. தலை சாஞ்சிடிச்சு."

சுதர்சன் பேச்சை நிறுத்தி கண்களை கசக்கிக் கொள்கிறாள். அவளுக்கும் கண் கலங்குகிறது.

"அப்ப இது அக்காவால வந்த அனுதாபமா... என் பேர்ல உங்களுக்கு அநுதாபம்தானா?"

"ஆமாம் மைதிலி... நான் பொய் சொல்ல விரும்பலை. அனுதாபம்தான். ஆனா இதுவே காதலா மாறும்னு நம்பறேன். உங்களுக்கு குணமாகும்னும் நம்பிக்கை இருக்கு. அக்கா ஆசீர்வாதம் கை விடாதுன்னு நம்பறேன்."

அவள் அவனது அரிச்சந்திர மனதை பார்த்து சற்று சிலிர்க்கிறாள். முதன்

முறையாக மனதின் அடித்தளத்திலிருந்து நெகிழ்ந்து சிரிக்கத் தொடங்குகிறாள்.

"எனக்கு நம்பிக்கை இல்லை. என் ஜாதகமும் ரொம்ப மோசம்னு சொல்லி எனக்குள்ற கல்யாண ஆசையே இல்லாம பண்ணிட்டார் அப்பா.

இப்ப என்னடான்னா தெய்வம் உங்க ரூபத்துல வந்து..."

அவளால முடிக்க முடியவில்லை. கண்ணீர் முட்டுகிறது,

"ப்ளீஸ் அழாதீங்கோ... அழாதீங்கோ..." அவன் எழுந்து அவள் கரத்தை பற்றி ஆறுதல் சொல்லப் பார்க்கிறாள்.

"அழாதடின்னே சொல்லலாம்."

அவனுக்கு புரிகிறது. கைகளை உறுதியாகப் பற்றுகிறான்.

வெள்ளிக்கிழமை!

விடிந்த பொழுதில் ஒரு புது வெளிச்சத்தை பார்க்கிறாள் மைதிலி. ஆத்மா குளிரும்போது முகத்தில் அதன் ஒளி பளீரிடுமாமே... மைதிலி முகத்தில் சூரிய தேஜஸ் கூத்தாடுகிறது. எண்ணைக் குளியல் பூஜை என்று புது வடிவம் காட்டுகிறாள்.

ராம்நாத்துக்கு அதைப் பார்க்கப் பார்க்க பரவசமாக இருக்கிறது.

"அப்பா கோவில் வரை போய்ட்டு வரேம்பா..." என்று எதிரில் நிற்பவளை தேவதை போல பார்த்து பிரமிக்கிறார்.

"என்னடா கோயில் குளம்னு ஆரம்பிச்சுட்டே கல்யாண சந்தோஷமா?"

"ஆமாம்பா... அந்த அம்பிகைக்கு நன்றி சொல்ல வேண்டாமா...?"

"கட்டாயமா... போய் வா! போய் வா... எந்த கோவிலுக்கும்மா...!"

"கற்பகாம்பாள் கோவிலுக்குத்தாம்பா..."

சொன்ன ஜோரோடு பூஜைத் தட்டுடன் கிளம்புகிறாள்.

பார்த்துக் கொண்டே நிற்கிறார் ராம்நாத்!

கபாலீஸ்வரர் கோயில்.

பின்வாசல் தெருவில் ஓரம் கட்டி நிற்கும் காரிலிருந்து இறங்குகிறாள்.

எதிரில் தெப்பக்குளம். தாமரையும் தழையுமாக பிரம்மாண்ட ரூபத்தோடு அழகு காட்டுகிறது.

பெரும்பாலும் வறண்டு கிடக்கும். இந்த ஆண்டு நல்ல மழை. தப்பிப்போய் தண்ணீர் இருக்கிறது. சீராக செதுக்கிய படிக்கட்டுகள்.

இறங்கி நீரில் நிற்கும் ஆசை மைதிலிக்கு வருகிறது.

டிரைவர் காரை இன்னமும் சற்று ஓரம் கட்டுமுன் விறுவிறுவென்று இறங்குகிறாள்.

அடேயப்பா நடையில்தான் என்ன ஒரு வேகம். துள்ளல்.

தண்ணீர் பரப்பில் கால் அழுந்துகிறது.

ஜில்லிப்பு உடம்பில் பரவசமாக பாய்கிறது.

அடுத்த நொடியே சந்தோஷமோ துக்கமோ நான் இல்லாமல் எப்படி? என்கிற மாதிரி வலிப்பு வந்து வெட்டி இழுக்க ஆரம்பிக்கறது.

-ஐய்யய்யோ...

# 4

தாமரை மண்டிய நீர்க்குளத்தின் முதல் படியிலேயே அலங்கோலமான கதியில் மைதிலியை வலிப்பு வெட்டி இழுக்கத் தொடங்கி விட்டது...

ஐய்யய்யோ...? பார்த்துவிட்டு பாய்ந்து இறங்குகிறார் வயதான ஒருவர். அங்கும் இங்குமாக சிலர் பார்த்து சின்ன அளவில் ஸ்தம்பிக்க எதார்த்தமாய் அவர்களில் தியாகுவும் இருந்ததுதான் ஆச்சர்யம்.

மைதிலியை நெருங்கியவர் சில வினாடிகள் பதறி அவளை நீர் நிலை விட்டு மேலே இழுத்துப் போடப் பார்க்கிறார். முடியவில்லை. முதிர்ந்த தேகம். மைதிலியின் வெட்டி இழுக்கும் கரம் வசமாக சிக்கிக் கொள்கிறது.

தியாகு தாமதிக்காமல் இறங்குகிறான். இருவரின் ஊடே நுழைந்து வயதானவரை விடுவித்து மைதிலியை அள்ளித் தோளில் சரித்து மடமடவென்று மேலே சுமந்து வந்து... ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு அதுவரை ஒதுங்கி நின்று கொண்டிருந்த டிரைவரும் நரம்பறுந்த மாதிரி ஓடி வருகிறான்.

"அய்யோ அம்மா போகவேணாம்னேன் கேக்கலியே இப்ப பாத்தீங்களா..." என்று புலம்பியபடியே கார் சாவிக்கொத்தை மைதிலியின் கரம் வசம் திணிக்கிறான்.

கையும் காலும் மெல்ல் சமனப்பட ஆரம்பிக்கிறது.

ஈர உடம்பில் அங்கங்கே ஆடை ஒதுங்கி கிழங்கு கிழங்காகத் தெரிகிறது.

தியாகுவே சரி செய்கிறான். மற்ற நேரங்களில் பார்த்தாலே தீப்பிடித்துக் கொள்ளும் பகுதிகள் அவை. சுற்றி வளைத்து நிற்கும் கூட்டம் அனுதாபக் கசிவுக்கு நடுவில் அந்த அல்ப சந்தோஷத்தை அடையாமல் இல்லை.

"போங்க போங்க வேடிக்கை பார்த்தது போதும்" என்று சொல்லி விட்டு மைதிலியை பார்க்க அவள் அப்படியே மயங்கியிருந்தாள். வாய் கிட்டிப்போய் கோணி விட்டிருந்தது.

"ஆமா யார் இவங்க?"

"என் முதலாளி மக."

"உங்க முதலாளி யாரு?"

"ராமநாதனய்யா... அதான் மைலா மருந்துக் கம்பெனி முதலாளி..."

டிரைவரின் விளக்கத்தில் க்ஷணத்தில் அவன் முன்பே சந்தித்திருந்த ராமநாதன் ஜிவ்வென நிமிருகிறார் அவனுக்குள்.

"இவங்களுக்கு எப்ப இருந்து இப்படி?"

"அது ரொம்ப நாளா இருக்கு தம்பி" டிரைவர் பதட்டம் குறையாது மைதிலியை தூக்கி காரின் பின் சீட்டில் கிடத்த ஆயத்தமாகிறான். ஒத்தாசிக்கிறது தியாகுவின் கரங்கள்.

"கல்யாணம் நிச்சயமாயிருக்கிற இந்த நேரத்துல... நல்லவேளை நீங்க பாத்தீங்க. போய்ச் சேர்ந்திருந்தா என்ன வாறது?"

"இவங்களுக்குக் கல்யாணமா? எப்போ...?"

"வர்ற முகூர்த்தத்துலையேங்க. அந்த சந்தோஷம் தாங்காமதான் கோயிலுக்கு வந்தாங்க. சொல்லச் சொல்லக் கேக்காம குளத்துல இறங்கி இப்படி ஆயிடுச்சு. நல்ல வேளை கடவுள் மாதிரி வந்து காப்பாத்திட்டீங்க. உடனடியா இவங்களை டாக்டர் சகுந்தலா வைத்தீஸ்வரன் கிட்ட காட்டணும். நான் கிளம்பறேன். தேங்ஸ்."

டிரைவர் பின் கதவை அடைத்து விட்டு முன் கதவை திறந்து சீட்டில் ஏற ஆயத்தமாகிறான். அநிச்சையான வேகம்.

தியாகு பார்வை மைதிலியையே வெறித்துக் கொண்டிருக்கிறது.

சாவியைத் திருகி எஞ்சினை உசுப்பி ஸ்டார்ட் செய்து காரை பின்னுக்கு எடுக்கும் டிரைவர் "சார் கொஞ்சம் நகர்ந்துக்குங்க" என்கிறான் ஏராள வியர்வையோடு.

"நானும் வேணும்னா வரட்டுமா... ஒருவேளை அந்த டாக்டர் இல்லேன்னா குமுதவல்லிகிட்டே போகலாம் அவங்க நல்லா பார்ப்பாங்க..."

தியாகுவின் கேள்விக்கு சில வினாடி சடைத்தவன், சரி என்று தலை ஆட்ட அடுத்த நொடியே தியாகு காரின் முன் பக்கம்.

உதட்டில் மற்ற விசாரணைகளின் ஆரம்பம்!

ரூம் கதவைத் திறந்தபோது இன்டர்வியூ கார்டு கிடந்தது.

நாராயணனுக்கு! நிறுவன முத்திரை அவன் விழிகளை பலமாக விரியவிட்டது.

"பத்து ரூபா ஷேர் ஆயிரத்துக்கும் மேலே போற கம்பெனில இருந்து இன்டர்வியூவா? சபாஷ் நாராயணனை சுக்ரன் பார்க்க ஆரம்பிச்சுட்டான்."

கார்டை விரல்களால் சிமிட்டிய படி முகம் பார்க்கும் கண்ணாடியின் பின்புறம் அதைச் செருகுகிறான் தியாகு.

மளமளவென்று லுங்கிக்கு மாறி சிகரெட்டையும் பற்ற வைத்துக் கொண்டு ஜன்னலைத் திறக்கிறான்.

"பட்சி ஏதாவது தென்படுகிறதா?" பார்வைத் துழாவலில் அகப்படுகிறாள் சுகுணா மாமி. நாற்பதைத் தாண்டி விட்ட போதிலும் காய்ந்த வடகம் பொறுக்கும் போது பக்கவாட்டில் நன்றாகவே ஈர்க்கிறாள்.

ரசனையோடு தியாகு உதட்டில் புகை பிரிகிறது.

ஊடே மனதில் சற்று முன் பார்த்த மைதிலியின் முகம் வேறு முண்ட ஆரம்பிக்கிறது. ஏனோ அடிக்கடி புரண்டு புரண்டு எழுகிறது.

"இதுக்கு கல்யாணமே நடக்காதுன்னு ஒரு பிரபல ஜோசியர் வேற சொல்லிவிட்டார். அதனால சத்யமா இதுக்கு ஒரு கல்யாணம் நடக்கும்னு முதலாளியே கூட நினைக்கல. நல்லவேளை சுதர்ஸன் தம்பி நிஜமா கடவுள் தான்!"

டிரைவர் சொன்னதும் துண்டாக எழும்பிக் கொத்துகிறது.

"தம்பிக்கு என்ன உத்யோகம்." கூடவே அவன் கேட்ட கேள்விக்கு "புரோக்கர்!" என்று பதில் சொல்லக் கூச்சப்பட்டதும், ‘அக்கவுண்ட்ஸ் மேனேஜர்’ என்று மாற்றிச் சொன்னதும் அவன் "கல்யாணமாகலையா?" என்று கேட்டதும் "இல்ல... இனிதான்..." என்று மிடறு விழுங்கியதும் உள் ஓடுகிறது.

நடுவில் கதவு திறக்கப்படும் ‘கக்கரக் கீச்’ சத்தம், திரும்புகிறான். நாராயணன் நுழைந்து கொண்டிருக்கிறான்.

"என்னடா சீக்கிரம் வந்துட்டே. இன்னிக்கும் மார்க்கட் டல்லா?"

"என்னிக்கு வாழ்ந்தது?"

"எல்லாம் உன் குருவோட உபயம்தான். பதிலோடு நாராயணன்

பார்வை இண்டர்வியூ கார்டை கச்சிதமாகப் பார்த்து கையிலெடுக்கக் கண்களில் அற்புதப் பிரகாசம்."

"எப்படிடா வந்தது? நீதான் எடுத்து வெச்சியா?"

"ஆமாம், நீ என்ன இன்னும் அப்ளிகேஷன் போட்றத நிறுத்தலியா?"

"இந்த கம்பெனில வேல கிடைச்சிட்டா நிறுத்திடுவேன். டி.பி.எம். கம்பெனிடா இது...!" சொல்லிக்கொண்டே கார்டை படிக்கிறான்.

"அப்படின்னா...?"

"ஐஎஸ்ஓ 9000 மாதிரி டி.பி.எம்ங்கறது ஒரு நியூ கான்சப்ட். அதாவது டோட்டல் புரொடக்டிவ் மெயின்டனன்ஸ்னு பேர். ஒரு பழைய கம்பெனியை புதுசாக்கி என்னிக்கும் புதுசாகவே வெச்சுக்கற ஜப்பான் ஃபார்முலாவுக்கு பேர் டி.பி.எம். இந்திய தொழிற்சாலைகள் பார்வை இப்ப இது மேலதான்..."

"ஓஹோ..." கேட்டுக் கொண்டே தீவிர சிந்தனையோடு ஜன்னலருகே திரும்பிச் சேர்கிறான் தியாகு. சுகுணா மாமி வடாம் பொறுக்கி முடிக்கிறாள். சிகரெட்டும் உதட்டைச் சுட்டு முடிகிறது.

கைகள் உதறிப் பறக்கின்றன.

"என்னடா...?"

"ஒண்ணுமில்லை... ஒண்ணுமில்லை."

"என்ன ஒண்ணுமில்லை உன்னாலேயே அந்த ஜன்னலுக்கு கற்பு போச்சு, யார் இப்ப மொட்ட மாடில?" நாராயணன் நெருங்கி வந்து பார்த்த போது சுகுணா மாமி நகர்ந்து கொண்டிருந்தாள்.

"டேய்... மாமியையா லுக் விட்டே? பாவி... உன் அத்தை வயசுடா..."

"அதனால என்ன?"

"அதனால என்னவா... வக்ரம் பிடிச்சவண்டா நீ?"

"வயசானாதையும் ரசிக்க முடிஞ்சவன்னு பாராட்டத் தெரியாதே உனக்கு..."

"எப்படிடா உன்னால எதிர்கால கவலையில்லாம இதை ரசிக்க முடியுது தியாகு?"

"எதிர்கால கவலைன்னா என்ன... உன்ன மாதிரி அப்ளிகேஷனா போட்டுத் தள்றதா?"

"நீ என்ன சொல்ல வரே?"

"நத்திங்... நத்திங்... இப்படி நாம பேச ஆரம்பிச்சா அது பெரிய சண்டைலதான் முடியும். ஆமா இந்த வேலை கிடைச்சா என்ன சம்பளம் கிடைக்கும்?"

"ஏழு எட்டு ரூவாவுக்கு குறையாது..."

"கட்டாயம் கிடைக்குமா?"

"என் ஜாதகத்துல இப்பதான் நல்ல காலம் ஸ்டார்ட் ஆகியிருக்காம். நிச்சயம் கிடைச்சிடும்."

"ஜாதகத்துமேல அவ்வளவு நம்பிக்கையா நாணி உனக்கு..."

"நிச்சயமா..."

"இந்த ஜாதகம் பொய்யான ஒரு கேஸை சொல்லட்டுமா?"

"வேண்டாம். எதையாவது சொல்லி என் நம்பிக்கையைக் கெடுக்காதே."

நாராயணன் பேசிக் கொண்டே பேண்ட்டைக் கூட கழட்ட மறந்து இன்டர்வியூ கார்டை மார்பின் மேல் வைத்தபடி மல்லாந்து விழுகிறான்.

சொர்க்கம் வசப்படக்போகும் எதிர்பார்ப்பு முகத்தில்.

தியாகு சிரிக்கிறான்.

"சிரிக்காதேடா... நான் இன்டர்வியூல தேறி இந்த கம்பெனி வேலைக்கு போய் பிரமாதமா வரலைன்னா அப்ப கேள்..." திரும்பவும் தியாகு சிரிக்கிறான்.

"இப்ப எதுக்கு நீ இப்படி கிறுக்குத்தனமா சிரிக்கறே...?"

"நீ எல்லாம் எப்பதான் திருந்தப்போறியோ?"

"அதை நீ சொல்றியா?" நாராயணன் அழுத்தமாகக் கேட்க தியாகு ஆழமாகப் பார்க்கிறான். "ஒண்ணு தெரிஞ்சுக்கோ... ஜாதகம் ஜோசியம்லாம் புருடா சரக்கு. இதை நம்பற உன்னை விட நம்பாத நான் நிச்சயம் உன்னை முந்துவேன். எப்படின்னு மட்டும் கேக்காதே. எனக்குள்ள ஒரு நெருப்பு எரிய ஆரம்பிச்சாச்சு. அவ்வளவுதான்

இப்போதைக்குச் சொல்வேன்!"

# 5

கல்யாணப் பத்திரிகை வந்துவிட்டிருந்தது. டேபிள் மேல் கட்டாக கிடக்கிறது. ஒவ்வொன்றாய் எடுத்து நான்கு முனைக்கும் மஞ்சள் பூசிக் கொண்டிருக்கிறார் ராஜரத்தினம்.

கவருக்குள் போட்டுக் கொண்டிருக்கிறான் சுதர்ஸன். இது எதிலும் வியிக்காமல் லஸ்தர் விளக்கின்மேல் பார்வையுடன் இருக்கிறாள் மகாலட்சுமி.

"லக்ஷ்மி... முதல் பத்திரிகையை யாருக்கு தரப்போறே?" நிமிண்ட ஆரம்பக்கிறார் ராஜரத்னம்.

அது அவள் காதிலேயே விழவில்லை.

"சுதர்சன் உங்கம்மாவை கொஞ்சம் உசுப்பு..."

"அம்மா... அம்மா..."

"ஆங்ங்... கூப்ட்டீங்களா?"

"என்ன முழிச்சுகிட்டே கனவா? முதல் பத்திரிக்கைய யாருக்கு தரப்போறேன்னு கேட்டேன். காதுல விழலையா?"

"குடும்ப வழக்கம் போல திருப்பதி பெருமாளுக்குன்னு எழுதி வெச்சுட்டு தொடங்க வேண்டியதுதானே...? இது என்ன கேள்வி?"

"அது சரி. எந்தக் கோட்டையை பிடிக்க இந்த சிந்தனை?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல. ஜாதகமே பார்க்காம கல்யாணம் பண்றோமேன்னு நினைச்சேன். அதான் கொஞ்சம் கலக்கமாயிடிச்சு..."

"ஆரம்பிச்சிட்டியா... இது இன்டர்நெட் யுகம் லக்ஷ்மி. உனக்கு நான் எத்தனை தடவை சொல்றேன். அபத்தமால்லாம் சிந்திக்காதேன்னு..."

உரக்கப் பேசி அடக்குகிறார் ராஜரத்தினம். சுதர்சன் அதை ரசித்தபடி சில பத்திரிகைகளோடு எழுந்து கொள்கிறான்.

"அப்பா நான் ஃப்ரெண்ட்ஸ்களுக்கெல்லாம் கொடுத்துட்டு வந்துட்றேன்" என்று கிளம்புகிறான்.

அடுத்த நிமிடத்தின் ஐம்பதாவது நொடியில் அவனது மாருதி அந்த பங்களாவின் கேட்டைத் தாண்டுகிறது. பார்த்துக் கொண்டே இருக்கும்

ராஜரத்னம் நெற்றிமேல் பெருமித ரேகை ஒன்று ஓடத் தொடங்கிய போது அதை அழிக்கிற மாதிரி ஒரு பெரிய சப்தம் ஒன்று கேட்டது.

"என்னங்க சத்தம்?" மகாலக்ஷ்மியின் கேள்வித் தாக்கத்தோடு எழுந்து வெளியே சென்ற ராஜரத்னம் கேட்டுக்கு வெளியே இடி விழுந்த மாதிரி நொறுங்கிப் போகிறார்.

எதிரில் சுதர்சனின் மாருதியை அப்பளமாக்கி விட்டிருந்தது ட்ரக் ஒன்று!

ராஜரத்தினம் இது நாள் வரை மயங்கி விழுந்ததில்லை. முதல் முறையாக அந்த விபத்துக்காட்சி அவரை மயக்கத்தில் இழுத்துப் போடுகிறது.

சப்தம் காரை ஒரு தீப்பெட்டிபோல் கருதி நசுக்கிச் சிதைத்துவிட்ட ட்ரக் டிரைவர் இறங்கி ஓடிக்கொண்டிருக்கிறான்.

சுதர்ஸன்?

நல்லவேளை உயிருக்கு ஆபத்தில்லை! செய்தி எமர்ஜென்சி வார்டில் கசிந்து ராஜரத்னம் மகாலட்சுமி தம்பதியரை எட்டவும் இருவரும் தழைந்த மார்புடன் கண்ணீரை சுண்டி விட்டுக் கொள்ளவும் சரியாக இருந்தது.

"ஆனால்?"

"என்ன டாக்டர் ஆனால்...?"

"ஒரு காலை எடுக்கறதை தவிர வேறு வழியே இல்லை. அதுவும் வித்தின் எ அவர்ல செஞ்சாகணும். முழங்கால்னு ஒண்ணு இருந்த தடயமே இல்லாதபடி வாழைப்பழத்தை குங்குமத்தோட கலந்து பிசைஞ்ச மாதிரி ஆயிடிச்சு அந்த போர்ஷன்!"

தழைந்த மார்பில் திரும்பவும் வெப்பக் காற்று புகுந்து ராஜரத்னத்தை தடுமாற செய்கிறது.

"ஐயோ... நாங்க யாருக்கு என்ன கெடுதல் செஞ்சோம்?" என்று பட்டுச் சேலையின் ஜரிகை முந்தியால் வாயை மூடிக் கொண்டு வெடிக்கிறாள் மகாலட்சுமி.

"சட்டுன்னு ஒரு பதிலைச் சொல்லுங்க. நிறைய புரசீஜர்ஸ் இருக்கு..." டாக்டர் படபடக்கிறார்.

"ஒரு அஞ்சு நிமிஷம் டயம் கிடைக்குமா?"

"ஓ. கே..."

ராஜரத்தினம் அந்த ஐந்து நிமிட இடைவெளியில் தொலைபேசியை தேடுகிறார்.

"யாருக்கு போன் பண்ண?"

"என்ன லக்ஷ்மி கேள்வி இது. சுதர்ஸன் நம்ம மகன் மட்டும் இல்லை இப்போ. ராம்நாத்துக்கு மருமகனாகப் போறவன். அவரோட கலந்துக்காம எந்த முடிவையும் நாம எடுக்கக் கூடாது."

மகாலட்சுமி அந்த நிலையிலும் விடைக்கிறாள்.

"போதும் நிறுத்துங்க... அந்தாளுக்கு மருமகனாம்ல? வாயக் கழுவுங்க. ஜாதகம் பார்க்க மாட்டேன். ஜோசியம் பார்க்கமாட்டேன்னு இறங்கினதுக்குதான் இப்ப அனுபவிக்கிறோம்.

எல்லாம் அந்த பொண்ணோட ராசி. நிச்சயம் பண்ணினதுக்கே என் பையனுக்கு கால் போனா கல்யாணம்னு பண்ணினா எது எது போகும்?"

"லக்ஷ்மி என்ன இது சில்லி டாக்...?"

"சில்லியும் இல்ல... கில்லியும் இல்ல... பட்டுமா உங்களுக்குத் தோணலை?"

"இதோ கல்யாணத்துக்கு பிறகு நடந்திருந்தா என்ன பண்ணுவே?"

"அப்படி நடக்கக்கூடாதுன்னு இருக்கறதால தானே இப்படி ஆகியிருக்கு. யார் செஞ்ச புண்ணியமோ காலோட போச்சு. அந்த சனியனைப் பத்தி இப்ப நினைக்காம முதல்ல ஆபரேஷனுக்கு வழியப் பாருங்க... போங்க"

இந்தியாவைப் பொறுத்தமட்டில் பல நேரங்களில் மனைவிகளும், சில நேரங்களில் தான் கணவர்களும் ஜெயிக்கிறார்கள் என்பது நிஜமாகிறது. ராஜரத்னம் டாக்டரைப் பார்க்க நடக்கிறார்.

கீழ்ப்பாக் கார்டனில் இருக்கிறது மைலா ஃபார்மா அலுவலகம். மூவாயிரம் சதுர அடி சொச்சம் கட்டிடம். சமீபமாக வந்திருந்த பிரிட்டிஷ் ராணி பார்த்திருந்தால் தனது மாளிகை எங்கே இங்கே வந்தது என்று கேட்டிருப்பார்.

அப்படி ஒரு மேல் நாட்டு சொரூபம்.

‘போகன் வில்லா - விசிறி வாழை வேலிமாணிக்கம் சங்குப்பூங்கொடி’ என்கிற போர்டிகோ முகப்பில் ராம்நாத் கார் சப்தமின்றி வந்து சேர்ந்து நிற்கிறது.

கை நிறைய பத்திரிகையோடு இறங்குகிறார், கூடவே சாரங்கபாணியும்.

வாட்ச்மேன் வாதிராஜ் ஓடி வந்து சல்யூட் அடிக்கிறான். சாதாரணமாக அவனை நிமிர்ந்துகூட பார்க்க மாட்டார் ராம்நாத். இன்று வாயெல்லாம் பல்லாக அவனைப் பார்த்து சிரிக்கிறார். பத்து வருடத்தில் அவன் பார்க்கும் முதல் சிரிப்பு.

ஒன்பது படி ஏறி ஒன்பது அடி நடந்து ஒன்பது அடி அகல அந்தமான் தேக்கு நிலையில் கடந்து காரிடாரில் நடந்து முதலில் தென்படும் ரிசப்ஷனின் அரைவட்ட மேஜைப்பகுதி பார்த்து அங்கு தெத்துப் பல் தெரியச் சிரிக்கும் ஏஞ்சலின் குட்மார்னிங்கோடு உள் நடந்தால் மார்க்கெட்டிங், அக்கவுண்ட்ஸ், பர்ச்சேஸ், சார்ட்டிங் என்று பெர்ஃப்யூம் வாசம் கமழ டிபார்மென்ட்டுகள் தட்டுப்படும்.

ரீப்பரில் சன்மைக்கா பிளைவுட் தடுப்புகளோடு சந்தன வண்ணத்தில் கண்ணில் குளிர் தெரியும்படி இருக்கும். அத்தனை லட்சணம்!

அநாவசிய சாமி படம் காலண்டர்கள் என்கிற சமாச்சாரங்களெல்லாம் கிடையாது. மைலா ட்ரக்ஸின் ஆல்பங்களுக்குக் கூட தடை.

எதுவும் சுத்தமாக இருக்க வேண்டும் ராம்நாத்துக்கு.

இதயசுத்தி உள்பட....

அதனால்தான் பெரிய சொந்த வட்டத்தில் ஒருவர் கூட அவரை நெருங்க முடியவில்லை. நட்பு வட்டத்திலும் சாரங்கபாணியைத் தவிர மற்றவர்களுக்கு இடமில்லாமல் போய்விட்டது.

"சாரங்கா பத்திரிகை நல்லா வந்துருக்குல்ல?"

தன் அறைக் கதவை திறக்கும்போது ஏழாவது தடவையாக கேட்கிறார்.

"அற்புதமாக வந்திருக்கு ராமநாதா...." என்று அலுத்துக் கொள்ளாத பதில் சாரங்கபாணியிடமும்.

எதிரில் மேஜை நாற்காலி பளிச்சென்று இருக்கிறது.

மேஜையின் மேல் தளம் மேல் கண்ணாடி சட்டை, இரண்டுக்கும் இடையே எம்ப்ளாயிஸ் நேம் லிஸ்ட், வரிசைக் கிரமமாக வேலைக்கு

சேர்ந்த தேதி என்பதிலிருந்து இருக்கிறது. அடுத்தாற்போல மைலா ஃபார்மா உற்பத்தி செய்யும் மாத்திரை மருந்துகளின் நேம் லிஸ்ட். அடுத்தடுத்து ஸ்டாக்கிஸ்டுகளின் பெயர் முகவரி லிஸ்ட், முக்கிய தொலைபேசி எண்களின் லிஸ்ட்..."

அதில் ராஜரத்னம் வீட்டு எண்ணை சேர்த்தாக வேண்டிய துடிப்பு பார்த்த நொடிப்போதில் தோன்றுகிறது.

"சாரங்கா மாப்ள வீட்டு போன் நம்பர் என்ன சொன்னே?"

"நோட் பண்ணிக்கிலியா... 825 855"

கண்ணாடி சட்டத்தின் கீழிருந்து அந்த தாளை உருவி டிராயரில் இருந்து ஒரு ஸ்கெச் பென் எடுத்து சம்பந்தி ராஜரத்னம் என்று எழுதி அந்த நம்பரை குறித்துக் கொண்டு திரும்ப தாளை கண்ணாடியின் அடித்தளத்தில் பதிக்கிறார்.

"கூடிய மட்டும் எல்லா தகவல்களையும் மேஜை மேலேயே வெச்சுருக்கே வெரிகுட்..."

"எல்லாம் மறந்துடாம இருக்கத்தான். ஆமா பத்திரிகைய ஸ்டெனோவை கூப்பிட்டு கொடுத்து ஆபீஸ்ல எல்லார் பேரையும் எழுதச் சொல்லு. வேண்டாம் வேண்டாம் டைப் பண்ணச் சொல்லு. நானும் நீயுமே நேர்ல கொடுப்போம். ஸ்டாக்கிஸ்ட், டீலர்ஸ், ஏஜென்ட்ஸ், மார்க்கெட் புரோக்கர்ஸ், லயன்ஸ், ரோட்டரி ஒண்ணுக்கு பாக்கி வைக்கக் கூடாது. அஞ்சாயிரம் பத்திரிகை போதும் தானே?"

"போதும் ராமநாதா... நீ டென்ஷன் பண்ணிக்காதே. ஏற்கனவே நீ ஒரு ஹார்ட் பேஷண்ட்."

"நோ சாரங்கா... ஐ ஃபீல் வெரி எனெர்ஜடிக். இனி ஹார்ட்டாவது கீர்ட்டாவது. என் மாப்ள வந்துட்டா இந்த சீட்டையே கூட டேக் யூ மை கை ன்னு சொல்லிட்டு ரெஸ்ட்ல போய்டுவேன்."

"மானசரோவர் போகணும்டா."

"குளிர்ல விரைச்சு செத்துப் போயிடுவே."

"போய்ட்டு போறேன். இனி இருந்து என்ன பண்ணப் போறேன். ஐ ஆம் வெரி ஹாப்பி யூ நோ."

"உளறாதே ஆகற வேலையைப் பாரு."

சாரங்கனும் ராம்நாத்தும் குலவிக் கொண்ட நொடிப்போதில், சிம்ரன், சுவாதி சாயலில் ஸ்டெல்லா எட்டிப் பார்க்கிறாள். ஸ்டெனோ!

"குட்மார்னிங் சார்."

"வெரிகுட்மார்னிங், நேத்தே நேம் லிஸ்ட் ரெடி பண்ணச் சொன்னேன். பண்ணிட்டியா ஸ்டெல்லா...?"

"ரெடி பண்ணி பி.சி.ல கூட ஏத்திட்டேன் சார். கவர் கொடுத்தா தட்டிவிட வேண்டியதுதான்."

"குட்... வெரிகுட்... சாரங்கா பத்திரிகைகள் எங்கே?"

"கார்ல இருக்கும்மா, வாட்ச்மேனை விட்டு டிக்கியில இருந்து இறக்கி எடுத்துக்கோ!"

"ஓ. கே. சார்..."

"ஒன் மினிட்மா! டேய் சம்பந்திக்கு போன் பண்றேன். அவர் ரெடியா இருந்தா முதல் பத்திரிகைய அவருக்கு வெச்சிடுவோம் என்ன சொல்றே?"

"உனக்கு இப்ப அவரை பார்க்கணும். கல்யாணம் பத்தி விலாவரியா பேசணும். யூ நீட் தட் மூட். எதுக்கு இந்த முதல் பத்திரிகைங்கற சாக்கெல்லாம்?"

சாரங்கபாணி கச்சிதமாக நறுக்குகிறார்.

"இல்லடா... இந்த நிமிஷம் எல்லாம் கனவு மாதிரிதான் இருக்கு... நம்பவே முடியல!"

"சரி சரி... உளறாம போன் போடு. வாஸ்தவத்துல வெத்தலை பாக்கு பழத்தோட சம்பந்திய பார்த்து கல்யாணப் பத்திரிகை வைக்கிறதுங்கறது வழக்கமான ஒரு விஷயம்தான்."

"சரி சரி... கொஞ்சம் அந்த ஏ.சி.யை ஆன் பண்ணு ஸ்டுப்பிட். ஆபீஸ்பாய் இதை கூட பண்ணாம என்ன பண்றான்? நிறைய களை எடுக்கணும் இந்த ஆபீஸ்ல. மாப்ள வரட்டும். ஹலோ யார் பேசறது."

உதடு, புலம்ப விரல்கள் எண்களை அழுத்த மறுமுனை பிடிபட.

"உங்களுக்கு யார் வேணும்?"

"ராஜரத்னம் சார் இல்ல."

"இல்லியே... அவர் இப்ப ஹாஸ்பிட்ல்ல இருக்கார், நீங்க..."

"ஹாஸ்பிட்டல்லியா...? என்னாச்சு, வாட்ஸ் த பிராப்ளம்..."

ராம்நாத்தின் மெல்லிய பதட்டத்தை மறுமுனையின் பதில் அதிகமாக்குகிறது. முகத்து வியர்வைப் புள்ளிகள் க்ஷணத்தில் ஊற்றுக்கண்ணாய் உருமாறுகின்றன.

நடு இதயத்தில் ஒரு பிழிசல்...

"சாரங்கா..." ரிசீவரை நழுவ விட்டவராக அப்படியே மேஜைமீது சரிகிறார் ராமநாதன்.

# 6

தலையில் கியோகார் பின். முகத்தில் ரோஸ் பவுடர். உதட்டில் விசில் இத்தனையோடு ஐந்து நிமிடமாக கண்ணாடி முன் சிங்கார வதனத்துக்காக சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறான் தியாகு!

"சாப்பிடத்தாண்டா வெளில போகப் போறோம். ஆணழகன் போட்டிக்கில்ல."

கிண்டலடித்த நாராயணனை ஒரு செல்ல முறை முறைத்துவிட்டு லுங்கியின் கிழிசல் பகுதி உட்பக்கம் வருகிற மாதிரி கட்டிக்கொண்டு "சலோ மேரா சாத்தி..." என்று முதல் நாள் செகண்ட் ஷோவில் ஹிந்திப் படம் பார்த்த பாதிப்பை காட்டுகிறான் தியாகு.

இருவரும் நடக்கிறார்கள்.

படி இறங்கும்போது கீழ் போர்ஷன் பார்வதி சரியான ஆங்கிளில் குனிந்து கூட்டிக் கொண்டிருக்கிறாள்.

"தூள் சகுனம்..." என்று சப்பு கொட்டுகிறான்.

நாராயணன் முறைக்க நடை தொடருகிறது. முக்குக்கடை பாய் முன் பேசாமல் நீள அவர் ஒரு சிகரெட்டை உருவி அவன் கைகளில் வைக்க முதல் முறையாக பாயிடம் மிகுந்த ஸ்னேகத்தோடு பேசுகிறான்.

"என்ன பாய்... ஷேர் விக்கணும்னா நேரா பேசலாம்ல எதுக்கு ராயர் மூலமா சுத்தி வரணும்?"

பாய் அவனது நேரடித் தாக்குதலில் தடுமாறுகிறார்.

"சொல்றேன், நீ போய் சாப்பிட்டுட்டு வா தியாகு." என்று கத்தரிக்கிறார். அடுத்து கை நீட்டும் பார்ட்டியிடம் கவனம் பதிக்கிறார்.

"என்ன ஷேர்டா... இவன் கிட்ட ஏது ஷேர்?"

"அப்படிக் கேளு. ஆளைப் பார்த்தா பக்கிரி. ஆனா பாய் அண்டர் கிரவுண்ட்ல பெரிய போக்கிரிடா நாணி. உனக்கெங்கடா... 12 பி ஐயும், மகாலிங்கபுரத்தையுமே மொத்த இந்தியாவா நினைக்கற பயதானே நீ..."

"இனி அது மாறிடும்டா... இன்டர்வியூ அட்டெண்ட் பண்ணினேன். செலக்ட் ஆயிடுவேன்னு ஹண்ட்ரட் பர்சன்ட் நம்பறேன்."

"எங்க அந்த TPM கம்பெனியிலயா?"

"ஆமாம்... மை வாங்கி வெச்சிருக்கேன். பூசிக்க தயாரா இரு. என் ஜாதகத்தை நம்பமாட்டேன்னு சொன்னேல்ல...?"

"பார்க்கலாம்" அந்த -ம்' ன்போது ராயர் கிளப் வாசற்படி வந்துவிட்டது. கல்லாவில் ராயருக்கு பதில் அவரது மகன் பிரகலாதன் உட்கார்ந்திருந்தான்.

"எங்க ராயர்?"

பூரியை வைக்கும்போது வையாபுரி அதற்கு பதில் சொல்கிறான்.

"அந்த பெரிய மனுஷன் இல்ல... அதாம்ப்பா அன்னிக்கு கார்ல வந்தாரே லயன் ராமநாதன்னு அவருக்கு பயங்கரமான ஹார்ட் அட்டாக்காம் தகவல் தெரிஞ்சு பாக்க போயிருக்காரு.

கல்யாணம் வேற நின்னு பெரிய பேஜாரல்ல போயிடுச்சு...!"

"என்ன வை சொல்றே?" வையாபுரி நடந்ததை விவரிக்கிறான். தியாகுவுக்கு அமர்ந்திருக்கும் இடம் ஆட்டம் காண ஆரம்பிக்கிறது.

"கோடி கோடியா பணம் இருந்து என்ன பிரயோஜனம் தியாகு. அந்த பொண்ணோட ஜாதகம் ஒரு சோக ஜாதகமால்ல இருக்கு."

வையாபுரியும் ஜாதகத்தைக் குறை சொல்கிறான். தியாகுவிடம் கலகலப்பு செத்துப்போய் தீவிர சிந்தனையின் கொடி ஏற ஆரம்பிக்கிறது.

"சொல்லு. நல்லா இந்த பயகிட்ட சொல்லு. இவனுக்குதான் சாமி, பூதம், ஜாதகம், ஜோசியம் எல்லாம் பொய்." அதற்குப் பதிலாக தியாகு மனதுக்குள் உறுதிபடச் சொல்லிக் கொள்கிறான்.

"ஆமாம் நாணி பொய்தான். பொய்யாக்கியும் காட்றேன்!"

ஆஸ்பத்திரியில வி.ஐ.பிக்களின் கூட்டம் அதிகமாக இருந்தது. ஜி. எச்சின் டீனிலிருந்து மேயர்வரை பூங்கொத்தும் கையுமாக வந்து ராம்நாத்தை ஒரு பார்வை பார்த்து விட்டுப் போயிருப்பதை பரபரப்பான சூழ்நிலையில் உணர முடிகிறது.

அந்த கூட்டத்தில் ஒரு தனிக்கதிர் போல நிற்கிறான் தியாகு! அலைந்து திரிந்து லாட்டரி விற்பவனைப் போல வெளிறின உடுப்பும் துணி உறைந்து போன வியர்வை அழுக்குமாக இருக்கிறான்.

ஆனால் மனதுக்குள் மஞ்சள் பாஸ்பரத்தின் ஒளி!

அது திட்டமிடுகிறது. மனமே நீ மனது வைத்தால் சீனப் பெருஞ்சுவரும் ஒரு சின்ன எறிகல்தான் என்று கவித்துவமாய் அது அவனுக்கு ஊக்கம் தந்த வண்ணம் இருக்கிறது.

எப்படி உள் நுழையலாம்... எதைக் கொண்டு ராம்நாத்தின் மனதை இறுகக் கவ்வலாம்? கேள்வியின் தூண்டில் வீச்சில் மின்னலாய் ஒரு விடை அகப்படுகிறது. அதில் கற்பக வினாயகர் தெரிகிறார்.

ஆஸ்பத்திரிக்கு வெளியே வேம்பும் அரசும் பிணைந்து வளர்ந்து கிடக்கும் மரத்துக்கு கீழே குந்தியிருப்பவர். ஓடுகிறான் அவரைப் பார்க்க... வடிவ ரீதியாக அவரை அவனுக்கு மிகப் பிடிக்கும். ஆனால் வணங்குவது அவரிடம் புலம்புவதெல்லாம் துளிகூட பிடிக்காது.

'அவரே பாவம் - மனுஷத் தலையில்லாதபடி யானைத் தலையோட அவஸ்தைப்பட்டுக்கிட்டிருக்கார். அவர்கிட்ட போய் விநாயகனே வினைதீர்ப்பவரேன்னு ஜால்ரா தட்ட நான் தயாரில்லை" என்பான்.

இப்பொழுது அவரது விபூதிப் பிரசாதம்தான் அவனது முதல் தூண்டில். அதை சுமந்து வந்து ராம்நாத்தின் நெற்றியில் பூசிவிட்டு சற்றுத் தள்ளி கண்கள் கசிய நிற்கிறான்.

சாரங்கபாணி அதைப் பார்த்து நெகிழ்கிறார்.

"யாருப்பா நீ?"

"நான் யாருங்கறதா சார் முக்கியம். சார் குணமாகனும் அதான் எனக்கு இப்பத் தேவை."

"உன் மாதிரி நபர்கள் பிரார்த்தனை வீண் போகாது நீ யாருப்பா?"

"என் பேரு தியாகராஜன். ஷேர் மார்க்கெட் ஏஜென்டா இருக்கேன். சாரோட உதவியால படிச்சு பட்டம் வாங்கினவர்களில்ல ஒருத்தன்..."

பாதி உண்மையும் பாதி பொய்யும் சம பரிமாணத்தில் கலந்து வந்து விழுகிறது. சாரங்கபாணியும் அவனது தோளைத் தட்டி மகிழ்ச்சியை காட்டுகிறார்.

"எக்ஸ்யூஸ்மீ சார்..." குயிலுக்கு பேச்சுவந்த மாதிரி ஒரு கத்தரிப்பு. நிமிர்ந்த நொடிப் பொழுதில் அசாதாரண ஒப்பனையோடு அங்கே ஸ்டெல்லா.

ஒரு நொடி தியாகுவை ஸ்டெல்லா திக்குமுக்காட விடுகிறாள்.

"வாம்மா... என்ன விஷயம்?" இது சாரங்கபாணி.

"சில இம்பார்டண்ட் பேப்பர்ஸ்ல் சார் கிட்ட சைன் வாங்கணும். உங்களால..."

"முடியாதும்மா... நீ மைதிலிகிட்ட வாங்கிங்கோ. இனி அவதான் எல்லாம்..."

"என்ன சார், சாருக்கு அவ்வளவு சீரியஸா...?"

"ஆமாம்மா... டாக்டர் ரொம்ப ஜாக்கிரதையா பார்த்துக்க சொல்லியிருக்கார். ராம்நாத் இப்ப இன்குபேட்டர்ல இருக்கற ஒரு குறை மாச குழந்தை மாதிரிம்மா..."

"ஓ.கே. சார்... அப்ப அந்த கல்யாணப் பத்திரிகைகளை எல்லாம்..."

"உன் வீட்ல பாய்லர் அடுப்பா ஹீட்டரா?"

"ஹீட்டருக்கு எங்க சார் போக... பாய்லர் அடுப்புதான்."

"அப்ப அதுல போட்டுரு. வென்னீராவது கிடைக்கும்."

ஸ்டெல்லாவுக்கு சற்று சுரீர் என்றது. அதற்கு மேல் கேள்வி கேட்கத் தோன்றவில்லை. மார்பை அணைத்தபடி உள்ள ஃபைலை இறுக்கியபடி திரும்புகிறாள்.

சத்தியமாக சாக அடிக்கும் இளமை. மார்புக்கு மட்டுமே தனியாக காம்ப்ளான் குடித்த மாதிரி ஒரு ஊட்டம். ஷாம்பூ தயாரிப்பாளர்கள் எப்படி மிஸ் பண்ணினோம் என்று கேட்டுக் கொள்ளும்படியான போனி ஸ்டைல் கூந்தல்.

கிளறிக் கொட்டின கோதுமை அல்வாவாய் இடுப்பு மடிப்பு. ரோஸ் சாரியில் இடுப்பெது புடவை எது என்று தெரியாத ஒரு வண்ணச் சேர்க்கை.

நாலாயிரம் சொச்ச சம்பளத்தில் இத்தனை ஈர்ப்புகள் ஒரு பெண்ணிடம் சாத்தியமா?"

"ஹலோ மேடம்?" ரசித்து முடித்த நிலையில் அழைக்கிறான் தியாகு.

"யெஸ்... என்ன சார் வேணும்?" அவன் கேள்விக்கு அவள் முன் கைகட்டி

நின்று கொண்டு பதில் சொல்லாமல் சில வினாடிகள் ரசித்தான்.

"சார் உங்களைத்தான்... கூப்பிட்டீங்களே... என்ன விஷயம்?" அவள் தூண்டிலில் ரசனை கலைந்து கண்கள் சிமிண்ட.

"ஒரு விஷயம் சொல்லட்டுமா?" என்று கேட்கிறான்.

"யெஸ்..."

"தப்பா எடுத்துக்க மாட்டீங்களே?"

"அது சொல்லப்போற விஷயத்தைப் பொறுத்தது..."

"நான் உண்மைல சொல்லப் போறேங்க..."

"எதுக்கு பீடிகை... என்ன அந்த உண்மை?"

"நீங்க.."

"நான்?"

"நீங்க..."

"நான்... எனக்கு என்ன சார்?"

"ரொம்ப அழகா இருக்கீங்க." ஸ்டெல்லா அதைக் கேட்டு ஒரு சின்ன சிரிப்பு சிரித்தாள். குரோட்டன்ஸ் பூ ஒன்று உதிர்ந்தமாதிரி. எதுவும் சொல்லாமல் நடக்க ஆரம்பிக்கிறாள்.

தியாகுவுக்கு அந்த சிரிப்பை தரம் பிரிக்க முடியவில்லை. அதில் இருந்தது ஏளனமா - அங்கீகாரமா... புரியவில்லை. ஆனாலும் அவளைப் பார்த்த நொடிப் பொழுதில் இருந்து நரம்புகளில் உற்சாக யமகா ஓடத் தொடங்கி விட்டது!

சப்தமின்றி ஊர்ந்து வந்து பல்லக்காய் நிற்கும் காருக்குள் இருந்து இறங்குகிறாள் மைதிலி.

சரஸ்வதி பூஜைக்கு மட்டுமே வந்து திரும்பிய மைலா ஃபார்மாவுக்குள் இனி தினம் தினம் வந்து போகவேண்டும்.

அப்பாவின் சீட்டில் அமர்ந்து கொண்டு நிர்வாகம் செய்தாக வேண்டும். முடியாது என்றெல்லாம் முடங்க முடியாது. எண்பது கோடி சில்லறை பிசினசும் நீட்டிப் படுக்க ஆரம்பித்தால் அதன்பின் கூடவே ஓடி வரும் போட்டிக் கம்பெனிகளுக்குதான் கொண்டாட்டமாகி விடும்.

இன்றைய வர்த்தக உலகத்தில் ஒருமுறை பிடித்ததை விட்டால் பிறகு எப்பொழுதும் திரும்பப் பிடிக்க முடியாது.

போய்த் தொலையட்டும் என்று தலைமுழுகவும் வழி இல்லை. நேரடியாக எண்பது பேரும் - மறைமுகமாக ஆயிரம் பேருக்கு மேலும் மாதம் பத்தரை லட்சம் சம்பளம் வாங்கி நடத்திக் கொண்டிருக்கும் ஜீவிதமே ஸ்தம்பித்துப் போய்விடும்.

புலிவால் பிடித்த நாயரின் நிலையைவிட கொடுமையானது இன்று பல எம். டிக்களின் நிலை.

உணர்ந்திருப்பதாலேயே மைதிலி மிகவேகமாக அலுவலகம் வந்து விட்டாள்.

ஒரு வகையில் அவளை இப்படி நிமிர்த்தி அனுப்பியதில் மகாலட்சுமிக்கும் ஒரு பங்கு இருப்பதை நினைக்கத்தான் வேண்டியிருக்கிறது.

சுதர்ஸனின் விபத்து பற்றி தெரிய வந்த பத்தாவது நிமிடம் ஆஸ்பத்திரிக்கு போய் விட்டாள் மைதிலி. அங்கே ராசிக் கதையும், ஜாதகக் கதையையும் பேசி மகாலட்சுமி வறுத்து எடுத்து விட்டாள்.

அதில் ‘நீ கை வைக்கற ஒரு விஷயம் உருப்படாது’ என்கிற பஞ்ச்தான் மிக முக்கியமான ஒன்று.

அதுதான் உருப்பட வைக்கிறேன். என்று ஆபீஸ் பக்கம் தள்ளி விட்டிருக்கிறது.

அப்பாவின் நாற்காலியில் அமர்ந்து எதிரில் தெரியும் தன் புகைப்படத்தைப் பார்த்து சிரிக்கவும் விடுகிறது.

அப்பாவுக்கு மைதிலியின் போட்டோவைப் பார்த்தால் உற்சாகமாக இருக்கும் என்று தொங்கிக் கொண்டிருந்த அது இப்பொழுது மைதிலிக்கு சோர்வைத் தருகிறது.

# 7

நடுவில் தொலைபேசியின் சிணுங்கல்...
கையிலெடுக்க காதில் பாய்பவர் சாரங்கபாணி. "என்னம்மா சீட்ல உட்கார்ந்துட்டியா?"

"ம்ம்..."

"நல்ல வேளை பாத்து தானே உக்காந்தே?"

களுக்...

"எதுக்கு சிரிக்கறே ஆள் செய்யாததை நாள் செய்யும் பாங்கம்மா..."

"வேண்டாம் அங்கிள் இந்த மாதிரி சிந்தனை - பேச்சு எதுவும் எனக்கு வேண்டாம். என் வரையில் ஆள், நாள் எல்லோருமே எதிரிகள்தான்!"

"நீ விரக்தியிலே பேசறே... காலம் இப்படியே போயிடாதும்மா. முப்பது வருஷம் வாழ்ந்தவனுமில்லை கெட்டவனுமில்லை."

"திரும்பத் திரும்ப ப்ரோவெர்பா? வேண்டாம்னேன்ல. ஐ ஆம் ஆல்ரைட். நான் பார்த்துக்கறேன். அப்பாவுக்கு இப்ப எப்படி இருக்கு?"

"இம்ப்ருமென்ட்தான். நீ ராம்நாத்தைப்பத்தி கவலைப்படாதே. அங்க பேப்பர்ஸ் பெண்டிங் இல்லாம பாத்துக்கோ. ஒரு விஷயம்."

"என்ன அங்கிள்..."

"வடிவேலுன்னு மார்க்கெட்டிங் மானேஜர் ஒருத்தன் இருப்பான். அவன் கிட்ட மட்டும் எச்சரிக்கையோட இரு. மிச்சத்தை நான் நேர்ல சொல்றேன்..."

முத்தாய் அரும்பிய வியர்வையை ஒத்திக் கொண்டு தொலைபேசியை வைத்துவிட்டு நிமிர்ந்தாள். எதிரில் ஓடி வந்து ஏ. சி. யை தட்டிவிடுகிறான் ஆபீஸ் பாய். திரும்புபவனிடம் –

"ஏன் எப்பவும் ஓட விடறதுக்கென்ன?"

"கரண்ட் பில் ஜாஸ்தியா வருது. குறைக்கணும்னு ஐயாதான் ஆள் இல்லாதப்ப அணைச்சுடச் சொல்வாரு."

"அப்ப உள்ளே செக்ஷன் ஏ.சி. யும் நைட்ல ஓடாதா?"

"ஆமாங்கம்மா..."

"ஆனா ஆள் இல்லாத டேபின்ல மட்டும் ஆல்டர்னேடிவ் ஃபேன் ஓடிகிட்டேயிருக்கலாமா?"

ஆபீஸ் பாய் முகத்தில் இருட்டு கட்டுகிறது.

"போய் மேனேஜரை வரச் சொல்..."

மைதிலிக்கு மூன்றாவதாக ஒரு கண் திறந்து கொண்டதை புரிந்து கொண்டவனாக ஆபீஸ் பாய் நகர்கிறான். மைதிலியின் பார்வை டேபிளில் நிலைக்கிறது. ஸ்கெச்சில் ராஜரத்தினம் போன் நம்பர் மட்டும் தனியாக ராம்நாத்தால் எழுதப்பட்டிருப்பதை பார்க்கிறாள்.

சில வினாடி அதையே பார்த்துவிட்டு நம்பரை டயல் செய்கிறான். வேலைக்காரியை பிடிக்கிறாள்.

"சுதர்ஸன் இப்ப எப்படி இருக்கார்?" கேட்கிறாள்.

"நீங்க யார் சொல்லலையே...?"

"நான் அவரோட ஃப்ரெண்டும்மா."

"அவரோட இடது காலையும் இன்னிக்கு வெட்டி எடுத்துட்டாங்க." சவுக்கடிபட்டது போல உணர்ந்து ரிசீவரை சடக்கென முடக்கிவிட்டு மேஜைமேல் சரிந்து விசும்பி விசும்பி அழ ஆரம்பிக்கிறாள்!

யோகா பைடெக்ஸ் என்கிற தியாகுவின் தீவிரங்கள் குமுதம் படிக்கும் நாராயணனை சிரிக்க விடுகிறது.

"என்னடா... எதுக்கு இப்படி கூத்து அடிக்கறே?"

"உடம்பை ட்ரிம்மா வெச்சுக்க நினைச்சா அது கூத்தா தெரியுதா உனக்கு...?"

"திடீர்னு என்ன உடம்பு மேல அக்கறை. எவளையாவது பாத்து சொக்கிட்டியா?" அப்படி ஒரு கேள்வி கேட்டதற்காக நாராயணனை அரை ட்ரவுசரும் வியர்வை மார்புமாக ஈட்டிப் பார்வை பார்க்கிறான் தியாகு.

"என்ன பாக்கறே...?"

"அம்மாஞ்சிப் பயலே... எப்படிடா இத்தனை கரெக்டா கேட்டே?"

"ஓஹோ... பிரமிச்சுட்டியா? நான் என்ன கிழவனா உன்னை மாதிரிதானடா நானும்."

"இருந்தாலும் இத்தனை கச்சிதமா உன்னால கேக்க முடியும்னு நான் நினைச்சுக் கூட பாக்கலைடா."

"சரி ஆள் யாரு?"

"ஊர்பேர்லாம் சரியா தெரியாது. ஆனா மைதிலி ஃபார்மால ஸ்டெனோவா இருக்காள்னு மட்டும் தெரியும்."

"போறுமே... பாக்காமலே காதலிச்சு கோட்டை கட்றகாலத்துல இவ்வளவு விஷயம் தெரிஞ்சு வெச்சிருக்கியே. ஆமா இந்த காதல் எப்படி... ஒரிஜினலா ட்யூப்ளிகேட்டா."

"நோ நாணி... அவளப் பாத்ததுல இருந்து நான் நானா இல்லை. எனக்குள்ளே கிண்டி கிழங்கெடுக்கறாடா. நான் மட்டும் வி. ஐ. பியா இருந்தா இந்த நிமிஷம் அவளை பிடிச்சிருப்பேன்."

"கிழிச்சே... சினிமா பாதிப்போட பேசறே நீ. காதல்லாம் ஜீவனான விஷயம். ஒண்ணு தெரியுமா? ஒருத்தன் பொண்டாட்டிய இன்னொருத்தன் கட்ட முடியாது. காதலிக்கவும் முடியாது..."

நாராயணனின் பதில் தியாகுவை சற்று கட்டிப்போடுகிறது.

"நீ என்ன சொல்ல வர்ரே?"

"அவ 'வேகன்டா'ன்னு தெரிஞ்சு அப்ளிகேஷன் போடு. போட்டா உண்மையா இரு. நான் எப்பவும் காதலுக்கு ஜே போட்ற ஆள். ஏன்னா இளமையை சுவாரஸ்யப்படுத்தற ஒரு பெரிய ரசவாதம் இந்த காதல்.

பக்கா டானிக்!

அது மோடிவேட் பண்றமாதிரி ஒரு தலைசிறந்த பத்தகம் கூட பண்ணமுடியாது. ஒரு டப்பா க்ளூகோசும் ஒரு நல்ல அழகான பொண்ணோட கடைக்கண் பார்வையும் ஒண்ணுடா தியாகு."

தியாகு நாணியை பார்த்து நிஜமாலுமே பிரமிக்கிறான்.

"அம்மாஞ்சி, இனி என் ஆசான்டா நீ..."

வியர்வை உடம்போடு ஓடிப்போய் அவனை கட்டிக் கொள்கிறான்.

"ஒண்ணுமட்டும் நிச்சயம் நாணி. அவ எவ்வளவு உயரத்துக்கு போனாலும் நானும் போவேன். அவளை வசப்படுத்துவேன்."

"ஆளை எப்பக் காட்டப்போறே?"

"எப்பக் காட்டட்டும்?"

"இன்னிக்கு ஈவினிங்..."

"ஐய்யோ... நான் இப்பவே ரெடி!"

மைலா ஃபார்மா அலுவலகத்துக்கு நேர் எதிர் சாரியில் பஸ் ஸ்டாப், இயேசுவின் அழைப்பிலேயிருந்து - பரமக்குடி பாரதி எங்கள் கமல் என்கிற பினாத்தல் ரக போஸ்டர்களால் வேயப்பட்டிருக்கிறது அதன் கூரை. கீழே நாராயணன் - தியாகு!

தியாகு டச் செய்து கொண்டு தலை கோதும் மேனரிசத்தோடு மைலா ஃபார்மாவையே பார்த்துக் கொண்டிருக்கிறான்.

"கொஞ்சம் பொறு... ஆபீஸ் விட்ற டயம். இங்கதான் வந்து பஸ் ஏறணும்" நாராயணனுக்கு கொல்லும் சாக்கில் தனக்கும் சொல்லிக் கொள்கிறான்.

ஒரு மைலாப்பூர் சரக்கு, படிய வாரிய தலை இந்த 97லும் பாவாடை தாவணி மற்றும் கீற்று விபூதி குங்குமம் என்கிற லட்சணங்களோடு கழுத்தில் கருகமணி மாலையுடன் வந்து நிற்கிறது. பிரேசியர் லேஸ் தோள் பட்டை கடந்து வெளியே தெரிய தியாகு அதை பார்த்து விட்டு கண்களையே வெர்னியர் காலிபர் ஆக்குகிறான். நாராயணனின் காதையும் கடிக்கிறான்.

"இந்த பொண்ணு இவ அக்கா பிரேசியரை போட்ருக்கா. ஏழை எழுதிக்கோ. இவ ராவ்ஜிஸ் ஃபேமிலி. மைலாப்பூர் ராகவேந்திரா அவென்யூல ஏதாவது ஒரு ஸ்டோர்ல்தான் இவ இருக்கணும்." நாராயணன் முகம் மிதமாக சிவக்கிறது.

"ஏண்டா உன் ஆளைக்காட்றேன். காதல் கத்தரிக்காய்னுட்டு இங்க வந்தா எவளையோ பார்த்துட்டு அசிங்க ஆராய்ச்சி எல்லாம் பண்றியேடா? இவ எங்க இருந்தா உனக்கென்ன - நீ எல்லாம் எப்படிடா ட்ரூ லவ்வரா இருக்கப் போறே?" தியாகு இடக்காக சிரிக்கிறான்.

"வாய்ப்பு கிடைக்கறப்பல்லாம் ஐ.க்யூவை டெவலப் பண்ணிக்கணும்..." என்று தாடை வருடுகிறான்.

"பிரேசியர் லேஸ்ல எல்லாமா இருக்கு ஐ.க்யூ?"

"அது எங்கும் நிறை பரப்ரம்மம் கண்ணா. இரு இரு ஆங் வந்துட்டா... வந்துட்டா... அதோ பார் அதான் அதான்... அந்த ரோஸ் சாரி போனி டைல்..."

தியாகுவின் நீண்ட கைகளின் ஆட்காட்டி விரல் வெளியே வரும் ஸ்டெல்லாவை சுட்டுகின்றன...

கூட யார் அது ஒரு இளைஞன்?

இருவரும் பஸ் ஸ்டாப் நோக்கித்தான் வருகிறார்கள்.

"நாணி... இங்க தாண்டா வரா - எப்படி இருக்கா?"

நாராயணனின் முகத்தில் நெற்றியில் நான்கு மடிப்பு விழுந்து விட்டிருக்கிறது. பார்வை நண்பனின் நேசத்துக்குரிய அந்த பெண்ணை முடிந்தவரைக்கும் தெரிந்த விதத்துக்கு அளக்கிறது.

ஸ்டெல்லா பஸ் ஸ்டாப் சேர்கிறாள். தியாகுவை அங்கு பார்த்து ஒரு சின்ன வியப்பு காட்டுகிறாள். ஊடே கத்தரிக்கிறான் உடன் வந்தவன்.

"ஸ்டெல்லா ஆட்டோல போய்டலாமா? பஸ்ல போனா நிச்சயமா டிக்கட் கிடைக்காது."

"எனக்கு ஆட்சேபணை இல்ல, ஆனா ஒரு கண்டிஷன்."

"தெரியும் வீட்டுக்கு போய் சமைக்க டயம் இருக்காதும்பே. டோன்ட் ஒர்ரி... உட்லண்ட்ஸ்ல டின்னர் பண்ணிட்டு வீட்ல ட்ராப் பண்ணிட்டு நான் போறேன். நீ ஓ.கே. சொல்லு..."

"உனக்கு வெட்டிச் செலவு சிவக்குமார்..."

"உனக்கு பண்ற செலவு அப்படி கிடையாது ஸ்டெல்லா. அதென்னமோ உன்னோட இருந்தாலே க்ளூகோஸ் குளத்துல நீஞ்சற மாதிரி ஒரு ஃபீலிங்."

"இதே டயலக்கைதான் உள்ற லலிதாகிட்டயும் சொல்லியிருக்கே போல..."

"அஃப்கோர்ஸ். ஆனா அது ஒரு மடிசஞ்சி. இப்படி எல்லாம் பேசாதீங்கன்னு மூக்கை சிந்தறா உன்ன மாதிரி ஒரு ஃபார்வர்ட் திங்கிங் அவளுக்கு இல்லை. ஆட்டோ..."

தாண்டிச் சென்ற ஒரு ஆட்டோ தேய்ந்து நின்ற அவர்களை அள்ளிக் கொண்டு பறக்கிறது. மறக்காமல் ஏறும் போது தியாகுவைப் பார்த்து ஒரு சிரிப்பு சிரிக்கிறாள் ஸ்டெல்லா.

# 8

தியாகு முகம் நிறைய மாறிவிட்டிருக்கிறது. கொஞ்சம் முந்தி வரை ஊட்டியாய் இருந்தவன் சிவகாசியாய் கசங்கிப் போய் விட்டிருக்கிறான்.

"தியாகு போலாமா?" நாராயணன் அழைக்கவும் பதில் பேசாமல் பஸ் வருகிறதா என்று பார்க்கத் தொடங்குகிறான்.

"சாரி தியாகு... நல்ல பொண்ணா எனக்கு தெரியல. அபிப்ராயத்த மாத்திக்கோ..."

பஸ் பிடித்து வவ்வாலாய் ஒருமையில் தொங்கிக் கொண்டிருக்கும் போது காதோரம் கருத்துச் சொல்கிறான்.

டிராஃபிக்கில் தியாகுவின் மனச்சந்தடி போலவே நெருக்கடி வெளியே பார்வையை விட்டு உணர்ச்சிக்கு வடிகால் தேடும் போது பஸ்ஸை ஒட்டி சப்தமின்றி நிற்கிறது அந்த கார். ஜன்னலோரம் மைதிலி முகம்!

"நாணி நாணி..." தோளைத் தேய்த்து பரபரத்து மைதிலியை காட்டுகிறான் நாணிக்கு.

"மைதிலிடா- லயன் ராம்நாத் பொண்ணு" 'நாராயணன் பார்வையும் அவளை அழுத்தமாய் பார்க்கிறது.

"வலிப்பு வந்து குளத்துல விழுந்துட்டா. நான்தான் காப்பாத்தினேன். கார் டிரைவர் கால்லையே விழுந்துட்டான். வர்ற முகூர்த்தத்துல இதுக்கு கல்யாணம் நடக்க இருந்து நின்னும் போச்சுடா..."

படபடவென்று பஸ் கிளம்பி காரைப் பிரிகிறது. சந்தடிச் சப்தம் மீறித் தொடர்கிறான் தியாகு.

"செம கார் இல்ல...ஹும் கொடுத்து வெச்சவடா!"

தியாகுவின் பொறுமலை நாராயணன் கேலிச்சிரிப்புடன் ஏற்கிறான். கார் பக்கவாட்டில் பிரிந்து போய்க் கொண்டிருக்கிறது.

"அந்த பொண்ணு முகத்துக்கும் இவளுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கு தெரியுமா. கோடீஸ்வரியா இருந்தாலும் ஒரு அடக்கம் இருக்குடா இவகிட்ட. தெரிஞ்சோ தெரியாமலோ அவள காப்பாத்தி ஒரு நல்ல காரியம் பண்ணியிருக்கே நீ... ஆமா எப்படி இந்தப் பொண்ணை

லவ்வாம விட்டே... ஃபிட்ஸ் கேசுங்கறதாலையா? இல்ல கோடீஸ்வரிகிட்ட பருப்பு வேகாதுன்னா?"

தியாகு பதில் முறைப்பு காட்டுகிறான்...

"முறைக்காத... இந்த மாதிரி பெண்கள லவ் பண்ணுடா. குறைஞ்ச பட்சம் ஒரு ஊனத்துக்கு வாழ்வு கொடுத்த புண்ணியமாவது மிஞ்சும். அது சரியான காட்டுக் குதிரை ஜாக்கிரதை!"

விளையாட்டாக நாராயணன் பேசி விட்டாலும் வினையாக அது தியாகு மனதில் பற்றி எரிய ஆரம்பிக்கிறது.

சீட் கிடைத்து அமர்ந்து நிமிரவும் வெளியில் ‘டார்கெட்' ஆங்கிலப்பட பேனர் ஒருமறைமுக உந்துதல் தருகிறது.

பேக்டரி பார்க் கழுவிட்ட சுத்தத்தோடு இருக்கிறது. குப்பைத் தொட்டிக்கெல்லாம் கூட பளிச் சென்ற நிறம். அரக்க வடிவில் எந்திரங்கள் ஆனால் கட்டுப்பாடான காட்டுத்தனமில்லாத ஓட்டம்.

"இதான் புரோடக்ஷன் ஏரியா..." பர்சனல் அசிஸ்டென்ட் ராகவன் சொல்ல நாராயணன் கண்ணில் விழியும் பிரமிப்புடன் கேட்டுக் கொள்கிறான்.

கண்ணாடி அறை ஒன்று குறுக்கிட உள் நுழைகிறான் அசிஸ்டென்ட் பின் தொடர்கிறான் நாராயணன்.

உள்ளே அத்தர் வாச ஏ.சி. சித்தர் போல தாடியுடன் ஐயப்பசாமியாக ஒரு அதிகாரி.

"மிஸ்டர் சுந்தரேசன்... சார் நாராயணன். செலக்ட் ஆகியிருக்கற க்ளரிக்கல் அசிஸ்டென்ட். பி. எம். இன்ட்ரட்யூஸ் பண்ணச் சொன்னார்."

"ஹலோ மிஸ்டர் நாராயணன்..."

"ஹலோ சார்!"

"உட்காருங்க..."

"பரவால்ல சார்..."

"இது டிபிளம் கம்பெனி மிஸ்டர் நாராயணன். ஃபார்மாலிடிஸ்க்கு இடமே கிடையாது. குப்பைகளோட அதையும் அள்ளி வெளிய போட்டுட்டோம். ஓ.கே.ராகவன் நான் பாத்துக்கறேன் நீங்க

போகலாம்..."

ராகவன் கழண்டு கொள்ள சுந்தரேசன் நுனி சீட்டில் அமரும் நாராயணனை தன் ஸ்பெக்ஸ் விழிகளில் அழுத்தமாக பார்க்கிறார். ‘விபூதி குங்கும முகம். பவுடர் தரமுடியாத எண்ணெய்ப் பசை இல்லாத ஒரு வகை ராஜஸ வெள்ளை நிறம். கழுத்து பட்டன் வரை போட்டிருக்கும் புதிய சட்டை. காலர் நுனியில் தெரியும் மஞ்சள் குங்குமத்திப்பி...’

சந்தரேசன் பேப்பர் வெயிட்டை உருட்டிக்கொண்டே பேச ஆரம்பிக்கிறார்.

"தாராளமா சீட்ல உட்காருங்க... மன இறுக்கம் வேண்டாம். ஆமா நீங்க டிப்பிக்கல் பிரானினோ?" என்று தளர்த்துகிறார் கேள்வியோடு...

"ஆமாம் சார்... ரொம்ப புவர் ஃபேமிலி. நான் தலை எடுத்துதான் முன்னுக்கு வரணும். மதுரை பக்கம் துவரைமான் சொந்த ஊர். அப்பா பேர் ராமனுஜாச்சாரி. உபாத்யாயம்தான் தொழில். இங்க ஒரு ஃப்ரெண்டோட மயிலாப்பூர்ல ஒரு ரூம்ல தற்சமயம் ஜாகை..." என்று நாராயணனும் விவரங்களாகிறான்.

"குட்.. சின்சியரா லாயலா இருங்கோ. இந்த ஃபாக்டரில உத்யோகம் கிடைக்க கொடுத்து வெச்சிருக்கணும். எப்பவும் பத்து வருஷம் அட்வான்ஸா சிந்திக்கற மணியான சேர்மன் அவருக்கு சரியா ஓட முடிஞ்சு டயனமிக் பிரசிடென்ட் உணர்ச்சி வசப்படாம சாணக்யமா நடந்துக்கற ஜெனரல் மேனேஜர்னு ஒரு சூப்பர் குரூப் இங்க இருக்கு. இனி உங்களுக்கு நல்ல காலம்தான்..."

சுந்தரேசன் நம்பிக்கை யூட்டுகிறார்.

"ஆமாம் சார்... என் ஜாதகத்துலகூட இனிதான் நல்ல காலம்னு சொல்லியிருக்கு..."

"ஓ... அதுல எல்லாம் நம்பிக்கை உண்டா?"

"நிறைய்ய சார். பிச்சுமணின்னு ஒரு ஜோசியர். சொன்னா சொன்னபடி நடக்கறது..."

"அப்கோர்ஸ்... ஜோதிடம் ஒரு விஞ்ஞான பூர்வமான கணக்கு. நல்லா போடத் தெரிஞ்சவங்கதான் குறைச்சல்."

"பிச்சுமணி அந்த வகைல பிரமாதமான மனுஷன் சார். எனக்கு இந்த

கம்பெனில கட்டாயம் வேலை கிடைக்கும்னு சொன்னார். கிடைச்சிடுத்து..."

நாராயணனின் நம்பிக்கையை சிலாகித்து ஏற்றுக் கொள்கிறார் சுந்தரேசன்.

"அவர் எங்க இருக்கார்...?"

"நீலாங்கரைல வள்ளலார் நகர்னு..."

"ஒரு ஹெல்ப் பண்ணுங்களேன். என்னடா முதல் நாள் பழக்கத்தலேயே கேக்கறேனேன்னு நினைச்சுட வேண்டாம். நான் என் டாட்டர் ஜாதகம் தரேன். அவளுக்கு கல்யாணம் ஆகுமா ஆகாதுன்னு பாத்துச் சொல்லணும்."

சுந்தரேசனின் பேச்சு நாராயணனை சற்று குழப்புகிறது.

"என்ன சார் இது கேள்வி... ஏன் உங்களுக்கு இப்படி ஒரு அவநம்பிக்கை."

சந்தரேசன் முகம் அந்த சொற்ப நொடிப் பொழுதில் கான்கிரீட் போல இறுகிப் போய் விட்டிருக்கிறது.

உதடுகள் மெலிதாக "அவளால பேச முடியாது அதனாலதான்..." என்கின்றன!

ஹாஸ்பிடல்.

சஷ்டி கவசம் படித்தபடி படுத்திருக்கிறார் ராமநாதன்.

அருகில் ஹார்லிக்ஸ் கலக்கியபடி சாரங்கபாணி.

"புதுசு... எப்படி மேனேஜ் பண்ணப் போறாளோன்னு ஒரு பயம் இருந்தது எனக்கு. ஆனா மைதிலி பிரமாதமா ஹேண்டில் பண்ணிட்டா. ஒரு வகைல உனக்கு ஹார்ட் அட்டாக் வந்ததும் நல்லதுக்குதான்!"

ராமநாதன் புத்தகத்திலிருந்து விலகி சாரங்கபாணியை பார்க்கிறார்.

"ஆமாண்டா... இரண்டு நாள்ல எவ்வளவு பேப்பர் மூவ் ஆகியிருக்கு தெரியுமா..."

"அது இருக்கட்டும்... மாப்ள எப்படி இருக்கார்?"

ராமநாதன் பேச்சு இப்படி ஒரே தாவாகத் தாவி சுதர்சனை எட்டிப்

பிடிக்கும் என்று அவர் நினைக்கவேயில்லை. அதே நொடியில் அறை வாசலில் கைவசம் பழக்கூடையோடு வாட்ச்மேன் வாதிராஜ்.

"வா வாதிராஜ்..." சாரங்கபாணி வாதிராஜை பிடித்துக்கொண்டு இக்கட்டிலிருந்து தப்பிக்க பார்க்கிறார். வாதிராஜ் உள்ளே நுழைகிறான். கூடையைக் கீழே வைத்து விட்டு பணிவாக கைகளை கட்டிக் கொண்டு ராம்நாத்தை கலக்கமுடன் பார்க்கிறான். எதையோ பேச நினைக்கிறான் முடியவில்லை.

"ஆமா எதுக்கு இந்த பழம்லாம்... வெறும வர வேண்டியது தானே நீ?" சாரங்கபாணி செல்லமாக அதட்டுகிறார்.

"உட்காரு வாதி" ராம்நாத்தும் பண்பு காட்டுகிறார்.

"நல்லாயிட்டுங்களாய்யா..."

"ஹும் ... எதோ..."

"அதெல்லாம் ஆயிருவார். நான் இருக்கும் போது விட்றுவேனா..."

- வாதிராஜ் அதைக் கேட்டு மகிழ்கிறான். முடியாது போய் திரும்ப முகம் மாறுகிறான்.

சாரங்கபாணி கச்சிதமாக புரிந்து கொண்டு அவன் தோள் மேல கை போட்டு ஓரமாக ஒதுங்கி மெலிந்த குரலில் கேட்கிறார்.

"என்ன ஆபீஸ்ல ஏதாவது பிராப்ளமா?"

"ஆமாங்கய்யா... அந்த அக்கவுண்டண்ட் திருந்தவேயில்லீங்க. அந்த போட்டிக் கம்பெனி ஆளுங்கள கூட்டிகிட்டு ஆபீசுக்கே வந்துட்டான். கேட்டா ஸ்டாக்கிஸ்டுன்னு பொய் சொல்றான்."

மைதிலி அம்மாவும் சீட்ல இல்ல. அதான் இங்க வந்து ஐயாவ பாத்து...

சாரங்கபாணியிடம் சிதைவு நன்றாக தெரிகிறது.

"நல்லவேளை... என்கிட்ட சொன்னே! ராமநாதனுக்கு தெரிஞ்சா திரும்ப அட்டாக் வந்துடும். நீ கலவைப் படாதே நான் பாத்துக்கறேன். ஸ்டெல்லாவை வரச்சொல்..."

வாதிராஜ் உத்தரவு வாங்கிக் கொண்டு அறை வாசலைத் தாண்டும் போது எதிரில் தியாகு!

# 9

"வாப்பா!"

வாதிராஜ் கடந்து செல்ல தியாகு முன் வர சாரங்கபாணி வரவேற்கிறார்.

கழுத்து வரை பட்டன் போட்டு நெற்றியிலும் பெரிய விபூதிப்பந்தல் போட்டுக் கொண்டு அக்மார்க் நடிகனைப் போல சற்று குழைந்தபடி தியாகுவும் உள் நுழைகிறான்.

"ராமநாதா... இவர்... பேரென்னப்பா சொன்னே?"

"தியாகராஜன் சார். தியாகுன்னு கூப்டுவாங்க."

"ஆங்ங்... தியாகு! தெரியும்தானே? உன் ஸ்காலர் ஷிப்ல படிச்சு பட்டம் வாங்கின பிள்ளையாண்டானாம். உனக்கு ஹார்ட் அட்டாக்னு தெரிஞ்சு ஏற்கனவே பார்க்க வந்திருக்கான்..."

ராம்நாத் தனது வாசிப்பிலிருந்து விலகி தியாகுவை ஒரு அரைப் புன்னகையுடன் பார்க்கிறார்.

"எப்படி சார் இருக்கு ரெகவரி... சீக்கிரமா குணமாகி வீடு திரும்பணும் சார் நீங்க..."

"உம்ம்... நேற்றைக்கு இன்னைக்கு நல்ல மாறுதல். மற்றபடி நல்ல ஓய்வுதான் வேணும். சின்ன சப்தம் கூட ஆகாதுங்கறார் டாக்டர். கமான் நாம வெளில போய் பேசுவோம்..."

சாரங்கபாணி அறைக்கு வெளியே காரிடாருக்கு நடக்கிறார்.

"ஒரு நிமிஷம். இந்த விபூதிய சாருக்கு இட்டு விடுங்க. இன்னிக்கு கார்த்திகை. சாருக்காக கோவிலுக்கு நடந்தே போய்ட்டு வந்தேன்."

"எந்த முருகன் கோவிலுக்கு?"

"வல்லக்கோட்டை சார்!" சாரங்கபாணிக்கு தூக்கி வாரிப்போட்டது.

"எங்க இருந்து...?"

"மைலாப்பூர்ல இருந்து"

"மை குட்நைஸ்... இது என்னப்பா ராட்சஸ பக்தி?"

"சரியா சொன்னீங்க சார். ராட்சஸ பக்திதான். பொதுவுல வியாதிங்கறதே பாவ வினையாலன்னு எங்க பாட்டி சொல்வாங்க. எந்த உடம்பை அது பீடிக்கிறதோ அந்த உடம்பாலையே மெய் வருந்த நடந்துட்டு வரும் போது அந்த பாவக் கணக்கம் நேராகுது. கடவுளும் அதிக இரக்கம் காட்றார்..."

"நிறைய உபன்யாசம் கேட்பியா... பொளந்து கட்றியே..."

"கபாலீஸ்வரர் கோயில் பக்கம் இருந்தாலே போதுமே. கோவில் மந்திரங்களும் உபன்யாசங்களும் காதுல விழுந்துதானே தீரணும்?"

தியாகுவின் சளைக்காத பதில் ராமநாதனை அவனையே விழுங்கும்படி பார்க்க வைக்கின்றன.

"அப்ப நான் கிளம்பறேன் சார்... நிறைய வேலை இருக்கு."

அடுத்த நொடி மறைந்து கிடந்த சிறகை விரித்து பறக்க ஆரம்பிக்கிறான்.

"சாரங்கா யாருடா இந்த பையன்... நம்ம கம்பெனில வேலைக்காக இங்க இப்படி படம் காட்றானா?"

"அப்படித்தான் தெரியுது."

"வேண்டாண்டா. என்னை விடாம ஃபாலோ பண்றான் நியூ சென்ஸாயிடப்போ..."

சாரங்கபாணி சட்டென வாயை மூடி "நான் பாத்துக்கறேன் காக்கக் காக்க கனகவேல் காக்க... உம்ம்..."

வரிகளில் பிடித்துவிடுகிறார். வெளியே குனிந்து செருப்பை மாட்டும் சாக்கில் அதை தியாகுவும் காதில் வாங்கிக் கொள்ளத் தவறவில்லை.

வெளியே வாதிராஜ் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தான். அருகே போய் உன்னிப்பாக அவனை பார்த்தபடி நிற்கத் தொடங்குகிறா தியாகு. பாதி எண்ணெய்க் குளியலில் எழுந்து வந்த மாதிரி உடம்பெல்லாம் பிசு பிசுப்பு...

"நீங்க வாதிராஜ்தானே?"

"ஆமாம்... நீங்க?"

"நான் தியாகு. ராம்நாத் சாரை பார்க்க வந்தேன். வந்த இடத்துல உங்கள பத்திதான் பேச்சே..."

"என்னை பத்தியா... என்னங்க சொல்றீங்க?"

"வாதிராஜ்... நீங்க உத்யோகத்துல வாட்ச்மேனா இருக்கலாம் ஆனா மனசுல ரொம்ப பெரிய ஆள். இத நான் சொல்லலை. இப்பதான் உள்ற நாம்நாத் சார் சொன்னார். ஏதோ அக்கவுண்டன்ட் விவகாரம் பத்தி கூட சொன்னனீங்க போல இருக்கே..."

வாதிராஜ் வந்த பஸ்ஸை கூட நழுவவிட்டு தியாகுவின் கேள்வியால் திணற -

"சும்மா சொல்லுங்க. நான் யாரோ இல்ல. நானும் ராம்நாத் சார் உப்ப தின்னு வளர்ந்தவன்தான். அவருக்கு துரோகம் செய்ய நினைக்கறவங்கள சும்மா விடக் கூடாது."

"இதெல்லாம் எப்படி உங்களுக்கு தெரியும்?"

"உண்மையைச் சொல்றேனே... நீங்க சாரங்கபாணி கிட்ட பேசிகிட்டிருந்ததை நான் கேட்டுக்கிட்டிருந்தேன். போதுமா?"

"அது சரி... நீங்க என்ன பண்றீங்க, என்ன ஏதுன்னு சொல்லலையே..."

"நான் ஒரு ஷேர் புரோக்கர். போதுமா? இப்பதான் சாரங்கபாணி சார்கிட்ட அந்த அக்கௌண்டண்டை ஒரு வழி பண்ணவான்னு கேட்டேன். பொறு தியாகுன்னார்."

"ஆமாம் தம்பி... அந்த அக்கௌண்டன்ட் வேணு ஒரு பெரிய துரோகிப் பயலா இருக்கான். பம்பாய்ல எங்களுக்கு சரியா ஒரு போட்டிக் கம்பெனி உண்டு. நாங்க மூட்டு வலி மருந்து போட்டா அவங்களும் போடுவாங்க. வித்யாசமா தலைவலி தைலம் போட்டா அவனும் போடுவான். எங்க ஏஜென்ட்டுங்களையே அவங்களும் குறிவைப்பாங்க. அவங்களுக்கு இந்த வேணுதான் ஆள்காட்டி.

நேத்து கூட அந்த ஆளுங்களோட கம்பெனிக்கு வந்தான். ஐயா இப்படி ஆஸ்பத்திரியில கிடக்கற சூழ்நிலையை நல்லா பயன்படுத்திக்கிட்டு வேல பாத்துட்டான். ஃபாக்டரிகெல்ம் நேர்லையே அவங்கள கூட்டிகிட்டு போயிருக்கான்."

"அவங்கள உங்களுக்கு எப்படி தெரியும்?"

"தெரியும் தம்பி. அதானா பெரிய விஷயம். செக்யூரிட்டிகூட விஷயங்கள கோட்ட விட்டுடுவாங்க. நான் விடமாட்டேன். இல்லாட்டி சாதாரண இந்த வாட்ச்மேன் ஐயாவை எல்லாம் நேர்ல பாத்து பேச முடியுங்களா?

இல்ல ஐயாதான் உங்ககிட்ட என்ன பத்தி அப்படி பேசுவாரா?"

"ஆமாம் இந்த செக்யூரிட்டி, பர்சனல் டிபார்ட்மென்ட் ஆளுங்கல்லாம் என்ன பண்றாங்க?"

"என்னத்த எந்த கம்பெனி எடுங்க, அதுல நாலு தறுதலை இருக்கத்தானே செய்யுது. முதலாளி அய்யாவுக்கு தங்கமான மனசு. யார் பொழப்பையும் கெடுக்க மாட்டார். திருந்த சந்தர்ப்பட்ம தருவார். ஆனா எவ்வளவு சந்தர்ப்பம் தந்தாலும் திருந்தணுமே?"

வாதிராஜ் விசுவாசி என்பதிலிருந்து மைலா ஃபார்மாவிலும் லோக்கல் பாலிடிக்சும் ஊழலும் உடைப்பும் இருக்கிறது என்பதும் தியாகுவுக்கு சுலபமாக புரிய வருகிறது.

கூடவே ராம்நாத்தும், சாரங்கபாணியும் கூட்டாக தனது பளபளப்பான அன்பை சரியாக இனங்கண்டு கொண்ட வலியும் சேர்ந்து கலக்குகிறது.

"என்ன தம்பி ஒண்ணும் சொல்லலையே நீங்க..."

"உம்ம். வாஸ்தவம்தான் வாஸ்தவம்தான்! ஆனா எல்லாம் சரியாயிடும்..."

"எனக்கும் அந்த நம்பிக்கை இருக்கு... முதலாளியம்மாவும் கொஞ்சம் இறுக்கித்தான் பிடிக்க ஆரம்பிச்சிருக்காங்க. வழிக்கு வந்துடும்னு நம்பறேன்..."

"அப்படியா சேதி. முதலாளியம்மா கண்ட்ரோலா இப்ப?"

"ஆமாம் தம்பி. சும்மா சொல்லக்கூடாது அம்மாவுக்கு உடம்புதான் பங்கம். மத்தபடி மனசுல அது சிங்கம்கறது நல்லா தெரியுது. இரண்டு நாளைக்குள்ளே என்னா போடு போடுது தெரியுமா?"

"அது சரி... நின்ன கல்யாணம் நின்னததானா?"

வாதிராஜ் அதற்கு மட்டும் பதில் சொல்லப் பிரியப்படாத மாதிரி வேறு பக்கம் பார்வையை செலுத்த.

"என்ன வாதிராஜ் நான் ஏதாவது தப்பா கேட்டுட்டேனா?" வாதிராஜ் வருத்தத்துடன் பதில் தருகிறான்.

"அதுக்கு கல்யாண ராசியே கிடையாதுன்னு ஜாதகம் சொல்லும்போது யாரால என்ன தம்பி பண்ண முடியும்? என் வரைல சொல்றேன். அது இனி எந்த காலத்துலேயும் நடக்காது."

"இந்த ஜாதகம் ஜோசியம்ல எல்லாம் அவங்களுக்கு நம்பிக்கை இருக்கா?"

"என் கிட்ட கேட்டா? என்ன தம்பி, விட்டா அதோட நாள் நட்சத்திரம் கூட கேப்பீங்க போல இருக்குதே. நானும் உளறிகிட்டே இருக்கேன்."

"சேச்சே... அதெல்லாம் ஒண்ணுமில்ல. சும்மா ஒரு ஆர்வத்துல கேட்டேன். அவ்வளவுதான்!"

நல்லவேளையாக மனிதப் பிதுங்கல்களுடன் வாதிராஜ் ஏற வேண்டிய பஸ் வந்து நின்றது.

ஓடிச் சென்று குடைந்து ஏறிக் கொள்கிறான்.

தியாகுவோ வெறித்தபடி...

இரண்டு கோன் ஐஸ் கப்புடன் வந்து அமருகிறான் நாராயணன். அருகி யோக நிஷ்டைக்காரன் போல தியாகு. எதிரில் வங்காள விரிகுடா.

"டேய் பிடிடா.எந்த கோட்டையை பிடிக்க இந்த யோசனை?" நாராயணன் கேள்வி காதிலேயே விழவில்லை. காற்று காதோரம் ஊளைக் குசும்பு செய்து கொண்டிருக்கிறது.

"உன்னைத்தாண்டா... இன்னிக்கு ட்யூட்டியில ஜாய்னு பண்ணிட்டேன். கம்பெனி என்னமா இருக்கு தெரியுமா? பூஜை அறை மாதிரி..."

"..............."

"தியாகு, நான் பேசறது காதுல விழுதா? என்ன ஏதுன்னு கேக்கமாட்டியா? சுந்தரேசன்னு ஒரு ஏரியா மேனேஜர்டா. இண்ட்ரஸ்ட்டிங் பர்சன்டா. முதல் நாளே ஈகோ இல்லாம என்னமா பேசினார் தெரியுமா. ஒரு நல்ல எதிர்காலம் எனக்கு ஏற்படிருக்கறதா மனசு சொல்லுதுடா..."

அலை வந்த தாவி ஏறி முழங்கால் வரை நனைத்துச் செல்ல அந்த சிலிப்போடு நாராயணன் பேசிக் கொண்டே போகிறான். தியாகு அசைவதாகத் தெரிவதில்லை.

"டேய்... என்னடா ஆச்சு உனக்கு? இப்ப வாயைத் திறக்கப் போறியா இல்லியா?"

"............"

"சரி இப்படியே சிலையா உக்காந்துகிட்டிரு. நான் கிளம்பறேன். உனக்கு போனா போகுதுன்னு தண்ணி கூட வாங்கித்தரலாம்னு இருந்தேன். எல்லாத்தையும் கெடுக்கறே நீ. நான் கிளம்பறேன்..."

நாராயணன் பொய்க் கோபமுடன் எழுந்து கொண்டு திரும்பி நடக்க, அருகில் தரை தட்டி நிற்கும் படகு ஒன்றின் பின்னால் இருந்து ஒரு பெண் வெளிப்படுகிறாள் தியாகுவுக்கு ஜோசியம் பார்த்து முகத் வெளிறிப்போன அதே குச்சி ஜோசியக்காரி.

"தம்பி சோசியம் பாக்குறீங்களா?"

"வேண்மாம்மா..."

"அப்படி சொல்லாத ராசா. சக்கம்மா வாக்கு சத்திய வாக்கு. நம்பிக் கேளு. நல்லதே நடக்கும்."

"சரி ... எவ்ளோ?"

"அஞ்சு ரூவாத்தான் ராசா... மனசு நிரம்புனா மேல போட்டுக் கொடு. ஆத்தா உன் பேர் சொல்லி ஒரு வேள சோறு திம்பேன்."

நாராயணன் அரை மனதாக கை நீட்ட அவளும் புருவம் சுருக்கி கண்மூடி உள்ளங்கையில் குச்சியை பதித்து விட்டு முதல் வரியிலேயே குண்டைத் தூக்கிப் போட்டாள்.

"சினேகிதன்னு யாரையும் நம்பாதே. நம்புனே நாலு மாசம்கூட இல்லை உன் ஆயுள்!"

# 10

அந்த குச்சி ஜோசியக்காரியின் எச்சரிக்கை நாராயணனைக் கோபத்தில் தள்ளுகிறது.

"ஏய்ய்... என்ன நீ... எனக்கு இருக்கறது ஒரே ஒரு சினேகிதன், அவனையும் நம்பாதேன்னா என்ன அர்த்தம்?"

ஜோசியக்காரி விடைக்கிறாள்.

"நான் சொல்லலை ராசா. சக்கம்மா சொல்றா"... "நல்லா சொன்னா உன் சக்கம்மா... அவளுக்கு நல்லபடி எதுவும் சொல்லத் தெரியாதா?"

"கோவிக்காதே... இப்பகூட உனக்கு ஒரு நல்ல சோலி கிடைச்சு உக்காத்திவெச்சிருக்கா. மேலான நிலை எல்லாம் உனக்கு அங்கன இருக்கு. கல்யாண மனசு உனக்கு. கனி போல வாழ்க்கையும் காத்துக் கெடக்கு. ஆனா சினேகிதனை மட்டும் விட்டு விலகிவிடு."

- நாராயணன் அவள் வரிசைப்படுத்திய உண்மைகளில் உடனேயே மயங்கி அவளையே பார்க்கிறான்.

"இப்படிப் பாத்தா எப்படி? என்ன கேக்கனுமோ கேளு."

"ஆங்ங்..."

"ஏதாச்சும் கேளு ராசா?"

"என்னத்த கேக்க... அதான் கனி போல வாழ்க்கை அப்படி இப்படின்னுட்டியே... இதையே தான் எங்க ஜோசியரும் சொன்னார்."

"ஆருப்பா உன் ஜோசியர்?"

"உனக்கு சொன்னா தெரியாது."

"இந்த பட்டணத்துல நான் அறியாத ஜோசியரா... கம்மா சொல்லு."

"பிச்சுமணிங்கறது அவர் பேரு."

"நீலாங்கரை மணி சாமியா... நல்ல ஜோசியருதான். அவரு வேற என்ன சொன்னாரு."

"உனக்கு பிச்சுமணி ஜோசியரத் தெரியுமா?"

"நல்லாத் தெரியும்... பொம்மியக்கா சொல் எப்படின்னு அதுகிட்ட நீ கேளு. அப்பத் தெரியும் என்னைப் பத்தி..."

"பரவால்லியே..."

இடையில கடல் மணலை தட்டியபடியே உள்ளே நுழைகிறான் தியாகு.

"என்னடா இன்னிக்கு நீ மாட்டியிருக்கியா? என்ன ஜோசியம். என்ன கதை உட்டுகிட்டிருக்கே..."

தியாகுவின் கிண்டலும், கேலியும் அவளைக் குத்துகிறது.

"தம்பி... நா சொன்னதை நல்லா நெஞ்சுல வை. நம்பாதே!" என்று அந்த நம்பாதேயில் அழுத்தம் காட்டி விட்டு காசைக்கூட வாங்காமல் நழுவ ஆரம்பிக்கிறாள் அவள்.

"என்ன நீ... காசு வேண்டாமா?"

"போகைல மறக்காம சாமி உண்டியல்ல போட்டுட்டுப் போ. அவர்தான் காப்பாத்தணும் உன்னை..."

அவள் சொல்லிச் செல்லும் விதத்தில் ஒரு அழுத்தமான கரிசனம்.

"எதைடா நம்தேங்கறா?" தியாகு கேட்கிறான்.

"அவ கிடக்கிறா... ஆமா மூட் அவுட்டா இருந்தியே என்னடா ஆச்சு உனக்கு...?"

"விட்றா. தண்ணி வாங்கித் தரேன்னியே..."

"பார்ரா... என் கேள்விக்கு பதில் சொல்லு. சரியான கல்லூரி மங்கனாச்சே நீ. உனக்கும் மூட்அவுட்டுன்னா நம்ப முடியலை என்னால..."

"மூட்அவுட்டெல்லாம் ஒண்ணுமில்ல நாணி. சொல்றேன். உன்கிட்ட சொல்லாம யார்கிட்ட சொல்லப்பேறேன். நெப்போலியன் இல்லே காத்தமுத்து இதுலே எந்தத் தண்ணி சாப்பிடலாம். முதல்ல அதச் சொல்லு."

"காத்த முத்துவா?"

"ஆமாண்டா... இதே கடற்கரைல இடுப்புல ட்யூப் போட சரக்கு சப்ளை பண்ற குப்பத்து காத்த முத்துவை சொன்னேன்."

"யூ மீன் சாராயம்...?"

"எல்லாத் தண்ணியுமே சாராயம்தான்டா. நாட்டுச் சரக்கு கொஞ்சம் உடம்பை படுத்தும். ஆனாலும் அதுல கிக் ஜாஸ்தி. ஊறுகாய் மட்டன்னு' உடனே உள்ள தள்ளிட்டா சந்திரன் சூரியன் சனி புதன்னு எல்லா கிரகங்களையுமே இந்த கடற்கரைல பார்த்து ஹலோ சொல்லலாம். சீக்கிரமா சொல்லு எதுன்னு..!"

பரபரக்கிறான் தியாகு. நாராயணன் முகத்தில் மெலிதான மாற்றம்.

"நான் தெரியாத்தனமா தண்ணி வாங்கித் தரேன்னு சொல்லிட்டேன். ஆளைவிடு" கோபமாய் சடைக்கிறான்.

"டேய்ய்... டேய்... பேச்சு மாறாதே. நீ வாங்கித் தரே! வாங்கித் தரேன்னா வாங்கித் தரே..."

"ஆளைவிடுன்னு சொல்லிட்டேன்ல... காத்தமுத்து கத்தரிக்காய்னு... ச்சே சுத்த சாக்கடைடா நீ"

"நோ... நோ... நீ இப்ப வாங்கித்தரே. இல்லேன்னா என் மண்டை வெடிச்சுடும்."

"வெடிக்கட்டும் . சாகு. உன் மாதிரி குடிகாரன் ஒருத்தன் கூட இருக்கக் கூடாது இந்த தேசத்துல."

"வேண்டாம் நாணி, அப்புறம் இந்தியாவுல பத்து மைலுக்கு ஒரு மனுஷன்தான் இருப்பான். உனக்கு பயங்கர போராடிக்கும். அந்த கொடுமைய நினைச்சா இந்த விஷயம் சின்னதாயிடும்."

தியாகுவின் மடக்கலில் நாராயணன் சிரித்துவிடுகிறான். சிரித்துக்கொண்டே "செமபிரசன்டேஷன் மைண்டுடா உனக்கு" என்கிறான்.

"பாட்டில் முதல்ல... பாராட்டெல்லாம் அப்புறம் தான்." விடாமல் கிடுக்கிப்பிடி போட்டு பார் உள்ள ஒரு ஹோட்டலாக பார்த்து இழுத்தும் செல்கிறான்.

குற்ற உணர்வு, நாராயணனை கொத்திப் பிடுங்கிக் கொண்டிருந்தது. குச்சி ஜோசியக்காரி சொன்னதும் உள் ஓடியது.

தியாகுவின் பழக்கம் காரணமாக முதல் தடவையாக குடிக்கும்படி ஆகிவிட்டது. அரைக் கிண்ணம் கூட குடிக்க வில்லை. ஆனால்

அவனோ ஒரு முழு பாட்டிலை விழுங்கி விட்டு ஸ்டெடியாக நின்றான்.

கண்டபடி பேசினான். அந்த பேச்சு வேறு கூடுதலாக எழும்பி கலவரப்படுத்துகிறது.

ஒரு புறம் ஸ்டெல்லா என்று உருகுகிறான். மறுபுறம் மைதிலி மைதிலி என்றும் புலம்பினான்.

"சாரங்கபாணி உன்னை முதல்ல காலி பண்றேன்டா. உன்னை ஒழிச்சாதான் என் பிளான் சக்ஸஸ் ஆகும்"னும் சொன்னானே...யார் இந்த சாரங்கபாணி?

இரவில் படுத்துக் கொண்டே தீவிரமாக யோசிக்கிறது நாராயணன் மனது. பக்கத்திலேயே தாளாத போதை - குறட்டை உறக்கமாக கன்வர்ட் ஆகியிருந்தது தியாகுவிடம்!

அவனைப் பார்க்கும்போது ஒரு பக்கம் பாவமாக இருந்தது. மறுபக்கம் பயமாகவும் கூட அது மாறுகிறது. புரண்டு படுக்கிறான். தியாகு. சட்டைப் பாக்கெட்டில் துருத்தலாக ஒரு காகிதம் தெரிகிறது.

என்ன அது? க்யூரியாசிட்டி அரிப்பு அந்த காகிதத்தை எடுத்து வாசிக்கிறது.

தியாகுவின் தாய் போட்டிருக்கும் கடிதம் அது.

‘அன்புள்ள தியாகு!

மங்களாசீர்வாதங்கள். நீ அனுப்பிய பத்தாயிரம் ரூபாய் கிடைத்தது. ரொம்பவும் சந்தோஷம். நல்ல சம்பளத்தில் நீ நல்லபடியாக இருப்பதை நினைக்க ரொம்ப பெருமையாக இருக்கிறது. எங்கே நீயும் உன் அப்பா போல ஆகிவிடு வாயோ என்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்.

இந்தப் பணத்தில் உன் தங்கைக்கு நகை வாங்குவேன். கடனை எல்லாமும் அடைத்துவிட்டேன். நீ உன் உடம்பை பார்த்துக்கொள். சபரிமலைக்கு மாலை போட்டிருப்பதாக எழுதியிருந்தாய். உன்னை அந்தக் கோலத்தில் பார்க்க எனக்கு ஆசையாக இருக்கிறது. ஒரு முறை வந்து செல். உனக்கு விரைவாக ஒரு கல்யாணம் செய்து பார்க்க வேண்டும். இதுதான் இப்போது என் ஆசை உன் தங்கைக்கு அந்த மிட்டாதார் வீட்டுவரனையே நீ ஆசைப்பட்டபடி முடித்து விடுகிறேன். நிறைய செலவாகுமே எப்படிப்பா சமாளிப்பே. அனைத்துக்கும் லட்டர்

போடு. ஆசீர்வாதம்.

இப்படிக்கு

உன் அம்மா

சண்முக சுந்தரி

கடிதத்தை படிக்கும் நாராயணன் வியர்வையுடன் நிமிருகிறான். 'சல்லி காசில்லை என்று அங்கலாய்த்தக் கொள்பவன் பத்தாயிரம் அனுப்பியிருக்கிறானே? சொல்லவே இல்லையே... எப்படி வந்திருக்கும் பணம்?

யாரிடமாவது நல்ல கமிஷன் கிடைத்திருக்குமோ...

சபரிமலைக்கு மாலை என்று புருடா விட்டிருக்கிறானே... கருப்பு வேட்டிக்காரர்களை பார்த்தாலே கோபப்படுவானே... இதெல்லாம் என்ன?

ஏற்கனவே பெருகியிருந்த குறுகுறுப்பு இப்பொழுது ஆறாகிறது.

‘விடியட்டும்... கேட்டுவிடுவோம்’ சமாதானத்துடன் கண்ணை மூடப்போனபோது தியாகு குரல் திடும்மென்று இடித்தது.

"என்னடா லெட்டர் படிச்சுட்டியா. நான் ஒரு மடையன் அதை அப்பவே கிழிச்சு போட்ருக்கணும்." வியர்த்துப்போய் எழுந்துக் கொள்ள தியாகு கொட்டாவியுடன் தொடருகிறான்.

"எவ்வளவு போதையிலையும் என் மேல யார் கையாவது பட்டா எனக்கு தெரிஞ்சுடும் நாணி. ஒரு பார்ட்டி கிட்ட நல்ல கமிஷன் வந்தது. படிச்சியே பத்தாயிரம்னு... அதான் அப்படியே அம்மாவுக்கு அனுப்பிட்டேன்.

சபரிமலை - மாலை எல்லாம் அம்மா சந்தோஷத்துக்காக சொன்ன பொய். போட்டு மண்டையை பிச்சுக்காதே படுத்துத் தூங்கு."

நாராயணன் அந்த விளக்கம் கேட்டு ‘அப்பாடா’ என்று பெருமூச்செறிகிறான். அதை நம்பிவிட்ட பாவனையோடு சிரிக்கிறான்.

"ஆமா அந்த குச்சி ஜோசியக்காரி என்னடா சொன்னா?" தியாகுவிடம் இருந்து திடீர் என்று இப்படி ஒரு கேள்வி வரவும் சற்று தூக்கி போடுகிறது.

"ஒண்ணுமில்லடா... பிள்ளையாரை நம்பி கற்பூரம் ஏத்தினா என் கஷ்டம்லாம் தீர்ந்துடும்னு சொன்னா..."

- சமாளிக்கப் பார்க்கிறான்.

"கற்பூர வியாபாரி பிழைக்கவேண்டாமா? சனி என்னைப்பத்தி என்ன சொன்னா?"

திரும்ப தியாகு மடக்குகிறான்.

"உன்னை பத்தி ஒண்ணும் சொல்லலியே..."

"பொய். அவ என்னை பார்த்த விதமே சரியில்லை தெரியுமா?"

"நீ அவளையும் சைட் அடிக்க ஆரம்பிச்சுட்டா என்ன பண்றதுன்னு பயந்து உன்னை கவிக்கற மாதிரி பாத்துருப்பா..."

பேத்தலாக வாயில் வந்ததை சொல்கிறான் நாராயணன். பொய் சொல்லத் தெரியாதவன் என்பது வியர்ப்பதிலும், தடுமாறுவதிலும் நிரூபணமாகிப் போகிறது.

தியாகு புரிந்ததுபோல அதற்குமேல் அவன் நோண்டப் பிரயப்படாதபடி பேச்சை மாற்றுகிறான் "சரிசரி படுப்போம்... ஒரே டயர்டா இருக்கு... ஹாய்..." தியாகுவிடம் கொட்டாவி பிரிகிறது.

நாராயணனிடம் ‘அப்பாடா’ என்கிற முனங்கல்...

நள்ளிரவு

கசகசவென்று இருக்கிறது. தூக்கம் பிடிபடாமல் புரண்டுபடுத்தபோது நாணிக்கு தூக்கம் தப்பிப்போனது. கண்களை கசக்கி விட்டுக் கொண்டு பாரவையை பக்கமாக விடவும் தூக்கிவாரிப்போட்டது. தியாகுவை காணோம்!

"எங்கே போனான்...?" கேள்வி கொத்தும்போதே கதவு திறக்கப்படும் சப்தம். தியாகுதான் உள் நுழைகிறான். பூனைபோல பதுங்கிப் பதுங்கி வருகிறான். நாராயணனும் தூங்குவது போல படுத்தபடியே பார்க்கிறான். பகீரென்றது அவன் சட்டையைப் பார்க்கவும். அது முழுக்க திட்டுத்திட்டாக ரத்தக்கறை!

# 11

உள்ளே நுழையும் தியாகு நைச்சியமாக ஸ்விட்சை போடவும் அறுபது வாட்ஸ் சோனி பல்ப் வெளிச்சம் பாய்ச்சுகிறது.

உறங்குவது போல நடித்துக் கொண்டிருக்கும் நாராயணனை எட்டி ஒரு பார்வை பார்த்து விட்டு அவசர அவசரமாக சட்டையைக் கழற்றுகிறான். சுருட்டி தனது டிரங்குப் பெட்டிக்குள் திணிக்கிறான்.

நெட்டி சோம்பல் முறித்துவிட்டு ஸ்விட்சை அணைத்து விட்டு படுக்க ஆரம்பிக்கிறான். திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டுதான்.

ஆனால் நாராயணனால் முடியவில்லை.

தியாகுவின் மர்மமான செயல்களால் மனசும் கண்ணும் விழித்துக் கொண்டு படபடக்கத் தொடங்குகிறது. "ஸ்டெல்லா... ஸ்டெல்..." தூக்கத்தில் தியாகுவின் புலம்பல் மேலும் படபடப்பைக் கூட்டுகிறது.

ஆஸ்பத்திரி முன் தேங்கி நிற்கும் காரிலிருந்து இறங்குகிறாள் மைதிலி. 'ஆயில் பாத் கூந்தல் - ஸ்டிக்கர் பொட்டு ஹேண்ட்பேக்' சகிதம் நடக்கிறாள். எதிர்ப்படுபவர்கள் மரியாதையாக பார்க்கின்றனர். கூடவே சிலர் சிலரோடு மைதிலியை சுட்டிக்காட்டி கிசுகிசுத்துக் கொள்ளவும் செய்கின்றனர்.

எதையும் லட்சியம் செய்யாமல் ராமநாத் அட்மிட் ஆகியுள்ள வார்டு நோக்கி நடக்கிறாள். சில அடி இடைவெளியில் தொடர்ந்து வருகிறான் டிரைவர்.

கடுமையான உத்தரவு அவனுக்கு... ஒரு வினாடி கூட மைதிலியை அவன் பிரிந்திருக்க கூடாது என்று...

எதிர்படுகிறார் ஒரு டாக்டர்.

மைதிலி கேளாமலே நெருங்கி வந்து ராம்நாத் நிலை பற்றி கூறுகிறார்.

"நௌ யுவர் ஃபாதர் வில் பி ஆல்ரைட் நீங்க கவலைப்படத் தேவையில்ல மேடம்..."

"தேங்க்யூ டாக்டர்..."

அவரும் மைதிலியுடன் சேர்ந்து ஸ்பெஷல் வார்டுக்குள் நுழையும்போது அதிசயமாக உறவுப் பட்டாளம்! அத்தை, சித்தப்பா, மாமா என்று

ஏகவாரியான கூட்டம்.

"வாம்மா... இவ்வளவு சீரியஸா ஆகியிருக்கு. ஒரு போன் பண்ணலியேம்மா நீ?" விடை தெரிந்தே சம்பிரதாயக் கேள்வி கேட்கிறார் சித்தப்பா ஜெகன்னாதன்.

"அண்ணே... அதை எல்லாம் பிறகு பேசிக்கலாம். ராமுக்கு நல்லா ஆனா போதும் நமக்கு..." இது அத்தை சகுந்தலா. மைதிலி வரையில் அதற்கு பெயர் பக்கா பாசாங்கு. கேசவன் மாமா மட்டும் எதுவும் பேசாவிட்டால் எப்படி? "டாக்டர்... எப்ப மாள்ளைய டிஸ்சார்ஜ் பண்ணுவீங்க...?"

டாக்டர் சிரித்துக்கொண்டே "இன்னும் டென்டேஸ் ஆகலாம்" என்கிறார். இங்கிதமாக நகர்ந்தும் கொள்கிறார். அத்தை மாமா எல்லோருக்கும் கல்யாண வயதில் பையன்கள் உண்டு. மைதிலிக்கு தன் மகனை கேட்டுவிட்டால் என்ன செய்வதென்ற பயத்திலேயே மாமா எட்டிப் பார்ப்பதில்லை. ஜாதகம் ஜோசியத்திலும் அபார நம்பிக்கை உடைய கேஸ்.

அத்தையோ, மைதிலிக்கு தன் மகனைக் கேட்க மாட்டார்களா என்று ஏங்கியவள், "வலிப்புக்காரியா இருந்தா என்னடா? இந்த ஜாதகம் ஜோசியமும் சும்மா கப்ஸாதான். மீறினா எவ்வளவோ பரிகாரம் இருக்கு... என்ன பெரிய ... எவ்வளவு சொத்து இருக்கு அண்ணனுக்கு. அதைவிடச் சொல்றியா?" என்று தன் மகனை அவள் அங்கு போய் காதால் அதை கேட்டுவிட்டார்! அப்புறமாக அத்தை நிறைய அசடு வழிந்தும் பலனே இல்லை. அத்தை மகனும் சரியான அராத்து பேர்வழி. பறந்து பறந்த பைக் ஓட்டுவான். ஆனால் டிப்ளாமாவில் ஏழு வருஷமாக மூணு பேப்பர் இன்னமும் அரியர்ஸ் பாக்கி வைத்திருக்கிறான். எப்படியாவது அவனுக்கு மைதிலியை முடித்து விட சித்தப்பாவும் தங்கையோடு சேர்ந்து கொண்டார். ஆனால் ராம்நாத் ஒரே உதறாக உதறிவிட்டார்.

ஏற்கனவே ராம்நாத் உழைப்பால் உயர்ந்துவிட்டதில் அவர்களுக்கெல்லாம் எல்.ஐ.சி. கட்டிட அளவு பொறாமை. சகோதரி மகனை உதறித் தள்ளியதால் அது பல மடங்கு பெருகி அதில் கோபம், துவேஷம் எல்லாம் கலந்துவிட்டது.

அத்தோடுதான் மொத்த கூட்டமும் இப்பொழுது எட்டியும் பார்த்திருக்கிறது.

நிஜமாலுமே பாசமா? இல்லை...

"கல்யாணம் நின்னுப் போச்சுன்னு கூட கேள்விப்பட்டேன். இப்பகூட கெட்டுப் போயிடலை" என்று அத்தை திரும்ப உயிர்ப்பிக்க பார்க்கிறாள் தன் ஆசையை... சரிதான்...

"வேண்டாம் சகுந்தலா, கல்யாணம் பத்தி எல்லாம் பேசாதே. நாம் அதுக்காகவே வந்திருக்கறதா அர்த்தமாயிடும். அண்ணன் ராமு நல்லபடி வீடு வந்து சேர்ந்தா போதும்... கோயில் பிரசாதத்தை கொடுத்துட்டேல்ல... கிளம்பு! அம்மா மைதிலி உன் சித்திய துணைக்கு அனுப்பட்டுமா?"

"வேண்டாம் சித்தப்பா. சாரங்கபாணி அங்கிள் இருக்கார் பார்த்துக்குவார்..."

மைதிலி திரும்பத் தொடங்குகிறாள். ஹாஸ்பிடலின் நெடிய காரிடாரில் நடந்து ரிசப்ஷனைத் தாண்டி வேளி இறங்கி காரை நெருங்கவும் ஓடிப்போய் கதவை திறக்கிறான் டிரைவர்.

அப்போதுதான் இடித்தது... "அடடா ஹேண்ட் பேக்கை மறந்து வைத்து விட்டோமே" ... தடுமாற்றத்திலேயே புரிந்து கொள்கிறான் டிரைவர். "நான் போய் எடுத்துகிட்டு வந்துட்றேம்மா" என்று திரும்புகிறான்.

காருக்கு வெளியே டோர் மேல் சாய்ந்து நின்று கொண்டு காத்திருக்க ஆரம்பிக்கிறாள்.

ஆஸ்பத்திரி வெளி வளாகம் அசோக மரம், காக்கைக் கூட்டம். அடிப்பரப்பில் டுவீலர்களின் சேர்க்கை. வருவோர் போவோர் நடமாட்டம் என்று பரபரப்பில் இருக்க ஆட்டோ ஒன்றிலிருந்து இறங்கிக் கொண்டிருக்கிறாள் ஸ்டெல்லா.

அது யார் சுசுகி ஒன்றின் மேல்... தியாகுவா? ஆம்... தியாகுவேதான்! பாரக்கக் கூட பளிச்சென்று இருக்கிறான். டிஷர்ட், ஜீன்ஸ் என்று வாலிபத்துக்கு நன்றாகவே கொம்பு சீவி விட்டிருக்கிறான்.

சுசுகியை வளைப்பதில் அநாயசமான ஒரு கலா நேர்த்தியும் காட்டுகிறான்.

ஸ்டெல்லா காரை ஒட்டி மைதிலி நிற்பதை பார்த்து விட்டு அவளை நோக்கி வந்த கொண்டிருக்கிறாள். தியாகுவின் சுசுகியும் அங்குதான் தேங்குகிறது. ஸ்டெல்லா "குட்மார்னிங் மேடம்" என்கிற குரலோடு நடையை சற்று ஓட்டப் படுத்திக் கொண்டு நெருங்குகிறாள். குரல் கேட்டு நிமிரும் மைதிலியை அந்த நொடி ஆக்ரமிக்க ஆரம்பித்தது

அவளது சீதனமான வலிப்பு!

"மேடம்..." பதறிப் போய் தாங்கிக் கொண்ட ஸ்டெல்லாவை மைதிலியின் கரங்கள் உருக்குபோல கவ்விக் கொள்கின்றன.

"ஹெல்ப்..." ஸ்டெல்லா போட்ட சப்தம் தியாகுவை காலரைப் பிடித்து இழுக்கிறது!

"தேங்க்யூ... தேங்க்யூ ஸோ மச்..." ஸ்டெல்லாவின் நன்றியை சிரித்துக் கொண்டே ஏற்றுக் கொள்கிறான் தியாகு.

மைதிலியை நெருங்கி ஸ்டெல்லாவை விடுவித்து சாவிக் கொத்து அது இது என்று தந்து சமனப்படுத்தி, ஓடி வந்த டிரைவர் உதவியுடன் உள் வரை கொண்டு சென்று டாக்டர்கள் பொறுப்பில் விட்டுவிட்டு 'இனி அவர்கள் பாடு' என்று ரிசப்ஷனை ஒட்டி ஒதுங்கி நிற்கும் போதுதான் ஸ்டெல்லா வந்து ஆங்கிலமாக நன்றியில் வழிந்து கொண்டிருக்கிறாள். ஜிவ்வென்றிருக்கிறது.

"இவங்கள நான் இப்படி காப்பாத்தறது இது இரண்டாவது தடவை..." அவன் பதிலால் ட்ரிம் செய்த புருவத்தில் ஆச்சரிய அம்பையும் செருகுகிறாள்.

"எப்படி?"அவன் விளக்கி முடிக்கிறான்.

"நீங்க...?"

"நான் தியாகு. லீடிங் ஷேர் பிசினஸ்மேன்... அப்படிப் போடு."

"நான் ஸ்டெல்லா. மைலா ஃபார்மா ஸ்டெனோ..."

"இங்க...?"

"உண்மைய சொல்லட்டுமா... பெய்ய சொல்லட்டுமா?"

"இரண்டையுமே சொல்லுங்களேன்... இப்படி கேக்கறதுதானே இப்ப ஃபேஷன்?"

"ராமநாத் சாரை பாக்க வந்தேன். இது பொய். கட்டாயம் இங்க நீங்க வருவீங்க உங்களை பாக்கலாம்னு நினைச்சு வந்தேன். இது மெய்..."

"என்ன... என் மேல லவ்வா?"

"கூடாதா?"

இத்தனை நேரடியாக சுற்றி வளைக்காத. மழுப்பல் இல்லாத ஒரு கேள்வியை ஸ்டெல்லா இதுநாள் வரையில் கேட்டதில்லை. இருந்தும் பதில் சொல்லாமல் சிரிக்கிறாள்.

"இந்த சிரிப்புக்கு என்ன அர்த்தம்?"

"உங்கள எல்லாம் நினைச்சா சிரிக்காம என்ன பண்றதாம்?"

"ஏன் சிரிக்கணும். என் காதல் ஒண்ணும் சிரிப்பு விஷயம் இல்ல ஸ்டெல்லா..."

"இந்தியால மொத்தம் தொண்ணூறு கோடிபேர். அதுல என் வயசுல பத்து கோடியாவது தேறுவோம். இந்த பத்து கோடியை மீதி இருக்கிற எண்பது கோடிலர சராசரியாக ஐம்பது கோடி பேராவது லவ் பண்றாங்க... சூஸ் பண்றது எவ்வளவு கஷ்டம் தெரியுமா?"

"நிறைய சினிமா பாப்பியா ஸ்டெல்லா... சாரி பார்ப்பீங்களா...?"

"உம்..."

"அதான் டயலாக் நல்லா வருது."

"அப்படியா ...சரி என்னைப் பத்தி என்ன தெரியும் உங்களுக்கு...?"

"இனிமேதான் தெரிஞ்சுக்கணும்."

"அப்ப இப்ப வந்திருக்கற லவ் என் உடம்ப வெச்சா...?"

"எப்பவும், எங்கேயும் லவ் முதல்ல உடம்ப வெச்சு தான் ஸ்டார்ட் ஆறதா நான் நினைக்கிறேன்."

"உங்களைக் கேட்டா ஊரே அப்படிங்கறீங்களே. நீங்க எப்படி?"

"நான் ... நான்... அப்படி இல்லை எப்படி சொல்றதுன்னும் தெரியல..."

"பொய் சொல்றீங்க மிஸ்டர் தியாகு..."

"பொய்யா?"

"ஆமாம். நீங்க சொல்றது பொய். உருவத்த பார்த்துட்டு உருகற காதல், காதலே கிடையாது. எனக்கும் அதுல நம்பிக்கை இல்லை. ஏனோ என்னை நேசிக்கற ஆண்களை எனக்கு பிடிக்கறதேயில்லை. பச்சையா சொல்றேனே... எப்படா பிரேசியரைக் கழட்டலாம்னே பழகறாங்க!"

தியாகுவுக்கு முகத்துலே குத்து விழுந்த மாதிரி ஆகிறது. ஸ்டெல்லா சிரித்தபடியே தொடருகிறாள்.

"அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் நான் செமயா தண்ணி காட்ற டைப். மொத்தத்துல இந்த காதல் கத்தரிக்காய் இதெல்லாம் பயங்கர பீலா."

"கதைலேயும் சினிமாவிலேயும் மட்டுமே ருசிக்கிற விஷயம். நிஜ வாழ்க்கைல நாலு நிர்வாணம் கூட தாங்கறதில்ல இது"

"உண்மைதான் ஒத்துக்கறேன்" பளாரென்று ஒரு ஒப்புதல் வாக்குமூலம் தந்து கொஞ்சம் ஸ்டெல்லாவை அசத்துகிறான் தியாகு.

"குட்... அப்ப இனி காதல் டயலாக்கெல்லாம் பேச மாட்டீங்கன்னு நம்பறேன்."

"நோ..." அழுத்தமான குரலோடு மறுக்கிறான்.

"நோவா...?"

"ஆமாம் ஸ்டெல்லா ... உருவம் மட்டும் இல்ல உங்க உள்ளமும் ஒரு வகைல அழகாதான் இருக்கு. என் நேசம் இப்ப அதிகரிச்சிருக்கு..."

"வாட்... என் உள்ளம் அழகா இருக்கா. மிஸ்டர் தியாகு என் பேச்ச வெச்சு எடை போடாதீங்க... நான் பயங்கரக் கெட்டவ!"

"எந்த கெட்டவங்களும் தங்கறைளக் கெட்டவங்கன்னு சொல்றதில்ல..."

"நான் கொஞ்சம் உண்மை பேசற கெட்டவ."

"இட்ஸ் ஒ.கே..."

"சாரி... இனி உங்க கிட்ட பேசறதுல பிரயோஜனமில்ல."

# 12

தியாகுவிடம் திக்குமுக்காடல் தொடருகிறது. ஸ்டெல்லா நடையைத் தொடருகிறாள். சில அடி நடந்துவிட்டு என்ன நினைத்தாளோ திரும்பி வருகிறாள்.

"என்ன பாக்கறீங்க தியாகு. கமான் எதாவது சொல்லுங்க... என்ன நீ இவ்வளவு மோசமான பொண்ணா இருக்கியே... பண்ணனும்னு பறக்கிறியே... க்சே! அப்படின்னு எதாவது சொல்லுங்க"

தியாகு பார்க்காமல் ஆழமாகிறான். "அவன் அழகிய பெண் என்றால் மார்பிருக்கிறதோ இல்லையோ கைகள் சேலை முந்தியை இழுத்து இழுத்து மூடி விட்டுக் கொள்ளும். அழகிருக்கிறதோ இல்லையோ பௌடர் மஞ்சள் என்று பூசிக் கொண்டு மின்னப் பார்க்கும் மனதில் அரவிந்தசாமி இருக்க ஆகாத வேகாத சாமிக்கெல்லாம் அப்ளிகேஷன் போட்டுக் கொண்டிருக்கும். காஸ்ட்லியான ஒரு புடவையைக் காட்டி எப்படியும் ஏழு பெண்களை சுமாராக மயக்கி விடலாம். கூட நகை நட்டெல்லாம் சேர்ந்தால் அவளையே எழுதி வாங்கிக் கொண்டு விடலாம்."

இவளென்ன இத்தனை விதி விலக்காக...?

ஸ்டெல்லா அவன் பார்வையை அவனுள் ஓடும் எண்ணங்களை கச்சிதமாக படம் பிடிக்கிறாள்.

"என்ன சொல்றதுன்னே தெரியலதானை? நீங்க மட்டுமில்ல தியாகு உங்க ஆண்வர்க்கத்துக்கே என் மாதிரிப் பெண்ணைப் பிடிக்காது. வயசு அறுபதுன்னாலும் எனக்கு ஓ.கே. பணம்தான் என்னோட முதல் காதலன். என்னை முதல்ல மறக்கப் பாருங்க. அதுதான் உங்களுக்கு நல்லது..." ஸ்டெல்லா பேச்சை முடித்துக் கொண்டு அவன் பார்க்க நடந்து ஒரு ஆட்டோவில் ஏறி மறைகிறாள்.

முதல் முறையாக ஒரு உலக அதிசயத்தின் பரிமாணமாக ஸ்டெல்லாவை நினைத்துக் கொண்டே சுசுகியை நோக்கி நடக்கிறான் தியாகு.

வெளியே கிளம்பிக் கொண்டிருந்தான் நாராயணன். கைவசம் ஒரு ஒருகுயர் நோட். மாடிப்படி இறங்கி வெளியே வரும்போது உரசிக் கொண்டு நிற்கிறது தியாகுவின் சுசுகி.

நாராயணன் பார்வை அவனை சுசுகியை அலட்சியமாக ஒரு பார்வை

பார்க்கிறது.

"என்னடா பாக்கறே... வண்டி யாருதுன்னா?

"நிச்சயமா ஓசி. ஆமா யாரை கவுக்க இந்த வேஷம்?" கச்சிதமான நறுக்கல்.

"கவுக்கத்தான் பாத்தேன். ஆனா கவுந்துட்டேன். சரி எங்க கிளம்பிட்டே...?"

"நீலாங்கரைக்கு... ஜோசியரைப் பார்க்க. ஏற்கனவே லேட். நீ வெயிட் பண்ணுடா வந்துட்றேன்..."

"நில்லுடா... நில்லுடா..."

"என்னடா...வண்டியில ஏறு! நானும் பாக்கணும் அவரை..."

"நீயுமா?"

"ஆமாண்டா. உன் ஜோசியர் என்னதான் சொல்றாருனு பார்ப்போம்..."

நாராயணன் வியந்தபடியே பின்னால் ஏற "இரண்டு பக்கமும் காலைப் போட்டு உக்காரு..." என்றபடி சுசுகியை ராக்கெட்டாக ஆக்க அது சீற ஆரம்பிக்கிறது.

கன்றுக்குட்டி கணக்காக இருக்கிறது அந்த மோப்ப நாய். எஸ்கார்ட்டின் பிடியில் அவரையே இழுத்து கவிழ்த்து விடும் போல தோன்றுகிறது. இரண்டு அங்குலத்துக்கு மேல் வெளித் தள்ளிவிட்ட நாக்கு... ஹ...ஹ... என்கிற இளைப்பு... சந்தன மஞ்சள் நிறம்.

எஸ்கார்ட் ட்ரெயினியின் பிடியை மீறிக் கொண்டு அந்த காம்பவுண்டு வீட்டு பாசலில் நிற்கிறது அது.

காம்பவுண்ட் வீடுகள் விறைத்துக் கிடக்கின்றன.

நாயோடு எஸ் ஐ. சர்க்கிள் என்று ஒரு காக்கிச் சட்டை கூட்டமே வந்திருக்கிறது.

"கமான் தேவ்ராஜ்... அதை விடு..." - எஸ். ஐ. யின் உத்தரவைத் தொடர்ந்து நாயின் பிடியை விடுகிறார் எஸ்கார்ட்.

அது தாவிப் பாய்கிறது...

"ஏங்க... என்னங்க இது ... எதுக்குங்க வந்திருக்கு போலீஸ் நாய்..."

"பக்கத்து தெருவுல சேட் வீட்டுல திருட்டு போயிருச்சுல்ல அதுதான்..."

"திருடன் என்ன இங்கியா ஒளிஞ்சிருக்கான்?"

"வாயை மூடு... போலீஸ் காரணமில்லாம வராது..."

ஒரு ஒற்றை நாடி மனிதர் தந்திக் கம்பி படபடப்போடு நாயைப் பார்த்தபடியே ரன்னிங் காமென்ட்ரி தர அவரது மனைவியைப் போன்ற ஒரு சுந்தரிபாய் சைஸ் பெண்மணி அளவில் பெரிதான தன் கண்களை கைவளையல் சைசுக்கு மேலும் பெரிதாக்குகிறாள்.

நாயும் மூலை முக்கு இண்டு இடுக்குவிடாமல் அலைந்துவிட்டு எனக்கென்ன என்று நின்று கொண்டிருக்கும் ஒரு பதினைந்து வயது பையன் மேல் பாய்கிறது...!

"ஐயா... அது என் மகனுங்க! வயதுதான் பதினைஞ்சாவுது. மனசுல இன்னும் மூணு வயசுதாங்க் அவன். புத்தி சுவாதீனமில்லதவங்க... என் மகன் எந்த தப்பும் செஞ்சிருக்க முடியாதுங்க..."

கதறி வழிகிறார் அவன் தந்தை. எஸ். ஐ. இடக்குச் சிரிப்போடு போலீஸ் கெத்தோடு "அப்படிங்களா... வாங்க எல்லாத்தையும் ஸ்டெஷன்ல வெச்சு பேசிக்கலாம்..." என்று அந்த அரை டிராயர் பதினைந்து வயதுப் பையனை அள்ளிக் கொள்கிறார்.

காம்பவுண்டே மறு பேச்சு பேசாமல் பார்த்துக் கொண்டு நிற்கிறது.

"கவலைப்படாதய்யா... சேட் சாகலை பொழச்சுகிட்டான். வந்தது உன் பையனா இல்ல வேற யாருங்கறத சீக்கிரம் சொல்லிடுவான். அப்ப தெரிஞ்சுடும். எங்க ரீட்டா எப்பவும் தப்பா கவ்வாதுய்யா...

ஆமா சுருட்டுன நகை பணமெல்லாம் எங்கய்யா வெச்சுருக்கே...?"

கான்ஸ்டபிள் ஒருவர் பையனின் தந்தையிடம் கேட்பது லேசாக தேய்ந்து எல்லோர் காதுகளிலும் விழுகிறது.

"என்னடா இப்பல்லாம் அடிக்கடி ஜோசியரைப் பார்க்க ஆரம்பிச்சுட்டே? என்ன விஷயம்." சுசுகியில் சீறிக்கொண்டே நாராயணனைக் கிள்ள ஆரம்பிக்கறான் தியாகு.

"இந்த தடவை எனக்காக இல்லை தியாகு... என் மேனேஜர் பொண்ணுக்காக..."

"என்னடா சேர்ந்து ஒரு வாரமாகலை அதுக்குள்ள அவருக்கு சேவகம்

பண்ண ஆரம்பிச்சுட்டே. பொழச்சுக்குவேடா நீ..."

"வாயக்கழுவுடா... சேவகம் பண்ண நான் என்ன அவர் அடிமையா? பாவம்டா அவர் டாட்டர். அதுக்கு எப்ப கல்யாணம் ஆகும்னு தெரியணும்."

"ஏதோ ஊமைன்னு சொன்னியே... அதுக்கா?"

"ஆமாண்டா... கிட்டத்தட்ட என் வயசுடா, ஒழுங்கா கல்யாணம் அகியிருந்தா அஞ்சு வயசுல பையன் இருப்பான்...ஹூம் பாவம்..."

"ச்ச்ச்... ச்ச்ச்..." தியாகு பல்லி போல செருமுகிறான்.

"என்னடா கிண்டலா... நம்ப வீட்ல அப்படி யாராவது இருந்தா தெரியும்..."

"அது சரி... ஆமா பொற்காலம் படம் பார்த்தியா என்ன?"

"இல்ல... எதுக்கு கேக்கறே?"

"ஒரு வேளை பாத்தட்டுதான் உருகறியோன்னு நினைச்சேன். பார்க்காமலே இப்படி பரிதாபப்பட்றியே நீ... பார்த்தா கல்யாணமே பண்ணிப்பியோ என்னவோ?"

நாராயணனுக்கு அந்த பதில் என்னென்னவோ செய்கிறது.

சின்னக் குழந்தை போல விரல்களை மடக்கியும், மூடியும் கணக்கு போட்டும், ஒரு அரசியல் கட்சி பொதுக் கூட்ட நோட்டீஸின் முதுகுப் பக்கமாக பென்சிலால் அவ்வப்போது எழுதியும் நடுநடுவே ஒரு பத்து மீட்டர் சுற்றளவு நடுங்கும்படி பொடிபோட்டுக் கொண்டும் பிச்சுமணி எனும் அந்த ஜோசியர் காலக் கணக்கு போடும் விதம் தியாகுவுக்கு சிரிப்பைத் தருகிறது.

இந்த இந்தியாவில் தான் இவரைப்போல எத்தனை பேர்...?

"ஆங்ங்... இந்த பொண்ணுக்கு கல்யாணம் ஆகாம இருக்கறது உத்தமம். பேசாம தினசரி பிள்ளையாருக்கு விளக்கு போடச் சொல்லுப்பா..." ஜாதகத்தாளை மடித்தபடி நிமிருகிறார் பிச்சுமணி ஜோசியர்.

தாடையில் பதினைந்து நாள் கம்பி முடி, ஜிப்பா சட்டையில் பல நாள் அழுக்கு. தியாகுவுக்குள் அவர் உருவம் பல கேள்விகளை உருவாக்குகிறது.

ஏழ்மையோ இல்லை சோம்பேறித்தனமோ காரணமாக இருக்கும் இந்த மனிதனா அடுத்தவர் வாழ்க்கைக்கு இதுதான் வழி என்று காட்டுபவன்?

"சரி ஜோசியரே... இவன் என் ஃப்ரெண்ட் தியாகு இவனுக்கும் நீங்க கொஞ்சம் எதிர்கால பலன் பார்த்து சொல்லணும்."

"எங்க ஜாதகம்...?"

"கைவசம் இல்ல ஜோசியரே... ஆனா பிறந்ததேதி. டயமெல்லாம் தெரியும..."

"சொல்லிவிட்டுப்போ... நாளைக்கு வா கணிச்சி வெச்சுருக்கேன்."

தியாகு அரைமனதாக அவைகளை எழுதித் தந்து விட்டு வெளியே வந்து சுசுகியை உதைக்கிறான். கூடவே கொத்தான கேலிச் சிரிப்பு.

"எதுக்குடா சிரிக்கறே?" பின்னால் ஏறும் போது கச்சிதமாகக் கேட்கிறான் நாராயணன்.

"நாளைக்கு வரும் போது ரின், ஹமாம்லாம் வாங்கிட்டு வரணும். முடிஞ்சா அந்த ஜோசியனுக்கு ஷேவ் பண்ணியும் விடலாம். ஏண்டா இந்த அழுக்கு மூட்டை சொல்றதா அப்படியே நடக்குதுங்கறே...?"

"உளறாமே ஒழுங்கா வண்டிய ஓட்டு..."

"உளறல, தன்னையே ஒழுங்கா வச்சுக்கத் தெரியாத இந்த ஆள் பேச்சை எல்லாம் எப்படிடா நம்பறே?"

"டேய்... இந்த ஜோசியர் ஒரு யோகி மாதிரி... அப்படித் தான்..."

"யோகி மாதிரி இல்லடா வியாதி மாதிரி... கடவுளே நீ இருக்கியோ இல்லையோ இருந்தா இவன் மாதிரி கண் மூடிகளை காப்பாத்துப்பா."

"நாணி... ஒண்ணு தெரிஞ்சுக்கோ... எனக்கு தாடி வளர்ந்தா சகிக்காது. அதான் பாக்கறேன். இல்லேன்னா நானும் திரிகால ஞானி... ஜோதிடக் கேணின்னு கிளம்பிடு வேண்டா."

தியாகு கிண்டலடிப்பது எதுவும் நாராயணன் காதில் விழவில்லை. சியாமளாவுக்கு ... அதான் அந்த மேனேஜர் பெண்ணுக்கு கல்யாணம் ஆகாமல் இருப்பது உத்தமம் என்று பிச்சுமணி ஜோசியர் சொன்னதில் மையம் கொண்டு பலத்த கவலையில் இருக்கிறது நாராணன் மனது.

ஆபீஸ்,

"ஏ. ஸி. அறை..."

"குட்மார்னிங்" குரலோடு நுழைகிறான் நாணி.

"வெரிகுட்மார்னிங்..." சுந்தரேசன் நிமிர்ந்த வினாடி கண்ணில் எதிர்ப்பார்ப்பைக் காட்டுகிறார்.

"ஜோசியரைப் பார்த்தியா... என்ன சொன்னார்?"

"சார் அந்த ஜீசு ஹோஷன் சார்ட்டை பார்த்தீங்களா?"

நாராயணன் எடுத்த எடுப்பில் வேலை விஷயமாக பேச்சைத் தொடங்குகிறான்.

"நீ என்னோட ஜிசுஹோஷனுக்கு பதில் சொல்லு. மெஷினை கண்கொத்தி பாம்பா பராமரிக்கறத ஜப்பான்காரன் ஜிசு ஹோஷன்கறான். மெஷினுக்கே பராமரிப்பு இருக்கும்போது ஒரு பேசத் தெரியாத பெண் குழந்தைக்கு இல்லைன்னா எப்படி... கமான் உன் ஜோசியரப் பார்த்தியா என்ன சொன்னார்..."

நாராயணன் தடுமாறுகிறான். சமாளிக்கப் பார்க்கிறான்.

"ஒரு மண்டலம் பிள்ளையாருக்கு விளக்கு போட்டா எல்லாம் சரியாயிடுமாம் சார்..."

"ஒரு மண்டலமாவா... ஃபார்த ஃபாஸ்ட் த்ரி இயர்ஸா அவ பிள்ளையார் கோவில்லதானே குடியே இருக்கா..."

"இ...இ...இருக்கலாம். அவர் சொல்றத சொன்னேன். மத்தபடி வர்ற மாசிக்குள்ள நிச்சயம் கல்யாணம் முடிஞ்சிடும்னார்."

"நிஜமாவா?" சுந்தரேசன் கேட்கும் விதத்தை பார்த்தால் நாளை முதல் உலகை அவருக்கு எழுதி வைத்து பத்திரம் பதிந்து தருவது போலவும் அதை நம்ப முடியவில்லை என்கிற மாதிரியும் இருக்கிறது. நாராயணனுக்கு பொய் லாவகமாக வராது. தடுமாறும் ... நாக்கு பிறழும். ஆனாலும் இங்கே சத்திய வாக்காக வருகிறது.

"சார் ...நடக்கலேன்னா என்னக் கேளுங்க..."

நடுவில் கத்தரிக்கிறது பர்ச்சேஸ் சிவாவின் இண்டர்காம்.

"மிஸ்டர் நாராயணன்... உங்களுக்கு ஒரு அவுட்டர் போன்..."

"கொடுங்க சிவா..."

அடுத்த நொடி அவன்காதில் பாய்கிறார் பிச்சுமணி ஜோசியர்.

"அம்பி நாராயணா... நேத்து கொடுத்த அந்த பிள்ளையாண்டான் ஜாதகத்தைப் பார்த்தேன். அம்பி... அவன் ஒரு அசுரன். குறி வைக்கறதை அடையாம விட மாட்டான். வக்ர கேது தொண்ணூறு டிகிரில நேர் பார்வை பாக்கறான். ஞானகாரகன் திரிஞ்சா நல்லதில்ல... உன் ஜாதகத்துலயும் சில விஷயங்கள் சரி இல்ல. ஆகையால உடனடியா நீ அவனை விட்டு..."

தொலைபேசிக்கும் சஸ்பென்ஸ் பிடிக்குமோ? கட் ஆகி நாராயணன் முகத்தில் வியர்வையை ஸ்பிரே செய்கிறது.

# 13

ரிசீவரும் கையுமாக படபடவென தட்டிப் பார்த்து விசித்திர சப்தத்தை மட்டும் கேட்டுவிட்டு சோர்ந்து திரும்புகிறான் நாராயணன்.

"என்ன சார் கட் ஆயிடிச்சா...?" ஒரு சீனியர் ஆப்பரேட்டர் கண் சிமிட்டி கேட்கும் விதத்திலேயே ஒருடன் ஏளனம்.

"ஆமாம் சார்..."

"நம்ம கிறிஸ்டி மாதிரி சஸ்பென்ஸ் வைக்க இந்த ஃபேக்டரியிலையே ஆள் கிடையாது..."

"கிறிஸ்டியா...?"

"ஆமாம் ... மர்மக் கதை எழுத்தாளர் கிறிஸ்டி! அவங்க செத்துட்டாலும் அவங்க அவி நம்ம கம்பெனி டெலிபோனுக்குள்ள பூந்துகிச்சு... முக்கியமான நேரத்துல அந்த ஆவி இப்படித்தான் வேலை செய்யும்."

ஆப்பரேட்டரின் கிண்டல் ரசிக்கும்படியாகத்தான் இருக்கிறது. நாராயணன் ரசித்தபடி சுந்தரேசன் சீட் எதிரில் சென்று அமருகிறான். பிச்சுமணி சொன்ன விஷயங்களின் ஊர்வலம் மனதில்... தியாகு வரவர புதிராக ஆகி வருகிறான். ஒன்றுமே புரியவில்லை. பிச்சுமணி சொல்ல வந்த முழு விஷயமும் என்ன என்றும் தெரியவில்லை. சுந்தரேசன் இண்டர்காமில் மும்முரமாக இருக்கிறார். ஏதோ ஒரு தொழில் சிக்கலுக்கு பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார், "பிரேக் டவுன்... சரிபண்றது! பிரேக் டவுன் சரிபண்றதுன்னு போராடினது போதும் சாமி. ஏதாவது கெய்சன் பண்ணுங்கோ. கெய்சன் பண்ணிட்டா பிரேக் டவுனும் கிடையாது. W.E.D காரன் எங்கேன்னு தேடவேண்டிய அவசியமும கிடையாது. கெய்சன்... அதான் இப்ப நம்ம சக்ராயுதம்...!"

"................"

"அடப்பாவி கெய்சன்னா என்னன்னே உனக்கு இன்னும் தெரியலியே... பிரசிடென்டுக்கும் ஜி. எம். முக்கும் தெரிஞ்சா செவுத்துலேயே முட்டிப் பார். சுருக்கமா உனக்கு புரியற மாதிரி ஒரு உதாரணம் சொல்றேன் கேட்டுக்கோ...

டெய்லி ஷேவ் பண்றே தானே? அதுக்கு பிளேடு. ரேசர் தேவையாவும் இருக்கு. கூடவே டயமும் ஒதுக்க வேண்டியிருக்கு. ஒவ்வொரு ஆம்பளைக்கும் சாகற வரை இந்த அவஸ்தையும் இருக்கு. இதுல

இருந்து தப்பிக்கணும். இதுக்கு ஒரு கெய்சன் பண்ணனும். அதாவது தாடையில் முடியே வளரலைன்னா பிளேடு, ரேசர், டயம் எதுவும் தேவை இல்லைதானே?"

முடியே வளராம பண்ணிட்டா...? தட் மீன்ஸ் கெய்சன்! இண்டர்காமை முடக்கி விட்டு நிமிருகிறார் சுந்தரேசன். நாராயணனைப் பார்த்து "போன் பேசிட்டிங்களா... யார் கிட்ட இருந்து?" நாராயணன் மழுப்பலாக கெய்சனை பிடிக்கிறான்.

"அது எப்படி சார் முடியே வளர முடியாம பண்ண முடியும் இயற்கைக்கு எதிரா...?"

சிரிப்போடு பதில் வருகிறது. "ஒரு எக்ஸாம்பிளுக்கு சொன்னேன் நாராயணன். ட்ரை பண்ணனும். ஜப்பான்காரன் பண்றானே? இரும்பை தங்கமாக்கின சித்த பூமி இது. யோசிச்சா முடியாத விஷயம் இங்க கிடையாது. கெய்சன்றது மெஷினுக்கு மட்டுமில்ல நாராயணன் மனுஷாளுக்கும் உண்டு... பல சமயங்கள்ல நம்ம எம்.டி. ரொம்ப அழகா சொல்வார். ஆமா என்ன போன்? ஒண்ணுமே அதபத்தி சொல்ல மாட்டேங்கறேளே...?"

"ஊர்ல இருந்து அப்பா பேசினார். .." சக்கென்று அகப்படுகிறது பொய்.

"ஐ. சீ... என்ன ஏதாவது பர்சனலா...?"

"ஆமாம் சார்..." சுந்தரேசன் இங்கிதமறிந்து மாறுகிறார். ஆனாலும் அந்த பர்சனலை அவன் சொன்னால் மனுஷனுக்கு இதமாகவும் நெருக்கமாகவும் தோன்றும் போலவும் இருக்கிறது.

"ஓ. கே... லெட் அஸ் கம் டு அவர் பிசினஸ்..."

சுந்தரேசன் துல்லியமாக அவர் மனப்போக்கை உணருகிறான். தவிர்க்க முடியாத பரிதாபமும் கொள்கிறான். அவர் எதனால் இப்படி நடந்து கொள்கிறார் என்பது ஓரளவு புரிகிறது. மனதுக்குள் சொல்லிக் கொள்கிறான்.

"கவலைப்படாதீங்கோ சார்... உங்க பெண் சியாமளாவுக்கு ஒரு கெய்சன் பண்றேன்!"

'பல்லவன்' பாண்டியன் என்கிற மாஜி பெயர் பஸ்களில் ஏறி இறங்கி ஆடு, மாடு, கோழி எனும் விலங்குகள் கடந்து, வில்ஸ், சார்மினார் என்கிற புகையிலை புகையோடு, ஆட்டோ பஸ்கள் உமிழ்ந்த ஆயில்

புகையையும் சுவாசித்து, தேங்கி நிற்கும் மழை நீர்த் தீவுகளில் தவளைத்தாவல் காட்டி நடந்து, ஒரு வழியாக நீலாங்கரை போய் பிச்சுமணி ஜோசியரைப் பார்க்கப் போன ஏமாற்றம் ராட்சஸ சைசுக்கு காத்திருந்தது.

"ஜோசியர் மானசரோவர் யாத்திரைக்கு தேர்வாகி கிளம்பிவிட்டார். திரும்பி வர இரண்டு மாதம் ஆகும்!"

அந்த ஏமாற்றம், தியாகு பற்றின குழப்பம் எல்லாமுமாக திரும்பும் போது, பெரிய அளவில் ஏமாற்ற காத்திருக்கும் அரசியல்வாதிகளின் பேனர், கும்பிட்ட கரத்தோடு நாராயணனைப் பார்க்கிறது. பாராளுமன்றத் தேர்த முஸ்தீபு. ச்சை...!

கூட்டம் திருகி நடக்கிறான். பஸ் பிடித்து ஏறி இறங்குவதை விட நடை பெட்டர் எனப்படுகிறது. நடராஜனாகிறான்.

மயிலாப்பூர் சேர்ந்து காம்பவுண்டை எட்டியபோது சூழ்நிலையே வினோதமாக இருந்தது.

கூட்டம் கூட்டமாக கூடி பேசிக் கொண்டிருந்தார்கள். விநாயகம் தாத்தா விளக்கம் தருகிறார்.

"வா நாராயணா... நம்ம லூஸ் சந்திரனை போலீஸ் பிடிச்சுக்கிட்டு போயிடுச்சுப்பா. ஏதோ திருட்டு கேஸாம். திருடற பயலாப்பா அவன்? சந்திரன் ஊட்ல இருந்து சில திருட்டு சாமானும் கிடைச்சிருக்கு. யாரோ செஞ்சிட்டு பழிய இடம் பார்த்து போட்ருக்காங்க. ஆமா எங்க தியாகு? அது இருந்தா ஸ்டேஷனுக்குப் போய் உண்டு இல்ல பண்ணும்."

நாராயணனுக்குள் தாத்தா பதில் வலியைப் பூசுகிறது. "வருவான் தாத்தா ... வர்ற நேரம்தான்!" என்ற படி ஏறி அறையை திறக்கிறான். கொடியில் அந்த ரத்தக்கறை சட்டை தோய்த்து உலர்த்தப்படிருக்கிறது. பெட்ரோல் வாசம் கமக்கிறது.

அறை முழுக்க ஏகமாய் மாற்றங்கள்! எப்பொழுதும் திறந்தபடி இருக்கும் தியாகுவின் ட்ரங்குப்பெட்டி பூட்டியிருக்கிறது. பக்கத்தில் ஷெல்ப்பில் ஒரு பண்டல் வெளிநாட்டு சிகரெட்டுக் கட்டுகள்! சென்ட் பாட்டில்கள்! தரையில் நிறைய பில் துண்டுகள். பல ஆயிரங்களுக்கு புதிதாக துணி மணி வாங்கியிருப்பதை ருசுப்பிக்கின்றன. நடுவில் "தியாகு உனக்கு போஸ்ட் வந்திச்சு" வெளியே இருந்து உரிமையுடன் கீழ் வீட்டுக்காரரின் குரல் தொடர்ந்து வீசி எறியப்பட்ட நிலையில் ஒரு கடிதம்.

எடுக்கிறான். தபால் கார்டு. படிக்கக் கூடாதுதான். இருந்தும் கசகசப்புக் காரணமாக படிக்கிறான்.

தியாகு அவர்களுக்கு!

வணக்கம். நீங்கள் வாங்கித் தந்த ஷேர்கள் நல்ல விலைக்கு போயுள்ளன. உங்கள் கணிப்பு மிகச் சரி. உங்கள் ஆலோசனைப்படி செயல் பட்டதில் எங்களுக்கு கிட்டத் தட்ட ஐந்து லட்சம் கிட்டியுள்ளது. பேசியபடி பத்து சதம் தொகையை டிராஃப்ட் எடுத்து ரிஜிஸ்தரில் அனுப்பியுள்ளோம் பெற்றுக் கொள்க. விபரம் தெரிவிக்கவும், அட்வான்ஸ் பதினைந்தாயிரம் கூட்டல் டிராப்டு தொகைக்கு ஒரு வவுச்சர் ரசீது போட்டு அனுப்பவும். நன்றி.

தங்கள்,

குளோப் ஏஜென்சி.

கடித்தை படித்து முடித்து ஷெல்பில் வைக்கும் போது விசிலுடன் வருகிறான் தியாகு.

"என்ன நாணி... லேட்டா? யூனிஃபார்மோட இன்னும் இருக்கே இப்பத்தான் வந்தியா?"

லேசான ஆமோதிப்பு நாராயணனிடம். "பேசேன்டா... ஏன் உம்முன்னு இருக்கே படத்துக்கு போகலாம் வரிறியா..."

"சாரிடா..."

"நான் இப்ப லுங்கி..." என்ற ஜாலிமூடுடன் லுங்கியை எடுத்து அணிய ஆரம்பிக்கிறான் தியாகு. பெட்டியை திறக்கிறான். உள்ளே ஸ்காட்ச் விஸ்கி பாட்டில்! அதை பார்க்கவும் நாராயணன் கண்களில் பெரிதாக விரிவு.

"என்ன பார்க்கறே... இந்த்ர லோகத்துல இந்திரனே ரொம்ப விரும்பி சாப்பிடற பிராண்ட். சூப்பர் சோம பானம். நான் சொல்லலைப்பா. ட்விடேஸ்மென்ட் நியூஸ் ரீல் பார்த்தேன். நீ ஒரு பெக் போட்றியா..."

"ஸ்டுப்பிட்... தண்ணி அடிக்கற நேரமடா இது. கீழ அந்த சந்திரனை..."

"நிறுத்து... நிறுத்து... அப்படியே வெளிய எட்டிப்பார்."

நாராயணன் எட்டிப் பார்க்கிறான். கீழே சந்திரன் நின்று கொண்டிருக்க அவனைச் சுற்றிலும் காம்பவுண்ட் ஜனங்கள்.

"ஐயா போய் மீட்டுகிட்டு வந்துட்டேன். ஏட்ல இருந்து ஹெட் வரை கவனிச்சுட்டுத்ன்..."

"கவனிச்சியா"

"ஆமா... அவங்க என்ன சம்பளத்துக்கு மட்டுமா வேலைல இருக்காங்க. கிறுக்குப் பயலே கிம்பளம்னு ஒண்ணு இல்லேன்னா போலீஸ் டிபார்ட்மென்டே நம்ப நாட்டுல இல்லாம போகும்டா. ரப்ச்சர் பிடிச்ச தொழில்டா அது."

"அது சரி... நீ எதுக்கடா கவனிக்கணும்."

"எல்லாம் ஒரு மனிதாபிமானம்தான். அந்த லூஸ் சந்திரனை போய் திருடன்றாங்களே... அப்ப அசல் திருடனை இவங்க என்ன சொல்வாங்க..."

"தியாகுன்னு..." நாராயணன் சொன்ன விதத்தில் ஒரு அசாத்ய அழுத்தம்.

"நாணி... என்ன சொல்றே நீ."

"நீ சரியல்ல தியாகு. நிறைய தப்புகள் பண்ண ஆரம்பிச்சிருக்கே. உண்மையைச் சொல்லு இந்த சட்டைல ரத்தக்கறை எப்படி வந்தது...? நீதான் ஏதோ பண்ணியிருக்கே. சந்திரன் அதுல மாட்டியிருக்கான். உன் மனசாட்சியோட உறுத்தல் தாங்காம போய் பணத்தை கொடுத்து ஏதோ பண்ணி இழுத்துகிட்டு வந்துருக்கே..."

தியாகு க்ஷண தாமதமின்றிச் சிரிக்கிறான். அதைக் கேட்டு...

"இப்படி சிரிச்செல்லாம் மழுப்ப முடியாது. என்னை என்ன காதுல பூவைச்சவன்னு நினைச்சியா. குச்சி ஜோசியக்காரில இருந்து பிச்சுமணி ஜோசியர் வரை என்னைவிட உன்னை பத்திதாண்டா ரொம்ப பேசினாங்க..."

"ஈஸ் இட்...?" தியாகு கேட்டுக் கொள்ளும் விதத்தில் ஒரு விதக் கூர்மை.

"என்ன ஈஸ் இட்... தியாகு நீ தப்பான பாதைல போறே திருத்திக்கோ, எனக்கு எதையும் உள்ள வெச்சி பேசி பழக்கமில்ல..."

நாராயணன் சட்டை பேண்ட்டை கழட்டிய படியே வேஷ்டிக்கு மாறி துண்டை எடுத்துக்கொண்டு பாத்ரூமுக்கு கிளம்ப ஆயத்தப்படும்போது தியாகுவின் விசும்பல் சப்தம் அதிசயமாக அவன் காதில்...

தியாகுவா விசும்புவது... அட அதென்ன இத்தனை கண்ணீர்?

"டேய்... நான் என்னடா தப்பா சொல்லிட்டேன் எதுக்கு அழறே...?" துண்டு தோளில் இருந்து நழுவ தியாகுவை நெருங்கிச் சென்று அவன் தோனைப் பற்றுகிறான் நாராயணன்.

"தியாகு... என்னடா இது... நான் மனசுல பட்டதை சொன்னேன்டா..."

"என்னடா மனசுலபட்டது. நான் அயோக்யனா...? பாவி நான் இப்ப நல்லா சம்பாதிக்க ஆரம்பிச்சுருக்கேன்டா. நேரம காலம் உனக்கு மட்டும் தானா... எனக்கு இல்லையா? நீயே இப்படி தப்பா நினைச்சா மத்தவங்க நினைக்க எவ்வளவு நேரம்டா ஆகும். பணத்தை பார்க்காம அந்த சந்திரனை இழுத்துகிட்டு வந்ததுக்கு இப்படி ஒரு கெட்ட பேரா... இந்த ரத்தக்கறை ஒரு குடிகாரனால் வந்தது. குடிச்சுட்டு அடிபட்டு ரோட்ல கிடந்தான். சிகரெட் வாங்க போனப்போ எழுப்பி அவனை வீட்ல விட்டுட்டு வந்தேன். அப்ப வந்தது. நாணி... நல்லதுக்கே காலமில்லடா. காலமில்ல..."

தியாகுவின் பதிலால் நாராயணன் முகம் சூம்பி களையிழந்துப் போகிறது.

"சாரிடா... சாரிடா..." சமாதானப்படுத்த ஆரம்பிக்கிறான்.

"கிர்ர்... கிர்ர்..." பஸ்ஸர் சப்தம் கேட்டு ஆபீஸ் பாய் மைதிலி அறைக்குள் எட்டிப் பார்க்கிறான்.

"யெஸ் மேடம்..."

"அக்கௌண்டன்ட் வேணுவை வரச் சொல்லுங்க."

"ஓ.கே. மேடம்..." ஆபீஸ் பாய் ஒதுங்கிய மூன்றாவது நிமிடம் வேணு உள்ளுக்குள் நுழைகிறான்.

"உக்காருங்க வேணு...." இறுக்கமாய் ஒரு சின்ன முறைப்புடன் உட்காருகிறான் வேணு.

எதிரில் அவனது டெர்மினேஷன் ஆர்டரை தூக்கிப் போடுகிறாள் மைதிலி!

# 14

ஆர்டரை ஒரு பார்வையும் மைதிலியை ஒரு பார்வையும் பார்த்தபடியே கேட்கிறான் வேணு.

"என்ன மேடம் இது?"

"பிரிச்சுப் பாருங்க."

பார்க்கிறான். முகம் மாறுகிறான். அதிர்ச்சியை சிரமப்பட்டு அடக்கிக் கொள்வதை மைதிலி கணிக்கிறாள். அப்படியே செயற்கை சிரிப்புக்கு மாறுகிறான்.

"பாவம்... ரொம்ப கஷ்டப்பட்டெல்லாம் சிரிக்காம ஆர்டரை எடுத்து கிட்டு கிளம்புங்க வேணு..."

வேணுவிடம் சிரிப்பு நிற்கிறது.

"என் சர்வீஸ் கூட இல்ல உங்க மொத்த வயசே, என்ன மேடம் விளையாடறீங்களா?"

"இப்ப அதுக்கெல்லாம் நேரமே கிடைக்கறதில்ல வேணு. நீங்க கிளம்பறீங்களா?"

"மேடம்... என்ன இது? நான் சீரியஸா கேட்கிறேன். நீங்க சிறுபிள்ளைத்தனமா பதில் சொல்லிகிட்டிருக்கீங்க..."

"சிறு பிள்ளைத்தனமாவா... எப்படி இப்படியா?" கேள்வியோடு சில புகைப்படங்களைத் தூக்கி அவன் முன் பரத்துகிறாள்.

அதில் அவனும் அந்த போட்டி கம்பெனி நபர்களும்...!

"இது... இது..." அவனிடம் தடுமாற்றம் தொற்றுகிறது.

"இது சுதாகர் ராவ். இது பிரபாகர், இது மஜீத் மூணு பேரும் ட்ரை ஸ்டார் ஃபார்மாவோட மூணு தூண்கள். இந்த கம்பெனிய பொறுத்தவரை எங்க கண்ணுல விழுந்துட்ட துரும்புகள்."

"சரி அதுக்கென்ன?"

"அதுக்கென்னவா... இவங்களோட உங்களுக்கென்ன வேலை, இவங்களுக்கெல்லாம் இங்க என்ன வேலை...?"

"வந்து... வந்து... மெட்ராஸ் வந்த இடத்துல ஒரு ஃப்ரெண்ட்லி விசிட் பண்ணனும்னு வந்தாங்க. சுத்திக் காண்பிச்சேன்..."

"அப்படியா... பர்மிஷன் வாங்கினீங்களா?"

"எப்படி ... அதான் எம். டி. ஹார்ட் அட்டாக்ல ஹாஸ்பிடல்ல கிடக்கறாரே..."

"அப்ப பிறகு வாங்கன்னு சொல்ல வேண்டியது தானே?"

"சொன்னேன். அவங்க கேக்கலை. இது என்ன பெரிய விஷயம், நாமெல்லாம் ஒரே இண்டஸ்ட்ரி பீப்பிள் உங்க எம்.டியைக் கூட பாக்கணும்னாங்க."

"நல்லா பூ வைக்கறீங்க வேணு. போகட்டும் அவங்க நம்ம கெமிஸ்ட்டுகளை எதுக்கு பார்த்தாங்க?"

"அது எனக்கு தெரியாது..."

"தெரியாதா? மிஸ்டர் பெனடிக்ட்"

மைதிலியின் அழைப்பொலி கேட்டு ஒரு ஸ்கொயர் ஸ்பெக்ஸ் நரைத்தலை மனிதர் ஒயிட் கோட் சகிதம் எட்டிப் பார்க்கிறார்.

"பெனடிக்ட்...அந்த மூணு பேர் உங்கள சந்திச்சது இவருக்கு தெரியாதாம்... நிஜமா?"

"நோ மேடம்... இவர் தான் கூட்டிகிட்டு வந்து அறிமுகமே செய்த வெச்சார். குவாலிடி பைண்டிங் பத்தி கேட்டார். கோ ஆபரேட் பண்ணினா இம்மீடியட்டா இரண்டு லட்சம்னும் சொன்னார்."

"என்ன வேணு... இதுக்கும் ஏதாவது பதில் சொல்லப் போறீங்களா? உம் சொல்லுங்க. அதுக்கு என்கிட்டக் கவுண்டர் இருக்கு. நான் இங்க் சார்ஜ் எடுத்துக்கறதுக்கு முந்தியே உங்களை கண்காணிக்க பிரைவேட் டிடெக்டிவை அப்பா ஏற்பாடு செய்தட்டார். அவங்க ரிப்போர்ட் வேற தனியா இருக்கு. நீங்க கோர்ட்டுக்கு போனா டோட்டலா உங்க கேரியர் அவுட். இந்த டெர்மினேஷன் உங்களுக்கு தந்திருக்கற வெரி மினிமம் பனிஷ்மென்ட் கெட்அவுட்!"

வேணு விருட்டென்று எழுந்து கொள்கிறான். மைதிலி தலையை தாழ்த்தி ஃபைலுக்குள் புகுகிறாள். முறைத்துக் கொண்டே வெளியே வருகிறான்.

வாசல் தாண்டும்போது வாதிராஜைப் பார்த்து சொல்கிறான்.

"ஏய் ஜால்ரா... அந்த குட்டிகிட்ட சொல்லு. அவளை என் காலடியில் விழ வைப்பேன். போகப் போகப் பார் என்ன என்ன நடக்கப்போகுதுன்னு..."

வாதிராஜ் ஆவேசமாக நெருங்கி வந்து கழுத்தைப் பிடிக்க முயல தள்ளிவிட்டபடி வெளியேறுகிறான். மைதிலியை விஷயம் எட்டியபோது தாமதிக்காமல் தொலைபேசி மூலமாக போலீஸ் எஸ். பி. சுந்தரத்தை பிடிக்கிறாள்!

ஹாஸ்பிடல்! வார்ட் கதவருகே ஒரு பேக்குடன் தியாகு. அறைக்கதவை திறந்து கொண்டு உள் நுழையப் பார்த்தபோது சாரங்கபாணி எட்டிப் பார்த்து கதவருகிலேயே தியாகுவை தடுக்கிறார்.

"என்னப்பா... இன்னிக் என்த கோயில் பிரசாதம் கொண்டு வந்துருக்கே?"

கிண்டலிக்கிறார் என்பது தெரிகிறது.

"பிரசாதம்லாம் இல்ல சார்... ஒரு முக்கியமான விஷயமா வந்துருக்கேன்..."

உள் நுழையும் முயற்சியோடு நந்தி மாதிரி நிற்கும் சாரங்கபாணியை தாண்டப் பார்க்கிறான்.

"ஏய் என்ன நீ. கொஞ்சம் பொறு! உள்ள யார்லாம் இருக்கா தெரியுமா உனக்கு... ஒரு பெரிய மனுஷனை பார்க்க வந்தா அதுக்குரிய கல்ச்சரை ஃபாலோ பண்ணனும். அதோட நீ எம்.டி ய பார்க்க முடியாது. டாக்டர்ஸ் ஸ்ட்டிரிக்டா சொல்லிட்டா"

தியாகு நொடிப் போதில் புரிந்து கொள்கிறான். மிஸ்டர் சாரங்கபாணி நான் சிங்கம். நினைப்புடன் சிரிப்பவன்...

"உங்க கம்பெனி ஷேர் ஒரு ஆயிரம் வாங்கினேன். சார் கைல கொடுத்து ஆசீர்வாதம் வாங்கிக்கணும்னு நினைச்சு வந்துருக்கேன். நீங்க என்ன சார் ஏதோ வேலைக்கு அலையற ஒரு அன்னக்காவடிகிட்ட பேசற மாதிரி பேசறீங்களே?"

ஜிவ்வென்று காற்றடித்த மாதிரி பருக்கிறது தியாகுவின் இமேஜ். சாரங்கபாணி முகத்தில் திணறலும் வெடிக்கிறது. தடுமாறியபடி கதவுக்கு வெளியே வந்து காரிடாரில் நின்றபடி கேட்கிறார்.

"ஆயிரம் ஷேரா... யூ மீன் மைலா ஃபார்மா ஷேர்?"

"யெஸ் சார்..."

சாரங்கபாணி தன் மூணரை நாள் தாடை முடியை லவலேசமின்றி வருடுகிறார். ‘பையன் அல்வா கொடுக்கிறானோ?’ அவர் கண்ணில் தெறித்த கேள்வியை மனதால் கொக்கி எடுத்து ஒரு தடாலடி பதிலை ஷேர் டாக்குமென்ட்டுகளுடன் தருகிறான் தியாகு...

"சீ... டாக்குமென்ட்ஸ் என்னடா கீழ போய் கிட்டிருக்கற நிலைல ஒரு கிறுக்கன் நம்ம ஷேரை வாங்கியிருக்கான்னு பார்க்கறீங்களா? நான் ஒரு ஷேர் மார்க்கெட்டர் எனக்கு தெரியும் . எது கூண்டுக்கிளி எது ராஜாளின்னு நம்ம ஷேர் எகிறப்போகுது சார்...!"

ஆமா... ஒரு சர்ஜிகல் யூனிட் ஆரம்பிக்கிற புரபோசல் கூட இருக்குன்னு கேள்விப்பட்டேன். பப்ளிக்ல ஷேர் வாங்கி... ஸ்டார்ட் பண்ணுங்க சார். சரியான டயம். எழுதிக்கோங்க வரப்போற கவர்மெண்ட் நிச்சயம் ஸ்திரமா இருக்கும். எப்பவும் நம்ம ஜனங்க ஒரு முறை ஆட்டிவிட்டா மறுமுறை அமுக்கிவிடுவாங்க. ஆட்டோ மொபைல் இண்டஸ்ட்ரில்லாம நட்டு கழண்ட வண்டியாட்டம் ததிங்கிணத்தோம் போட்டுகிட்டிருக்கு... பத்து பதினைஞ்சு கோடி பிசினஸ் பண்ணவங்கல்லாம் நாலு அஞ்சுன்னு அகத்தியர் ஆயிட்டாங்க. ஸோ எல்லார்க்கும் தெரிஞ்சு போச்சு ஸ்திரமான கவர்ன்மெண்ட் வேணும்னு.

தியாகுவின் பேச்சில் தெறிக்கும் விவரங்கள் சாரங்கபாணியை விடைக்க விடுகின்றன.

அன்று பார்க்க பங்கரையாக தெரிந்தவன் இன்று பளபளக்கிறான். அசத்தலாக பேசுகிறான். இவனைப் பற்றி நாம்தான் தவறாகக் கணித்து விட்டோமா?

கேள்வி சுழன்றடிக்கும்போது கதவைத் திறந்து கொண்டு சில கோட்சூட் மனிதர்கள் மெலிதான ஃபைபர் பீரிப் கேஸ்களோடு சூயிங்கம்போல் ஆங்கிலம் மென்றபடி வருகிறனர்.

"ஓ.கே. மிஸ்டர் சாரங்... லெட் அஸ் ரிவர்ஸ். டேக்மோர் கேர் பை..."

நவரத்ன மோதிரக் கரங்களால் சாரங்கபாணியிடம் குசாவிப் பிரிகின்றனர்.

சாரங்கபாணி தயங்கித் தயங்கி தியாகுவால் உண்டான பிரமிப்பு கலையாமல் அறைக்குள் நுழைகிறார். ராமநாதன் எழுந்து பாத்ரூமுக்குள் நுழையும் ஆயத்தத்தில்...

கூடவே உள்ளே நுழையும் தியாகுவை உணராமல்

"டேய் சாரங்கா... அன்னிக்கே டிஸ்சார்ஜ் ஆகற வழியப் பாருடா. இந்த என்விரான்மென்ட் பிடிக்கல. வெறுத்துப் போச்சு... ஆபீஸ் நிலவரத்தையும் சொல்ல மாட்டேங்கறே. மைதிலி ஒரு குழந்தை என்ன பண்றாளோ எப்படி பண்றாளோ?"

வார்த்தை முடியும்போது கச்சிதமாகக் கும்பிட்ட கரத்துடன் தியாகு தெரிகிறான். ராம்நாத் முகம் க்ஷணத்தில் கசங்குகிறது.

"சாரங்கா. என்ன பண்ணிக்கிட்டிருக்கே நீ அப்ளிகேஷனை வாங்கிட்டு அனுப்பாம என்னடா இது நான்சென்ஸ்..."

தியாகு முகம் ராமநாதனின் கருத்துக் குத்தால் ரத்தம் பூசிக் கொள்கிறது.

"இல்ல ராமநாதா... சார் வேலைக்காக வரலை. ஹி நீட் யுவர் பிளஸ்ஸிங்ஸ்..." சாரங்கபாணி ரிதமிக்காக சமாளிக்கிறார். ராமநாதன் கதவைத் திறந்து கொண்டு டாய்லெட்டுக்குள் நுழைந்து மறைய, சாரங்கபாணி தியாகுவை சுமாராக அசடு வழிந்தபடி பார்த்தபோது தான் தொலைபேசி கூவி அழைத்து அந்த அதிர்ச்சியான செய்தியைச் சொன்னது.

"யாரு கைத்தடி சாரங்கபாணியா? கேட்டுக்கய்யா நான் வேணு பேசறேன். டெர்மினேஷன், போலீஸ் கம்ப்ளைன்ட்டுன்னு என்னா பூச்சி காட்றீங்களா?"

கம்பெனியோட முக்கியமான டாக்குமென்ட்ஸோட ராமநாதன் கிட்ட கையெழுத்து வாங்கக் கிளம்பின ஸ்டெல்லா இப்ப என் கஸ்டடியில. அவளும், டாக்குமென்ட்சும் ஒழுங்கா வந்து சேரணும்னா போலீஸ் கம்ப்ளைண்ட வாபஸ் வாங்கணும். காம்பன்சேஷனா அஞ்சு லட்ச ரூபா பணமும் தரணும். இல்ல... ஸ்டெல்லா பொணம் கம்பெனி வாசல்ல விழும்.

சாரங்கா... சலிப்பா இருக்கு இருந்தாலும் சொல்றேன். போலீஸ்கீலிஸ்னு போனா சத்தியமா சொல்றேன். மைலா ஃபார்மா மானம் நாறிப்போயிடும்.

கொஞ்ச நேரத்துல இடத்த சொல்றேன். இப்போதைக்கு கொஞ்சம் ஸ்டெடி பண்ணிக்கோ. டொக்!"

முத்து முத்தாய் வியர்வைக் கூட்டம் சாரங்கபாணி முகத்தில் கூடுகிறது.

தியாகு ஆச்சரியப்பட ஆரம்பிக்கிறான். கதவைத் திறந்து கொண்டு டவலால் முகம் ஒத்தியபடி வரும் ராமநாதனும் கேட்கிறார்.

"என்னடா... ஏ.சி. ரூம்ல உனக்கு இப்படி வேர்த்திருக்கு... போன் வந்ததுபோல இருந்திச்சே...யாரு?"

"அது வந்து வந்து...தம்பி தியாகு நீ போய்ட்டு அப்புறமா வா ஒரு ஆபீஸ் விஷயம் பேசணும்."

தியாகுவுக்குள் பூச்சி பறக்க ஆரம்பிக்கிறது. உள்ளுணர்வு சாரங்கபாணியின் சிக்கலைத் தெரிந்து கொள்ள துள்ளுகிறது. மைதிலிக்குதான் வலிப்பினால் ஏதாவது புதய சிக்கலோ? கேள்விகளுடன் கைவசம் கொண்டு வந்த டாக்குமெண்ட்ஸ் பேகை மறந்து நழுவ விடுகின்ற மாதிரி அங்கேயே டேபிள் மேல் வைத்து விட்டு கதவைத் திறந்து கொண்டு வெளியேறுகிறான்.

"என்னடா என்ன விஷயம்...?"

"ஒண்ணுமில்ல... ஒண்ணுமில்ல."

"ஒண்ணுமில்லையா... ஏன் பதட்டப்படறே என்னடா மைதிலிக்கு ஏதாவது?"

# 15

சாரங்கபாணிக்குள்ள ராமநாதனின் உடல் நிலையை உத்தேசித்து எச்சரிக்கை நல்ல வேளையாக செயல்பட ஆரம்பிக்கிறது. பேச்சை மாற்றுகிறார்.

"நம்ம கம்பெனிக்கு பெஸ்ட் சப்ளையர் ஆஃப் த இயர் அவார்ட் கிடைக்கலாமாம்... குப்தா பேசினார் நம்ப முடியல. சந்தோஷம். அதான் வேர்த்துடுத்து..."

அவர் சொன்ன அந்த அசுரப் பொய் அவர் அடி வயிற்றில் சங்கடத்தை பெருக்கிறது.

"ஒன் மினிட்..." பாத்ரூமை தேடிப் பிடித்து தற்காலிகமாக தப்பிக்க பார்க்கிறார்.

அங்கே கதவு சாத்தப்பட திரும்பவும் டெலிபோனின் சிணுங்கல்!

ராம்நாத் எடுக்கிறார்...

"யெஸ் ராம்நாத் ஹியர்..."

"ஐயோ ராமநாதா... வேண்டாம்..." அலறிக் கொண்டு போன வேகத்துக்கு பாத்ரூமிலிருந்து பாய்ந்து வருகிறார் சாரங்கபாணி.

பாய்ந்து வரும் சாரங்கபாணியை மீறி ராம்நாத்தின் காதில் ரிசீவர் வழியாக வேணு பாய்கிறான்.

"என்ன கைத்தடி ... பணத்தை கொடுக்கறதுன்னு முடிவு செய்துட்டியா? நிச்சயம் செய்திருக்கணும். ஏன்னா ராமநாதன் ஏற்கனவே ஹார்ட் அட்டாக்ல இருக்கும்போது நீ இந்தப் பிரச்சனையை பெரிசுபடுத்தி அந்த ஆளை மேலும் நோக அடிக்கமாட்டேன்னு எனக்கு நல்லா தெரியும். என்ன சரிதானே?"

"எதுடா சரி? யார்டா நீ...?" ராம்நாத் வியர்வை பூக்கக் கேட்கிறார்.

"அது ஒண்ணுமில்லை ராமநாதா நீ போனை இப்படி கொண்டா..." சாரங்கபாணி பறிக்கப் பார்க்கிறார் ரிசீவரை...

"நோ சம்திங் ராங். வேணு குரல் போல இருக்கே... ஏய் வேணு என்ன இதெல்லாம் யார்கிட்ட பேசறே நீ தெரியுமா? சாரங்கா என்னடா நடந்துகிட்டிருக்கு இங்க...?"

சாரங்கபாணி பட்டென்று போனைப் பிடுங்குகிறார்.

"வேணு... உனக்கு பணம் வரும். அரை மணி கழிச்சு போன் பண்ணு இப்ப வை."

"என்ன சாரங்கா... எம்.டி. முழிச்சிகிட்டிருக்காரா? வெரிகுட் ரிசீவரைக் கொடு நான் அந்த ஆள்கிட்டேயே பேசறேன்."

"முட்டாள்... போனை வைடான்னா..." கத்தியபடி சாரங்கபாணி ரிசீவரை முடக்க ராம்நாத் தடுமாறிக் கொண்டே கட்டிலில் அமர...

"ஒண்ணுமில்ல ராமநாதா... இந்த வேணுப் பயல நம்ம மைதிலி டெர்மினேட் பண்ணிட்டா. அதான் அவன் செட்டில்மென்ட் அமெளண்ட்டை எப்பத் தருவேன்னு கேக்கறான்."

"நோ... சம்திங் ராங்! சாரங்கா என்னடா நடக்குது?" அவர் பதறி வெடிக்கும்போது நெஞ்சு பிசையப்படுகிறது. கூடவே திரும்பச் சிணுங்குகிறது தொலைபேசி.

வார்டு அறைக்குள் பெரிய தொழிலதிபர் என்கிற ஹோதாவில் ஒரு தற்காலிக நேரடி தொடர்பினை பெற்றதன் பலன்!

ஓடிச்சென்று "சனியன்!" என்றபடி ரிசீவரை பிரித்து வைக்கிறார். ராமநாதனை பார்க்க அவர் முகம் இருளுவதும் அவர் சுதாரிப்பதும்...

"ராமநாதா... நத்திங்டா! ப்ளீஸ் பீ சியர்..."

"நோ... அவன் கிட்நாப் பண்ணிட்டான்னு நினைக்கிறேன். மைதிலிய கொண்டு போயிட்டானா... சொல்லு. எல்லாம் என் தலை எழுத்து சொல்லுடா..."

"இல்லடா... மைதிலி சேஃப்! ஒண்ணுமில்ல சொன்னாகேள்."

"மாட்டேன்.போ. போய் முதல்ல அந்த நாய் முகத்துல கேட்ட பணத்தை விட்டெறிஞ்சுட்டு என் மகளோட வா."

"டேய்... அவன் ஸ்டெல்லா பிடிச்சு வெச்சிருக்கான். மைதிலிய இல்ல."

"ஸ்டெல்லாவும் மகள் மாதிரிதான். போ... போடா ஏதாவது பண்ணிடப் போறான்."

"கிழிச்சான். நான் போலீசுக்கு போகப் போறேன்."

"வேண்டாம்... விஷப் பரிட்சை வேண்டாம்."

"ஒன் மினிட்..." சாரங்கபாணி எமர்ஜன்சி பஸ்ஸரை நெருக்கி அழுத்துகிறார். பறந்து வருகிறாள் ஸ்டாப் நர்ஸ்.

"ப்ளீஸ்மா... இவனுக்கு காம்போஸ் கொடுக்க முடியுமா... நௌ ஹி டெம்ப்டட்" ஸ்டாப் நர்ஸ் ராம்நாத்தை நெருங்கி தன் பொறுப்பில் எடுத்துக் கொள்ள ரிசீவரை திரும்ப முடக்கிவிட்டு முத்துப் பூத்த முகத்தை துடைத்துக் கொள்ளும்போது கச்சிதமாக நுழைகிறான் தியாகு.

"சாரி சார்... ஷேர் ஃபைலை மறந்துட்டு போயிட்டேன். ஓ... என்ன சார், ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?"

"நத்திங்... நத்திங்..."

"எதுவா இருந்தாலும் சொல்லுங்க. என்ன சார் பிராப்ளம்?" தயங்கி தயங்கி தடுமாறிவிடடு சட்டென்று அவன் தோள் மேல் கை போட்டு அறைக்கு வெளியே அவனை அழைத்துக் கொண்டு போகிறார்!

தூரத்தில் தெரிகிறது மகாபலிபுரத்து கடற்கரை கோவில். நூல் பிடித்து நீட்டியது போல கடற்கரை! ஒரு பக்கம் அலையின் கும்மாளம். மறு பக்கம் பரந்து கிடக்கும் மணல்வெளி எட்டியவரைக்கும் ஆள் நடமாட்டமில்லை.

சாரங்கபாணி வேஷ்டி சட்டை சரசரக்க கைவசம் ஐந்து லட்சம் பிரிஃப்கேசுடன் நடந்து வருவதை வேணுவின் பைனாகுலரால் துல்லியமாக பார்க்க முடிகிறது.

எச்சரிக்கை செய்தது போலவே கூட யாருமில்லை.

சாரங்கபாணி முன்னாலும் சரி பின்னாலும் சரி. எட்டிய தொலைவு ஒருவரில்லை. எல்லாமே திட்டமிட்ட படி கூடி வருகிறது. ஊடே கைவசத்து செல்லுலர் சிணுங்கி அழைக்கிறது. சாரங்கபாணி பீச் ரிசார்ட் ஒன்றின் அருகே காரை நிறுத்திவிட்டு தனியாக கிளம்பி வருவதை ஊர்ஜிதம் செய்கிறான் ஒருவன்.

"பின்னால் போலீஸ் கீலிஸ்னு யாரும் வரலை. சாரங்கபாணி மட்டும்தான் வரான். வி. ஜி. கோல்டன் பீச் வரை சல்லடை போட்டுட்டோம். ஒரு போலீஸ் கிடையாது."

"குட்... கிழவன் லொள்ளு பிடிச்சவன். மூளைக்காரனும் கூட எங்க சுருக்குல பாய்வானோன்னு நினைச்சேன்." சொல்லிக்கொண்டே

செல்லுலரை அணைக்கிறான் வேணு. அருகிலேயே நடுங்கியபடி ஸ்டெல்லா.

"சரி ஸ்டெல்லா... உன்னை இப்ப நான் விடப்போறதில்ல. இது முதல் தவணை பணம்னு சொல்லி கிழவனை திருப்பு அனுப்பப் போறேன். அந்த் மைதிலியே நேர்ல வரணும். கால்ல விழனும். அதுவரை விட மாட்டேன்."

ஸ்டெல்லா அடுத்த நோடி விசும்புகிறாள்.

"அழு... நல்லா அழு! இதுக்கெல்லாம் மசிய மாட்டேன். ஆமா யார் யார் கூட எல்லாமோ சினிமா பீச்சுக்கு போறியே... எனக்கு கம்பெனி கொடேன். நீ கேக்கறதா தரேன்மா..." பேச்சோடு இடுப்பில் ஒரு செல்லக் கிள்ளு கிள்ளுகிறான்.

"நீங்க ஒரு பேட்ட ரவுடி. எப்படி வேணு அக்கவுண்டன்ட் ஆனீங்க. கொஞ்சம் கூட மேனர்ஸோ கல்ச்சரோ இல்லையே..."

"ஆமாம். உன் கிட்ட கல்ச்சர் தாண்டவமாடுது. என் கிட்டதான் இல்லாம போயிடுச்சு."

திரும்பக் கிள்ளுகிறான் வேணு. நெருங்கிவிட்டார் சாரங்கபாணியும்.

"வாய்யா... கரெக்டா கொண்டு வந்துட்டியா?" வேணு ஸ்டெல்லாவை இறுக்கமாக இடக்கரத்தால் பிடித்துக் கொண்டு சாரங்கபாணியின் சூட்கேஸைப் பார்க்கிறான்.

சாரங்கபாணி அவன் பார்ப்பதை லட்சியம் செய்யாத படி சுற்றிச் சுற்றி பார்க்கிறார்.

"என்ன தேடறே... என்னோட பரிவாரங்களையா? வருவாங்க. இந்த செல்லுலர்ல ஒரு அழுத்து போதும் வந்துடுவாங்க. சரி சரி சூட்கேஸைக் கொடு."

வேணுவின் கை நீளுகிறது. சாரங்கபாணி சூட்கேஸைத் தராமல் சுற்றிச் சுற்றி பார்க்கிறார். மணல் வெளி மேல் ஓரிடத்தில் தெரிகிறது அந்த காலி பிஸ்லெரி பாட்டில் பாதி புதைந்தும் மீதி புதையாமலும் வேகமாக அங்கே செல்லப்பொனவரை பிடித்து தடுத்து நிறுத்துகிறான் வேணு.

"எங்னே போறே?"

"எனக்கு அந்த காலி பாட்டில் வேணும்."

"அது எதுக்கு?"

"சொல்றேன்..." பேச்சோடு நெருங்கி காலி பாட்டிலை தொட்டுத் தூக்கப் போனபோதுதான் கூடவே ஒரு மணல் பூதம் போல் ஒரு உருவமும் சிலிர்ப்பிக் கொண்டு நிமிர்கிறது!

வேணுவுக்குள் குதக்காலை நண்டு வாக்கிளி கவ்வினது போல ஒரு திடுக்.

நிமிர்ந்த உருவம் மின்னல் வேகத்தில் துப்பாக்கியை நீட்டுகிறது வேணு எதிரில்!

மணல் பொட்டுகள் உதிர புதைந்துக் கிடந்த உருவம் யாரென்பது ஸ்டெல்லாவுக்கு தெரிய வரும்போது ஆச்சரியம் தட்டாமாலை சுற்றுகிறது அவளிடம்.

"தியாகு... நீங்களா?" அவள் மூலமாக தியாகுவை உணரும் வேணு கபடி விளையாடுபவன் போல தடுமாற ஆரம்பிக்கிறான். "சாரங்கா உன் புத்திய காட்டிட்ட பாத்தியா?"

"அசையாதே வேணு... புத்திய காட்டினது அவரில்ல நான்! இதுவும் பொம்மைத் துப்பாக்கி இல்ல." சொன்ன ஜோரில் வேணுவின் காலடியில் சுட்டுக் காட்டுகிறான். மண் தூள்கள் சிதறி எகிறிப் பறக்கின்றன.

"அசையாம நட இந்த இடத்தை சொல்லி சாரங்கபாணிய வரச் சொன்ன பத்தாவது நிமிஷமே இப்படி ஒளிஞ்சுக்க முடிஞ்ச சாத்யத்தை கண்டு பிடிச்சுட்டேன். இங்க நீ வருவதற்கு ஒரு மணி முன்னேயே வந்து பள்ளம் தோண்டிபடுத்துக்கவும் செய்துட்டேன்! பிஸ்லெரி பாட்டில் நான் படுத்து கிடக்கிற இடத்துக்கான அடையாளம் மட்டுமல்ல மூச்சையே அதன் வழியாகத்தான் விட்டேன்.

ஒரு தெலுங்கு சினிமா பார்த்ததுனால வந்த ஐடியா இது. ஆனா நான் ஹீரோவாங்கறது தெரியாது."

துப்பாக்கியால் வேணு மார்பில் நெம்பியபடி தியாகு தந்த விளக்கம் வேணுவை கலக்ககியடிக்கிறது. வலது கை செல்பட்டனை அமுக்கும் முனைப்பு காட்டுகிறது.

அதைப் பார்த்து சிரித்தபடி செல்லை பறிக்கிறான். சாரங்கபாணியிடம் தருகிறான்.

"ரொம்ப பயந்தீங்களே சார்! கூப்டுங்க உங்க மைதிலியம்மாவை. சொல்லுங்க. வேணுவை பிடிச்சுட்டோம். தியாகு பெண்ட கழட்டப் போறான்னும் சொல்லுங்க."

சாரங்கபாணி ஒரு வினாடி கூட தாமதிக்கவில்லை. அவர் எண்களை தட்டும் அந்த இடைவெளியில் ஸ்டெல்லாவைப் பார்த்துக் கேட்கிறான்.

"பணக்கார கிழவனால இப்படி பிணமாட்டமெல்லாம் மண்ணுக்கடியில கிடந்த பூச்சாண்டி காட்டி இந்த மாதிரி திருட்டுப் பசங்கள பிடிக்க முடியுமா ஸ்டெல்லா?"

ஸ்டெல்லா முதல் முறையாக தலை கவிழ்கிறாள். நாணத்துடன்தான்!

# 16

ரெஸ்டாரண்ட்!

ஃப்ரூப் சாலட்டின் கோபுரக் கலசமான செர்ரி பழத்தை ஸ்பூனால் பிடித்து உதட்டைப் பிளந்து உள்ளே தள்ளியபடியே ஸ்டெல்லாவை பார்க்கறான் தியாகு.

அவள் முகத்தில் தீபாவளி, பொங்கல் என்கிற பண்டிகை பிரவாகம்.

"ரியலா நினைச்சா ... ரொம்ப ஆச்சரியமா இருக்கு. நம்ப முடியல. உங்களுக்கு மட்டுமில்ல தியாகு. எங்க நிறுவனத்துக்கும் நான் ரொம்ப கடமைப்பட்டிருக்கேன்."

"எதுக்கு?"

"இப்படி மீள்வேன்னு நினைக்கலை. வேணு என் கதையை முடிச்சுடுவான்னுதான் நினைச்சேன். எனக்காக எம். டி அஞ்சு லட்சம் கொடுத்து அனுப்புவார்ன்னுல்லாம் கனவுல கூட நினைக்கலை."

"அப்ப அவர் அனுப்பிதான் நான் வந்தேன்னு நினைக்கறியா?"

"பின்னே...?"

"பைத்தியம் ... நீ மாட்டியிருக்றது தெரிஞ்சு ரிஸ்க் எடுத்தது நான். பைசா கிடையாதுன்னுட்டார் ராம்நாத்!"

அடுத்த நொடி ஃப்ரூட் சாலட் கசக்க ஆரம்பிக்கிறது ஸ்டெல்லாவுக்கு...

ஸ்டெல்லாவுக்கு நல்ல சிவப்பு முகம். அதில் தியாகு சொன்னதால் உருவான கசப்பின் பரவல் துல்லியமாகத் தெரிகிறது.

"என்ன திகைச்சுட்டே.... நம்ப முடியல இல்ல?"

"....................."

"ஒண்ணு பண்ணு... அவர் கிட்டையே கேளேன். ஏன் சார், தியாகு ரிஸ்க் எடுக்கலைன்னா என் கதி என்ன ஆகியிருக்கும்னு?..."

ஸ்டெல்லா நிமிர்ந்து பார்த்து ஒரு சிரிப்பு சிரிக்கிறாள்.

"தெரியும் தியாகு... இந்த பணக்காரங்க புத்தியே இப்படித்தான்னு" கச்சிதமாக தியாகு எதிர்பார்த்த பதிலைத் தருகிறாள்.

"அப்பாடா...!" அவனுக்குள் இப்பொழுது ரிலிஃப்.

கேட்கிறேன் என்று சொல்லியிருந்தால் அதை திருப்ப வேறு ஸ்ட்ரோக் போட வேண்டி வந்திருக்கும். நல்ல வேளை தப்பித்தேன். மனதில் அன்றைய ராசிபலன் சிந்தனை ஓடுகிறது. 'நினைத்தது நடக்கும்' என்று போட்டிருந்தது. நடந்து கொண்டிருக்கிறது.

"ஸ்டெல்லா உனக்கு ஒரு விஷயம் ... இவ்வளவு நடந்துருக்கு. அந்த மைதிலி எனக்கொரு தேங்க்ஸ் பண்ணலை. தெரியுமா?"

அடுத்த கேள்வியில் ஸ்டெல்லா கூர்மையாகிறாள்.

"போகட்டும் விடுங்க... இவங்க தேங்க்ஸ் யாருக்கு வேணும்" என்று தட்டியும் விடுகிறாள்.

"ஆமா, மைதிலி எப்படி?"

"அது ஒரு அதிர்ஷ்டக் கட்டை கட்டுகட்டா பணம் இருந்து என்ன பிரயோஜனம்? உடம்புல வியாதி. ஜாதகத்துலேயும் ஏதோ கோளாறாம்... யூ நோ தியாகு எனக்கு இந்த ஜாதகம், ஜேசியத்துல எல்லாம் நம்பிக்கை கிடையாது. ஆனா இந்த பொண்ணு விஷயத்துல பாக்கும் போது அது எவ்வளவு உண்மையா இருக்கு தெரியுமா?"

"எப்படி?" தெரியாத மாதிரி கேட்கிறான்.

"ஒரு நல்ல ஃபாரின் மாப்ளை. நிச்சயம் கூட முடிஞ்சுடுச்சு. பாவம் ஒரு ஆக்சிடெண்ட்ல கால் போய் அந்த ஆள் இப்ப ஹாஸ்பிடல்ல... அதனால கல்யாணமும் நின்னு போய்... இவங்க புத்திக்கு இப்படித் தானே நடக்கும்...?"

"அப்ப மைதிலிக்கு கல்யாணம்...?"

"கல்யாணமாவது, கத்தரிக்காயாவது. யாருக்கு அதுக்கு தைரியம் வரும். நடந்ததை கேள்விப்பட்டா ஓடிடுவாங்க..."

"ஸ்டெல்லா ஒரு ஐடியா..."

"என்ன?"

"வேண்டாம்... நீ கோவிப்பே."

"சும்மா சொல்லுங்க தியாகு"

"வேண்டாம். விடு. நம்ம காதலுக்கு ஒரு நல்ல பிள்ளையார் சுழி விழுந்துருக்கற இப்ப போய் எதுக்கு...?"

"இந்தப் பீடிகை எல்லாம் வேண்டாம்."

"இல்ல ஸ்டெல்லா... எப்பவும் பாரு. பணக்காரங்க எவ்வளவு தப்பு செஞ்சாலும் அது பெரிசா அவங்கள பாதிக்கறதேயில்லை. பணத்தால அவங்க தப்பு வெளிய தெரியாம போயிடுது. ஆனா மிடில் கிளாஸ்ல..."

"தெரியும்... என்ன சொல்ல வர்றீங்கன்னு நல்லாவே தெரியும். இதனாலதான் லைஃப்ல நான் பணத்த பெரிசா நினைச்சேன். ஸ்டில் நினைக்கிறேன். சம்பாதிக்கணும். நிறைய சம்பாதிக்கணும். அத பத்தி பேசுங்க தியாகு."

"நிச்சயமா சம்பாதிப்போம்.. ஏன் கவலைப்படறே?"

"எப்படி...? உங்க ஷேர் பிசினஸ்... அதோட இன்புட் அவுட்புட் இதபத்தி கொஞ்சம் சொல்லுங்களேன்."

"மாசம் இருபதாயிரம் சாதாரணமாப் புரட்டறேன். இது போதாது. ஒரு லட்சம் பண்ணனும். இது என் டார்கெட்."

"ரியலா...?"

"இது சந்தேகமா. இல்ல ஆச்சரியமா...?"

"ரெண்டும்தான்."

"உன் சந்தேகத்த எப்படித் தீர்க்கணும்?"

"நீங்க தீர்க்க வேண்டாம். மேல போங்க."

"கூரை இடிக்குமேம்மா..."

"ஜோக்கா..." கேட்டுவிட்டு ஒரு சிரிப்பு சிரிக்கிறாள் ஸ்டெல்லா. ஊட்டமான முன் பாரம் ஏறி இறங்குகிறது. தியாகு சூடாக ஆரம்பிக்கிறாள்.

நடுவில் சர்வர் அடுத்த ஆர்டர் உண்டா என்று எட்டிப் பார்க்கிறான்.

"பில்..." என்கிறான் தியாகு.

"ஆமா ஏதோ ஐடியான்னீங்களே... என்ன அது?"

"விடமாட்டியா?"

"என்னன்னு சொல்லுங்க. இல்லன்னா இன்னிக்கு பூரா எனக்கு தூக்கம் வராது" தியாகு எதிரிபார்த்த மாதிரியே பேசுகிறாள் ஸ்டெல்லா.

"சொல்றேன்... மைலா ஃபார்மால உனக்கு சீஃபா நான் இருந்தா எப்படி இருக்கும்?"

"என்னது ... என்னது... திரும்பச் சொல்லுங்க பார்ப்போம்."

"இல்ல... அந்த மைதிலி சீட்ல நான் இருந்தா எப்படி இருக்கம்னு கேட்டேன்?"

"என்ன தியாகு... எங்கேயோ ஆரம்பிச்சு எங்கேயோ போறீங்க?" ஸ்டெல்லாவின் கண்களில் ஒரு ரூபாய் நாணய அளவு விரிவு.

"எப்படி இருக்கும்?"

"நல்லா தான் இருக்கும். ஆனா அது நடக்கற காரியமா என்ன?"

"ஏன் நடக்காது?"

"சரி கிளம்புவோம்... நீங்க உளற ஆரம்பிச்சுட்டீங்க"

ஸ்டெல்லா எழுந்திருக்கிறாள்.

"உட்காரு ஸ்டெல்... மூளைய பயன்படுத்தினா முடியாத விஷயமே கிடையாது தெரிஞ்சுக்கோ..."

ஸ்டெல்லா முறைக்கிறாள். பின் அவன் முகத்துக்கு நேரே குனிந்து சொல்கிறாள்.

"அந்த சீட்ல உட்கார இரண்டு பேராலதான் முடியம். ஒண்ணு மைலா ஃபார்மாவை விலைக்கு வாங்க முடிஞ்சு ஒரு மில்லியனரால.. அது இம்பாசிபிள்- ஏன்னா அதை விக்க மிஸ்டர் ராம்நாத் தயாராயில்ல நீங்களும் மில்லியனரில்ல... இரண்டாவது மைதிலியோட ஹஸ்பெண்டால முடியும். உங்களால ஹஸ்பெண்டால்லாம் ஆகமுடியாது. ஏன்னா இரும்புகூட தங்கமாயிடும். ஆனா மைதிலிக்கு நீங்க ஹஸ்பெண்டாகறது கனவுல கூட சாத்யமில்ல. புரிஞ்சுதா..."

தியாகு ஒரு ரம்யச் சிரிப்பு சிரிக்கிறான்.

"இரும்பெல்லாம் தங்கமாவாது ஸ்டெல்லா. ஆனா நீ மனசு வெச்சா

நான் மாப்ளை ஆயிடுவேன்" என்கிறான்.

ஸ்டெல்லா இதயப் பகுதியையும், அதன் அவஸ்தையையும் முதல் தடவையாக உணர்ந்து அவன் எதிரில் சோர்ந்து அமருகிறாள். மெல்லக் கேட்கிறாள்.

"அப்ப நம்ம காதல்?"

அவன் சொல்கிறான்.

"அதுக்காகத் தானே நானே அந்த சீட்டை பிடிக்கணும்கறேன்."

"புரியல..." காற்று கலந்து ஈனசுரத்தில் விம்மலான வார்த்தைகள் ஸ்டெல்லாவிடம்...

"நீ பாசாங்குகள் இல்லாத பிராக்டிகலான பொண்ணு ஸ்டெல்லா நானும் அப்படித்தான். ஒவ்வொரு பணக்காரனும் பலரை மிதிச்சுத்தான் பணக்காரன் ஆகறான். நானும் நீயும் மைதிலய மிதிக்காம மிதிப்போம்கறேன்."

"என்ன சொல்றீங்க தியாகு நீங்க... எனக்கு குழம்புது." சற்று உச்சபட்ச குரலில் வெடிப்பவளை ரெஸ்டாரெண்டே திரும்பிப் பார்க்கிறது.

தியாகுவிடம் மட்டும் பதட்டமேயில்லாத அழுத்தம். ஸ்டெல்லா தன் பதட்டத்தை உணர்ந்த மீண்டும் சகஜமாகி அவனை வெறிக்கிறாள். தியாகு கன்னத்தில் கை வைத்த படி பார்த்துக் கொண்டே சொல்கிறான்.

"நீயும் சராசரி பொண்ணு மாதிரி பிஹேவ் பண்றியே... முழுசா கேட்டுட்டு சொல் ஸ்டெல்லா?"

சொல்ல ஆரம்பிக்கிறான்!

# 17

ப ஸ்ஸர் ஒலிக்கவும் கதவைத் திறக்கிறாள் அந்த பெண். வாசற்படியில் நிற்கும் நாராயணனைப் பார்த்து ஒருவினாடி திகைப்பவளை நாராயணனும் பார்க்கிறான்.

எந்தப் பத்திரிகையிலோ படமாய் பார்த்த சின்ன வயது எம். எஸ். சுப்புலட்சுமியே எதிர் வந்து நின்று கதவைத் திறந்து விட்ட மாதிரி ஒரு ஃபீலிங்.

"மிஸ்டர் சுந்தரேசன் சார் வீடு...?"

அந்தப் பெண் பேசாமல் ஆமோதிப்பான பாவங்களுடன் திரும்புகிறாள். மருதாணி விரல்களால் அசைத்து உள் அழைக்கிறாள்.

மத்திய தரத்து 'ஒரு ஹால், இரண்டு பெட்ரூம், ஒரு கிச்சன், ஒரு வெராண்டா' என்னும் வால் பேப்பர்கள் வேய்ந்த வீடு. ஆனால் அபார துப்பறவு... உடைந்த முட்டைக் கூழுடு, சோப்புத் துண்டுகள் எல்லாம் கலைப் பொருளாகி உரிய இடத்தில் அமர்ந்து ஒரு இழு இழுக்கின்றது.

டி.வி. மேல் ஒரு கோலா கரடி பொம்மை நாராயணனைப் பார்த்து ஹலோ சொல்கிறது.

ஒரு பார்வை பார்த்து சோபா முன் டேபிளில் கிடக்கும் பத்திரிகைகளை விரல்களால் தீண்டி எடுக்கும் போது நிஜமாலுமே ஒரு அற்புத வாசம். காரணம் அவன் சுமந்து வந்திருக்கும் டீ கோப்பை. இத்தனை வேகமாகவா கோப்பைக்குக் கீழே என்ன காகிதம்...?

நாராயணன் அதை படிக்கிறான். 'அப்பா பாத்ரூமில்... சற்று காத்ருக்கவும் இந்த டீ உங்களுக்குப் பிடிக்கக்கூடும். சியாமளா'

நிமிருகிறான். குறுஞ்சிரிப்புடன் அவள்.

"தேங்க்யூ..." என்கிறான். திரும்பத் தாளைப் பார்க்கிறான். இந்தமுறை கையெழுத்துக்காக... பின் டீயை சூப்புகிறாள்.

"கையெழுத்து - டீ - அதைவிட உங்க வேகம் எல்லாமே சூப்ர்ப்!" பாராட்டுகிறான்.

அவள் முகபாவங்களாலேயே அங்கீகரிக்கிறாள்.

"வீடும் நீட்டா நன்னா இருக்கு..."

அங்கீகாரம் அவளிடம் தொடர்கிறது.

"எல்லாம் உங்க கைவண்ணமா?"

அவள் ஆமோதிக்கிறாள். அந்த ஆமோதிப்பில் முகத்துச் சுருக்கங்களில் நீரலை போல ஒரு சீர்மை. பார்வை திரும்ப வீட்டை சுழற்றும்போது ஒரு பெண்ணின் புகைப் படமும் அதறகணி வித்திருக்கும் மாலையும் இதயத்தை ஒரு கொத்து கொத்துகிறது.

"அது...? அவள் கண்களில் ஒரு ஸ்டாம்பில் ஒட்டப் பயன்படுத்தும் அளவில் ஈரம் சேர்ந்து கைகளின் அபிநயம் மூலம் ‘அம்மா’ என்கிறது"

"மைகுட்நெஸ்... சுந்தரேசன் சார் சொல்லவேயில்லையே..."

இவள் உதட்டைக் கடித்து துக்கமடக்கி முகத்தில் உணர்ச்சிகளை மாற்றி சிரிக்கப் பார்த்து பின் முடியாது போய் சட்டென்று திரும்பி ஹாலின் கண்ணாடி ஷெல்ப்பில் இருந்து ஒரு புத்தகத்தை எடுத்து நாராயணன் எதிரில் நீட்டுகிறாள். கட்டை விரலை ஆள்காட்டி விரலை நுனியில் ஒன்று சேர்த்து மார்பு வரை உயர்த்தி ‘நல்ல புத்தகம்’ என்கிறாள்.

"நிறைய புத்தகம் படிப்பீர்களா?"

கேள்விக்கு ஒரு பேனாவை எடுத்துத் துண்டுத்தாள் ஒன்றில் ‘எப்பவும் துணை அதுதானே?’ என்று எழுதிக் காட்டுகிறாள்.

ஜில்லிட்டுப் போகிறது நாராணன் மனது. உழுது போட்ட மாதிரி. ஒரு கிளர்வும் தட்டுகிறது.

சிலரால் மட்டுமே ஒரு பார்வையில் உலுக்க முடியும்.

இவளும் அந்த ரகம்... அவனையுமறியாமல் கசிந்து நிமிர்கிறான். "உங்களுக்கு போய் - பேச்சை பறிச்சுட்டானே - அந்த பகவான்..." என்கிறன். அவளையும் அது என்னவோ செய்கிறது. திரும்ப பேனா, அதில் குறிப்பெழுதல். எழுதியதை நீட்டுகிறாள்.

‘என் மேல் அனுதாபப்படாதீங்கோ. அது என்னைக் கோழையாக்கும்’ படித்த மறுநொடி இரு கைகளால் முகம் மூடிக்கொண்டு தலையைக் கவிழ்ந்து கொள்கிறான்.

"வாங்கோ நாராயணன்..." அவசரமாய் வாரிய தலை, மார்பில் ஒரு துண்டு சகிதம் சுந்தரேசன் நுழைகிறார்.

"தலையை குனிஞ்சுண்டு என்ன பண்றேள்?" அமர்ந்த படியே கேட்கவும்

மெல்ல நிமிர்கிறான். கலங்கியிருப்பது நன்றாக தெரிகிறது.

"என்ன நாராயணன். வாட் ஹேப்பண்ட்." சுந்தரேசனையும் கலக்கம் தொற்றிக் தூக்குகிறது.

"நத்திங் சார்... நத்திங்..." சுந்தரேசன் கண்களில் இப்பொழுது அந்த துண்டுச் சீட்டுகள் படுகின்றன.

"என்னம்மா இது ... நான் எத்தனை தடவை சொல்லியிருக்கேன். புதுசா வர்றவாகிட்டல்லாம் துண்டு சீட்டு எழுதி... போம்மா... போ உள்ள..."

சுந்தரேசன் சியாமளாவை விரட்டிட அவள் பதைத்து போய் உள் ஓட....

"ஏன் சார் அவளை... சாரி அவங்கள உள்ள போகச் சொல்றேள். என் அழுகை சந்தோஷ அழுகை சார்..."

"என்ன சொல்றேள் நாராயணன்?"

"எனக்கு உங்க பொண்ணை ரொம்ப பிடிச்சிருக்கு சார்..."

அந்த பதில் அவரை பல நிமிடம் வரை மௌனத்தில் புதைக்கிறது.

"என்ன சார்... தப்பா நான் ஏதாவது...?"

"இல்ல நிஜமாத்தான் சொல்றேளா?"

"சத்யமா... நான் ஐயங்கார்... நீங்க ஐயர். உங்களுக்கு சம்மதம்னா நான் சியாமளாவை..."

சுந்தரேசன் நாராயணன் கரங்களை தன் நடுங்கும் கரங்களோடு பற்றி "TPM பெர்ஃபார்மன்ஸ் பத்தி பேசத்தான் வரச் சொன்னேன்.உங்க மனசோட பெர்ஃபாமென்ஸை காட்டி இப்படி என்னை கட்டிப் போட்டா நான் என்ன பண்ணுவேன். தேங்க்யூ நாராயணன். தேங்யூ ஸோ மச்..."

அந்த நல்ல தந்தை முதல் முறையாக ஆனந்தக் கண்ணீர் விட ஆரம்பிக்கிறார்.

துக்கக் கண்ணீர் விட்டே பழகியவரை நாராயணனும் ‘அழட்டும்’ என்று விட்டுப் பார்க்கிறான். கூடவே "சார் ஒரு சின்ன ரிக்வெஸ்ட்" என்று குழையவும் செய்கிறான்.

"என்ன நாராயணன் சொல்லுங்கோ... கல்யாணத்தை டீசன்டா பண்ணித் தரணும். சீர் செனத்தியெல்லாம் குறையக்கூடாது அதானே?"

கண்ணீரை சிந்தியபடி சுந்தரேசன் இப்படியா கேட்பார்? சிரிப்பு வருகிறது நாராயணனுக்கு...

"என்ன சிரிக்கிறேள்?"

"ஒண்ணுமில்ல சார். என்னை உங்க பொண்ணுக்கும் பிடிச்சிருக்கான்னு கேக்க வேண்டாமா?"

அடுத்த நொடி பூஜையறை மணி சப்தம் ஒலிக்க ஆரம்பிக்கிறது.

"சம்மதங்கறா என் பொண்ணு..." சுந்தரேசன் சொல்லி வாய்மூடுமுன் காத்திருந்தது போல சியாமளா ஏற்றிய கற்பூரத் தட்டும் கையுமாக வெளி வருகிறாள்.

சுந்தரேசனையும், நாராயணனையும் மாறி மாறிப் பார்த்தபடி ஹாலில் உள்ள ஸ்வாமி காலண்டர்கள். படங்களுக்கு எல்லாம் அந்த கற்பூரச் சுடரை காட்டுகிறாள்.

இறுதியாக சற்றும் எதிர்பாராதபடி நாராயணனின் காலடியில் கற்பூரத் தட்டை வைத்துவிட்டு சாஷ்டாங்கமாக விழுந்து வணங்க ஆரம்பிக்கிறாள்.

பதறிப் போகிறது நாராயணனுக்கு...

அறைக்கு திரும்பியபோது அதிர்ச்சி காத்திருந்தது.

"வா நாராயணா... நீ வந்தா உன்னை இந்த அட்ரசுக்கு வரச் சொல்லி தியாகு சொன்னான்." கீழ்போர்ஷன் கிழடு ஒன்று வெற்றிலைச் சொதப்பலோடு அட்ரஸ் பேப்பரைத் தருகிறது.

"அது சரி... ரூம் சாவி கொடுக்கலையா?"

"எதுக்குப்பா ... நீங்கதான் இப்ப பெரிய வீட்டுக்கு குடிபோய்ட்டீங்களே. எதுக்குன்னேன்?"

"என்ன தாத்தா சொல்றே?"

"என்ன நீ தெரியாத மாதிரி கேக்கறே. இப்பதான் ரூமைக் காலி பண்ணிகிட்டு தியாகு போறான். நீ வருவே அங்க வந்துடச் சொல்லி அட்ரஸைக் கொடுத்துடுங்கன்னான். கொடுத்துட்டேன்."

நாராயணன் முகத்தில் குழப்பம் பரவும்போது, அந்த வயதிலும் விரல் சூப்பியபடி லூஸ் சந்திரன் கிட்டே வருகிறான். முழங்கை,

நெற்றியெல்லாம் போலீஸ் போட்ட அடிகளின் அடையாளங்கள் அரக்கு நிறக் கட்டித் தழும் பாய்...

"என்ன சந்திரா?"

"இனிமே நீ இங்க வரமாட்டியா. பணக்காரனாயிட்டீங்களா?"

"யார் சொன்னா அப்படி?"

"தியாகு சொல்லிச்சே. எனக்குக் கூட ரூபா தந்திச்சே..." ஒரு கசங்கிய நோட்டை அரை டிரையர் பாக்கெட்டில் இருந்து அலட்சியமாய் நீட்டுகிறான் சந்திரன்.

ஐநூறு ரூபாய் தாள்!

# 18

'சந்தன வண்ண உள்கூடு. அரக்கு வண்ணச் சிறகு கொண்ட மின்விசிறி தேனால் மெழுகின மாதிரி மொசைக்தரை, சிறந்த நிலைக் கதவுக்கான போட்டியில் முதல் பரிசு வாங்கினதுபோல வேலைப்பாடுள்ள கதவுகள்...!"

உள் நுழைந்து பார்க்கும் நாராயணன் பிரமித்துப் போகிறான். எதிர் நிற்கும் தியாகுவை பார்த்து அந்த பிரமிப்பை வார்த்தைப் படுத்துகிறான்.

"என்னடாது... எப்படிடா... எப்படி இப்படி ஒரு வீட்டுக்கு...?"

"குடி வந்துருக்கறத பத்தி தானே கேக்கறே. சுக்கிரன் ஜாதகப்படி 90 டிகிரிக்கு வந்து நேர் பார்வை பார்த்தா இப்படி ஒரு வீடு வாய்க்குமாமே?"

"நோ... சுக்கிரன் ஜாதகம்னு கதை விடாதே. தியாகு ஏதுடா உன்கிட்ட பணம்? சந்திரனுக்குக் கூட ஐநூறு ரூபாய் தந்துருக்கே."

"ஏன் தரக்கூடாதா? இருக்கு தரேன். கிடைச்சது தரேன்."

"கிடைச்சுதா... எப்படி? எப்படி?"

"மூளையை முறையா உபயோகப் படுத்தினா உனக்கும் கிடைக்கும்."

"தியாகு நீ ரொம்ப பயமுறுத்தறே. ஏது பணம் பதில் சொல்?"

கேள்விக்கு பதில் வீட்டு வாசலில் வந்து தேங்கும் காரில் தெரிய வருகிறது.

காரில் இருந்து இறங்கி வருபவர் ராம்நாத்! கூடவே சாரங்கபாணி.

"யார் தெரியுதா...? மைலா ஃபார்மா ராம்நாத்... அன்னிக்கு நான் கார் தள்ளி விடும்போது சிரிச்சியே அதே ராம்நாத்... வாங்க சார். வாங்க... வாங்க... என்ன சார் இது என் வீட்டுக்குப் போய் நீங்க வந்துகிட்டு, அதுலயும் இந்த உடம்போட...? சொல்லிவிட்டிருந்தா. - நான் வந்திருப்பேனே..."

"உடம்பாவது கிடம்பாவது... எனக்கு நீ எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கே. தேங்க்ஸ்ப்பா... தேங்க்ஸ்... ரொம்ப தேங்க்ஸ்..."

ராம்நாத் தேங்க்ஸ் சொல்லியபடி வந்து அமருகிறார்.

"என்ன சார் பெரிய உதவி? ஏதோ என்னால முடிஞ்சதை செய்தேன். சார் இவன் நாராயணன். என் டியர் ஃப்ரெண்ட்."

பரஸ்பரம் நாராயணன் பக்கம் அறிமுகத்தில் திரும்ப நாராயணன் திகைப்புக் கரையாதபடி ராம்நாத்தை பார்த்து கைகூப்ப...

"தியாகு வீடு ரொம்ப நீட்டா இருக்குப்பா. எங்க வீட்ல அம்மா இல்லை?" சாரங்கபாணி நடுவில் புகுந்து நாராயணன் திகைப்பை மேலும் கூட்டுகிறார்.

"அம்மா திருவாரூர்ல இருக்காங்க சார். இங்க நான் தனியாதான் இருக்கேன். இந்த நீட்நெஸ்லாம் நாராயணனாலதான்."

"என்னாலையா?" நாராயணன் பதற...

"சாருக்கு என்ன தொழில்?"

"தொழில்லாம் பண்ணலை சார். சாதாரண க்ளார்க் நான். கிருஷ்ணா ஃபாஸனர்ஸ்ல ஒர்க் பண்றேன்."

"ஒ... அங்கேயா? கிரேட் கன்சர்ன். TPM கான்சப்டை பிடிச்சுட்டீங்க போல இருக்கே. நானும் என் ஃபார்மாவுக்குள்ள அந்த கான்சப்டை பிடிச்சுப் போடப் போறேன்."

கண் சிமிட்டிப் பேசும் ராம்நாத்திடம் தனி உற்சாகம் ததும்புகிறது. ஒரு ஹார்ட் பேஷண்ட் எப்படி இத்தனை சீக்கிரம் ரெகவர் ஆனார்...? பதிலையும் அவரே சொல்கிறார்.

"தியாகு என் வரைல கடவுள் அனுப்பின நபர். அந்த வேணுவை மடக்கின விதம் ரியலி ஒண்டர். கூடவே என் மைதிலியோட கல்யாணத்துக்கு ஒரு புத்துயிரையும் கொடுத்துருக்கறதை நான் எப்படிப் பாராட்டுவேன். எப்படி பாராட்டுவேன். என் பெண்ணோட பிரசினை தீர்ந்த மறுநொடி எனக்கு யானை பலம் வந்துடிச்சு."

"ஆமாம் தியாகு... நீ என்ன பேசினே எப்படிப் பேசினே...? சுதர்சனோட அப்பா அம்மா வீட்டுக்கே வந்துட்டாங்க..." என்று சாரங்கபாணியும் சுருதி சேர்க்கிறார்.

வந்த இருவரும் ஆச்சரியங்களை ராட்சஸமாய் அடுக்குகிறார்கள். தலையை சுற்றுகிறது நாராயணனுக்கு.

"சார் என்ன சாப்பிடறீங்க. நல்ல காபி."

"ஒண்ணும் வேண்டாம் தியாகு. ஒரு ரிக்வெஸ்ட்."

"என்ன சார். சொல்லுங்க."

"இங்க வேண்டாம் நீ ஆபீசுக்கு வா சொல்றேன்."

"என்ன சார்... பரவால்ல இங்கேயே சொல்லுங்க."

"இல்ல ஆபீசுக்கு வா. சொல்றேன்."

"சரி சார். உங்க இஷ்டம்."

"அப்ப நான் கிளம்பறேன். டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு கூட போகலை. உனக்கு தேங்க்ஸ் பண்ணிட்டுதான் மறு வேலைன்னு இங்க வந்துட்டேன். வரட்டுமா...?"

ராம்நாத் கிளம்புகிறார்.

"நாளைக்கு காலைல வா தியாகு. வராம இருந்துடாதே" என்று சாரங்கபாணி வேறு அழுத்தம் கொடுத்தபடி நகர்கிறார்.

அவர்களின் கார் புழுதி புரட்டலோடு நகர தியாகு நாராயணன் எதிரில் ஒரு சிகரெட்டை எடுத்து ஸ்டைலாக செருகுகிறான்.

"தியாகு என்னடா இது... என்ன பண்ணினே நீ? இந்த ஆள் என்ன உன்னை இந்திரன் சந்திரன் கறார்?"

தியாகு பதிலே பேசாமல் புகை கக்குகிறான்.

"சொல்லுடா... என்ன நடக்குது இங்கே. உன் அசுர மாற்றம் எனக்கு பயத்தைத் தருதுடா."

திரும்ப தியாகுவிடம் புகை கக்கல்.

"நோ... நான் உன் கூட இருக்க மாட்டேன். எனக்கு பயமா இருக்கு."

தியாகு முகம் லேசாக மாறுகிறது.

"வாய்மூட்றா..." என்று கத்துகிறது. ஒரு பேரமைதி பரவுகிறது. சில நொடிகளுக்கு பிறகு...

"திரும்பவும் சொல்றேன். மூளையை பயன்படுத்து. நீயும் என் கூட போட்டி போடலாம். உயிரைப் பணம் வெச்சு ஸ்டெல்லாவை கிட்நாப்ல இருந்து காப்பாத்தியிருக்கேன். மூளையைக் கசக்கி அந்த மைதிலிக்கு

நிச்சயம் செய்த மாப்பிள்ளையைத் திரும்ப கல்யாணத்துக்கு சம்மதிக்க வெச்சுருக்கேன்.

இது இரண்டுமே இன்னிக்கு ராம்நாத் பொருத்தவரை மிகப்பெரிய விஷயங்கள். அதை சாதிச்சதால என்னை மதிச்சு வீடு தேடி வந்துருக்காரு.

நாளைக்கு ஆபீசுக்கு கூட்பிட்டு இந்த மைலா ஃபார்மாவோட ஜெனரல் மேனேஜர் நீதான்னும் சொல்லப் போறாரு.

கேரம் விளையாடும்போது சாமர்த்தியமா காய்ன் போடறதில்லையா? பேக்ல இருந்தாலும் முன்னாடி டிப் கொடுத்து பின்னுக்கு வரச் செய்து காய்னை பாக்கெட் பண்றதில்லையா...?"

அப்படித்தான்... அப்படித்தான் இதுவும்...

கேரத்துல செய்தா சாம்பியன். லைஸ்ப்ல செய்தா அசுர மாற்றம்... பயமா இருக்குறதா?" தியாகு பேச்சு நாராயணனை இறுக்கிக் கட்டுகிறது.

"அப்ப உன் பணப் புழக்கத்துக்கு காரணம் ராம்நாத்தா? இந்த வீடு மாற்றம் அவராலையா?"

"அவராலையும்..."

"உனக்கு எப்படி அவர் சிக்கல்களை தெரியும்...?"

"என்னடா கேள்வி இது. அங்கதான்டா என் முயற்சி இருக்கு. விட்டா கேட்டுகிட்டே போவே போல இருக்கே."

"ஸ்டெல்லா கிட்நாப்னு என்னென்னவோ சொன்னியே?"

"ஆமாம்... மைலா ஃபார்மால ஒரு அயோக்யன். ஆபீஸ் பிரசினைல ராம்நாத்தை மடக்க ஸ்டெல்லாவை கிட்நாப் பண்ணிட்டான். எதார்த்தமா ஹாஸ்பிடலுக்கு ராம்நாத்தை பார்க்க போயிருந்தேன்.

எனக்கும் தெரிய வந்தது. போலீசுக்கு போக இருந்தவங்களை தடுத்து புத்திசாலித்தனமா ஸ்டெல்லாவை காப்பாத்தினேன். மைலா ஃபார்மா மானத்தையும்..."

"நிஜமாவா?"

"இல்லேன்னா அந்த பணக்கார கிழவன் என்னை எல்லாம் பார்க்க வருவானா?"

"அதான் வேகமா வீட்டை மாத்திட்டியா?"

"பின்ன ... மாத்தித்தானே தீரணும். வீடு எப்படி இருக்கு? மூவாயிரம் வாடகை."

"தாங்குமாடா?"

"நானா கொடுக்கப் போறேன். ராம்நாத்தானேடா?"

"டேய்ய்..."

"நாணி நீ ஒரு பயந்தாங்கொள்ளிடா. வாழ்க்கை முன்னேற்றங்கள் பலதை இந்த பயப்பேயே தின்னுடுது. அது புரியலியே உனக்கு."

"ஆமா... அந்த மைதிலியோட நின்னு போன கல்யாணத்தை எப்படி திரும்ப..."

"விடமாட்டியா. எல்லா சந்தேகங்களும் உனக்கு தீர்ந்தாகணும் இப்ப அவ்வளவுதானே? சொல்றேன் கேட்டுக்கோ...

மைதிலிக்கு ஃபிக்ஸ் பண்ணியிருந்த மாப்ளை பேர் சுதர்சன். அவங்க அப்பா அம்மாவை போய் பார்த்தேன். நிச்சயம் செய்தபடி கல்யாணம் நடக்கலைன்னா உங்க கார்ல குண்டு வெடிக்கும்னேன். அரண்டுட்டாங்க."

"பயமுறுத்தியா பணிய வெச்சிருக்கே...?"

"அவங்களுக்கு அந்த ஆயுதம்தான் பலன் தரும். பின்னால் நான் நினைச்ச மாதிரி விஷயத்தைத் திருப்ப அதுதான் எனக்கும் பயன்படும்."

"நீ நினைச்ச மாதிரி விஷயத்தை திருப்பவா?"

"ஒண்ணுமில்லடா. திரும்பவும் ஏதாவது முரண்டு பண்ணான்னு சொல்ல வந்தேன்."

"கடைசியா ஒரு கேள்வி... ஸ்டெல்லா இப்ப?"

"என்னோட உயிர்க் காதலி!"

நாராயணன் முகம் சட்டென மாறி அதில் தனக்கு பிரியமில்லாததைக் காட்டும்போது "எப்பவும் அவ காதலி மட்டும்தான் நாராயணா..." என்று தியாகு இருபொருள் பட சொல்கிறான்.

தியாகு தந்த விளக்கம் நாராயணனை ‘திடுக்’ ஆக்குகிறது.

"என்னடா சொல்றே... எப்பவும் காதலின்னா?"

"காதலின்னா காதலிதான்னு வெச்சுக்கோயேன்..." தியாகு பூடக பீடிகை போடுகிறான்.

"அப்படின்னா கல்யாணம் கார்த்திகை...?"

"சாரி... கார்த்திகை, மார்கழின்னு எதுக்கு இழுக்கறே? நீயே சொல்லிட்டே... அவ ஒரு குதிரை. நல்ல பொண்ணா தெரியலைன்னு."

"இப்பவும் சொல்றேன். என் மனசு அவளை நல்லவளா நினைக்கல. அதுக்காக அவளைக் காதலியா மட்டும் வெச்சுக்கறதையும் என்னால் நல்லவிதமா நினைக்க முடியல."

"டேய்... நீ எப்பவும் பத்தாம் பசலிடா. இந்த விஷயத்தை இதோட விடு. இனியாவது அனுபவிச்சு வாழற வழியப் பார்ப்போம். நான் சொல்றத கேள்."

"என்ன சொல்லப்பேறே...?"

"ஏன் எதுக்குன்னு கேட்காம எனக்கு நீ சில உதவிகள் செய்யணும். அது போதும்."

"என்ன உதவி?"

"அதை போகப்போகக் கேட்பேன். நீ மட்டும் எனக்கு அந்த உதவிகளைச் செய்துட்டா நீயும் நானும் தாண்டா இந்த மெட்ராஸ்லயே ராஜாக்கள்."

நாராயணன் புரியாமல் தியாகுவைப் பார்க்க, தியாகு ஒரு சிகரெட்டைச் செருகி புகையைப் பரத்தும் விதத்தைப் பார்த்தால் அவன் அப்பொழுதே ராஜா ஆகிவிட்ட மாதிரிதான் தெரிகிறது.

# 19

ஆத்மாவில் மகிழ்ச்சி நிறையும் போது முகத்தில் அதன் ஒளி தெரியுமாமே.. மைதிலியிடமும் தெரிகிறது. அது ராம்நாத்துக்கும் புரிகிறது.

"இப்படி இவளப் பார்த்து எவ்வளவு நாளாச்சு. இல்லே சாரங்கா?" விலகாத நண்பனிடம் ஸ்லாகிக்கிறார்.

"ஆமாம் ராமநாதா...திரும்ப கல்யாணம் கைகூடிட்ட சந்தோஷம்டா எல்லாம்..."

"ஆமா எங்க கிளம்பிட்டா?"

"தெரியல. இரு கேட்டுச் சொல்றேன்..." சாரங்கன் ராம்நாத்தை விட்டுப் பிரிந்து அந்தமான் தேக்கில் உருவான வார்னீஷ் வாசமடிக்கும் மாடிப்படிகளில் ஏறி முன் வராண்டாவில் சேலைக் கொசுவத்தைச் சீர் செய்தபடி இருக்கும் மைதிலியை நெருங்கி...

"என்னம்மா... ஏக குஷில இருக்கே போலிருக்கே?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல அங்கிள். எப்பவும் போலத்தான்..."

"பொய்... புதுசா சிறகு முளைச்சிருக்கே. எனக்குத் தெரியறதே."

மைதிலி நாணியபடி அதை ஒப்புக்கொள்ள...

"எங்கேயோ கிளம்பிட்ட மாதிரி தெரியறதே, எங்கேம்மா?"

மைதிலி சாரங்கபாணியைச் செங்குத்தாகப் பார்க்கிறாள். சில நொடி 'சொல்லட்டுமா? வேண்டாமா?' என்று யோசிக்கிறாள்.

"சும்மா சொல்லு..."

"அவரைப் பார்க்கத்தான் அங்கிள்."

"எவரைம்மா... தியாகுவையா...?"

"ச்ச்சீ... நான் சுதர்சனைச் சொன்னேன்."

சாரங்கபாணிக்குச் சற்று சுருக்கென்றது.

"அவரையா? எதுக்கும்மா?"

"எதுக்கா... என்ன அங்கிள் இது. இரண்டு காலும் போய் ஆஸ்பத்திரியில இருக்கறவரை நான் பார்க்காம யார் பார்ப்பா... நானதானே இனி அவருக்கு எல்லாம்...? கால் போனா என்ன... நானிருக்கேன்னு காட்ட வேண்டாமா?"

"அம்மாடி... உனக்கே..." சாரங்கன் எதையோ சொல்ல வந்து பின் சொல்லாமல், நிறுத்திக் கொண்டு "சரிம்மா, போய்ப் பார்த்துட்டு வா. சொன்ன மாதிரி நீதானே இனி அவருக்கு எல்லாம்?" என்று கூறி திரும்பி ராம்நாத் முன்பு வந்து கண்களை வேறு கசக்கிவிட்டுக் கொள்கிறார்.

"டேய்... நீ ஏன் அழறே? மைதிலி ஏதாவது தப்பாச் சொல்லிட்டாளா?"

"சேச்சே... தப்பு சொல்ற பொண்ணாடா அவ? ராமநாதா... மைதிலி நிஜமாலுமே ஒரு ஜெம் கேரக்டர்டா."

"என்னடா சொன்னா... அதைச் சொல்லு முதல்ல..."

"படபடக்காதேடா... சுதர்சனைப் பார்க்கணுமாம்."

"மாப்பிள்ளையவா... மாப்ள சுதர்சனையா?"

"வேற சுதர்சன் ஏதுடா..? மாப்ள சுதர்சனையே தான்."

"அதுக்கு எதுக்கு நீ கண் கலங்கினே?"

"இல்லே. இந்தக் காலத்துப் பெண்கள் காலும் கையும் ஒழுங்கா இருக்கற மாப்ளைகளையே நூறு கோளாறு சொல்லும்போது, மைதிலி கால் போய்ட்ட சதர்சனை..."

சாரங்கபாணியால் பேச்சை முடிக்க முடியவில்லை. ராமநாதனுக்கும் செருமாப்பாக இருக்கிறது.

"அது சரி... மைதிலிகிட்ட தியாகு விஷயம் பேசினியா?"

"இல்லடா..."

"ஏன் ...?"

"அவ இப்ப நல்ல மூட்ல இருக்கா. சுதர்சனைப்போய் பார்த்துட்டு வந்துடட்டும். பிறகு பேசிப்போம்."

"தியாகு விஷயமா ஒண்ணும் கொல்லமாட்டா தானே?"

"சொல்ல என்ன இருக்கு... எனக்கு இப்ப என்ன கவலைன்னா தியாகு

ஒண்ணும் சொல்லிடக்கூடாது அதான்."

"எனக்கு நம்பிக்கை இருக்கு தியாகு ஒத்துக்குவார். நீ வேணா பாரு."

"ஒரு வேளை ‘முடியாது சார். எனக்கு என் ஷேர் மார்க்கெட் பிசினஸ்தான் பெரிசு’ ன்னு சொன்னா என்ன பண்ணுவே?"

"சொன்னா என்ன பண்ண... அதிர்ஷ்டம் இல்லை நமக்குன்னு நினைச்சுக்க வேண்டியதுதான்."

"அதை இப்பவே நினைச்சுக்கோ ராமநாதா... எனக்கென்னவோ நீ ரொம்ப அவசரப்படறியோன்னு தோணுது."

"என்னடா சொல்றே... நம்ம ஃபார்மாக்கு தியாகு மாதிரி சிங்கங்கள் அவசியமில்லேங்கறியா?"

"நான் அப்படிச் சொல்லலை. கொஞ்சம் பொறுமையா இன்னும் கொஞ்ச நாள் கழித்து..."

"நோ... மைதிலி திணறிப் போயிடுவா. எனக்கு தியாகு மேல பரிபூரண நம்பிக்கை இருக்கு. அதோட என் ஸ்காலர்ஷிப் அமௌண்ட்ல படிச்சு வளர்ந்த நபர் என் கிட்ட ஜெனரல் மேனேஜரா சேருவது பெருமையில்லையா?"

"அப்ப தியாகு நாளைல இருந்து ஜெனரல் மேனேஜர்?"

"எக்ஸாக்ட்லி!"

கார் சீறிக் கொண்டிருக்கிறது.

உள்ளே தன்னை மறந்த நிலையில் மைதிலி.

"நான் அவங்ககூட கொஞ்சம் பேசலாமா?" பெண் பார்க்கும்போது அவன் இதம் பதமாய் அனுமதி கேட்டதையும் அவளை நெருங்கிப் பேசியதையும் தன்னை மறந்து அசைபோட ஆரம்பிக்கிறாள்.

"உங்கள நான் கல்யாணம் பண்ணிக்க சம்மதிப்பேன்னு நீங்க எதிர்பார்க்கலை. அப்படித்தானே?"

கைகாட்டியபடியே அவள் எதிரில் அவன் அன்று பேச்சை அப்படித்தான் தொடங்கியிருந்தான்.

"ஆமாம்... ஒண்ணு நீங்க பைத்தியமா இருக்கணும். இல்ல பணத்தாசை

பிடிச்சவராத்தான் இருக்க முடியம்னு நினைச்சேன். ஸ்டில் நினைக்கிறேன்." மைதிலி தைரியமாகவே அபிப்ராயத்தைத் துப்பிவிட்டாள்.

அவனிடம் துளி சத்தச் சிரிப்பு.

"கோபம் வரலை?"

"எதுக்கு?"

"இப்படிச் சொன்னதுக்கு?"

"உங்க பேச்சு ஒரு எதார்த்தம். எப்படிக் கோபம் வரும்?"

"ஆச்சரியமா இருக்கு."

"இருக்கலாம். உங்க கேள்விக்கு நான் இப்ப ப்ளெயினா பதில் சொல்லிடறேன். எனக்கு உங்க பேர்ல விருப்பமோ, வெறுப்போ கிடையாது. சத்தியமா பணத்துக்காகவும் நான் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கலை." துளி இடை வெளி விட்டு பின் தொடருகிறான்.

"என் கிட்ட இல்லாத பணமா? யு.எஸ்.ல கொலராடோ பிவர்க்ரீக்ங்கற பிக்னிக் ஸ்பாட்ல எனக்கு ஒரு கால்ஃப் மைதானமே சொந்தமா இருக்கு. இந்திய மதிப்புக்கு இருபது கோடி போகும்."

அவன் சொன்ன மறுநொடி மைதிலி அகட்டி இமை விரித்து ஆச்சரியம் சொரிகிறாள்.

"எனக்கு ஒரு சிஸ்டர் இருந்தா. நௌ ஷி ஈஸ் நோ மோர்..." அவனிடம் திடும்மென்று விசும்பல் அதைக் கட்டுப்படுத்தியபடி தொடர்கிறான்.

"அற்புதமானவ நிம்மு. அதான் அவ பேர். அவளுக்கும் உன்னைப் போல சாரி உங்களைப்போல ஃபிட்ஸ் வரும். ஒரு நாளைக்கு அஞ்சாறு தடவை, எவ்வளவு வைத்தியம் பார்த்தும் பலனில்லை. கல்யாணமும் அதனால நடக்கல. வெறுத்துப் போய் ஒரு நாள் விஷத்த குடிச்சுட்டா! உயிர்மூச்சு போக ஒரு நிமிஷம் இருக்கும் போது கேட்டேன். ‘என்னக்கா இப்படி பண்ணிட் டேன்னு?" ‘போடா சுதன் ... உனக்குத் தெரியாது. இந்த வியாதியோட ஒரு துணையும் இல்லாம என்னால போராட முடியலை. எந்தப் பொண்ணுக்கும் இப்படி எல்லாம் வரக் கூடாதுடா. நீ பார்க்க வரவிடாதே’ன்னு சினிமாவுல சாவாங்களே. அதே மாதிரி என் மார்புல சாய்ஞ்சு உசர விட்டா.

அதான்...

அதனாலதான் உங்கள கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சேன். இந்தச் சம்மதம் அவ ஆன்மாக்கு சந்தோஷம் தரும். அதைவிட அக்காப் பாசம்தான். தியாகம் நெசம்னெல்லாம் பொய் சொல்ல விரும்பலை. ஆனா சத்யமா கல்யாணத்துக்குப் பிறகு என் மனைவியை... ஐ மீன்... உங்களை..."

"உன்னைன்னே சொல்லுங்க."

"தேங்க்யூ... உன்னை எல்லாரையும் போல நேசிப்பேன். அந்தக் காக்கா வலிப்புக்கு எதிரா என் உசிரையும் கொடுப்பேன்."

அப்பட்டமான உண்மை பேசிய அந்த மனிதனை நிமிர்ந்து ஒரு விதப் பூரிப்போடு பார்த்ததும் அதன் பின் அவன் சிரிக்கச் சிரிக்கப் பேசியதும்...

ஓடும் காருக்குள் மைதிலிக்குள் ஓடிக் கொண்டே இருக்கிறது.

"அன்று என்னையே ஒப்புக் கொண்ட சுதர்ஸன், இன்றைய ஊனநிலையில், உங்களை நான் ஒப்புக் கொள்ளாமல் போவேனா என்ன?"

தன் தீர்மானத்துக்கு ஒரு மதிப்பு கொடுத்துக் கொள்கிறான். கார் கச்சிதமாக ஆஸ்பத்திரி முன் தேய்ந்து நிற்கிறது. இறங்கி நடக்க ஆரம்பிக்கிறாள். பாதுகாப்பாகத் தொடர்கிறான் டிரைவர்.

நாச்சியப்பன்,

ரூமுக்குள் நுழையும்போது சுதர்சன் வாக்மேனில் கண்களை மூடியபடி கந்த சஷ்டிக் கவசம் கேட்டபடி இருக்க அருகில் ஜன்னலோரமாக கர்ட்டனை விலக்கி வெளியே பார்த்தபடி அவன் அப்பா ராஜரத்னம் நின்று கொண்டிருக்க...

"ஹலோ..." மைதிலி குரல் அவர்களைக் கலைக்கிறது. பார்க்கன்றனர்.

"எப்படி இருக்கீங்க...?" விசாரிப்புடன் சுதர்சன் படுக்கை அருகே செல்கிறாள்.

"வாம்மா... " சுரத்தில்லாமல் வரவேற்கிறார் ராஜரத்தினம். மைதிலி காதில் வாங்கிக் கொள்ளாதபடி சுதர்சனின் கால்பரப்பைப் பார்க்கிறாள். போர்வை ஒன்று மூடிக் கொண்டிருக்கிறது. கைகள் விலக்குகின்றன, அடுத்த நொடி கண்கள் கலங்கி அழத் தொடங்குகின்றன.

சுதர்சனும் கலங்கிப் போகிறான்.

"மைதிலி... என்ன இது?" சாமாதானப்படுத்தப் பார்க்கிறான்.

"என்னவா? என்னால தாங்கிக்க முடியல சுதர்சன். கடவுள் கருணை மயமானவர்ங்கறதெல்லாம் பொய்"

"நோ... டென்ஷன் ஆகாதெ மைதிலி, ப்ளீஸ்..." அவன் தடுக்க முனையுன் முன் அவளை வெடுக்கென்று தாக்க ஆரம்பிக்கிறது ஃபிட்ஸ்!

"நினைச்சேன்..." கதறியபடி வந்து டிரைவர் தாங்கிக் கொள்ள ‘டாக்டர்ர்ர்..."

உரக்கக் குரலெடுக்கிறார் ராஜரத்தினம். கதவைத் திறந்து எட்டிப் பார்த்துவிட்டு ஏதாவது ஒரு இரும்புத் துண்டுக்காக அவர் சுற்றும் முற்றும் பார்க்கும்போது அவளைத் தாங்கியபடி இருக்கும் டிரைவர் நாச்சியப்பன் சாதுர்யமாக தன் பாக்கெட் கத்தியை எடுத்து அவள் வலது கரத்தில் கூர்முனை எதிர் வருபவர்களைத் தாக்கும் விதத்தில் பிடித்துத் தந்துவிட்டு அவளால் உந்தித் தள்ளப் பட்டது போல கீழே விழ, ஓடிவரும் ராஜரத்னம் தாங்கிப் பிடிக்கப் பார்க்கிறார்.

அந்த நொடிப் போதில் வலிப்புக் கரங்களில் கத்தியைப் பார்த்து தனது விதிர்ப்பைக் காட்டிக் கொள்ளும் போது அந்த விசைக்கரங்கள் நச்நச் என்று அவரது அக்குள் மார்பைக் குத்தத் தொடங்குகிறது...!

"ஐயோ அப்பா... டாக்டர் ... நர்ஸ் யாராவது வாங்களேன்..." படுக்கையில் இருந்தபடி கத்த ஆரம்பிக்கிறான் சுதர்சன்.

டிரைவர் சமாளித்து எழுந்து ஓடிப் போய் மைதிலியின் கரத்தை இழுத்துக் கட்டுகிறான்.

சப்தம் கேட்டு சிலர் ஓடிவர...

தொலைபேசி சிணுங்குகிறது. கையில் எடுக்கிறான் தியாகு.

"சார்... நீங்க சொன்ன மாதிரியே மைதிலிம்மாவுக்கு ஃபிட்ஸ் வந்துச்சுங்க. சாமர்த்தியமா கத்தியைக் கைல கொடுத்து அங்க இருந்த பையனோட அப்பாவைக் குத்த வெச்சுட்டேன். அப்பால இழுத்துக் கட்டி காப்பாத்தற மாதிரியும் அல்வா கொடுத்துட்டேன். ஒரே அல்லோல கல்லோலமா இருக்கு. வர்றீங்களா நீங்க?"

"சபாஷ் நாச்சியப்பா. இதுக்கு தானே காத்துக்கிட்டிருந்தேன். இதோ

கிளம்பி வர்றேன். இனி நீ அந்த காருக்கு டிரைவர் இல்ல முதலாளி."

ரிசீவரை அள்ளி உறிந்துவிட்டு கிளம்பத் தயாராகிறான் தியாகு.

# 20

இதற்கு மேல் ஒரு வேகத்தோடு யாருமே வர முடியாது எனும் படியான வேகத்தோடு ஏவுகணை போல வந்து சேருகிறான் தியாகு.

"உன்னை யார் கத்திய கைல கொடுக்கச் சொன்னது. அறிவு இருக்கா மேன் உனக்கு? ஸ்டுபிட், ஃபூல், இப்ப பாத்தியா? நர்ஸ், அப்பாவுக்கு ஒண்ணும் ஆபத்தில்லையே... எப்படி இருக்காங்க?"

"நோ பிராப்ளம் மிஸ்டர் சுதர்சன். நீங்க கொஞ்சம் கொயட்டா இருங்க. நிச்சயமா உயிருக்கு ஒரு ஆபத்தும் இல்லை."

"கடவுளே... லைஃப் இப்படி கூடவா திசை திரும்பும்? ஸ்டுப்பிட் ஸ்டுப்பிட்... உன்னை யாருய்யா கத்திய கொடுக்கச் சொன்னது. கொஞ்சமாவது அறிவு வேண்டாம். கடவுளே... கடவுளே..."

சுதர்சன் பதறி வழிந்து கொண்டிருக்கிறான். எதிரே குற்றவாளி போல் கோழிக்குஞ்சாட்டம் முடங்கி நிற்கிறான் டிரைவர். சகலத்தையும் வந்து கவனிக்கும் தியாகுவைப் பார்க்கும் டிரைவர்.

"வாங்க சார்... நடக்கக் கூடாதது. நடந்து போச்சு சார். அம்மாவுக்கு வலிப்பு வந்துடிச்சு. இரும்பைக் கொடுக்க தேடுனப்போ பழம் நறுக்கற கத்திதான் கைல கிடைச்சுச்சு. யோசிக்கத் தோணலைங்க. எடுத்துக் கொடுத்துட்டேன். அது என்னடான்னா?" டிரைவர் நடிப்பில் சிவாஜியை எட்டிப் பிடிக்கப் பார்க்கிறான்.

"யோசிக்கத் தோணலைன்னா போடா... என்ன பேசறே நீ? அறிவு மழுங்கிப் போச்சுடா உனக்கு. இப்ப அவ எதுக்கு வந்தா இங்க? நான் கூப்பிட்டேனா?"

திரும்பவும் சுதர்சனிடம் பதட்டப் பாய்ச்சல். படுத்த நிலையில் சற்று நிமிர்ந்து எழுந்து கட்டில் நடுங்கக் கத்துகிறான். சோகம் தன்னிலை மறக்க வைத்துவிட்டிருக்கிறது.

கத்த விட்டுக் கொண்டேயிருக்கிறது.

"ஆமா, மைதிலி எங்கே?"

"அம்மா மயக்கமா இருக்காங்க."

"மை குட்நெஸ், சாரி மிஸ்டர் சுதர்சன். ஐ ஆம் எக்ஸ்ட்ரீம்லி வெரி சாரி. மைதிலி, நீங்க கல்யாணத்து மறுபடி சம்மதிச்ச சந்தோஷத்தோட தான் உங்களைப் பார்க்க வந்தாங்க. இப்படி ஆகும்னு தெரியாது அவங்களுக்கு."

"வலிப்புக்காரியை ஏண்டா இப்டி வெளிய விட்டு வேடிக்கை பார்க்கறீங்க? வீட்ட விட்டு வெளிய வரலாமா இந்த மாதிரி கேசெல்லாம்? அறிவில்ல?"

"சாரி சுதர்சன் வெரி சாரி! நர்ஸ் மிஸ்டர் ராஜரத்னம், இப்ப எப்படி இருக்கார்?"

"ஆபரேஷன் நடந்துக்கிடடிருக்கு. பிளீடிங்க அதிகமாகி பிளட் கொடுக்க வேண்டிய நிலை. நெகடிவ் குரூப் பிளட் கொஞ்சம் ரேராத்தான் கிடைக்கும்போல இருக்கு..."

"சுயநலம்டா உங்களுக்கு... ராம்நத்துக்கு ஒண்ணும் ஆயிடக்கூடாது. ஆனா என் அப்பா ராஜரத்தினம் இளிச்சவாயன். அப்படித்தானே? நர்ஸ் கொஞ்சம் போய்ப் பார்த்துட்டு வாங்களேன். அப்பா எப்படி இருக்கார்?"

சுதர்சன் விட்டால் எழுந்து ஓடுவான் போலத் தெரிகிறது. இதம் பதம் இனிமை என்று பேசுபவன் பாசம் காரணமாகப் பரிதவக்கிறான். அவன் வாயில் வரக் கூடாத வார்த்தை எல்லம் வருகிறது.

இடையில் டாக்டர் ஒருவர் வருகிறார். சுதர்சனுக்கு அவனது புலம்பலை மீறி ஊசி ஒன்றைச் செருகுகிறார். அவன் மயங்க ஆரம்பிக்கிறான். டாக்டர் பார்வை டிரைவர் பக்கம் திரும்புகிறது. கோப அலை பீய்ச்சியடிக்க ஆரம்பிக்க...

"நல்ல வேளை, ராஜரத்தினம் பொழைச்சுட்டார். போயிருந்தா நீ, அந்தப் பொண்ணு எல்லாம் கோர்ட்ல கூண்டுல நிக்க வேண்டி வந்துருக்கும் தெரியுமா? இடியட்! ஆமா நீங்க யார் சார்?" கேள்வி தியாகுவில் முடிகிறது.

"டாக்டர் ஐ ஆம் தியாகு! இவங்க வெல்விஷர்"

"ஆமா, இப்படித்தான் ஒரு ஃபிட்ஸ் கேஸை வெளிய விடுவீங்களா? ராம்நாத் சாரை என் கூடக் கொஞ்சம் பேசச் சொல்லுங்க. அந்தப் பொண்ணையும் இப்ப வெளிய விட முடியாது. சிவியர் பிரெய்ன் ஸ்டார்ம் அவங்களுக்கிருக்கு. ஸ்பெஷல் ட்ரீட் தந்தாகணும். இதுக்கு முந்தி யார்கிட்ட காட்டினாங்க. என்ன ட்ரீட்மென்ட் தந்தாங்கங்கற

டீடெய்ல்லாம் வேணும் எனக்கு..."

டாக்டர் உதறியபடி நடக்கிறார். தியாகு பவ்யமாகத் தலையை அசைத்து விட்டு டிரைவர் முகத்தைப் பார்க்கிறான். அவனிடம் ஒரு குறுஞ்சிரிப்பின் ஆரம்பம். தியாகு நெருங்கி தோளைத் தொட்டு காதோரமாகச் சொல்கிறான். "அசத்திட்டே காரை உனக்கே சொந்தமாக்கிட்றேன்!"

அவ்வளவு சீக்கிரத்தில் அசரமாட்டார். சாரங்கபாணி, தியாகு சொன்னதைக் கேட்டு அப்படியே நடுங்கி ஒரு புறாக் குஞ்சாய் சோபாவில் சரிகிறார்.

"என்ன சார் நீங்க... இதுக்கெல்லாம் கலங்கலாமா? கவலைப்படாதீங்க" தியாகு வருடித் தருகிறான் வார்த்தைகளால்.

"முடியல தியாகு... மைதிலியைப் பொறுத்த மட்டில அதிர்ஷ்டம் தபால்ல வந்தா துரதிர்ஷ்டம் தந்தியில் வருது. இப்ப நான் என்ன பண்ணுவேன்."

சாரங்கபாணி கலங்கிப்போய் கண்ணீர் உகுக்கிறார்

"சார், உங்களுக்கு இவ்வளவு பாசமா?" நிஜமாலுமே தியாகு நெகிழ்ந்து கேட்கிறான்.

"பாசம் சாதாரண வார்த்தை தியாகு. மைதிலி ரொம்பப் பாவம்! பத்து வயசுல மாடியில் இருந்து கீழ விழுந்து தலைல அடிபட்டுது. அன்னில இருந்து இன்னிக்கு வரை அந்தப் பொண்ணு பட்ற அவஸ்தை இருக்கே..." துக்கத்தில் உச்சம் போகிறார் சாரங்கபாணி.

"சரி பண்ணிடலாம் சார், டோன்ட் ஒர்ரி..."

"என்னத்த பண்ண. டெல்லி, பம்பாய்னு பாக்காத டாக்டர் இல்ல. இட் இஸ் எ பெக்கூலியர் கேஸ்னு கடைசியில கை விரிக்கறாங்க."

"ஆமா, சாருக்குத் தெரியுமா?"

"தெரியாது, தெரியவும் வேண்டாம்."

"நானும் அதைத்தான் சொல்ல வந்தேன். ஆனா அந்த டாக்டர் விடமாட்டார் போல தெரியுதே."

"நான் பாத்துக்கறேன். பை தபை ஒரு முக்கிய விஷயம்."

"என்ன சாரங்கபாணி சார்?"

"இப்படி வா..." எழுந்து மைலா ஃபார்மா அலுவலகத்தில் ராம்நாத்தின் அறைக்குள் அவனோடு உள் நுழைகிறார் சாரங்கபாணி. எதிர்ப்படுபவர்களிடம் எல்லாம் ராயல் சல்யூட்! அறையில் டேபிள் மேல் ஒரு ஸ்பெஷல் ஃபைல். முன்னால் நாற்காலிகள், ஒன்றில் அமர்ந்து பஸ்ஸரை அழுத்த வாதிராஜ் ஓடி வருகிறான்.

"வாதி... மார்க்கெட்டிங் மேனேஜர் அக்கவுண்ட்ஸ் மேனேஜர் இரண்டு பேரையும் கொஞ்சம் வரச் சொல்..."

அடுத்த இரண்டாவது நிமிடத்தில் இரண்டு ஐம்பது வயது அரை நரை மனிதர்கள் மிடுக்காக உள் நுழைகின்றனர்.

"வாங்க ஏசி, வாங்க தாஸ், ப்ளீஸ் உக்காருங்க" உட்காருகின்றனர்.

"சார், மிஸ்டர் தியாகு..."

தெரியும்... எம். டி. நேத்து இவரைப் பத்திதான் நிறைய சொன்னார்..."

"சொல்லிட்டாரா... அப்ப உங்க வரைல நோ சஸ்பென்ஸ்!"

"நோ சார்..."

"ஓ.கே. மிஸ்டர் ஏசி, நீங்களே உங்க கையால அந்த ஆக்டரைத் தியாகு கிட்ட கொடுங்க. மோஸ்ட் சீனியர் ஆச்சே..."

"வித் ப்ளெஷர்" ஏசி என்னும் அனந்த சந்திரன் ஃபைலைத் திறந்து ஆர்டர் ஷீட்டை எடுத்து ஒரு பார்வை பார்த்துவிட்டு தியாகு எதிரே தர, அவன் அதைப்பார்த்து விட்டு,

"என்ன சார் இதெல்லாம்" என்று கேட்கிறான்.

"தியாகு... இனி நீதான் ஜெனரல் மேனேஜர். இது ராமநாத்தோட ஆசை, அக்சப்ட் பண்ணிக்கோ. இந்த கம்பெனி உன் டைனமிக் லீடர்ப்பை எதிர்பார்த்து இதைச் செய்திருக்கு."

"சார்... இது...இது..."

"எதுவும் சொல்லாம வாங்கிக்கோ... இப்ப நல்ல முகூர்த்த நேரம்."

"வேண்டாம் சார். இதுக்குத்தான் சார் வரச் சொன்னாரா?"

"ஆமாம். மாட்டேன்னு சொல்லி சிக்கலைப் பெரிசு படுத்தாதே. மைதிலியால இனி ஆபீஸ் வர முடியாது. உனக்கே அவ சிக்கல் தெரியும்.

இவ்வளவுக்குப் பிறகு நான் அவ ஹெல்த்துக்காகச் சிந்திக்கலைன்னா நல்லா இருக்காது. ஒரு ஜப்பான் டாக்டர் அவளுக்கு ட்ரீட்மென்ட் தரப் போறார். நான் அதுக்கு வேண்டியதைச் செய்யணும். இவங்க உனக்கு கோவாபரேட் பண்ணுவாங்க. என்ன மிஸ்டர் ஏசி. தாஸ்..."

சாரங்கபாணியின் கேள்விக்குச் சற்று தாமதமாய்த் தடுமாறியபடி "யெஸ்... யெஸ்" என்கிறார்கள் இருவரும்.

தியாகு சங்கடப்பட்டபடி ஆர்டரை வாங்கிக் கொள்கிறான்.

"அப்ப நாங்க கிளம்பறோம். .." ஏசியும், தாஸும் கிளம்ப ஆயத்தமாகின்றனர். சாரங்கபாணி அவர்களோடு கூட வேளியே வருகிறார்.

"சாரி ஏசி... தாஸ் உங்களை பிரமோட் பண்ணலியேன்னு உங்களுக்கு வருத்தம் இருக்கலாம். நான் ராம்நாத்கிட்ட எவ்வளவோ சொன்னேன். கேக்கலை. பிரைவேட் கன்சர்ன்ல பிரமோஷன் பாலீசீங்கறது சமயங்கள்ல தவிர்க்க முடியறதில்ல. அதோட இப்பல்லாம் ஜி. எம். முக்கு டைனமிக் யங்தான் எல்லாரும் பிரபோஸ் பண்ணறாங்க. அடுத்த ரவுண்டுல நான் ராம்நாத்கிட்ட சொல்லி..."

அவர்கள் சாரங்கபாணி பேச்சை மழுவதுமாகக் கேட்காதபடி வேகமாக விலகிச் செல்ல ஆரம்பிக்கின்றனர்.

சாரங்கபாணிக்கும் புரிகிறது.

உள்ளே...

அந்த நாற்காலியையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நிற்கிறான் தியாகு. நினைத்ததை விட வேகமாக வசப்பட்டுவிட்டது நாற்காலி. கண்களில் பளபளப்புக் கூடி ஆசை பெருக்கெடுத்துப் பீறிடுகிறது!

நாற்காலியை வருடித் தந்து அமருகிறான். கண்ணாடி மேஜையில் முகம் தெரிகிறது. அதில் இன்னொரு முகமும் தெரிய, நிமிர்ந்தால் எதிரில் ஸ்டெல்லா.

கச்சிதமாய் வெற்றிப் புன்னகையை ஒட்ட வைத்துக் கொண்டு நிற்கிறாள். சாயம் பூசிய வெண்ணை விரல்களைக் குலுக்குவதற்காக நீட்டுகிறாள்.

"கங்கராஜுலேஷன்ஸ்!" அவனும் நீட்டிய கரத்தைத் தன் கரங்கறளால் பற்றுகிறாள். சுற்றிலும் ஒரு பார்வை பார்க்கிறான்.

பிரைவசியான அறை, கமகமவென்ற பெர்ஃபியூம் வாசம்! ஸ்டெல்லாவின் கடைந்தெடுத்து நிற்கும் தோற்றம் . கூர்மையான பிரம்மமேடு. கண்ணையே குத்திச் சூடு தாளிக்கிறது. அப்படியே வலுவோடு ஒரு இழு இழுக்கிறான். முன் இழுக்கிறான். மேஜைக்கு நடு மையம் வரை வருகிறது அவள் முகம். "பெரிய ஆள்டா நீ." என்கிறது சிணுங்கும் உதடு. "எதுல... இதுலயா?" கேட்டபடி தன் உதட்டை முன் கொண்டு சேர்க்கிறான் கச்சிதமாக அப்பொழுது கதவைத் திறந்து கொண்டு வந்து நிற்கும் சாரங்கபாணி அதைப் பார்த்து...

# 21

சாரங்கபாணி பார்த்துவிட்டது தெரிந்ததும் இதழும் இதழும் வேகவேகமாகப் பிரிகின்றன, காத்திருந்த மாதிரி அந்திக் கட்டை நடுக்கம் உடம்பில் பரவ ஆரம்பிக்கிறது.

ஸ்டெல்லா துவட்டாமல் பாத்ரூமில் இருந்து குளித்து விட்டு வருகிற மாதிரி வியர்க்கவும் ஆரம்பிக்கிறது.

"சபாஷ்... என்ன தியாகு இது. இங்க என்ன நடந்துகிட்ட இருக்க?" சாரங்கபாணியும் பதட்டம் கூடுகிறார்.

"சார் அது வந்து ... வந்து ஸ்டெல்லா கண்ணுல தூசு புகை..."

தியாகு சமாளிக்கப் பார்க்கிறான்.

"நோ... ஒரு தவிப்பு எப்பவுமே அடுத்த தப்புக்குதான் துணை போகுது. இப்ப நீயும் அதை நிரூபிக்கறே. எவ்வளவு நம்பிகையோட நல்ல எண்ணத்தோட ராம்நாத் இந்த பொறுப்பை உன்கிட்ட கொடுத்துருக்கான்... அதை நீ இப்படி கெடுத்துப்பே? ஸ்டெல்லா நீ டைப்பிஸ்ட்டா இல்ல ஆள் மயக்கியா?"

சாரங்கபாணி கோபம் கலையாது ஸ்டெல்லா பக்கம் திரும்ப,

"சார் சார்... நீங்க தப்பா புரிஞ்சுட்டிங்க நாங்க ஒருத்தரை ஒருத்தர்..." அவளும் சமாளிக்கப் பார்க்கிறாள்.

"ஒருத்தரை ஒருத்தர்...?"

"லவ் பண்றோம் சார்..."

"பொய்... பொய் மேல பொய்..."

"இல்ல சார்... தியாகு சொல்றது உண்மை. அந்தக் கிட்நாப்ல தியாகு என்னைக் காப்பாத்தினதுல இருந்தே நான் அவர் மேல..."

ஸ்டெல்லா தலை கவிழ்ந்து முன்பு காட்டாத வெட்கத்தை இப்பொழுது காட்டுகிறாள்.

சில வினாடிகள் இறுக்கமாக கழிகின்றன. பின் தளர்கிறது. "சரி அது உண்மையாகவே இருக்கட்டும். அதுக்காக ஆபீஸ்லேயே இப்படியா?"

"சாரி சார்... தப்புதான. இனி இந்த மாதிரி..." தியாகு பூசி மெழுகப்

பார்க்கிறான்.

சாரங்கபாணி பதில் ஏதும் சொல்லாமல் விலக ஆரம்பிக்கிறார். விலகும் விதத்தில் ஒரு வகை சீற்றம் மட்டும் நன்கு தெரிகிறது.

ஸ்டெல்லா மருண்டு போய் தியாகுவைப் பார்க்கிறாள்.

தியாகு அந்தப் பார்வையை சந்தித்த அளவில் மட்டென்று தலையில் அடித்துக் கொண்டு சேரில் அமர்கிறான்.

"இந்தக் கிழவனை மறந்து உணர்ச்சி வசப்பட்டுட்டேன்..." என்கிற பீறிடல் உதட்டில்...

"அப்படிச் சொல்லாதீங்க தியாகு. எல்லாம் நல்லதுக்கு தான்" என்கிறாள் ஸ்டெல்லா. முகத்தில் அழுத்தமான ஒரு அரைச் சிரிப்பு தெரிகிறது.

"என்ன நல்லதுக்குத்தான்..." திரும்ப சீற்றம் தியாகுவிடம் "எனக்கு ஜி. எம். தியாகு போதும். முதலாளி தியாகு வேண்டாம்." சொன்ன வேகத்தில் விறுவிறுவென்று அவள் திரும்ப தியாகு "புல்ஷிட்..." என்று கைகளைக் குத்திப் பிசைய இடை நறுக்குகிறது. தொலைபேசி எடுக்கிறான்.

"ஹலோ தியாகு கங்க்ராஜுலேஷன்ஸ்!" மறு முனையில் நாரயணன் குரல்.

"எங்கிருந்துடா பேசறே?"

"ஆபீஸ்ல இருந்துதான். டேய் ஜி. எம். ஆயிட்டியாமே? தியாகு வந்திருக்கானான்னு எதார்த்தமா ரிஷப்ஷன்ல கேட்டா ஜி. எம்மான்னு திருப்பிக் கேக்கறாங்களே. தியாகு நிஜமா நீ பெரிய கில்லாடிடா..."

தியாகு பதில் பேசாமல் ரிசீவரை பிடித்துக் கொண்டே இருக்கிறான். சாரங்கபாணியிடம் மாட்டிக் கொண்ட கசகசப்பு அனைத்தையும் மீறி பொங்கி வழியும் போது எதைக் கொள்ள முடியும்?

"டேய்... என்னடா பதிலைக் காணோம். பேசடா, ஆர் யூ ஆல்ரைட்?"

"ஆங்ங்.. என்ன கேட்டே?"

"ஆர்யூ ஆல்ரைட்?"

"ஐ ஆம் ஆல்வேஸ் ரைட் அண்ட் அலெர்ட்..."

"அதான் ஜி.எம் ஆயிட்டே. முப்பது நாளில் ஹிந்தி கத்துக்கறது எப்படி? தெலுங்கு கத்துக்கறது எப்படின்னுல்லாம் புக் இருக்கு தியாகு. ஜி. எம் ஆகறது எப்படின்னு இல்லைடா. நீ எழுதலாம்."

"அறுக்காதே நாராயணா. நான் இப்ப மூட் அவுட்"

"என்னடா முதல் நாளே மூட் அவுட்ங்கறே?"

"சரி வெச்சுடட்டுமா?"

"அடப்பாவி. என்னடா அவசரம். ஆமா ட்ரீட்லாம் கிடையாதா?"

"தண்ணி போட்றியா சொல்லு தரேன். சும்மா இட்லி, வடை, போதும்னு சொல்லாதே. ட்ரீட்னா தண்ணி இருக்கணும்."

தியாகு அழுத்தமாய் சொல்லும் போது திரும்பவும் சாரங்கபாணி அறைக்குள் பிரவேசிக்கிறார். 'தன் பேச்சைக் கேட்டுவிட்டாரோ?'

ரிசீவரைப் பிடித்தபடியே அவரைப் பார்க்க அவரும் ஒரு மாதிரிப் பார்வையோடு அறை ஷெல்பில் இருந்து ஒரு ஃபைலோடு வெளியேற ஆரம்பிக்கிறார்.

அவர் போகும் வரை எதுவும் பேசாது அவரையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு திரும்ப ரிசீவரில் கத்த ஆரம்பிக்கிறான் தியாகு.

"ஏண்டா உனக்கு போன் பண்ண வேற நேரமே கிடைக்கலியா?"

"ஏண்டா, இப்ப பேசினா என்ன தப்பு?"

"போடா ஃபூல்... இங்க ஒரு சனியன் என்னை நேர் பார்வை பார்த்துக்கிட்டிருக்காண்டா. போனை வை. சாயங்காலம் பேசிக்கலாம்."

"கட்டாயம் பேசறோம் தியாகு. நானும் உனக்கு ஒரு குட் நியூஸ் சொல்லப் போறேன். வெச்சுடட்டுமா?"

மறுமுனை முடங்க தியாகுவும் ரிசீவரை முடக்கி விட்டு எழுந்து மெல்ல வெளியே எட்டிப் பார்க்கிறான்.

சாரங்கபாணி மார்க்கெட்டிங் டேபிள் அருகே ஏதோ தீவிர சிந்தனையோடு உட்கார்ந்திருப்பது தெரிகிறது.

'முதலில் முத்தம். பின்னால் குடி என்று இரண்டு நெகடிவான விஷயங்களை சத்யசந்தனைப் போன்ற தன்னிடம் பார்த்துவிட்ட

அதிர்ச்சியில் வந்திருக்கும் தீவிர சிந்தனையா?

இது ராம்நாத் வரை போய் பெரிய புயலாக உருமாறுமோ?

கேள்வி அலையடிக்க திரும்பி வந்து சீட்டில் அமர்கிறான்.

டொக் டொக்... கதவு தட்டப்பட 'யெஸ்' என்கிறான். பர்சனல் மேனேஜர் சந்தானம் எட்டிப் பார்க்கிறார்.

"குட்மார்னிங் சார்... கிளாட் டு மீட் யூ ஆம் சந்தானம் ஃபிரம் பர்சனல்."

"ப்ளீஸ் பீ சீட்டட் மிஸ்டர் சந்தானம். சாரங்கபாணி உங்களப் பத்தி சொன்னார். லீவுல போயிருந்தீங்களோ?"

"ஆமாம் சார். எல்லாரையும் உங்களுக்கு அறிமுகப்படுத்தச் சொன்னார் எம்.டி. அப்படியே ஃபேக்டரிக்கும் கூட்டிகிட்டு போய் லேபர்ஸோட ஒரு மீட் வைக்க சொன்னார். உங்க வசதியைச் சொன்னீங்களா...?"

சந்தானம் ஹைலி புரோஃபஷனல் என்பது பர்சனல் டச் அப் துளியும் இல்லாத அவரது பேச்சில் இருந்து தெரிய வருகிறது. தியாகுவுக்குள் லேசான திக்கு முக்காடல்.

"சென்டிமென்டா ஈவினிங் ஃபைவ் டு சிக்ஸ் நல்ல நேரத்துல வெச்சுக்கணுமனாலும் வெச்சுக்கலாம் சார்."

தியாகுவின் தயக்கத்தை வேறு மாதிரி புரிந்து கொள்கிறார் சந்தானம்.

"யெஸ் யெஸ்... அப்பவே வெச்சுக்கலாம் மிஸ்டர் சந்தானம்" தியாகுவின் சமாளிப்போடு அடுத்த நொடியே எழுந்து கொண்டு அகல ஆரம்பிக்கிறார்.

தியாகு பெருமூச்சோடு கைகால்களை உதறிவிட்டு இறுக்கமாக பின் கட்டிக்கொண்டுத் தீவிரமாக யோசிக்க ஆரம்பிக்கிறான்.

சாரங்கபாணியின் சிந்தனை தோய்ந்த முகம் நிமிர்கிறது.

நிச்சயம் சாரங்கபாணி ராம்நாத் வரையில் பேசத்தான் போகிறார். பழைய பாத யாத்திரை இமேஜ் போய் 'அடப்பாவி நீ இவ்வளவு மோசமானவனா?' என்கிற ஒரிஜினல் இமேஜ் வந்து சேரப் போகிறது.

இந்த நாற்காலியும் நீடிக்குமா நீடிக்காதோ?

கவலை பிடித்துக் குதற ஆரம்பிக்கிறது. தன்னெஞ்சே தன்னைச் சுடும்

என்ற குறள் வாசகம் வேறு தேவையில்லாமல் குறுக்கும் நெடுக்குமாய் ஊர்வலம் போக ஆரம்பிக்கிறது.

‘நூல் பிடித்த மாதிரி திட்டமிட்டுப் பிடித்த பதவியை இப்படி சேர்ந்த முதல் நாளிலேயே ஆட்டம் காண விட்டு விட்டோமே...’ ஆற்றாமை முகத்தில் ஆயிரம் கால் கொண்டு சுட ஆரம்பிக்கிறது.

'கிழவா நீ பெரிய இடைஞ்சல் உன்னை...’ மேஜை என்று பாராமல் ஓங்கிக் குத்துகிறான். கண்ணாடி தெறித்து கையையும் குத்தி ரத்தம் பாய்ச்சுகிறது.

திரும்ப எதற்கோ அறைக்குள் நுழையப் பார்த்த சாரங்கபாணி இதைப் பார்த்துவிட்டு பதறியபடி வருகிறார்.

"ஏய்... என்னப்பா இது? என்னாச்சு உனக்கு?"

"விடுங்க சார்... விடுங்க... ப்ளீஸ்... நான் இன்னிக்கு அப்படி நடந்துகிட்டிருக்க கூடாது. என்னையே எனக்குப் பிடிக்கலை சார். ச்சே! என்ன ஒரு மோசமான மனுஷன் நான். ராம்நாத் சாருக்கு தெரிஞ்சா எவ்வளவு வேதனைப்படுவார்?"

ரத்தக் கசிவுக்கு நடுவில் முயன்று நடிக்கிறான். "முட்டாள்... முதல்ல கட்டு போட்ற வழியைப் பார். ராம்நாத் ஹெல்த் இருக்கிற நிலைல உன்னை பத்தி, மைதிலி பத்தில்லாம் தெரிய வந்தா அடுத்த நொடியே உசுரை விட்றுவான். இதை எல்லாம் சொல்ல நான் என்ன மடையனா? இவ்வளவு ஃபீல் பண்றியே இது போதாது?"

கத்தலோடு ஃபர்ஸ்ட் எய்டுக்கு ஆயத்தமாகிறார் சாரங்கபாணி.

"அப்பாடா... தப்பிச்சேன்!" தியாகுவிடம் நிம்மதிப் பெருமூச்சு.

முதலில் விபூதி, பிறகு குங்குமம். இட்டு முடித்த கையோடு ஒரு நெகிழ்வான கை கூப்பில் பின் ஆசுவாசத்தோடு பேச ஆரம்பிக்கிறாள் மகாலட்சுமி.

"எப்படியோ உன் அப்பா பொழைச்சுட்டார் சுதர்சன். எல்லாம் அந்த கற்பகாம்பாள் அனுக்ரகம்தான் எவ்வளவோ சொன்னேன் கேக்கலை நீங்க. இப்ப பார்த்தியா?"

சுதா... அந்தப் பொண்ணு ஒரு பரம தரித்திரம் பிடிச்சவடா. அவ கால் பட்டா பட்ட இடம் துலங்காது. இப்ப சொல்றேன். குண்டு வைப்பேன்னு சொன்னாலும் சரி, கொலையே பண்ணுவேன்னு சொன்னாலும் சரி அவ

நமக்கு வேண்டாம். என்ன சொல்றே?"

சுதர்சனின் பெட் அருகே அமர்ந்து கொண்டு அவள் அப்படிக் கேட்கும் போது அவனால்தான் என்ன சொல்லி விடமுடியும்? ஒரு மாத தாடி முகத்தோடு கலக்கமாகப் பார்க்கிறான்.

"உன்னைப் பாக்கப் பாக்க வயித்த எரியுறதுடா... எப்படி இருப்பே? இப்படி..." மகாலட்சுமி பேச முடியாமல் அப்படியே கட்டிக் கொண்டு கண்ணீர் பெருக்கும் போது சமாதானப் படுத்தக் கூட தோன்றாமல் சுதர்சனும் சேர்ந்து அழ ஆரம்பிக்கிறான்.

"அம்மா... எனக்கு எதனாலம்மா இப்படி ஆனது? நான் யாருக்கு என்ன கெடுதல்மா செஞ்சேன்." அழுகையோடு பொருமலைக் கலக்கிறான்.

# 22

பக்கத்தில் இருக்கும் மேட்ரனையே அது என்னவோ செய்கிறது. ஒதுங்கிப் போய் நிற்கிறாள். அப்படி போய் நிற்கும்போது அறை வாசலில் மைதிலி நின்று கொண்டிருப்பதை பார்த்து ஒரு க்ஷணம் அதிர்கிறாள்.

"அம்மா நீங்க..." மேட்ரனின் கேள்விக்கு விரக்திச் சிரிப்போடு பதில் சொல்கிறாள்.

"சிஸ்டர்... அவங்க கிட்ட சொல்லுங்க. நான் இனி சுதர்சனை மட்டுமல்ல. எந்த ஆணையுமே மனசுல நினைக்க தயாரில்ல. இந்த ஜென்மத்துல எனக்குக் கல்யாணம்னு ஒண்ணு கிடையாது."

சொல்லிவிட்டு நடக்க ஆரம்பிக்கிறாள். கூடவே இருக்கும் நாச்சியப்பன் ஆவலோடு சேர்ந்து நடக்கிறான். காரிடார் கடந்து ரிசப்ஷனைத் தாண்டும்போது சாரங்கபாணி எதிரில் வந்து கொண்டிருக்கிறார்.

"என்னம்மா அவசரம்... நான் தான் வரேன்னு சொல்லியிருந்தேனே..." என்று இறுகிப் போய்விட்டு அவளோடு சேர்ந்து செல்கிறார். நாச்சியப்பன் ஒரு கூழைக் கும்பிடு போடுகிறான்.

"ஆமா... நீ இன்னும் போகலியா?" வெடுக்கென்று கேட்கிறார்.

"ஐயோ... என்ன சொல்றீங்க?"

"உன்னை டெர்மினேட் பண்ணியாச்சே. மைதிலிக்கு எஸ்கார்டா ராதாமணிய அனுப்பச் சொன்னேனே. தியாகு சொல்லலை?" அவனுக்கு நெஞ்சில் கத்தி ஏறிய மாதிரி ஆகிறது.

"ஐயா... தெரியாம நடந்ததுக்கு இப்படி ஒரு தண்டனைங்களா?" அவன் மிடறு விழுங்குகிறான்.

"தெரிஞ்சு நடந்ததோ தெரியாம நடந்ததோ? நீ ஒரு இர்ரெஸ்பான்சிபிள் பர்சன். ஆபீஸ் போய் காம்பன்சேஷன் வாங்கிக்கிட்டு போய்க்கிட்டே இரு. எவ்வளவு சர்வீஸ் இருக்கோ அவ்வளவு நாளைக்கும் சேலரிய காம்பன்சேஷனா போட்டுதான் டெர்மினேஷன் கொடுத்திருக்கேன்..."

ஆங்... மைதிலி உன்னைப் பாத்துக்க ஷிப்ட் டூட்டியில மேட்ரன்ஸ் ஏற்பாடு செய்துருக்கேன்மா. நீ தனியா இனி டாய்லெட் பாத்ரூம் மட்டும்தான் போகலாம்."

படபடவென்கிற பேச்சோடு காரை நெருங்கி டிரைவிங் சீட்டிலும் அவரே ஏறுகிறார்.

நாச்சியப்பன் பார்த்துக் கொண்டே நிற்கிறான்.

அறை முழுக்க புகை வளையம்!

மல்லாந்து கிடக்கும் நிலையில் தியாகுவிடம் ஆயாசம். பக்கத்திலேயே கையைக் கட்டிக் கொண்டு சோகச் சித்திரமாக நாச்சியப்பன். சற்றுத்தள்ளி சோபாவில் ஸ்டெல்லா.

"சாரங்கபாணி ஐயா எப்பவுமே இப்படித்தாங்கய்யா வெட்டு ஒண்ணு துண்டு இரண்டுதான் அவர் கிட்ட..." நாச்சியப்பனின் முத்தாய்ப்பு தியாகுவின் பிடறியை ஒரு பிடி பிடிக்கிறது.

"சரி போ நாச்சியப்பா... நான் பாத்துக்கறேன்..." சொன்னபடி எழுந்து அமருகிறான்.

"எங்கேங்க? காருக்குச் சொந்தக்காரன் ஆக்கறேன்னீங்க இப்ப கழட்டியே உட்டுட்டாங்க."

"டேய்... இப்பவும் சொல்றேன். நான் சொன்னா சொன்னதுதான். நீ டெர்மினேஷன் ஆர்டரை வாங்கிட்டியா?"

"இல்லைங்க..."

"வாங்காதே... ஒரு வாரம் ஆபீஸ் பக்கமே வராதே! எங்காவது போய் சுத்திட்டுவா. நீ வரும் போது உனக்கு பழையபடி வேலை காத்திருக்கும். காரும் காத்திருக்கும்..."

"எப்படிங்க...?"

"கேள்வி கேக்காதே. கிளம்பு. விசுவாசத்தை மட்டும் மாத்திக்காதே. அப்புறம் நானும் மாறிடுவேன்."

"ஐய்யோ. அதெல்லாம் ஒரு தப்பு வராதுங்க. எனக்குச் சொந்தமா ஒரு கார் வேணும். இந்த வேலைல இருந்துகிட்டு சம்பாதிச்செல்லாம் வாங்க முடியுங்களா?"

"தெரியுதுல்ல ... போய்க்கிட்டே இரு."

நாச்சியப்பன் நகர, ஸ்டெல்லா தியாகுவை ஒரு தினுசாகப் பார்க்கிறாள்.

"என்ன ஸ்டெல்லா பாக்கறே?"

"எதுக்கு தியாகு இவனை இழுத்துக் கட்றீங்க? அதான் சாரங்கபாணி நல்ல காம்பன்சேஷன் தறாரில்லே..."

"கார் தரலையே ஸ்டெல்லா..."

"தியாகு... வேண்டாம் தியாகு! சொன்னா கேளுங்க. ஜி. எம்மாவே நீங்க நிறைய சாதிக்கலாம். இதுவே நல்ல உயரம்தான்."

"என்ன ஸ்டெல்லா சக்களத்தி காய்ச்சல் வந்துடுச்சா அதுக்குள்ள..?"

ஸ்டெல்லா ஆமோதிக்கிற மாதிரி அவனை வெறிக்கிறாள்.

"தெரியும் ஸ்டெல்லா. என்னதான் ஆசை மிகுந்தவளா இருந்தாலும் நீயும் பொண்ணுதானே? ஆனா நான் எப்பவுமே முன் வெச்ச காலை பின் வைக்கறதே இல்லை."

"எப்படி தியாகு. அந்த மைதிலிதான் கல்யாணமே பண்ணிக்கப் பேறதில்லைன்னு சொல்லிட்டாளே..."

"சொல்லத்தானே செய்திருக்கா. அது என்ன நம்ம பிரசிடென்ட் போட்டுட்ட ரூலா என்ன?"

"அப்படின்னா?"

"நான் மைதிலி கழுத்துல தாலி கட்டிக் காட்றேன்."

"நம்ம விஷயம் தெரிஞ்ச சாரங்கபாணி இருக்கும் போது எப்படி தியாகு?"

"பொறுத்திருந்து பார்..."

"என்ன பண்ணப் போறீங்க என்கிட்ட சொல்றதுக்கென்ன?"

"வேண்டாம் ஸ்டெல்லா... என்னைக் கேள்வி கேக்காதே. நான் சொல்றதை மட்டும் நீ கேள். இப்ப ரொம்ப டென்ஷனா இருக்கேன்."

"நான் இருக்கும் போது டென்ஷனா... நோ தியாகு!"

சட்டென்று அவனை அணைக்கிறாள் ஸ்டெல்லா. மார்பின் அழுந்துதலில் அவனுள் ரத்தம் குளோகோஸ் பெருக்கத் தொடங்குகிறது. நரம்பு முறுக்கேற்ற அவள் பின் கழுத்தைப் பற்றியவன் உதட்டைத் தேடி தன் உதட்டால் உரச ஆரம்பிக்கிறான்.

உலகுக்கே மின்சாரம் கொடுக்குமளவு உடம்பில் அதன பெருக்கம். கச்சிதமாக நடுவில் முகத்தை விலக்கி புசுபுசு மார்பில் கைகளை அளம்ப விட்டபடி திரும்பக் கேட்கிறாள்.

சாரங்கபாணியை என்ன பண்ணப் போறீங்க?" அவனும் முனகியபடி சொல்கிறான்.

"கொல்லப் போகிறேன்!"

கொல்லப் பேகிறேன் என்று சொன்னவனை ஒரு வினாடி விடைத்துப் போய்ப் பார்க்கிறாள் ஸ்டெல்லா.

"என்ன ஸ்டெல்லா நீ... எவ்வளவு தைரியமானவ நீ? நீயா இப்படி பயப்படறே..."

"கொலை ஒண்ணும் சாதாரண விஷயமில்ல தியாகு. மாட்டிக்கிட்டா போலீஸ் கோர்ட்டுன்னு..."

"ப்பூ... இதுக்குத்தான் இவ்வளவு பயந்தியா? ஒரு விஷயம் தெரிஞ்சுக்கோ. ஸ்டெல்லா, கொலை செய்துட்டு அகப்பட்டுக்கிட்டவங்களைதான் நீ பாத்துருக்கே. அகப்படாம வாழ்ந்து செத்தவங்களையும் எனக்குத் தெரியும். வாழ்ந்துக்கிட்டிருக்கறவங்களையும் எனக்குத் தெரியும்."

"ஊஹூம்... நான் நம்பமாட்டேன்."

"என்னை வெச்சே கூட நீ அதை நம்பலாம்."

"என்ன சொல்றீங்க தியாகு?" தியாகுவை ஊசிக்குத்தாகப் பார்த்து ஸ்டெல்லா விருட்டென்று நிமிர தியாகு சுதாரிக்கிறான்.

"அதாவது நான் எப்படி சாமர்த்தியமா சாரங்கபாணியைத் தீர்த்துக் கட்டப் போறேங்கறத பார்த்துட்டுனு சொல்ல வந்தேன்."

"வேண்டாம், வேண்டாம், தியாகு. சாரங்கபாணி ரொம்ப நல்ல மனுஷன்."

"போர்க்காலத்துல நல்லவன் கெட்டவன்னு கிடையாது ஸ்டெல்லா. வெற்றி ஒண்ணுதான் குறி."

ஸ்டெல்லா அதற்கு மேல் பேச விரும்பாத மாதிரி குத்துக்காலிட்டு முகம் புதைத்துக் கொள்கிறாள். தியாகு அவனையே பார்த்தபடி எழுந்திருந்து உள்ளே செல்கிறான்.

திரும்புகின்றவனின் கைகளில் இப்பொழுது நெக்லஸ்.

"ஸ்டெல்"

அவள் நிமிருகிறாள்.

"கழுத்தைக் காட்றியா?"

அவள் ஆச்சரியமாகிறாள்.

"இது உனக்காக நான் வாங்கினது. அசல் வைரம்!"

அவள் முகத்தில் பரபரப்பான மாறுதல்கள்.

"விலையைக் கேட்டுடாதே. மயக்கம் போட்டுடுவே."

"எவ்ளோ?"

"நியர்தென் த்ரீ லேக்ஸ்..."

அவள் கண்களில் விரிவில் ஆச்சரிய ஜோதியின் திகுதிகுப்பு.

"அது அட்வான்ஸ்தாண்டா. கோவாபரேட் பண்ணு. கொளுத்திடறேன்."

அவள் பார்வை அந்த வைர நெக்லஸ் மெலேயே இருக்கிறது. சகல உணர்வுகளும் மாறிவிட, வைரம் அவள் எதிரில் ஒளிக் கூத்தாடுகிறது.

இடையில் வாசல் புறமாய் யாரோ வரும் சப்தம்.

எட்டிப் பார்க்கிறான் தியாகு.

# 23

நாராயணன் வந்து கொண்டிருக்கிறான்.

உள்ளே வருபவன் ஸ்டெல்லாவைப் பார்த்து சற்றுத் தயங்க, "வாடா... வா. நம்ம ஸ்டெல்லாதான்" என்கிறான். ஸ்டெல்லா நெக்லஸை மூடியபடி நாராயணனைப் பார்த்து, எழுந்து நிற்க ஆரம்பிக்கிறாள்.

"ஸ்டெல்... தெரியும்ல... என் ப்ரெண்டு நாராயணன்" புகை கொஞ்சம், பேச்சு கொஞ்சம் என்று ஸ்டெல்லாவைப் பார்க்கிறான் அவள் கிளம்பத் தயாராகிறாள்.

"அப்ப நான் கிளம்பறேன் தியாகு... நீங்க ..."

"நீ இரு. அதனால ஒண்ணுமில்ல. என்னடா என்னவோ விஷயம் சொல்லணும்னியே, என்ன விஷயம்?"

"முதல்ல அவளைப் போகச் சொல்லு."

"முடியாது நாராயணா, ஸ்டெல்லா ரொம்ப சென்சிடிவ் தப்பா புரிஞ்சுப்பா."

"அப்ப நான் கிளம்பறேன்."

"டேய் டேய் நில்லு" இப்ப என்ன நடந்துபோச்சு. அவளை ஒரு கெஸ்டா நினைச்சுக்கோ என்ன தப்பு?"

அவன் சொல்லும் போதே கழுத்தில் நெக்லசுடன் அவன் எதிரில் வரும் ஸ்டெல்லா "தியாகு நல்லாருக்கா..." என்று கேட்கிறாள்.

"சூப்பர்!"

"இன்னிக்கு நான் இதைக் கழட்டவே போறதில்ல..."

"அது உன் விருப்பம் ஸ்டெல்லா..."

ஸ்டெல்லா நாராயணனைப் பார்க்கிறாள். அவன் எங்கோ பார்த்துக் கொண்டு நிற்கிறான். அவளை அது என்னவோ செய்கிறது.

"அப்ப நான் கிளம்பறேன் தியாகு."

"வெயிட் பண்ணு ஸ்டெல்லா. நான் ட்ராப் பண்றேன். இவன் கிட்ட

பேசிட்டு வந்துடறேன்."

ஸ்டெல்லா இங்கிதத்தோடு உள்ளே செல்ல தியாகு திரும்ப நாராயணனிடம்...

"டேய்.. பேசுடா... ஆபீஸ்ல ஏதாவது விசேஷமா?" நாராயணன் நிதானமாக தியாகுவைப் பார்க்கிறான்.

"கமான் மேன்... விஷயத்த சொல். நீ சொல்றது கிளாட் நியூஸா இருந்தா இன்னிக்கு ட்ரீட் செமையா இருக்கும்."

"கிளாட் நியூஸ்தான் தியாகு. ரொம்ப நாள் இனி நீயும் நானும் சேர்ந்திருக்க முடியாது."

"என்னடா சொல்றே?" ஒரு சின்ன ‘திடுக்’குடன் தியாகு சிகரெட் சாம்பலை சிமிட்ட...

"கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கேன் தியாகு." தியாகு முகத்தில் ஆச்சரியம் படுவேகமாக பரவுகிறது.

"அட்றா சக்கைன்னானாம் பொண்ணு யாரு?"

"எங்க ஆபீஸ் மேனேஜர் சுந்தரேசன்கறவர் பொண்ணு."

"பரவாயில்லியே. புளியம்கொம்பாவே புடிச்சுட்டியே. நம்பவே முடியலைடா நாணி."

"நீ நினைக்கிற மாதிரி இல்லடா. நான் பாத்துருக்கற பொண்ணு ஒரு ஊமை."

தியாகு ஒரு வினாடி ஆடிப்போகிறான்.

"என்னடா சொல்றே?"

"அதான் சொன்னேன்ல ஊமைன்னு"

"உனக்கென்ன பைத்தியமா?"

"தெரியும்... நீ இப்படித்தான் சொல்வே."

"வேற எப்படிச் சொல்லச் சொல்றே? அது சரி காம்பன்சேஷன் எவ்வளவு? வீடு வாசல் கார், ஸ்கூட்டர்னு..."

"வாய மூட்றா... நான் கல்யாணம் பண்ணிக்கத்தாண்டா விரும்பறேன்.

வியாபாரம் பண்ணலை."

"வேண்டாம் நாணி. சினிமா வசனம் பேசாதே. யதார்த்தமா யோசி."

"எனக்கு எப்பவும் ஒரு நாக்கு. ஒரு சொல்தான். தெரியும் தானே உனக்கு?"

"அதுசரி 'தாதா... பாபா' ன்னு நீ உசுரை விடணும்னு ஆசைப்படறே. நல்லாபடு ஆனா நான் அப்படி இல்லை. எந்த மைலா ஃபார்மாவுக்கு இன்னிக்கு ஜி. எம் மா இருக்கேனோ அதுக்கே நாளைக்கு முதலாயியாகப் போறேன். நீயும் பாக்கத்தான் போறே. அப்புறம் நாணி, பேசாம நீ என் கம்பெனில சேர்ந்துடேன். உன் கம்பெனி தர்றதவிடவும் இரண்டு பங்கு சம்பளத்துக்கு ஏற்பாடு பண்றேன்."

நாணி முறைத்தபடியே தன் அறை நோக்கி உள் செல்ல, தியாகு அதை ரசித்தபடி சிரிக்க...

ஃபினிக்ஸ் பறவையாய் சிறகசைத்தவள் சோர்ந்து சிலைபோல அமர்ந்திருப்பதைக் கவனிக்கிறார் ராம்நாத்.

"ஏம்மா ஒரு மாதிரி இருக்கே?" கேட்கிறார்.

"ஒண்ணுமில்லைப்பா.."

"மாப்பிள்ளையைப் பார்க்கப் போனியே எப்படிம்மா இருக்கார். ஒண்ணுமே சொல்லலியே நீ?"

மைதிலி கலக்கத்தோடு ரம்நாத்திடம், "அப்பா எனக்கு கல்யாணம் வேண்டாம்ப்பா..." என்கிறாள் கேவும் குரலில்.

"ஏம்மா...?"

"வேண்டாம்ப்பா... நீங்க டென்ஷனாகாதீங்க. நான் அப்புறமா சொல்றேன்."

"என்னம்மா நடந்தது" நடுங்கத் தொடங்கிவிட்டது ராம்நாத்தின் தேகம்.

"நான் சொல்றேண்டா..." கச்சிதமாக கத்தரித்தபடி நுழைகிறார் சாரங்கபாணி.

"என்னடா திரும்பவும் ஏதாவது ப்ராப்ளமா?"

"பதட்டப்படாதே ராமநாதா, பிராப்ளம்தான், ஆனா நமக்கு சாதகமான

நிலை."

"விஷயத்தை சொல்லு!"

"டேய்... அந்த சுதர்சனால நடமாட மட்டுமில்ல சரியா பேசக்கூட இனி முடியாதாம். கிட்டத்தட்ட ஒரு கோமா பேஷண்ட் நிலைக்குப் போய்கிட்டிருக்குடா அவன் உடம்பு. கல்யாணம் பண்றது தற்கொலைக்குச் சமம்னுட்டார் டாக்டர், அதான் மைதிலி வருத்தப்படறா."

சாரங்கபாணி ராம்நாத்தை நிமிர்த்துவதற்காக சொல்லும் பொய்யை மைதிலி புரிந்து கொள்கிறாள். இருந்தும் அதை ஜீரணிக்க முடியாதபடி முகத்தில் அதிர்வு.

"நெஜமாவா சொல்றே?"

"ஆமாம் ராமநாதா. அது மட்டுமில்ல. நேத்து நம்ம ஜோசியரை யதார்த்தமா பார்த்தேன் . விஷயத்தை கேள்விப்பட்டு தயவு செய்து இந்த கல்யாணம் வேண்டவே வேண்டாம் ராம்நாத்கிட்ட சொல்லுங்க. அந்த பையன் ஜாதகம் பத்தி எனக்கு நல்லா தெரியும்னார். ஏதோ கால சர்பதோஷமாமே. அதுவும் கூடவே களத்திரம் ரொம்பவும் பாதிக்கப்பட்ட ஜாதகமாம்."

"என்னடா புதுசு புதுசா ஏதேதோ சொல்றே... கல்யாணம் நடக்குமா நடக்காதா?" ராம்நாத் நெஞ்சைக் கைகளில் பிடித்துக் கொள்கிறார்.

"நிச்சயம் நடக்கும் ராம்நாதா. அதுவும் எண்ணி நாற்பது நாள்ல நடந்தே தீரும். மைதிலிக்கு ஏத்த வரன் நெருங்கி வந்தாச்சாம்."

தன்னையும் மீறி ராம்நாத்தை நிமிர்த்துவதற்காக சாரங்கபாணி அடுக்கிக் கொண்டே போக, மைதிலி அங்கு நிற்கவே இஷ்டமில்லாதபடி விலகிச் செல்ல ஆரம்பிக்கிறாள்.

"சாரங்கா... என் மனச் சாந்திக்காக எதையாவது சொல்லாதடா. சத்யமா சொல்லுடா நீ சொல்றதெல்லாம் நிஜமா? இவ்வளவு நாள் நடக்காதது நாப்பது நாள்லதானா நடந்துடும்?"

சாரங்கபாணி ராம்நாத்தை நெருங்கிவந்து உள்ளங்கையை பற்றுகிறார். கை கழுவினது போல வியர்வை ஈரம். அதன் மேல் தன் கையைப் பதித்து சத்யம் செய்தபடி சொல்லுகிறார்.

"நாற்பது நாள்ல ஒரு நல்ல வரனுக்கும் மைதிலிக்கும் கல்யாணம்

நடக்கும் ராமநாதா... இனி நமக்கு நல்ல காலம் தான்... இதை நம்பு நீ. அந்த ஜோசியர் சொன்னா, அந்த சிவனே சொன்ன மாதிரி."

தூர இருந்து பார்க்கும் மைதிலி அடுத்த விநாடியே உணர்வின் அழுத்தத்தால் வலிப்பில் தாக்கத்துக்குள்ளாக "அம்மாடி..." பாய்ந்து செல்கின்றன சாரங்கபாணியின் கால்கள்!

காலை வேளை...

பஸ்ஸர் ஒலிக்கிறது.

கதவைத் திறக்கிறான் தியாகு.

எதிரில் சாரங்கபாணி.

"வாங்க சார்... வாங்க வாங்க..." இடுப்பு லுங்கியை நெகிழ்த்திக் கட்டியபடி வரவேற்கிறான்.

சோர்வாக உள்ளே நுழைகிறார். முகத்தில் கான்க்ரீட் இறுக்கம்.

"உக்காருங்க சார்."

உட்காருகிறார். ஊதுவத்தி வாசம் மூக்கில் நுழையப் பார்க்கிறது. பார்வை ஆச்சரியமாய் சுற்று முற்றும் பார்க்க உள்ளே கிழக்கு பார்த்த ஒரு அறையில் மாடத்தில் சுவாமி படம் வைத்து பூஜை செய்து கொண்டிருக்கிறான் நாராயணன்.

"என்ன சார் விஷயம்... நீங்களே வந்துட்டீங்களே?" மெல்ல பேச்செடுக்கிறான் தியாகு. பெருமூச்செறிகிறார் சாரங்கபாணி.

"தியாகு... இனி அந்த சுதர்சனுக்கும் மைதிலிக்கும் கல்யாணம் நடக்கப் போறதில்ல. தெரியும்தானே உனக்கு?"

"என்ன சார் இது... குண்டைத் தூக்கிப் போடறீங்க?"

ஒன்றுமே தெரியாத மாதிரி கேட்கிறான்.

"ஆமாம்ப்பா... மைதிலியே அவ தலைல மண்ணை அள்ளிப் போட்டுக்கிட்டா, அந்த வலிப்பால் நடந்த கத்திக்குத்துதான் எல்லாத்தையும் கெடுத்துட்டதே."

"ஐய்யய்யோ... முடியாதுன்னுட்டாங்களா அவங்க. மைதிலி என்ன வேணும்னா பண்ணினாங்க?"

"இதை எல்லாம் கேக்கக் கூடிய சூழ் நிலைல நாம இல்லை தியாகு. சுட்ட மண் எப்பவுமே ஒட்டாது. அதை விடு. எனக்கு ராம்நாத்தை நினைச்சாதான் கவலையா இருக்கு."

"ஏன் சார்... அவருக்கு திரும்ப..."

"எங்க ஹார்ட் அட்டாக் வந்துடுமோன்னுதான் பயப்பட்றேன். பொய்யையும் மெய்யையும் கலந்து பேசி அவனை நிமிர்த்தி வெச்சிருக்கேன். எனக்கு இப்ப உன் உதவி வேணும். அந்த கிட்நாப்ல ராம்நாத்தை காப்பாத்தின மாதிரி இதுலையும் காப்பாத்தணும் நீ."

"என்ன சார் பண்ணனும்?"

"அதிக பட்சம் நாப்பது நாளைக்குள்ள மைதிலிக்கு கல்யாணம் பண்ணியாகணும்" சொல்லிவிட்டு நிமிர்கின்றவரை தியாகு புன்னகையோடு பார்த்து கேட்கிறான்.

"பண்ணிடலாம் சார்... நாட்ல மாப்ளைகளுக்கா பஞ்சம்?"

"பஞ்சம்தான்..." சாரங்கபாணி அழுத்தம் காட்டுகிறார்.

"என்ன சார் சொல்றீங்க?"

"மைதிலியோட ஜாதகம் விசித்ரமானதுப்பா. அதுக்கு இந்த உலகத்துலேயே சில ஜாதகம்தான் பொருந்தும். இதை நான் நேற்றுவரை நம்பலை. அதனாலதான் சுதர்சனை ஏற்பாடு செய்யும்போது ஜாதகமெல்லாம் இருந்தும் பாக்கலை. ஆனா இப்ப நம்பறேன்..."

"இப்ப மட்டும்..?"

"காரணம் இருக்கு. எனக்குத் தெரிஞ்சு ஒரு ஜோசியர் இப்ப மைதிலி வாழ்க்கைல நடந்ததை முந்தியே சொல்லிட்டார். நடக்க நடக்க நம்பிக்கை வந்துடுச்சின்னு வெச்சுக்கோயேன்."

"அப்படின்னா இப்ப அந்த பொருத்தமான ஜாகதத்தைக் கண்டு பிடிக்கணுமா சார்..."

"ஆமாம் தியாகு..."

"எப்படி சார் கண்டுபிடிக்கறது. ஏதாவது விளம்பரம் கொடுக்கலாமா?"

"விளம்பரம் கொடுத்து சாதிக்கற விஷயமில்ல தியாகு இது."

"உங்க பேச்சே புரியலை சார்..."

"அந்த ஜோசியர் தன்கிட்ட வந்திருக்கிற ஜாதகங்கள்ல பொருத்தமானது வந்தா தரேன்னு சொல்லியிருக்கார். ஒரு ஜாதகம் கூட தன் கிட்ட இருக்கிறதா சொன்னார்..."

"அப்புறமென்ன அவர் கிட்டேயே கேட்க வேண்டியதுதானே?"

"கேட்கத்தான் போனேன். மனுஷன் ஊர்ல இல்லை"

"ஊர்ல இருந்து வரட்டும் பிறகு கேட்டுப்போம்."

"அவகாசமில்லை தியாகு. அவர் மானஸரோவர் யாத்திரைக்குப் போயிட்டார். வர மூணு மாசம் கூட ஆகும் போல இருக்கு..."

"யாரு சார். நீங்க நீலாங்கரை பிச்சுமணி ஜோசியரைச் ல்றீங்களா?"

"உனக்கு தெரியுமா அவரை?"

"நாராயணன்தான் கூட்டிகிட்டு போனான். ஒரு தடவை பாத்துருக்கேன். என் ஜாதகம் கூட அவர் கிட்ட இருக்கே..."

"கடவுளே... தியாகு நீ உடனடியா அவரைத் தேடிப்போறே... அந்த ஜாதகர் யாருன்னு தெரிஞ்சுகிட்டு வர்றே. அவரோட புரோக்ராம் விவரத்தைத் தரேன். நாளையப் பொழுதுக்கு அவர் எங்க இருப்பார்னு தெரிஞ்சு அவரை கண்டு பிடிக்கறதும், அந்த ஜாதகரை தெரிஞ்சுகிட்டு வர்றதும், உன் பொறுப்பு. நல்ல விதமா செய்து முடிப்பியா?"

தியாகு அடுத்த க்ஷணம் கூர்மையாகிறான். பழம் இப்படியா நழுவி பாலில் விழும்?

# 24

தியாகு இன்ப அதிரிச்சியினை முகத்தில் காட்டுகிறான். அது வேறு மாதிரி அர்த்தமாகிறது சாரங்கபாணிக்கு.

"என்ன தியாகு... ஒரு ஜி. எம்.கிட்ட கல்யாண புரோக்கர் வேலைய சொல்றேனேன்னு பாக்கறியா. எனக்கு இப்ப முன்னமாதிரி உடம்பு இல்லை. அலைய முடியல. தலைய சுத்தறது..."

"சேச்சே என்ன சார் நீங்க... வெறும் ஆபீஸ் ஊழியனா மட்டும் பார்க்காம என்னை இழுத்து உங்களுக்குள்ளேயே போட்டுக்கற ஒரு நல்ல விஷயம் இது. ரொம்ப சந்தோஷம் தான் சார் எனக்கு..."

தியாகுவின் பதில் சாரங்கபாணியை நெகிழ்த்துகிறது. "அப்ப உடனே கிளம்பு . இந்த முயற்சி தோத்து போயிடக்கூடாது. எப்பாடுபட்டாவது மைதிலிக்கு இந்த தடவை கல்யாணத்தை பண்ணிப் பிடணும். இந்த நாப்பது நாள் கெடுவை விட்டா வேறு சந்தர்ப்பமே கிடைக்காதுன்னு அந்த நீலாங்கரை ஜோசியர்தான் சொன்னார்..."

"அவர் மேல உங்களுக்கு இருக்கற நம்பிக்கையை நினைச்சா எனக்கு ஆச்சரியமா இருக்கு சார்..."

"என்ன பண்ண... சொன்னா சொன்ன மாதிரி நடக்கும் போது நம்பித்தானே ஆகவேண்டியிருக்கு..."

"ராம்நாத் சாருக்காகவும் அவர் ஃபேமிலிக்காகவும் நீங்க எடுத்துக்கற அக்கரையும் ஆச்சரியமான விஷயம்தான் சார்..."

"இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு. நான் ஒரு அன்னக்காவடி என்கிட்ட சினேகம் வெச்சுண்டுருக்கான் ராமநாதன். அவன் மனசு வெச்சா ஆயிரம் பணக்காரன் வரிசைல வருவான், லையன்ஸ், ரோட்டரின்னு பணக்கார கூட்டணிகளுக்கா பஞ்சம். இருந்தாலும் என்னை தானே நம்பறான். அந்த பொண்ணும் அப்பனை விட என்னை பெரிசா நினைக்குதே... சரி சரி பேச நேரமில்லை. கிளம்பு தியாகு. கேஷியர்க்கு சொல்றேன். சஸ்பென்ஸ் அக்கௌண்ட்ல பத்தாயிரம் வாங்கிக்கோ. போதலைன்னா போன் பண்ணு... என்ன?"

உற்சாகமாக தலையை ஆட்டுகிறான் தியாகு.

கிருஷ்ணா ஃபாஸனர்ஸ்!

தண்ணீர் விட்டு கழுவினதுபோல ஒரு தூய்மையோடு இருக்கிறது. நிறைய ஆச்சரியமான மாற்றங்கள். ஷூ போடுவதை முதலை கவ்விவதாக வர்ணிக்கும் சுந்தரிலிருந்து, இன் பண்ணுவதை பெரும் பாவமாகவே கருதும் ஞானமணி வரை ஒருவர் பாக்கியில்லாமல் ஷூ போட்டும் இன் செய்தும் நேம் பேட்ஜ் தரித்துக் கொண்டும், முக்கியமாகமேல் பட்டனை மறக்காமல் போட்டுக் கொண்டும் ஒரு வித டென்ஷனோடு நின்று கொண்டிருக்கிறார்கள்.

புரோடக்ஷன் ஃப்ளோரின் நடுமையத்தில் ‘TPM’ எந்திர உலகின் வரப்பிரசாதம்’ என்கிற பெரிய ஸ்லோகன் நாலாபுறமும் தெரியும்படி எழுதித் தொங்கவிடப் பட்டிருக்கிறது.

முன்னதாக G.M. ஒரு விசிட் தந்து கண்களையே பைனாக்குலர் ஆக்கிக் கொள்கிறார். ஊன்றி ஊன்றிப் பார்த்து சில அழுக்குகளை காட்டி சுத்தம் செய்யச் சொல்லுகிறார்.

இந்த மாற்றங்கள் எல்லாமே நாராயணனை புரட்டி எடுக்க அதற்கு விடையை சுந்தரேசன் தருகிறார்.

"என்ன பாக்கறேள். சேர்மன் வரார். அதான்!" சொல்லிக் கொண்டே அவனது மேல் பட்டனை போட்டு விடுகிறார்.

"மந்திரி வரும்போது ஊர் கொஞ்சம் சுத்தமாகும். அப்படித்தானே இங்கேயும்..."

"இல்ல இது நிரந்தரம். நிரந்தரமா இல்லைன்னா பேர் கெட்டுப் போயிடும். அதானே TPM. நாம்கிவாஸ் தேவா" போயிடப்படாதுன்னு. சேர்மன் மட்டுமில்லை பிரசிடென்ட் ஜி.எம். முன்னு ஒரு கூட்டமே மெனக்கெட்டுண்டு இருக்கு. எந்த ஆபீஸ்ல G. M. சீட்டை விட்டு எழுந்து வந்து இண்டு இடுக்குகளை பார்த்துருக்கார்..."

"எல்லாமே ஆச்சரியமா இருக்கு..."

"இன்னும் நிறைய இருக்கு. நானறிய இருபத்தைஞ்சு வருஷமா நம்ப சேர்மன் ஒருத்தர்தான் தன் கையால போனஸ் பணம் தர்ரவர். தன் கையால சேர்மன் அவார்ட் தர்ரவர். அக்கௌண்ட்ஸ்ல இல்லாத ஆட்களா... அவாளை விட்டு தரச் சொல்லலாமே..."

நீயும் நானும் சந்திச்சுக்க கிடைக்கற ஒரு சந்தர்பத்தை நான் எதுக்கு நழுவி விடணும்னு கேப்பார். ஐநூறு பேர் கையையும் குலுக்கி வலிச்சாலும் விடாம கொடுப்பார்.

இந்த மாதிரி பண்புதான் நம்ம ஃபாஸனர்ஸோட பலம்..."

நாராயணன் சுந்தரேசனின் விளக்கத்தில் ஆ' வென வாயைப் பிளக்காத குறை. கச்சிதமாக இடை நறுக்குகிறது சேர்மன் செக்யூரிட்டி கேட்டைகடந்துவிட்ட கார் சைரன் சப்தம்.

அடுத்த நொடி ஷாப் ஃப்ளோர் எங்கும் ஒருவித இறுக்கம்.

காரிலிருந்து இறங்குகிறார் அந்த உன்னத மனிதர். மெலிதான தொற்றம். பண்டித நேருவுக்கு கிராப் வைத்துப் பார்த்தால் கிடைக்கும் முகம்.

கோடிகளுக்கு அதிபதியாக இருக்கும் போதிலும் தானும் ஒரு தொழிலாளி என்கிற பிரக்ஞைக்கு ஆதர்சமாக யூனிஃபாம், உடன் அவருக்கு சளைக்காத பிரசிடென்ட் ஜி. எம். என்கிற வல்ல படை.

உள்ளே நுழைபவரை பார்த்து அனைவரும் கை எடுத்து வணங்கிக் கும்பிட்டு குட்மார்னிங் சொல்கின்றனர்.

நாராயணன் முறை வருகிறது.

"நமஸ்காரம் சார்" என்கிறான் மிக பணிவாக சுந்தரேசன் ஓடி வருகிறார்.

"குட்மார்னிங் சார்... இவர்தான் நாராயணன் என் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவர்." சுந்தரேசன் முழுவதுமாக முடிக்கக்கூட இல்லை.

அவர் கரம் நாராயணன் தோள் மேல் விழுகிறது. "கங்கிராட்ஸ்... கல்யாணம் எப்போ?"

"வர்ற பத்தொன்பதாம் தேதி வெச்சுக்கலாம்னு இருக்கேன்..."

பத்துநாள் லீவும், ஹானிமூன் செலவும் கம்பெனியோடது. கொடைக்கானல்ல என் பங்களாவிலேயே தங்கிக்கலாம்..."

சேர்மன் தாராளத்தில், இந்த மாதிரி விஷயங்களை ஊக்கப்படுத்துவதில் இமயத்துக்கு அருகில் செல்கிறார்.

"உங்களுக்கு மட்டுமில்லை. நம்ம ஃபாக்டரில ஒர்க் பண்ற எவர் ஒருவர் எந்த ஒரு ஊனமுற்றவருக்கு வாழ்க்கை கொடுத்தாலும் அவங்களுக்கு இந்த சலுகையும், கூடவே ஒரு பிரமோஷனும் உண்டு."

அவர் சொல்வதை கேட்டு கண்கள் கசிகிறார் சுந்தரேசன். சேர்மன் அகலுகிறார்.

"நாராயணன். பாத்தேளா உங்க பெரிய மனசு கம்பெனியில ஒரு புது நல்ல ரூலையே கொண்டுண்டு வந்துட்டதே..."

கேவியபடி நாராயணன் கரங்களைப் பிடித்துக் கொள்கிறார்.

நாராயணனுக்கே ஒரு வினாடி நிற்கும் நிலம் நழுவுவது போல ஒரு பிரமை.

அப்படியே ஆகாசம் மிதப்பது போலாகி தன் சீட்டில் போய் அமர்கிறான்.

அவன் மிதப்பை கத்தரிக்கிறது தொலைபேசி.

"யெஸ்... நாராணன் ஸ்பீக்கிங்."

"நாணி நான் தியாகு பேசறேன். டேய் நான் இப்ப ஃப்ளைட்ல வாரணாசி கிளம்பிக்கிட்டிருக்கேன்டா..."

"என்னடா விஷயம். திடீர்னு வாரணாசி."

"ஆபீஸ் டூர் இல்லடா. மைதிலி சம்பந்தமான பர்சனல் சொன்னா ஆச்சரியப்படுவே. அந்த நீலாங்கரை அழுக்கு ஜோசியர் இல்ல..."

"ஆமா, அவருக்கென்ன?"

"அவரை பார்க்கத்தான் போறேன்..."

"அவரையா...?"

"ஆமாம் ...வந்து மற்ற விஷயங்களை சொல்றேன். வீட்டைப் பார்த்துக்கோ... டொடக்..."

போனை தியாகு முடக்கி விட நாராயணனும் முடக்கிவிட்டு நிமிர வாழ்த்தி கைகுலுக்க ஒரு கூட்டமே வர ஆரம்பிக்கிறது.

காசி...

ஜனத்திரளால் திணறிக் கொண்டிருக்கிறது. கங்கை கொள்ளாத கூட்டம். அற்புதமான பனிமலை நீர். பாவிகளின் அழுக்கை வாங்கிக் கொண்டு அவர்களை சுத்தப்படுத்தி விட்டு தான் மட்டும் அழுக்காகி ஓடிக் கொண்டிருக்கிறது.

கரைமேல் எல்லாம் பண்டாக்கள். வானுலகத் தொடர்புடைய தூதுவர்களைப் போல பாவக் கூட்டம் தங்கள் வசம் அகப்படாதா, அவர்கள் பாக்கெட்டை காலி செய்ய மாட்டோமா என்று

செருமாந்தபடி...

"ஆவோ... ஆவோ ...கர்மா கி புண்ய தர்ப்பன் ஹிதர் கெரோங்கா..." என்று கடித்து துப்பும் ஹிந்தியோடும் "பரிகார்... பரிகார்..." என்று கூவிக் கொண்டும்...

வேடிக்கை பாத்தபடி மாறாத தன் அழுக்கு வேட்டி சட்டையோடு ஊடே நடந்து கொண்டிருக்கறார் பிச்சுமணி ஜோசியர் ஒரு மனிதன் பாவம் அடுத்தவனின் பிழைப்புக்கு சோறிடும் வினோதத்தை நினைத்துச் சிரித்துக் கொள்கிறார்.

இந்த மாதிரி புண்ய நதிகளோ, இப்படி ஏஜென்டுகளோ இல்லை என்றால் மனிதக் கூட்டம் என்னாகும்? கேள்வியும் கேட்டுக் கொள்கிறார்.

விடை தெளிவாக பிடிபட மறுக்கிறது.

கங்கை மாதாவுக்கு ஆனாலும் பொறுமை!

சிலிப்பிக் கொண்டு ஓடிக் கொண்டிருக்கிறாள்.

அவர் வரையில் நெடுநாள் கனவு ஈடேறப்போகிறது.

கங்கை நீராட்டு என்பது ஒவ்வொரு இந்துவின் அந்தராத்ம ஆசை அல்லவா?

அவர் காலடியில் இப்பொழுது கங்கை. கை கூப்பியபடி சிலிர்த்துப் போகிறார். மனது தியான ஸ்லோகங்களுக்குள் பிரவேசிக்கிறது. எதிரில் சூரியன். நீர் மேல் பொன் வண்ணக் கொஞ்சலோடு... ஆதித்தன் அவன். பிரபாகரன்!

"ததோ யுத்த பரிஸ்ராந்தம் சமரே சிந்த்யாஸ்திதம். ராவணம் சாக்ரதோ த்ருஷ்ட்வா யுத்தாய் சமுபஸ்த்திதம்..." உதடுகள் முணுமுணுக்கின்றன இடையிடுகிறது இன்னொரு குரல்!

"ஜோசியரே.." வடவெளி கங்கைக் கரைமேல் தமிழ்க் குரல். திடுக்கிட்டுத் திரும்புகிறார். தியாகு நின்று கொண்டிருக்கிறான்.

எங்கோ பார்த்த முகமாய் நிரவி சட்டென்று பலமாக மனதில் அகப்படுகிறான்.

"உங்களை எங்கெல்லாம் தேட்றது... நல்லவேளை உங்க ட்ராவல் ஏஜென்ட் லக்ஷ்ம கட்டத்துக்குதான் குளிக்க போயிருக்கணும்னார்.

வந்தேன். கிடைச்சிட்டீங்க... வைக்கோல் போர்ல குண்டூசியை கண்டுபிடிச்ச மாதிரி..."

அவர் மேலேறி வருகிறார்.

"நீ எங்கப்பா இங்க?"

"உங்களை பாக்கத்தான்... ஆச்சரியமா இருக்கல்ல. மைலா ஃபார்மா சாரங்கபாணி சார் தெரியும்தானே?

"உம்..."

"அவர்தான் அனுப்பியிருக்கார்..."

"என்ன விஷயம்?"

"இப்படி சந்தடில நின்னு பேசற விஷயமில்லை அது. வாங்களேன் ரூமுக்கு போய் பேசுவோம்."

"வா போகலாம்..."

"குளிச்சுட்டு வாங்க. அத தடுக்கற பாவம் எதுக்கு எனக்கு?"

"அதுலல்லாம் நம்பிக்கை வந்துடுச்சா என்ன? பரவால்ல வா போகலாம். சாரங்கபாணி இவ்வளவு தூரம் அனுப்பியிருக்கார்னா நிச்சயம் விஷயம் அசாதாரணமா தான் இருக்கணும்..." நடந்தபடி பேசுகிறார். அவனும் தொடர்ந்தபடி." "ஆமாம்... எல்லாம் எம்.டி. ராம்நாத் மகள் மைதிலி கல்யாணம் சம்பந்தமாதான்..."

"ஈசுவரா... அற்புதமான பொண்ணு அவ. பாவம் பூர்வ ஜென்ம வினை. கஷ்டப்பட்றா..." அதைக்கேட்டு நமுட்டு சிரிப்பு சிரிக்கிறான் அவன். அதை பிச்சுமணியும் கவனிக்காமல் இல்லை.

"சொல்லுப்பா... என்ன விஷயம்?"

"மைதிலிக்கு பொருத்தமான ஜாதகம் ஏதோ உங்ககிட்ட இருக்காம்ல..."

"ஆமாம்... அதுக்கென்ன?"

"என்ன ஜோசியரே... எண்ணி 40 நாள்ள அவளுக்கு கல்யாணம் நடக்கணும். இல்லேன்னா நடக்கவே நடக்காதுன்னு ஒரு மாதிரி அவங்கள உங்க ஜோசியத்தால மிரட்டிட்டு இப்ப அதுக்கென்னன்னு கேக்கறீங்க..."

"அந்த ஜாதகம் வேணுமாக்கும். இதுக்கு எதுக்கு உன்னை அனுப்பினான் சாரங்கபாணி..."

"அனுப்பினானா... அவ்வளவு பழக்கமா?"

"எவ்வளவு பழகி என்ன. அவனும் சரி. அந்த ராம்நாத்தும் சரி நான் ஆரம்பத்துல சொன்னப்போ அலட்சியப் படுத்திட்டாங்க. அவ்வளவு திடமா நம்பலை. இப்ப இறங்கி வறாங்களோ?"

"அப்படித்தான்னு வைங்களேன். ஆமாம் அந்த ஜாதகம் இப்ப உங்ககிட்ட இருக்கா. யார் அது?" தியாகு கெள்விகளை வேகமாக கேட்கும் விதத்தில் அதீத பதட்டம்.

"அவளுக்கு அதிர்ஷ்டம் இருக்கு யாத்ரையும் போது எதுக்கு சுமைன்னு நினைக்காம அந்த மூட்டையையும் எடுத்துகிட்டே வந்துருக்கேன்."

"அதை கொடுங்க கிளம்பறேன்..."

"கொடுக்கறேன். கொடுக்கறேன்.. ஒரு நிமிஷம்!" ஜோசியர் அடுத்த நொடி வழித்தடத்தில் இடையிட்ட எஸ்டிடி பூத் ஒன்றில் நுழைகிறார்.

பாக்கெட்டில் கைவிட்டு குட்டி டயரி எடுத்து நம்பர் பார்த்து சாரங்கபாணியையும் அங்கிருந்தே பிடிக்கிறார்.

"என்ன சாரங்கா... தியாகுவை நீதான் அனுப்பினியா?"

"ஆமாம். ஜாதகம் இருக்கு தானே?"

"இருக்கு. ஆமாம் இவனை எங்கபிடிச்சே...?"

"தியாகு. இப்ப மைல ஃபார்மா ஜிஎம் ஜோசியரே..."

"மண்ணாங்கட்டி. இவன் ஒரு அசுரன். கொலபாதகன் இவன் ஜாதகம் எனக்கு அத்துப்படி..."

"அப்படியா?"

"என்ன அப்படியா... உன் கம்பெனி ஜெனரல் மேனேஜர் போஸ்ட் என்ன வெண்டக்காயா, சுண்டைக்காயா? இப்படி கொடுத்துட்டியே..."

"நான் ராம்நாத்தை யோசிக்க சொன்னேன். அவர் தான்..."

"விதி... எல்லாம் விதி! எவ்வளவு யோசிக்க தெரிஞ்சாலும் சமயத்துல யோசிக்கலைன்னா இப்படி தான்..."

"நீங்க என்ன சொல்லுங்க..."

"மைதிலிக்கு கொஞ்சம் மாங்கல்ய தோஷமும் இருக்கு. முதல் தாலி தங்காம போக சாத்யமும் உண்டு. சில பரிகாரங்கள் செய்யணும்..."

"என்ன செய்யணும் சொல்லுங்க..."

"இப்பகேளு. அங்க இருக்கும் போது இந்த அழுக்கு ஜோஸ்யன் அருமை தெரியலியாக்கும்."

"இப்ப அதை எல்லாம் பேச நேரம் ஏதுங்க ஜோசியரே... உங்களுக்கு இப்ப மானசரோவர் அவசியமா... கிளம்பி வாங்களேன். எல்லாம் நல்லபடி முடியட்டும் உங்க கூட நானும் மானசரோவர் வரேன். விமானத்துலையே போவோம்..."

"நல்லது... ஜாதகத்தை இவன் கிட்ட கொடுத்து விட்றேன். ஒட்டின கவர். பின்னால இரண்டுநாள்ள நான் வரேன். விதி இருந்தா..."

"இது என்ன பேச்சு... உடனே வாங்க..."

"முட்டாளே, உலகுக்கு ஜோசியம் சொல்ற எனக்கு பிறந்த நாள் நேரம் தெரியாது ஜாதகமும் கிடையாது. அது தெரியுமா உனக்கு? உள்ளுணர்வும் எனக்கு வேளை வரப்போறதா சொல்லிக்கிட்டிருக்கு. அதான் சாகறதுக்குள்ள கிளம்பி இந்த பக்கம் வந்தேன். போகட்டும். நீ இந்த பையனை அதாவது ஜாதகப் பையனை பார்த்து பேசு. நான் வந்துட்றேன். இந்த தியாகு கிட்ட எச்சரிக்கையா இரு வெச்சுட்றேன்." போனை முடக்கிவிட்டு வெளியே வருகிறார். இதை எல்லாம் ஒட்டுக் கேட்டிருந்தும் கேட்காதவன்போல அவரைப் பார்த்து சிரிக்கிறான் தியாகு.

"என்ன உங்க சந்தேகம் தீர்ந்துடிச்சா... பிச்சுமணி சார் எல்லாம் சொன்னாரா?"

"உம்... நட!" அவர் அதற்குமேல் அவனிடம் பேசாமல் வேகமாக நடக்கிறார்!

ஆட்டோ குதித்தோட கைவசம் ஜோசியர் தந்த கவரை வேகமாக பிரிக்கிறான் தியாகு.

"மைதிலிக்கு இவன்தான் என்று ஜோசியர் யாரைச் சொல்லியிருக்கிறார்... பார்த்து விடுவோமே..."

ஆவல் படபடக்க ஜாதகத்தை பார்க்கிறான்.

அதில் நாராயணன் பெயர் – முகவரி!

ஒரு வினாடி இதயம் ஒரு கரணம் அடித்து வாய் வழி வரப் பார்க்கறது.

"நாராயணா நீயா..."

ஆட்டோ உருண்டோடிக் கொண்டிருக்கிறது.

தியாகு முகத்தில் பட்டாசுக் கலவரம்! நாராயணன் ஜாதகம் உடனேயே சுக்கு நூறாக கிழிய ஆரம்பிக்கிறது. அது இருந்த இடத்தில் அவன் ஜாதகம் ஏறி அமருகிறது!

கங்கை ஓட்டத்தின் அரிச்சந்திரா காட் எனும் படித்துறைப் பகுதி.

கரை ஓரமாய் பிணங்கள் வேகும் சுடுகாடு.

பாத எரிந்தும் மீதி. எரியாமலும் உள்ள பிணங்கள் வெட்டியானின் பருத்தகழியால் சிமிட்டப்பட்டு அப்படியே எடுத்து ஆற்றில் வீசப்பட சொய்ய்ங்ங்... என்கிற சப்தமுடன் அவை விழுந்து நீர் நனைந்து மீண்டும் மிதந்து சென்று கொண்டிருக்கிறது. இழவுக்கு வந்த கூட்டம் தவிர ஒருவரும் வந்து பார்க்க பிரியப்படாத பகுதி.

ஆனாலும் அரிச்சந்திரா காட்டில் மூழ்கி எழுந்தால் மோட்சபரம் உடனடியாக சித்திக்கும் என்கிற நம்பிக்கையில் சிலர் அந்த பிணத்துண்டுகள் நடுவிலும் மூழ்கி எழுந்த நிலையில்...

சிலர் முழு உடலையுமே மார்பில் விளக்கேற்றி ‘கங்கார்ப்பணம்’ செய்து மிதக்க விட்டு அனுப்ப அவை படகு போல் செல்வதை பார்க்கையில் கண்ணிரண்டில் ஒரு வித்யாச உணர்வு வழிந்து கசியும்.

பிச்சுமணி ஜோசியருக்கும் அப்படித்தான் இருக்கிறது.

ஊருக்கு திரும்ப முடிவு செய்துவிட்டதால் ஒட்டு மொத்தமாக கர்மம் செய்து குளிக்க இந்த இடம்தான் உகந்தது என்று வந்து விட்டதில் கரை மேலேயே நின்று விட்டிருக்கிறது உருவம்.

எல்லோரும் போகட்டும் என்பது போல காத்திருக்கிறாரோ. இல்லை ஏதாவது சிந்தனையோ?

நெடுநேரம் நின்று விட்டு கருடன் பறக்காத அந்த அதிசய பிணக் கரையில் மெல்ல இறங்குகிறார்.

சூரியன் கங்கை நீர் குடிக்க வாய் கவிழ்த்தாற்போல் அஸ்தமனத்தில்...

ஈ காக்கை இல்லை...

ஜில்லென்ற காற்று மட்டுமே...

ஒவ்வொரு அடியாய் போட்டு ஆற்றில் இறங்குபவர் மூழ்கத் தொடங்குகிறார்.

ஒருமுறை...

இருமுறை...

மூன்றாவது முறை... நான்காவது முறை மூழ்கியவர் நிமிர்ந்தெழுந்தால் தானே...?

நீருள்ளிருந்து காற்றுக் கொப்புளங்கள்தான் அணி வகுத்து வந்து உடைகின்றன!

# 25

மைதிலி நிவாஸ்.

"குட்மார்னிங் டாட்!" நிமிருகிறார் ராம்நாத். எதிரில் மைதிலி.

"வாம்மா... உக்கார்..."

"இப்ப உங்களுக்கு எப்படியிருக்குப்பா..?"

"நல்லா இருக்கேன்டா..."

"எங்க நல்லா இருக்கே. உன்னை யார் படுக்கையை விட்டு எழுந்து வந்து பேப்பர் படிக்கச் சொன்னது..." கேள்வியோடு வருபவர் சாரங்கபாணி.

"எனக்கு பொண்டாட்டி இல்லாத குறைய நீ இப்படி தீக்க வேண்டாண்டா..." சடைப்பு ராம்நாத்திடம்.

"ஏன் அங்க்கிள்.. டாக்டர் சீரியஸா ஏதாவது சொல்லியிருக்காரா..."

"ஆமாம்மா... இவர் உயிரோட இருக்கறதே அதிசயம் அந்த அளவு இதயம் வெம்பின மாம்பழமா அழுகிட்டதா சொல்றாங்கன்னா பாத்துக்கையேன்.."

"அப்பா... வேண்டாம்பா ரிஸ்க் எடுக்காதீங்க..."

"போச்சுடா... அவன் மிகையா சொல்றாம்மா. டேய் போன காரியம் என்னாச்சு. அதை சொல்லு..."

"தியாகு போய் சேர்ந்துட்டான். ஜோசியரும் ஜாதகத்தை கொடுத்துருக்காரு. தியாகு வந்துகிட்டு இருப்பான். வந்த உடனே..." சாரங்கபாணி பார்வை கச்சிதமாய் மைதிலி பக்கம் திரும்புகிறது. அவள் முகத்தில் ஹௌரா மெயில் ஓடிக்கொண்டிருக்கிறது.

"டேய்... மைதிலிய முதல்ல தயார்படுத்துடா. அப்புறம் அந்த ஜாதகப் பையனை பாக்கலாம். சொதப்பிடப்போறா..."

"நிச்சயம் சொதப்புவேன். அப்பா ஏன்ப்பா இப்படி என்னை புரிஞ்சுக்காம இப்படி கல்யாணம்.. கல்யாணம்னு..."

"அம்மாடி.... நீதான் எங்களை புரிஞ்சுக்கலை?"

"புரிஞ்சுக்காமதான் சுதர்சனை மாப்ள பார்க்க சம்மதிச்சேனா..."

"அது முடிஞ்ச கதை... பேசாதேடா..."

"வேண்டாம்ப்பா... ப்ளீஸ். கல்யாணமே வேண்டாம். நான் ஒரு அதிர்ஷ்டக் கட்டை. என்னை டென்ஷன் ஆக்காதீங்க."

"இல்ல... உனக்கு டயம் வந்தாச்சு. இப்ப விட்டா எப்பவுமே அப்புறம் உனக்கு கல்யாணம் நடக்காது. பிச்சுமணி ஜோசியர் சொல்றாரும்மா. அவர் முன்ன சொன்னதை நம்பலை. அனுபவிச்சோம். இப்ப அப்படி இல்ல. சொன்னா கேளு..."

"நோ அங்க்கிள்... இனி என்கிட்ட ஜாதகம் ஜோசியம் மாப்ளை கல்யாணம்னா தெரியும் சேதி..."

"அம்மாடிஈஈஈ..." நெஞ்சைக் கையில் பிடித்தபடி எழுந்திருக்கிறார் ராம்நாத்.

"டேய்ய்ய்..." வந்து தாங்குகிறது சாரங்கபாணி கரங்கள். மைதிலி துடித்துப் போகிறாள்.

"மைதிலி... என்னம்மா இப்படி பண்ணிட்டே சரின்னு சொல்லும்மா. அதுதான் இப்ப மருந்து இவனுக்கு. கமான் அட்லீஸ்ட் போற உயிர் நிம்மதியாகவாவது போகட்டும். ப்ளீஸ்ஸ்ஸ்..."

சாரங்கபாணி வெடித்துக் கதற

"சரிப்பா... அப்பா சரிப்பா... சரிப்பா..." என்று மைதிலி அவரை நெருங்கி கன்னங்களை பற்ற மெல்ல கண்களை திறக்கிறார்.

"மாத்ர...மாத்ரை..." முணுமுணுக்கிறார். ஓடுகிறாள் அவள். சடாரென்று எழுந்து அமருகிறார். சாரங்கபாணிக்கு திகைப்பு.

"டேய் என்னடா இது...?"

"எப்படி நடிப்பு..?"

"நடிப்பா?"

"பின்ன ... இல்லேன்னா வழிக்கு வந்துருப்பாளா?"

"கில்லாடிடா நீ!"

கட்டிக் கொள்கிறார் சாரங்கபாணி.

"இருந்தாலும் இப்படி பண்ணாதேடா. நிஜமாலுமே நீ ஒரு இன்குபேட்டர் குழந்தை மாதிரிதான். எனக்கு ஒரு நிமிஷம் மூச்சே நின்னுபோச்சு..."

கசிந்து உருகும் அவர் கைகளை பற்றும் ராமநாதன் உருக்கமாக சொல்கிறார்.

"நான் இல்லன்னா என்ன... நீ இருக்கேடா.. எனக்கென்ன கவலை சொல்லு?"

கண்கள் பனிக்கிறது சாரங்கபாணிக்கு.

ஆபீஸ்.

அதிசயமாய் சீட்டில் ராம்நாத்.

கதவை திறந்துகொண்டு உள் நுழைகிறான் தியாகு.

"வாப்பா... எப்ப வந்தே!"

"இப்பதான் சார்."

"ஜோசியரை பாத்துட்டியாமே... கவர் கொடுத்தாரா?"

"இதோ" நீட்டுகிறான்.

"ஒரு ஜி. எம். நீ... இருந்தும் தபால்காரன் வேலை பாத்துருக்கே. ரொம்ப நன்றிப்பா." சொல்லிக் கொண்டு கவரைப் பிரிக்கிறார். பார்ப்பவர் முகத்தில் உணர்வலைகள்.

"என்ன சார்... சந்தோஷமான விஷயம்தானே?"

"என்னப்பா ஜாதகத்துக்குள்ள லெட்டர். சாரங்கபாணிய இவர் எதுக்கு உடனே கிளம்பி வரச் சொல்கிறாரு..."

"ஆமாம் சார்... நம்ம மேடத்துக்கு ஏதோ மாங்கல்ய தோஷம் இருக்காம். அதுக்கு பரிகாரம் செய்யத்தான்..."

"அதுசரி... நீ சாரங்கபாணியை பார்த்தியா?"

"பார்த்தேன் சார்... அவர் உடனே கிளம்ப ஆயத்தமாயிட்டார். கவரை உங்ககிட்ட தரச் சொன்னார்.

சார் நீங்க ஜாதகத்தை பூஜை அறைல வெச்சுப் பார்ப்பீங்களாம். நான்

கிளம்பறேன் சார்..."

"என்ன அவசரம்... உக்கார். என் பொண்ணுக்கு ஒரு விடியலையே கொண்டுகிட்டு வந்துருக்கே நீ?"

"இல்ல சார்... ஊர்ல இருந்து வந்த நான் இன்னும் குளிக்கக் கூட இல்ல..."

"அப்படியா... அப்ப சரி கிளம்பு. சாரங்கபாணிய கொஞ்சம் எனக்கு போன் பண்ணச் சொல்லு முதல்ல."

"சரி சார்..."

அவன் சிட்டாக பறக்கிறான்.

படபடக்கும் கரங்களோடு அதில் ஜாதகத்தோடு ராம்நாத் பூஜையறை நோக்கி காலெடுக்க தொலைபேசி சிணுங்கி அழைக்கிறது.

"ராமநாதா நான் சாரங்கபாணி பேசறேண்டா..."

"சொல்லு... என்ன நீ காசிக்கு கிளம்பிகிட்டிருக்கியா... ஆமாம்..."

"நானும் வரேனே..."

"கிழிஞ்சது. உன் உடம்பு இருக்கற இருப்புக்கு அசையக் கூடாது நீ. எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன்."

"இப்பதான் ஜாதகத்தை பார்க்கப் போறேன்."

"பாரு... பையனையும் முடிஞ்சா பாத்து பேசிரு..."

"நீ இல்லாமலா..."

"இதோ பார். நமக்கு காரியம்தான் முக்கியம். வேகமா வேலைய கவனி. நீன்னா நீ போகாதே. தியாகுவை அனுப்பு. நீ அசையக்கூடாது. எல்லாம் தியாகு பார்த்துப்பான். நான் சொல்லி இருக்கேன்."

"ஆமா உன் குரல் ஏன் ஒரு மாதிரி இருக்கு?"

"அதுவா... அது ஜலதோஷம்ப்பா... நெல்லிக்காய் நாலு சாப்ட்டேன். குளுமைல தொண்டை கட்டிக்கிச்சு..."

"சரிசரி உடம்பை பாத்துக்கோ. டேய் போகும் போது இங்கவந்துட்டு போ... அப்படியே போகாதே நேரில உன் கூட நிறைய பேசணும்."

ராம்நாத் போனை கீழே வைக்கிறார். மறுமுனையில் போனை கீழே வைப்பவன் தியாகு. குரல் மாற்றிப் பேசிய தோரணையோடு திரும்புபவன் எதிரில் நாராயணன்.

"நீ... நீ..."

"நான் அப்பவே வந்துட்டேன். ஆமா நீ எதுக்கு சாரங்கபாணியானே?"

"அது... அது... எல்லாம் ஒரு நல்லதுக்கு தாண்டா. நீ உட்காரு..."

"எந்த நல்லதுக்கு... யாரோட நல்லதுக்கு? தியாகு நீ ரொம்ப பயமுறுத்த ஆரம்பிச்சிட்டேடா..."

வியர்க்க விறுவிறுக்க சட்டையை கழட்டும் நாராயணனை அதிகபட்ச மிரட்சியோடு பார்க்கும் தியாகு எப்படிச் சமாளிக்கலாம் என்று யோசிக்கும் போது, நாராயணன் அறைக்குள் நுழைந்து ஃபிரிட்ஜைத் திறக்க முயற்சிக்க ஒரே பாய்ச்சலில் வந்து தடுக்கிறான் தியாகு.

"ஃப்ரிட்ஜ் ரிப்பேர் நாராயணா! வா நாம வெளிய போய் கூல்ட்ரிங் சாப்ட்டுட்டு வருவோம்."

"திரும்பப் பொய். ரிப்பேர் ஃப்ரிட்ஜ் ஏன் ஆன்ல இருக்கு...?"

கேட்டுக் கொண்டே திரும்ப கைகளை ஃப்ரிட்ஜ் டோரைத் திறக்க நீட்டுகிறான் நாராயணன்.

"வேண்டாம் திறக்காதே. சொன்னா கேளு." உச்ச பட்சபதட்டத்தோடு தியாகு கத்த அதை துளியும் பொருட்படுத்தாமல் நாராயணன் திறக்க அவன் கண்ணிரண்டும் தெறித்து விடும் அளவு விரிவடைய ஆரம்பிக்கிறது.

உள்ளே சுருட்டி அடைக்கப்பட்ட நிலையில் விரைப்பாக உயிரில்லாத சாரங்கபாணி!

# 26

சடலத்தை பார்க்கும் தியாகு மிரண்டு போகிறான். ஷாக் அடித்த மாதிரி கதவை மூடித் திரும்புகிறான். பேச்சு வர மறுத்து கண்களில் அகலம் விழுகிறது.

"அப்படி பார்க்காத நாராயணா... தப்பு நடந்து போச்சுடா..." தியாகுவும் பதறத் தொடங்குகிறான்.

"இது தப்பு... தப்பு இல்லை... கொலைகொலை"

"ஆமாண்டா... கொலைதான் ஆனா செய்யணும்னு செய்யலை."

"என்னடா கதை உட்றே?..."

"சத்யமா நாணி... கோபத்துல விட்ட ஒரு அறை உயிரை பறிச்சிடுச்சுடா."

"எதுக்கு அறைஞ்சே..."

"காசிக்கு போன இடத்துல நான் அந்த ஜோசியரை கிண்டல் செஞ்சேன். அது தெரிஞ்சு கண்டிச்சார். அப்படியே உன்னை ஜி. எம்மாக்கினது ராம்நாத் செஞ்ச பெரிய தப்பு அது இதுன்னு அளந்து கிட்டே போனார். கோபம் வந்தது. அறைஞ்சேன். இப்படி..."

தியாகு அழ ஆரம்பிக்கிறான்.

"நீ சொல்றத நான் நம்பமாட்டேன். நான் நம்பமாட்டேன்..." நாராயணன் கத்தியபடி அந்த அறையை விட்டு வெளியே சென்று தனது சூட்கேஸை எடுக்கிறான்.

"நாராயணா... நாராயணா... சொன்னா கேளு. இந்த கட்டத்துல என்னைவிட்டு போய்டாதேடா. இந்த விஷயம் வெளிய தெரிஞ்சா அந்த மைதிலி கல்யாணம் அநியாயமா நின்று போயிடும்டா..."

"அவ கல்யாணத்துக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?"

"அந்த அழுக்கு ஜோசியர்கிட்ட நான் போனது மைதிலிக்கு ஏத்த ஜாதகத்தை வாங்கி வரத்தான். அவரும் கொடுத்துட்டார். அந்த பையனை பார்க்கணும பேசி முடிக்கணும். எனக்கு தலைக்கு மேல வேலை இருக்குப்பா... கல்யாணம் முடியட்டும நானே போலீஸ்ல சரணடைஞ்சுட்றேன்..."

"நீ என்னென்னமோ சொல்றேடா. உன்னை பத்தி குச்சி ஜோசியக்காரியும், ஜோசியரும் சொன்னதெல்லாமும் தான் எவ்வளவு உண்மை."

"சரிடா... நம்பலைன்னா போ. போய் இப்பவே போலீசுக்கு போய் சொல்லு. சாரங்கபாணி இறந்த விஷயம் தெரிஞ்சா ராம்நாத் அடுத்த நிமிஷம் அவரும் உயிரை விட்றுவார். அவர் சாகட்டும். என்னையும் கோர்ட் தூக்குல போட்டுடும். ஸோ... உன் உண்மையால மூன்று சாவு வரிசையா... போ... போய் சொல்லு.

உயிர் காப்பான் தோழன்னு சொல்வாங்க. அது தப்புன்னு நான் புரிஞ்சுகிட்டேன். போ... போய் சொல்லு. போடா... போடான்னா..."

தியாகு கச்சிதமாக ஆக்ட் கொடுத்து நறுக்கலாக பேசியதில் நாராயணன் நொறுங்கிப் போய் அப்படியே அமருகிறான்!

பைநிறைய காய்கறி வாழை இலை என்று மார்கெட் போய் வந்திருக்கும் நிலையில் உள் நுழைகிறார் சுந்தரேசன். மலர்ந்த முகத்தோடு அப்பாவை பார்க்கிறாள் சியாமளா.

"என்னம்மா பாக்கறே... எல்லாம் வாங்கிண்டு வந்துட்டேன். சாயந்திரம் சமையல் அமக்களமா இருக்கணும்."

"அற்புதமா இருக்கும்!" அவள் தயாராக எழுதி வைத்திருந்ததை காட்டுகிறாள்.

"என்ன ஒரு ஞானம்மா உனக்கு... நான் இந்த கேள்வி தான் இந்த சமயத்துல கேப்பேன்னு தெரிஞ்சு பதிலோட இருக்கியே... காபி இருக்கா?"

அடுத்த நொடி காபி அவர் எதிரில்... அவர் கண்கள் பனிக்கினறன. அவளும் அதைப் பார்த்து சற்று கலங்குகிறாள்.

"இத்தனை குறிப்பா நடந்துக்கற உன்னை கல்யாணம் பண்ணி கொடுத்துட்டு தனியா நான் எப்படிம்மா காலம் தள்ளப் போறேன்?"

அவள் உடனே ஓடிப்போய் அவர் கழுத்தை அணைத்து கட்டிக் கொள்கிறாள். கசிகிறாள். சில நொடி கழித்து உள் ஓடிச் சென்று ஒரு கடிதம் கொண்டு வருகிறாள். அது நாராயணன் சியாமளாவுக்கு எழுதியது. அதில்... அன்புள்ள சியாமாளா...

இப்படி கடிதம் எழுதுவதற்காக என்னைத் தப்பாக நினைக்காதே. ஒரு

முக்கியமான விஷயம். கல்யாணத்திற்கு பிறகு உன் அப்பா நம்மோடுதான் இருக்கணும். பெண்ணுக்கு அப்பாவை வைத்து காப்பாற்றும் பொறுப்பெல்லாம் கிடையாது. பிள்ளைதான் காப்பாற்றணும். இல்லை என்றால் அவர் தனியே கிடந்து தவிக்கவேண்டும் என்பதெல்லாம் மிக அபத்தமான பாவமான விஷயங்கள். என் வரையில் அப்பா வேறு மாமனார் வேறு இல்லை. உன் அப்பாவிடம் நீயே சொல்லிவிடு. அவர் நம்மை பிரிவதாக நினைக்கவே கூடாது.

கடிதத்தை படிக்கும் சுந்தரேசன் சிலிர்த்து நிமிறுகிறார்.

"நான் ரொம்ப கொடுத்து வெச்சவன் என்ற சொன்னபடியே கல்யாணப் பத்திரிகை காப்பியை எடுத்து தருகிறார்.

"இதை மஞ்சள் பூசி சுவாமி சன்னதில வை. நான் குளிச்சிட்டு வந்துட்றேன். இன்னிக்கே அச்சடிக்க கொடுத்துட்றேன். ஆமா மாப்ளை அப்பா அம்மா சொந்தக்காரால்லாம் எத்தனை மணிக்கு வரதா சொன்னா?"

சியாமளா ஐந்து என்று கையை காட்ட சுந்தரேசன் வேகமாகிறார்.

"பகவானே... ஒப்புத் தாம்பூல நிகழ்ச்சின்னாலும் அது நன்னா நடக்ணுண்டாப்பா..." என்று முணு முணுத்தபடி அவர் பாத்ரூமுக்குள் நுழைய சியாமளா சுவாமி படம் முன் பத்திரிக்கைக்கு மஞ்சள் பூசி வைத்து விளக்கேற்றுகிறாள். முகத்தில் சந்தேஷ எல்லை. கைகளில் மிகுந்த உற்சாக அசைவு. அதுவே ஏற்றிய விளக்கை எதிரிபாராதபடி தட்டி விட விளக்கு கவிழ்ந்து எண்ணெய் பரவி பத்திரிகை தீ பிடித்து எரிய ஆரம்பிக்கிறது.

"ஐய்யய்யோ..." சியாமளாவின் மனது பதைத்துப் போகிறது...

வாசலில் தேய்ந்து நிற்கும் காரிலிருந்து இறங்குபவர் ராம்நாத். மாடியில் நாராயணன் மூக்கைப் படித்தபடி சந்தியா வந்தனம் செய்து கொண்டிருக்கிறான்.

ராம்நாத் அதை ரசிப்பாக பார்த்துக் கொண்டு உள் நுழைகிறார். ஹாலில் துவண்டு போய் சோபாவில் கிடக்கும் தியாகு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருக்கிறான்.

"சார் நீங்களா... வாங்க சார்? வாங்க..."

"நான் இனிமே சார் இல்லப்பா... மாமா..."

அவர் புதிர் போடுவதுபோல நினைத்துக்கொண்டு அமர்கிறார்.

"என்ன சார் சொல்றீங்க?" அவரிடமும் பாவ்லா.

"கைல வெண்ணை இருக்க நெய்க்கு காசி வரை அலைய விட்டுட்டேனேப்பா உன்னை..."

"எனக்கு ஒண்ணுமே புரியலை சார்..."

"புரியாதுதான்... அந்த ஜோசியர் சொன்ன வரன் நீதான் தியாகு. சாரி மாப்ளையை நீங்கறேன். நீங்கதான் தியாகு. நீங்கதான்..."

"நானா... என்ன சார்இது... நான் எங்க நீங்க எங்க?"

"அதையெல்லாம் பேசக்கூடாது உங்களைப்போல ஒரு திறமைசாலி எனக்கு மருமகனா வர நான் கொடுத்து வெச்சிருக்கணும். என் மகளை கல்யாணம் பண்ணிக்கறதுல உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே...?" கெஞ்சிக் கசிய ஆரம்பிக்கிறார் ராம்நாத்.

"சார் என்னை விடுங்க சார்... மேடத்துகிட்ட கேட்டீங்களா?"

"கேட்டேனே... அவ இப்ப நான் என்ன சொன்னாலும் கேட்பா, கேட்டாகணும். என் ஹார்ட் அட்டாக்கை சொல்லியே கட்டி போட்ருக்கேன். இந்த சாரங்கபாணி தான் ஸ்டுப்பிட் இந்த சமயம் பார்த்து காசி கயான்னு ஓடிப் போயிட்டான்.

வந்துட்டுப் போடான்னேன். அதை கூட காதுல போட்டுக்கல..."

ராம்நாத் பேசிக்கொண்டே போகிறார்.

"ஐயோ சார் ரொம்ப உணர்ச்சி வசப்படாதீங்க அது உங்களுக்கு நல்லது இல்லை. வாங்க சார் வீட்டுக்கு போகலாம்... ரெஸ்ட்ல இருக்க வேண்டிய நீங்க இப்படி அலையலாமா?"

"ஒன் மினிட். ..ஜில்லுன்னு ஒரு டம்ளர் தண்ணி..." அவர் ஃபிரிட்ஜை எதார்த்தமாக ஞாபகம் மூட்டுகிறார். மிரண்டு போகும் தியாகு "ஃபிரிட்ஜ் ரிப்பேர் சார்... நீங்க வாங்க போற வழியில ஹோட்டல்ல கூல்ட்ரிங் சாப்பிடுவோம்." என்று அவரை கிளப்புவதிலேயே குறியாக இருக்கிறான்.

"இருங்க தியாகு... உங்க நண்பர் நாராயணன் வரட்டும். அவர்கிட்டேயும்

இந்த சந்தோஷமான விஷயத்தை சொல்றேன். கேட்டா ரொம்ப சந்தோஷப்படுவார். இல்ல?"

"இல்ல சார்... அவன் இப்ப வரமாட்டான். ஆயிரத்தெட்டு காயத்ரி ஜெபிக்க அரை நாள் கூட எடுத்துப்பான். அவனை நான் நம்ப வீட்டுக்கு வரச் சொல்றேன். கிளம்புங்க..." திரும்பவும் தூண்டி இந்த முறை வெற்றியும் பெறுகிறான். அவர் கிளம்புகிறார்! அவனிடம் பெருமூச்சு... அப்பாடா...

ரெஸ்ட்டாரெண்ட் மைக்கேல் ஜாக்சனின் Where is my lover? ஸ்டிரியோவில் முக்கல் முனகலோடு கசிந்து கொண்டிருக்கிறது. மெலிதான வெளிச்சம். வட்டமேஜை ஒன்றின் முன் தியாகு எதிரில் இறுகிய முகத்தோடு ஸ்டெல்லா.

"என்ன ஸ்டெல்லா பேச மாட்டேங்கறே?" பீரை சூப்பியபடி கேட்பவனை கூர்மையாக பார்க்கிறாள் ஸ்டெல்லா.

"வேண்டாம் தியாகு... மைதிலிய ஏமாத்தாதீங்க" என்கிறாள்.

"நான் எங்க ஏமாத்த போறேன். வாழ்க்கைல்ல கொடுக்கப் போறேன்..."

"அவங்க வாழ்க்கையை எடுத்துக்க போறீங்க. கொடுக்கலை. போதும்... ஜி. எம்கற இந்த உயரம் போதும் மாசம் இருபதாயிரம் சம்பளம். எனக்கு அஞ்சாயிரம். இருபத்தஞ்சாயிரம் மொத்தம். பாதி செலவு செய்வோம். பாதி சேமிப்போம். அற்புதமா வாழலாம்... சொன்னா கேளுங்க..."

"பைத்தியம்... முதலாளியாவே ஆக வழி இருக்கும் போது இப்படியா போதும் சொல்லிக்கவாங்க? லுக் ஸ்டெல்லா... உன் சந்தோஷத்துல குறை வைக்கமாட்டேன். அதே சமயம் மைதிலிய கையால கூட தொட மாட்டேன்.

வேடிக்கை தெரியுமா? ராம்நாத் கம்பல் பண்ணதுக்காக அவ சம்மதிச்சிருக்கா. இதை என்கிட்டேயும் சொன்னா... நான் உடனே ஒரு ஸ்டண்ட் அடிச்சேன். மேடம் நானும் உங்க அப்பா ஆசைக்காகதான் சம்மதிக்கிறேன். உங்க மேல என் விரல் கூட படாது இது சத்யம்னேன். அவ அப்படியே ஆடிப் போய்ட்டா..."

சொல்லிவிட்டு பீரை ஒரு மடக்கு குடிக்கிறான். ஸ்டெல்லா அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். விழியோரம் நீர் தேங்கிக் கிடக்கிறது.

"அழறியா... பைத்தியம். நீ ரொம்ப வித்யாசமான பொண்ணாச்சே.

எதுக்கு அழறே. என் லைஃப் டர்னே உன்னால் தானே ஆச்சு?"

"சொன்னா கேட்க மாட்டிங்களா... எனக்கு என்னமோ பயமா இருக்கு. சாரங்கபாணிக்கு நம்ம விஷயம் தெரிஞ்சும் அவர் எப்படி சம்மதிச்சாருன்னும புரியல..."

"அவர் யாரு சம்மதிக்க... தயவு செய்து அவர் பத்தி போசாதே. அவரால இனி ஒரு தொந்தரவு இருக்காது நமக்கு..."

"எப்படி... உங்களுக்கு தெரியாது அவரைப் பத்தி. மைதிலிய அவர் சொந்த மகளுக்கு மேலா நினைக்கறார்."

"ஒரு பொணத்தால இனி எதை நினைக்க முடியும் ஸ்டெல்லா?"

லேசான போதையில் வாய் குழறி உண்மையை சொன்னவனை அப்படியே எரிந்து போய் பார்க்கிறாள் ஸ்டெல்லா...

"என்ன பார்க்கறே... நான் ஒருநாள் சொல்லலை சாரங்கபாணியை சொல்வேன்னு... அதே மாதிரி கொன்னுட்டேன். திரும்பி வந்த என்னை ரொம்ப டார்ச்சர் பண்ணினான். ஒரே போடு! போட்டு உடம்பையும் ஃப்ரிட்ஜ்ல வெச்சுட்டேன். எப்படி டிஸ்போஸ் பண்றதுன்னுதான் தெரியல. நாராயணன் வேற பார்த்து வெச்சுட்டான்..."

ஸ்டெல்லாவிடம் பயமும் பதட்டமும் கூடிக் கொண்டே போகிறது. கழுத்து வியர்வை அவன் ஆசையாக பேட்ட வைர நெக்லசையே நனைக்கிறது.

அவனும் நிமிர்ந்து அதைப் பார்க்கிறான்.

"பயப்பட்றியா... பயப்படாதே! நாராயணனை எப்படி சமாளிறக்கறதுன்னு எனக்கு தெரியும். என் உண்மை தெரிஞ்சவ நீ. துரோகியா மட்டும் மாறிடாதே. உன் விஸ்வாசமும் காதலும் தொடரும் வரை வைரம் மேல வைரம்... பங்களா மேல பங்களா உனக்கு உண்டு.

இல்லன்னா இதுதான் கடைசி வைரம். உன் கதையையே முடிக்கற வைரமாவும் மாறிடும்."

"நோ தியாகு... நீங்க ரொம்ப மோசம். உங்க புத்திசாலித்தனம். இவ்வளவு கொடூரமாக செயல் பட்டிருக்க கூடாது. எனக்கும் இது வேணும். பணத்தாசைக்கு எனக்கு நல்ல பாடம் கற்பிச்சீட்டிங்க. நான் வரேன்."

"நில் ஸ்டெல்லா... நில்லு.. நில்லு... ஏய் முட்டாள்..." அவன் கத்தக் கத்த அவள்போயே போய்விட்டாள்.

தியாகு முகத்தில் இப்பொழுது புதியதாக ஒரு தீர்மானம்!

பெட்டி படுக்கைகளை கட்டிக் கொண்டிருக்கிறான் நாராயணன். உடம்பில் இனம் புரியாத பதட்டம்.

"ராஸ்கல்... இனி இந்த தியாகுவை நம்பக்கூடாது. கல்யாணம் நல்ல காரியம்னு பிணத்தை டிஸ்போஸ் பண்ணாம வீட்டுக்குள்ளேயே வெச்சுகிட்டு கழுத்தறுக்கிறான்.

படுத்தா தூக்கம் வரமாட்டேன்றது. உக்காந்தா நிம்மதி இல்லை... போதுமடா சாமி.... அவனே இந்த வீட்டைக் கட்டிக்கிட்டு அழட்டும். தப்பித் தவறி போலீஸ் வந்து மாட்டினா என்னையுமில்ல உடந்தைன்னு உள்ள தூக்கி போடுவாங்க"

சாயங்காலம் ஒப்புத் தாம்பூலம் இருக்கறச்சே நாம இப்படி பொணத்தோட இருக்கறது சரியில்லை..."

அவனுக்குள் நியாயமான எண்ணங்கள். அதன் வெளிப்பாடாய் வீட்டைக் காலி செய்யும் முகாந்திரம்.

பெட்டிகையும் படுக்கையையும் சில தட்டு முட்டுகளையும் கூடத்தில் குவித்து விட்டு ஒரு டாக்சி பிடித்து விடலாம் என்று திரும்பினால் வாசற்புறம் ஸ்டெல்லா!

# 27

ஸ்டெல்லாவைப் பார்க்கவும் நாராயணனின் பதட்ட உணர்வில் கோபக் கலவையும் கலக்க ஆரம்பிக்கிறது.

பார்த்தும் பார்க்காதது போல வேறு பக்கம் திரும்பிக் கொள்ள, அவள் தயங்கித் தயங்கி உள் நுழைகிறாள்.

அவள் கையில் சாரங்கபாணிக்கு ஜோசியர் தந்திருந்த உண்மையான கடிதம்.

"என்ன இது?"

"படிச்சுப் பாருங்க தெரியும்."

வாங்கிப் படிக்கிறான். முகத்தில் வியர்வை முத்தின் அரும்பல்.

"என்ன இதெல்லாம்... எனக்கு ஒண்ணுமே புரியலியே."

"மைதிலிக்கும் உங்களுக்கும் தான் பொருத்தம்னு ஜோசியர் சொல்கிறார். ஆனா தியாகு உங்க ஜாதகம் இருக்கிற இடத்துல தன் ஜாதகத்தை வெச்சு ராம்நாத் சாரையே ஏமாத்திட்டார்..."

சற்று விசும்பலுடன் சொல்லி துளி இடைபெறி விடுகிறாள் ஸ்டெல்லா...

"அவன் ராம்நாத்தை மட்டுமா ஏமாத்தினான்... எல்லாரையும்தான்..."

"நீங்கதான் இதைத் தடுக்கணும்."

"என் நிலைமை உங்களுக்குத் தெரியாதுங்க. எனக்கு இன்னிக்கு நிச்சயதார்த்தம்..."

ஸ்டெல்லா குத்துபட்ட மாதிரி நிமிர்கிறாள்.

"ஆமாம்... எனக்கும் எங்க மேனேஜர் பொண்ணுக்கும் தான் நிச்சயதார்த்தம். ஐ ஆம் சாரி... இந்த லெட்டரை நீங்க ராம்நாத்கிட்டயே போய்க் காட்டுங்கோ"

சொல்லிக்கொண்டே சூட்கேஸையும், படுக்கையையும் கைக்கொன்றாகத் தூக்கியபடி வாசல்புறம் வர, செருமியபடி நிற்கிறது ஒரு ஆட்டோ.

உள்ளிருந்து சியாமளாவும், சுந்தரேசனும்...!

அவர்களைத் துளிகூட எதிர்பார்த்திராத அதிர்ச்சியும் ஸ்டெல்லா வேறு போகாமல் நிற்பதும் நாராயணனைப் பிசைய ஆரம்பிக்கிறது.

"என்ன மாப்ள... எங்கேயோ கிளம்பிட்டாப்ல தெரியறதே..." சுந்தரேசன் கேட்டபடி உள் வர, அவர் பின் மலங்க பார்த்தபடி சியாமளா ஒதுங்கி நிற்க.

"நீங்க எங்க இங்க...?"

"அதை ஏன் கேக்கறேள்... உங்களுக்கு ஏதோ ஆபத்துன்னு சியாமளாவுக்குள்ள ஒரு இன்ட்யூஷன். சினிமால மாதிரி விளக்கேத்தும்போது அணைஞ்சு போய் எண்ணெயெல்லாம் கொட்டி... ஆமாம் யார் இந்தப் பொண்ணு?"

சுந்தரேசன் ஸ்டெல்லா பக்கம் கேள்வியோடு திரும்புகிறார்.

"இந்தப் பொண்ணு... இந்தப் பொண்ணு..."

நாராயணன் என்ன சொல்வது என்று தடுமாற, "நான் இவர் நண்பர் மிஸ்டர் தியாகுவோட வுட்பீ..." என்று முன் வந்து அட்சதை போட்டுக் கொள்கிறாள் ஸ்டெல்லா.

"ஐ சீ... ஆமா என்ன இது மூட்டை முடிச்செல்லாம்..?"

"வாங்கோ சொல்றேன். நான் இனி எதாவது ஹோட்டல் ரூம்ல தங்கலாம்னு இருக்கேன்..."

நாராயணன் நடந்தபடி பேச, ஸ்டெல்லா கை பிசைந்து நிற்க, வாசலைத் தாண்டும் சமயம் கச்சிதமாக ஆட்டோவை உரசிக் கொண்டு நிற்கிறது போலீஸ்ஜீப்.

இறங்கும் போலீஸ் கூட்டம் கண்ணில் கழுகு பறக்கிறது.

"தெரியும்டா... தெரியும்! போலீஸை என்ன இளிச்சவாயங்கன்னு நினைச்சியா...?" நாராயணனை எகிறிப் பிடிக்கிறார் ஒரு கறுத்த போலீஸ்காரர்.

"இதுல யாரு ஸ்டெல்லா?" ஒரு வழுக்கைத்தலை போலீஸ் இன்ஸ்பெக்டர் கையில் கேப்புடன் சியாமளா, ஸ்டெல்லா இருவரையும் பார்க்கிறார்.

"எதுக்குக் கேக்கறீங்க?" ஸ்டெல்லா முன்வரவும்,

"போய் ஜீப்ல ஏறு... திருட்டு வைர நெக்லஸ் உன்கிட்ட தானே இருக்கு?"

ஸ்டெல்லா உடனேயே நொறுங்க, "இன்ஸ்பெக்டர் என்ன இது... எதுக்கு இவரை அரெஸ்ட் பண்றேள்?"

சுந்தரேசன் சீறியபடி முன்வருகிறார்.

"இரு சொல்றோம்..." என்றபடி வீட்டுக்குள் நுழைகிறது போலீஸ். கனகச்சிதமாக ஃப்ரிட்ஜ் உள்ள அறை முன் போய் நின்று அதன் பூட்டுக்கு "சாவி எங்கே" என்று கேட்க, நாராயணன் "தெரியாது சார்... சத்யமா எனக்கு எதுவும் தெரியாது..." என்கிறான்.

"தெரியாதா... பொணத்த வெச்சுப் பூட்டிட்டு தப்பி ஓட மட்டும் தெரியுமா?"

"சார்... அது நான் இல்லை. தியாகு செஞ்ச தப்பு அது..."

"எந்தக் கொலைகாரன் தான் செய்த தப்பை ஒப்புத்துக்கிட்டு இருக்கான்... உனக்கு இந்தத் திருடி வேற உடந்தை... இல்ல!"

கறுவிக்கொண்டே பூட்டை உடைக்கிறார் ஒரு போலீஸ்காரர்.

திறந்தால் வெறித்த விழிகளோடு விரைத்த சாரங்கபாணி.

சியாமளாவுக்கு மயக்கமே வந்துவிட்டது!

போலீஸ் ஸ்டேஷனில் கதறிக் கொண்டிருந்தார் சுந்தரேசன்.

"சார் என் மாப்ள ஒரு பாவமும் அறியாதவர். வர்ற முகூர்த்தத்துலேயே கல்யாணம் வேற வெச்சிருக்கேன். இப்படி பிடிச்சுண்டு வந்துவிட்டீர்களே... உங்களுக்கு இது நியாயமா?"

"உங்களுக்கு கம்ப்ளைண்ட் கொடுத்தது யார்?"

"யாரோ ஒரு தெருவுல போறவன்னு நினைச்சுட்டீங்களா? அந்த ராம்நாத்தே கம்ப்ளைண்ட் கொடுத்துருக்கார்."

"ராம்நாத் சாரா?"

"என்ன ராம்நாத் சாரா... நாங்க என்ன பொய்யா சொல்றோம்...?"

அடுத்த நொடியே அவர் ராம்நாத்தைப் பார்க்கக் கிளம்புகிறார்!

தூக்கிவாரிப் போடுகிறது. மைலா ஃபார்மாவே திரண்டு நிற்க, நடுவில் கிடக்கிறது ராம்நாத்தின் சடலம்!

"ஐய்யய்யோ எப்படி ஆச்சு?"

"சிவியர் ஹார்ட் அட்டாக். இரண்டு தடவை வந்து பொழச்சதே பெரும்பாடு..." பதில் கூட்டத்தில் இருந்து வருகிறது.

காலம் இப்படியா வஞ்சனை செய்யும்?

பார்வை அடுத்து தியாகு பக்கம்தான் திரும்புகிறது. மஞ்சள் வேட்டியும், சட்டையுமாக மாப்பிள்ளை கோலத்தில் அழுதபடி நின்று கொண்டிருக்கிறான்.

"எம். டிக்கு தியாகுதான் கொள்ளி போடப் போறாரு. அவர் ஆசைப்பட்டபடியே மைதிலிய கட்டிக்கிட்டு எதுக்க வந்து நின்னாரு. அதைப் பார்த்த மாதிரியே எம்.டி. உசுர் போயிடிச்சு!"

விளக்கம் கேட்காமலே கிடைக்கிறது. அடப்பாவி... சண்டாளா! எல்லாம் சரி... எங்கே மைதிலி?

"அவங்களுக்கு ஃபிட்ஸ் வந்து ரொம்ப மோசமாயி இப்ப மயக்க ஊசி போட்டுப் படுக்க வெச்சுருங்காங்க..."

மைலா ஃபார்மா!

வேகமாகவே நிமிர்ந்து எழுந்து விட்டது.

கோட்டும் சூட்டுமாய் தர்பார் நிகழ்த்துகிறான் தியாகு.

'M.D' செத்து நாலு நாள் கூட ஆகலை. எப்படி சார் உங்களால் இப்படி ஃபங்ஷன் பண்ண முடியுது?" அக்கவுண்ட்ஸ் மேனேஜர் கேட்கிறார். கித்தாப்பாய்ச் சிரிக்கிறான்.

"கடுமையா உழைக்கணும்... அதுதான் ராம்நாத்துக்குச் செய்யற உண்மையான அஞ்சலி. அது தெரியுமா உங்களுக்கு?" அவரை மடக்கி விட்டு அறைக்குள் நுழைகிறான்.

"சார்... " லேப் டாக்டரும், கெமிஸ்ட்டும் வருகின்றனர்.

"யெஸ்..."

"ஒரு ஸ்பெஷல் மெடிசின் லாஞ்சிங் பத்தி சொல்லியிருந்தோமே..."

"எந்த மெடிசின்...?"

"அதான் சார் ஜெர்மன் ஃபார்முலா பேஸ்ல மெண்டல் அகனிக்காகவும், ஸ்ட்ரெஸ் ஓபனுக்காகவும்..."

"சாரி... இதை எல்லாம் மைதிலிதான் பாக்கறா... அதாரிடி அவதான். ப்ளீஸ்..."

"டொக்... டொக்" அடுத்து மைதிலி அறைக்கதவு தட்டப்படுகிறது. அழைக்கப்பட்டு உள் நுழைகின்றனர்.

"மேடம் அந்த ஸ்பெஷல் பிராடக்ட் லாஞ்சில் சம்பந்தமா?"

"பர்மிஷனுக்காக பேப்பர்ஸ் மினிஸ்ட்ரிக்குப் போயிருக்கு. நோ அப்ஜெக்ஷன்ஸை அதாரிடி பர்சன்ஸ் கிட்ட வாங்கி சப்மிட் பண்ணணும். நிறைய ஒர்க் இருக்கே...?"

"பார்த்து மேடம்... அது மட்டும் லாஞ்ச் ஆனா நாம தான் இண்டியால அதோட மேனுஃபாக்சரர். போலீஸ் டிபார்ட்மெண்ட் மெண்டல் ஹாஸ்பிடல் இதுக்கெல்லாம் இது நிச்சயம் நிறைய பயன்படும். ஸ்டேட்ஸ்ல இப்பல்லாம் ஜூரிசே இதை கிராண்ட் பண்றாங்க."

எந்தக் குற்றவாளியும் இதை விழுங்கினா உண்மைய சந்திச்சாகணும். அப்படி ஒரு கிளர்ச்சி உடம்புல ஏற்படும். அதிகமா சாப்ட்டாலோ பயங்கர ஆபத்தாயிடும்.

"தெரியும் டாக்டர். பாப்போம். நிச்சயம் பர்மிஷன் கிராண்ட் ஆயிடும். பெத்தடின் மாதிரி ஸ்பெஷல் பர்மிஷன்கறதால கொஞ்சம் டிலே ஆகலாம்."

சொல்லிக் கொண்டே டிராயரைத் திறக்கிறாள். ஸ்ட்ரிப்சில் கண்ணடிக்கின்றன. புதிதான அந்த மாத்திரைகள்!

வி. சி. ஆர். சுழல ஆரம்பிக்கிறது. சற்றே குழறலான குரலில் தியாகு மைதிலிக்குப் பக்கத்தில் விஸ்கிக் கோப்பையோடு உளறியபடி...

உளறலா அது... சத்ய வாக்கு மூலமல்லவா?

"உன்னைக் கல்யாணம் பண்ணணும்னு முடிவு செஞ்ச நிமிஷமே ஸ்டேட்டஸ் கொஞ்சமாவது வேணும்னு முடிவு பண்ணிட்டேன். அதுக்காத்தான் சேட் வீட்டுல கை வெச்சேன். நகை, பணம்னு தாளிச்சேன். போட்டுக்கிட்டு போன சட்டையைக் கழட்டி லூஸ்

சந்திரனுக்குப் போட்டு, போலீசையும் குழப்பி விட்டேன். சந்தேகப்பட்டார் ஒரு இன்ஸ்பெக்டர். சத்தப்படாம பத்தாயிரம் வெட்டவும் சைலண்ட் ஆயிட்டார்."

ஸ்டெல்லாவை நிஜமாதான் லவ் பண்ணேன். ஆனா அவ பின்னால மாற ஆரம்பிச்சுட்டா. சரி இவ தோது படமாட்டாள்னு அப்பவே முடிவுக்கு வந்துவிட்டேன்.

அப்பதான் காசி போய் ஜோசியரைப் பாத்துவிட்டு வரச் சொன்னார் சாரங்கபாணி. அந்த ஆளோ நாராயணன் ஜாதகத்தைக் கொடுத்து இதுதான் நல்ல ஜாதகம்னுட்டான். அந்த ஆளை உசுரோட விட்டா ஆபத்துன்னு அந்த ஆள் குளிக்கைல தண்ணிக்கு அடி வழியா வந்து அந்த ஆளை ஒரு அமுக்கு...

மனுஷனுக்கு மோட்சம் நிச்சயம்! அப்பால உண்மை தெரிஞ்சுகிட்டு கத்து கத்துன்னு கத்து. சாரங்கபாணியையும் போட்டு தள்ளி ஃப்ரிட்ஜ்ல வெச்சேன். சாரங்கபாணி பேசற மாதிரி பேச ராம்நாத்துக்கு என் ஜாதகத்தை ஜோசியர் தந்தார்னு கொடுத்தேன்.

என்னை மாப்ளைன்னு நம்ப வைக்கறதுக்கு முந்தி ராம்நாத் சார் பேசற மாதிரி போலீசுக்கு போன் பண்ணி விஷயங்கள் சொன்னேன். போலீஸ், கையும், களவுமா நாராயணனைப் படிச்சுது. ஸ்டெல்லா குளறுபடி பண்ணுவாளே சேட்டு வீட்டு வைர நெக்லஸ் ஞாபகம் வந்தது. அத களவாடினதும அவதான்னேன். ஒரு கல்லுல இரண்டு மாங்காய்.

சாரங்கபாணி சாவைத் தாங்காம ராமநாதன் மண்டையைப் போட அதைச் சாதகமாக்கி உன் கழுத்துல தாலியும் கட்டினேன். ஜோசியம், ஜாதகம் எல்லாம் பொய்யாப் போச்சு... அது ஏதோ பெரிய வேதம்ன ஜோசியனே போய்ச் சேர்ந்துவிட்டான். எப்படி?

என் வரைல எப்பவும் முயற்சி திருவினையாக்கும். மூளை இருந்தா போதும். நீ வேணா பாரு. இந்தியாவையே ஒரு செக்ல நான் வாங்கப்போற நாள் தூரத்தில இல்ல..."

வி.சி. ஆர் நிறுத்தப்படுகிறது. போலீஸ் முகங்கள் வியர்த்துக் கொட்டிய நிலையில் நிமிருகின்றன. வக்கீல், டாக்டர்கள் புடைசூழ நிமிருகின்றன. வக்கீல், டாக்டர்கள் புடைசூழ நிற்கும் மைதிலியைச் சற்று வெட்கத்துடன் பார்க்கின்றனர்.

அவள் பார்வையே இந்த ஆதாரம் போதுமா... இன்னும் வேணுமா என்று

கேட்கிறது. போலீசின் மௌனமும் ஸ்டெல்லா, நாராயணனை வெளியே விடுவதில் உள்ள வேகமும் போய்த் தொலைகிறது என்று பாராட்டும்படி உள்ளது.

சியாமளா கண்கலங்க மைதிலியைக் கட்டிக் கொள்கிறாள். உள்ளங்கையில் துண்டுச்சீட்டு ஒன்றைத் திணிக்கிறாள்.

"என் அழுகைக்கு மதிப்பு கொடுத்து எவ்வளவு பெரிய காரியம் செய்திருக்கிறீர்கள். எப்படியக்கா நன்றி சொல்வேன். என் தோலைச் செருப்பாய் தைத்துப் போடட்டுமா?"

சிலிப்புடன் விகிதத்தை மடித்தபடி திரும்ப அணைக்கிறாள் மைதிலி.

"உன் அழுகை மட்டுமல்ல சியாமளா... நிறைய விஷயங்கள் தியாகுவை நான் கவனிக்கும்படி செய்தது. உணர்ச்சி வசப்பட்டா எல்லாம் கெட்டுடும். நல்லவேளை, என் ஃபார்மாவோட புது புராடக்ட் கைகொடுத்தது. எவ்வளவு சினிமா, டிராமா பார்க்கறேன். போலீஸ்ல எது நிக்கும்னு கூடவா தெரியாது? அதான் வி.சி. ஆர். வெச்சு வாக்கு மூலத்த படமாவே எடுத்தேன். பாவிகிட்ட உண்மைய வரவைக்க படுத்தும் எழுந்திருக்கும்படி ஆயிட்டது. அத நினைச்சாதான்..."

அழுதபடி தலை குனிகிறாள்.

"அதை எதுக்கும்மா நினைக்கறே... நாங்க இருக்கச்சே!"

ராஜரத்தினம் குரல் போல இருக்கிறதே? திரும்புகிறாள்.

அட அவர்தான்! "அங்கிள்..." நாக்கு தழதழக்கிறது.

"ஒரு பொண்ணோட உடம்பு ஊனத்த வியாபாரமாக்க நினைக்கற ஆண் வர்க்கத்துக்கே நீதான் நல்லா பாடம் கற்பிச்சிட்டியே... ஜோசியம் சென்டிமெண்ட்ஸ்னு நாங்களும்னா கொஞ்சம் தள்ளாடிட்டோம். சாரிம்மா!"

மைதிலிக்கு பிரமிப்பாக இருக்கிறது.

"இந்தப் பொண்ணுக்கு பேச வாயில்லன்னா என்ன? எழுத கை இருக்கே... உன் நிலைய என்னமா எடுத்து எழுதியிருந்தா தெரியுமா? சுதர்சன் தவிச்சுண்டுருக்காம்மா உன்னைப் பார்க்க... கிளம்பு!"

மைதிலி சரிந்து அவர் காலில் விழுகிறாள்.

லாக்கப்புக்கு அப்பால் இருந்து நடுங்கும் தலையோடு, கோட்டு வாய்

ஒழுக தன்னையே தொலைத்து விட்ட தியாகுவுக்கு நடப்பது எதுவுமே தெரியவில்லை. இனியும் தெரியாது! உண்மையை வரவழைக்க அளவுக்கு அதிகமாக கொடுத்த மாத்திரையால் கையும் காலும் வெடவெடவென நடுங்க மோட்டுவளையைப் பார்த்தபடி சரிந்து அமருகிறான். தேடியதால் தொலைந்த அந்த இளைஞன்!